
தொட தொட மலர்ந்ததென்ன...!

அழுதவல்லி கல்யாணசுந்தரம்





தொடத் தொட
மலர்ந்ததென்ன...

தொடத் தொட மலர்ந்ததென்ன...

★ இருபது ஆண்டுகளுக்கு முன்பு ★



சென்னை கடற்கரை. சூரியன் மேற்கு திசையில் மறைந்து கொண்டு இருந்த பொன் மாலை நேரம். மே மாத விடுமுறையைக் கொண்டாட குழந்தைகள் அவரவர் வீட்டில் உள்ளவர்களை நச்சரித்துக் கடற்கரைக்குக் காற்று வாங்க வந்து இருந்தனர். மணல் பரப்பில், ஒட்டு தலோடு உறவாடும் மூன்று தலை முறையைச் சேர்ந்த ஒரு குடும்பம் பேச்சும் சிரிப்புமாய், அந்தக் குடும்ப வாரிசுக்குப் பிறந்த நாள் கொண்டாடிக் கொண்டு இருந்தது.

''அத்தை, நீங்க இவரை வயிற்றில் சுமக்கும்போது காமரா எதையாவது முழுங்கி விட்டீர்களா? கூடப் பிறந்த இரட்டைப் பிறவி மாதிரி எங்கே போனாலும் இது இல்லாமல் வருவதே இல்லை. ஆபீஸ் வேலையை

ஆபீசோடு விட்டுட்டு வரக்கூடாதா?'' என்று தன் கணவனைப் பற்றி மாமியாரிடம் செல்லமாகச் சலித்துக் கொண்டது பானுமதி.

''என் பிள்ளை புகைப்படம் பிடிப்பதைத் தொழிலா ஏற்றுக் கொண்ட பின்பு, இருபது வயசுக்குப் பிறகு காமராவை விட்டுப் பிரிவதே இல்லை. உன் பிள்ளையைப் பார், இன்னிக்குத்தான் ஏழு வயசு ஆரம்பிக்குது. மூன்றாவது படிக்கும்போதே காமராவும் கையுமா சுத்திகிட்டு இருக்கான். நீ மசக்கையா இருக்கும்போது என்ன சாப்பிட்டாய்?''

மாமியாரும் மருமகளும் சேர்ந்து தன்னை வறுத்துக் கொண்டு இருப்பதைக் கண்டு கொள்ளாமல் மகனுக்கு அந்தக் காமராவின் நுணுக்கங்களை விளக்கிக் கொண்டு இருந்தார் ஜெயராமன். ''இந்தக் கண்ணாடி மாதிரி இருப்பது லென்ஸ். இதை இந்தப் பக்கம் தள்ளினால் ஷட்டர் விலகும். இந்த சிவப்பு பட்டன் அமுக்கினால், ப்ளாஷ் வரும். இதைச் சுற்றினால், காட்சி கிட்டே வருதா? இதையே மாற்றிச் சுழற்றினால் தூரமா போகும்...''

''அப்பா, அப்பா... முதலில் சுத்துன மாதிரி சுத்துங்க. இவ்வளவு கிட்ட தெரியுதே? அப்பா எனக்கும் இதே மாதிரி ஒரு காமரா வாங்கித் தரீங்களா? ப்ளீஸ்பா...'' என்று கொஞ்சலாகக் கேட்டதைப் பார்த்துச் சுற்றி இருந்த மூவரும் சிரித்தனர்.

தூரத்தில் தன் வயதை ஒத்த ஒரு சிறுவன் பட்டம் பறக்கவிட, அவன் அருகில் நின்று சாக்கோபார் ஐஸ் க்ரீமைச் சப்பிச் சாப்பிடும் சிறுமி, இருவரையும் காமராவில் லென்ஸ் மூலமாவும், நேரடியாகவும் கண்களை

மாற்றி மாற்றிப் பதித்து நிஜமான தூரத்தையும், காமராவுக்குள் கண் அருகே தெரிந்ததையும் பார்த்தவனுக்கு வியப்பு நீங்கவில்லை.

''இந்த வயசில் இந்த காமரா வேண்டாம். இப்போதைக்கு விளையாட்டு காமரா வாங்கித் தரேன். நீ படிச்சு முடிச்ச பிறகு இதே மாதிரி ஆர்வம் இருந்தால் இதை விட சூப்பரா இம்போர்ட்டட் காமரா வாங்கித் தரேன்'' என்று சிரித்தபடி அவனைக் கைப் பற்றி அழைத்துச் சென்றார் ஜெயராமன்.

''இந்த காமரா ஓகே?'' என்று அவன் அபிப்ராயம் கேட்டு வாங்கிக் கொடுத்துவிட்டு ''வேறே பலூன், பைக் ஏதாவது வேண்டுமா? சாப்பிட பஜ்ஜி, ஐஸ்க்ரீம், சுண்டல்...'' என்று அவனிடம் கேட்டவர் பதில் வராமல் திரும்பிப் பார்த்தார்.

பத்தடி தூரத்தில், கீழே ஐஸ்க்ரீம் பார் ஒன்று விழுந்து இருக்க, அருகில் இருந்த சிறுவனை, கண்ணில் வழியும் நீரோடு, ''ஏன்டா என் ஐஸ்க்ரீமை தட்டி விட்ட?'' என்று அவன் சட்டையைப் பிடித்து இழுத்து, அடித்தபடி சண்டை போட்டுக் கொண்டு இருந்தாள் ஒரு ஐந்து வயது இருக்கக் கூடிய சிறுமி.

''சட்டையை விடுடீ! நான் திருப்பி அடிச்சால் நீ தாங்குவியா? இம் என்றால் கண்ணுல மழை கொண்டு வரும் உன்னோட ஐஸை போய் தட்டி விட நான் என்ன லூசா?'' என்று அருகே இருந்த சிறுவன் விளக்கம் சொல்லிக் கொண்டு இருந்தான்.

''வேணும்னு யாராவது தட்டி விடுவாங்களா? அழாதே! வேண்டும் என்றால் இந்த காமரா வச்சுக்கோ' என்று இவன் இருவருக்கும் நடுவில் விலக்கி விட

முயன்ற மகனின் நடத்தை கண்களுக்கு ரம்யமாக இருக்க, தன் காமராவில் அதை பதித்தார் ஜெயராமன்.

*** பத்து ஆண்டுகளுக்கு முன்பு ***

தமிழக ஆந்திர மாநில எல்லையில் சென்னையில் இருந்து சுமார் அறுபது கிலோமீட்டர் தூரத்தில் அமைந்து இருக்கும். இந்தியாவின் இரண்டாவது மிகப் பெரிய ஏரி, பழவேற்காடு பகுதியில், நான்கு பேர் மட்டும் இருந்த படகு மிதந்து கொண்டு இருக்க, படகோட்டி தவிர்த்த மூன்று பேர் அடங்கிய குடும்பத்தில் அந்நியோன்யமும் சந்தோஷமும் சற்று தூக்கலாகவே தெரிந்தது.

''என்ன தமிழ் திடீர்னு, பழவேற்காடு போகணும் என்று ஒரே அடம்?'' என்று மகனை விசாரித்தார் ஜெயராமன்.

''நீங்கதானே மாநில நீச்சல் போட்டியில் முதலாவது வந்ததற்கு என்ன பரிசு வேண்டும் என்று கேட்டீங்க? அவனுக்குப் பிடிச்சதைக் கேட்டான். இப்ப ஏன் எதுக்கு என்று நூறு கேள்வி கேட்டால் என்ன அர்த்தம்?'' என்று மகனை முந்திக் கொண்டு பதில் சொன்னது வளர்மதி.

''அவன் என்ன நினைத்து இங்கே வர வேண்டும் என்று கேட்டான் என்று அவனிடம் கேட்டால் நீ ஏன் முந்திக் கொண்டு பதில் சொல்கிறாய்? நீ சொல்லு தமிழ். என்ன திடீர் என்று பழவேற்காடு கிளம்பி விட்டாய்?''

''இந்த சீசனில் பிளெமிங்கோ பறவை இங்கே வரும் என்று சொன்னாங்கப்பா. அதான் வரலாம் என்று நினைத்தேன்...'' என்று புதிதாக வாங்கிய பைனாகுலரில் தமிழ்வேந்தன் பார்வையைப் பதிக்க, எப்போதும் கைவசம் இருக்கும் காமராவை எடுத்து கண்ணுக்கு

ரசனையான காட்சிகளைப் படம் பிடிக்க ஆரம்பித்தார் ஜெயராமன்.

''நீயும் அப்பா மாதிரியே காமராமேன் ஆவது என்று முடிவே பண்ணிட்டாயா தமிழ்?''

''உங்களை மாதிரி போட்டோக்ராபரா ஆக எனக்கு இஷ்டம் இல்லை சாரிப்பா...''

''ஓ! ஆனால் நீ ரொம்ப ஆர்வமா ஒவ்வொரு வருஷமும் இயற்கைக் காட்சிகள் நிறைந்த இடமா போக ஆசைப்பட்டதைப் பார்த்து நான் அப்படி நினைத்தேன். இப்பக்கூட இங்கே பிளெமிங்கோ பார்க்கணும் என்று சொன்னாயே தமிழ்! அதனால் உனக்கு இதுல ஆர்வம் இருக்கு என்று நினைத்தேனே? இல்லையா?''

''ஆர்வம் இல்லைன்னு நான் சொன்னேனா? நான் இன்னும் முடிக்கலைப்பா! அப்பாவை விட நல்ல போட்டோ க்ராபரா ஆகணும்'' என்று சிரித்தவன், மீண்டும் பார் வையை பைனாகுலரில் பதித்த அடுத்த வினாடி நீரில் குதித்து இருந்தான்.

''ஹேய் தமிழ் என்ன பண்ற...'' என்று பதறிய ஜெயராமன், ''எதுக்குடா தண்ணில குதித்தாய்?'' என்று அலறிய பானுமதி இருவருக்குமான பதில் சற்று தொலைவில் தள்ளாடிக் கொண்டு இருந்த படகின் அருகே தண்ணீரில் தத்தளித்துக் கொண்டு இருந்த ஒரு நாற்பது வயது மதிக்கத்தக்க பெண்மணி வடிவில் கிடைத்தது.

''நான் தான் படகோட்டணும் என்று தங்கையிடம் சேலஞ் பண்ணி, அம்மாவை தனியா அழைச்சுட்டு வந்து, சரியா மேனேஜ் பண்ணத் தெரியாமல் கவிழ்ந்து இந்நேரம் எங்க அம்மாவை நானே...'' என்று கண்ணில்

நீரோடு விம்மிய இரண்டும் கெட்டான் வயதில், இருந்தவனை தோளில் தட்டி ஆறுதல் படுத்தினான்.

முகத்தில் இருந்து தண்ணீர் சொட்டச் சொட்ட, ஒரு கையால் மகனையும், மறு கையால், தண்ணீரில் மூழ்கி இருக்கக் கூடிய தன்னைக் காப்பாற்றிய தன் மகன் வயதேயான புதியவனையும் கன்னத்தில் வருடிய காட்சி, ஜூம் லென்சின் துணையோடு ஜெயராமனின் காம ராவுக்குள் புகுந்தது.

★ எட்டு ஆண்டுகளுக்கு முன்பு ★

மதுரையில் இருந்து சென்னைக்குச் செல்லும் பாண்டியன் எக்ஸ்பிரஸ் புறப்பட இன்னும் பதினைந்து நிமிடங்கள் இருக்க, ரயில் நிலையம் பரபரப்பாக இயங்கிக் கொண்டு இருந்தது.

''என்னங்க நீங்க. அவன்தான் சின்னப் பையன் சொல்றான் என்று நீங்களும் யோசிக்காமல் மூன்று வருஷம் தனியா படிக்கட்டும் என்று கொண்டு போய் விடப் போறீங்களே? அவன் நமக்கு ஒரே பிள்ளை ஞாபகம் இருக்கா?'' என்று கண்ணில் கவலையும், வார்த்தைகளில் ஆதங்கத்தையும் கொட்டிக் கணவனைக் கேட்டார் பானுமதி.

''அவனா சின்ன பையன்? எஞ்சினியரிங் படிடா என்று சொன்னால், ஆண்டுக்கு அஞ்சு லட்சம் பேர் பட்டதாரியா வெளிவரும் பொறியியல் துறை எனக்கு வேண்டாம். எனக்கு பிடித்த, விசுவல் கம்யூனிகேஷன் எடுத்துப் படிக்கிறேன். அதையும் சிங்கப்பூரில். இந்த யுனிவர்சிடியில் படிப்பேன் என்று தீர்மானமா சொல்றான். அவனைப் போய் சின்ன பையன் என்று சொல்கிறாயே? கண்ணைத் துடை. நாங்க ரெண்டு பேரும் உன்னைக் கொடுமை படுத்துறோம் என்று பார்க்கிறவங்க நினைக்கப் போறாங்க'' என்று கேலியும் அக்கறையும் கலந்து சொன்னார் ஜெயராமன்.

''உங்க ரெண்டு பேருக்கும் என்னைப் பார்த்தால் கிண்டலா இருக்கா?...'' என்று சொல்லும் போதே பானுமதியின் கண்களில் ஈரம் எட்டிப் பார்த்தது.

''சின்னக் குழந்தை மாதிரி பேசாதீங்கம்மா'' என்று தமிழ் சொன்னது அவரின் கண்ணீரை அதிகப்படுத்த ஜெயராமன் பேச்சின் போக்கை கேலியாகவே மாற்றினார்.

''இந்த மாதிரி நீ ஏர்போர்ட்டிலும் கண்ணைக் கசக்கு வாய் என்று தான் உன்னைக் கூட்டிப் போகலை...''

''அம்மாக்கு என்ன பயம்? எதுக்கு இப்ப அழறாங்க என்று எனக்குத் தெரியும்பா...'' என்று அப்பாவின் பேச்சின் போக்கைத் தொடர்ந்து, சொன்ன தமிழின் கண்களில் குறும்பு இருந்தது.

''எனக்கு என்னடா பயம்?''

''சிங்கப்பூரில் இருந்து யாராவது சைனாக்காரியைக் கூட்டிட்டு வந்துடுவேன் என்று தானே இப்ப அட்வான்சா அழறீங்க?...''

''அப்படிக் கூட்டிட்டு வந்தால், பெண்ணைத் தேட வேண்டிய வேலை மிச்சம் என்று நான் சந்தோஷப் படுவேன்...'' என்று ஜெயராமனும் ''கூட்டிட்டு வா, சப்பை மூக்கு சைனாக்காரிக்கு காரசாரமா பூண்டுக் குழம்பு வச்சு சாப்பாடு போட்டு ஒரே வேளையில பின்னங்கால் பிடரியில் பட ஓட வச்சுடறேன்'' என்று பானுமதியும் சொல்ல மூவருமே சேர்ந்து சிரித்தனர்.

''சிங்கப்பூர்ல என்ன கிடைச்சாலும் உங்க பூண்டுக் குழம்பு நான் மிஸ் பண்ணுவேன்மா...''

''அது சரி. சைனாக்காரி வேண்டாம் என்று அம்மா சொல்றாளே என்று பூண்டுக் குழம்பு நல்லா வைக்கிற தமிழ் பொண்ணா பார்த்துக் கூட்டிட்டு வந்துடாத...''

''சோ ஸ்வீட் அம்மா! பயப்படாதீங்க. எனக்கு இப்ப பதினெட்டு வயசு தான் ஆகுது. இன்னும் ஏழு எட்டு வருஷம் கழித்து, நான் வாழ்க்கையில் செட்டில் ஆன பிறகுதான் கல்யாணம். எனக்குப் பிடிக்குதோ இல்லையோ, உங்களுக்குப் பிடித்த நீங்க பார்த்த பெண்ணை தான் நான் கல்யாணம் பண்ணிக் கொள்வேன், ப்ராமிஸ்'' என்று உணர்வுப் பூர்வமாகச் சொல்ல அவனை இறுக்கி அணைத்துக் கொண்ட பானுமதியின் கண்களில் கண்ணீர் சுரக்க, அந்த பாச பிணைப்பு ஜெயராமனின் காமராவுக்குள் படமாக புகுந்த வேளையில் பின்னால் டிக்கெட் பரிசோதகரிடம் ஒருவர் பேசியது அவர்களின் காதில் விழுந்தது.

''சார் என் பையனுக்கு அட்மிஷன் நாளைக்கு இருக்கு. நான் அர்ஜெண்டா சென்னைக்குப் போகணும். பெர்த் கிடைக்குமா?''

''அர்ஜண்ட் ஆர்டினரி எல்லாம் ரெயில்வேல இல்லை. லாண்டிரிக்கு போங்க சார். ஆர்.ஏ.சி-ல இருக்கவங்களுக்கே இங்கே பெர்த் இல்லை. இதுல அன் ரிசர்வ்ட்ல டிக்கெட் எடுத்துட்டு வந்து என் உயிரை வாங்காதீங்க...''

''அப்பா, நான் ஒன்று சொல்லட்டுமா?'' என்று மகன், ''தமிழ், நீ தனியா மேனேஜ் பண்ணிக் கொள்வாயா?'' என்று ஜெயராமன், ''என்னங்க. தமிழ் பெரிய பையன் தானே?'' என்று அம்மா மூன்று பேரும் ஒரே நேரத்தில்

ஜெயராமனின் டிக்கெட்டில் அந்தப் பெரியவரை பிரயாணம் செய்யச் சொல்லும் ஒரே விஷயத்தைப் பேச ஆரம்பித்து ஒரே நேரத்தில் சிரிப்போடு நிறுத்தினர்.

இனி இன்று...



தமிழ்நாட்டில் மேற்கத்திய நாகரீகம் புகுந்ததால், கலாச்சாரம் வீணாகப் போகிறது என்று சில அமைப்புகள் ஆர்ப்பாட்டங்கள் நடத்தினாலும், ஒவ்வொரு ஆண்டும் முந்தைய ஆண்டை விடக் கூடுதலாக வாழ்த்து அட்டைகளும் சிவப்பு ரோஜாக்களும், பரிசு பொருட்களும், பரிமாறிக் கொள்ளும் காதலர் தினத்தில் மெரீனா கடற்கரை நிரம்பி வழிந்தது.

'முகில்' என்ற தனியார் தொலைக்காட்சி நிறுவனத்தின், 'இயற்கையை நேசிப்போம்' என்ற வாராந்திர நிகழ்ச்சிக்காக படம் பிடிக்க கடற்கரைக்கு அந்தி மாலை நேரத்தில் வந்து இருந்தான் தமிழ்வேந்தன்.

மக்கள் கூட்டம் எதிர்பார்த்ததைவிட மிக அதிகம் இருந்ததா, அவன் எதிர்பார்த்த பறவைகள் வரவே இல்லை. இன்று விட்டாலும், ஞாயிறு ப்ரோக்ராமிற்கு படம் பிடித்து, எடிட் செய்து, இசை சேர்க்க நேரம் போதாது. அப்பா இல்லாமல் தனிமையில் வாழும், தனக்காக எல்லாவற்றையும் தியாகம் செய்து, தான் முன்னுக்கு வரவேண்டும் என்று பரம்பரை சொத்துக்களை விற்க முன் வந்த அம்மாவின் ஆசையை நிறைவேற்ற வேண்டும் என்று முயன்றதில்... ப்ச்! ஆக வேண்டியதைப் பார்ப்போம்.

காமரா மூலம் கண்களை ஒட்டி, வந்த பறவைகளையும், தூரத்தில் தெரிந்த ஓடங்கள், மீனவர்கள் வலை வீசும் அழகு. மாலை சூரியன் மறையும் அழகில் கட்டிடங்கள் ஜொலிக்கும் அழகு என்று தன் காமராவுக்குள் பொக்கிஷங்களாகச் சேர்த்த பின், பைக்கில் கிளம்பினான். ஆக்சிலேட்டரை முறுக்கி, பீச் ரோட்டில் பிடித்த வேகத்தை குறைக்காமல் சாந்தோம் ரோட்டை தொட்டபோது கண் இமைக்கும் நேரத்தில் அந்த விபத்து நடந்து முடிந்து இருந்தது.

பாலாஜி பாலி கிளினிக் என்ற அந்த கட்டிடத்தைக் கடக்கும்போது அந்தக் கட்டிடத்தில் இருந்து வெளியே வந்த பைக் அசுர வேகத்தில் வலது புறம் திரும்ப முயல, தான் வந்த வேகத்தை உடனடியாகக் குறைக்க முடியாமல் நிலை தடுமாறியதில், பைக் இரண்டும் மோதி, நிலை தடுமாறி, அதில் பயணித்த ஒரு வாலிபன் கீழே விழுந்தான்.

'ஹேய்! சாரி சாரி!, அடிபட்டு விட்டதா?'' என்று அவசரமாக பைக்கை ஓரம் கட்டி நிறுத்தி இறங்கியவன், கீழே விழுந்த வாலிபனைத் தோளோடு சேர்த்து அணைத்துத் தூக்கினான்.

''கையைத் தொடாதே மேன், வலி உயிர் போகுது...'' என்று இடது புறம் பைக் சரிந்ததால், பைக்கிற்கும் சாலைக்கும் இடையில் மாட்டி இசகு பிசகாக காயம் பட்டு கை பிசகி இருந்ததால் வலியில் அலறினான்.

''சாரி பிரெண்ட். கிளினிக் வாசலிலேயே விழுந்தது ஒரு விதத்துல நல்லதா போச்சு. உடனே ட்ரீட்மென்ட் எடுத்துக்கலாம்.''

''என்னோட கிளினிக்ல ட்ரீட்மென்ட் எடுக்க நீங்க ரெகமெண்டேஷனா?'' என்று சொன்னவன் குரலில் எரிச்சல் பரிபூரணமாக ஆட்சி செய்தது.

''உங்க க்ளினிக்கா? நல்லது, எனக்கு பைசா செலவு இல்லை. அது சரி, என்ன பிரெண்ட் அப்படி அவசரம். போக்குவரத்து மிகுந்த சாலையில் இவ்வளவு வேகமா திரும்பலாமா?''

''நான் வேகமா வந்தேனா என்று ஸ்பீடா மீட்டர் வச்சுப் பார்த்தீங்களா?''

''என்னிடம் வேகம் அளக்கும் கருவி இல்லை. ஆனால் கிளை சாலையில் இருந்து முக்கிய சாலைக்கு வரும்போது நின்று கவனித்து வரவேண்டும் என்பது அடிப்படை விதி இல்லையா? உங்க வேகத்தினால் பிறருக்கு அடிபட்டு இருந்தால் பாவம் இல்லையா?'' என்று தமிழ் பேசப் பேச அவன் முகத்தில் எரிச்சலின் அளவு கூடியது.

''நீங்களே வலியில் துடிக்கும்போது நான் இப்படி அட்வைஸ் பண்ணுவது எரிச்சலாதான் இருக்கும். சாரி...'' என்று இறங்க அப்போதுதான் அவனுக்கு தன் தவறு புரிந்தது.

''நீங்க ஏன் சாரி சொல்றீங்க? நான்தான் ரொம்ப ஸ்பீடா வந்து விட்டேன். சாரி...''

''யார் சாரி சொல்றது என்பதா முக்கியம்? அடி பலமா படாமல் இருக்கு என்பது தான் முக்கியம். மெல்ல வாங்க. காலில் அடி இல்லையே? நடக்க முடியாதா? தூக்கிக்கவா.''

''நோ நோ, அதெல்லாம் தேவை இல்லை. காலில் அடி இல்லை. ஆனால் இடது கை தான் அசைக்க

முடியலை. ஹேர் லைன் பிராக்ச்சர் இருக்கும் என்று நினைக்கிறேன்...'' என்றவன் கண்கள் வலியால் சுருங்கி மூடியது.

''நீங்களே என்ன பிரச்னை என்று சொல்றீங்க. நீங்க டாக்டரா? என் க்ளினிக்கிலேயே என்று அப்போ சொன்னீங்களே? பேர் என்ன? பாலாஜியா?'' என்று விசாரித்தவனை வியப்போடு திரும்பிப் பார்த்தான்.

''வாவ்! என்ன கவனம்? ஒரே செகண்டில் போர்ட் பார்த்து, டாக்டர் என்பதை யூகித்து, பாலாஜி என்று நாமகரணம் சூட்டி... சூப்பர் போங்க...'' என்று சிலாகிக்கும் போதே உள்ளே இருந்து ஒரு இளம் பெண் ஓடி வந்தாள்.

''பாலா! என்ன திரும்பி வந்துட்ட? என்ன ஆச்சு? யார் இவர்? கையில் என்ன?'' என்று வினாடிக்குள் கேள்வி மழை பொழிந்தவளின் கண்களில் டன் டன்னாய் அக்கறையும், அதை மீறிய பாசமும் ஒளிர்ந்தது.

''ஒண்ணும் இல்லை. வாசலிலேயே திரும்பும்போது ஸ்லிப் ஆகிட்டேன். முதலில் வாசலில் இருக்கும் பைக் எடுத்து ஓரமா நிறுத்தச் சொல்லு...''

''நான் பைக்கை பார்க்கிறேன் டாக்டர். நீங்க உங்க கையைப் பாருங்க.''

''ஹேய் வெயிட். நீங்க யார் என்றே சொல்லலையே? உங்களுக்கு எதுவும் அடிபட்டு இருக்கா? செக் பண்ண வேண்டாமா?'' என்று அவசரமாக கை பற்றி நிறுத்தினான்.

''இவன்தான் இடித்ததா? ரொம்ப ஒழுங்கு மாதிரி பேசுறான்? இந்த மாதிரி ஆட்கள் மேலே போலீஸ் ஸ்டேஷன்ல கம்ப்ளைன்ட் கொடுக்கணும்?'' என்று பதறிய

வளுக்கு அடிபட்டவன் மேலே இருந்த அளவுக்கு அதிகமான பாசம் புரிந்தது.

''ப்ச்! மேகி. அவர் மேலே தப்பில்லை சத்தம் போடாதே புரிந்ததா?'' என்று உதட்டில் ஒரு விரல் வைத்து மிரட்டியவனுக்கு உடனே அடி பணிந்தவளைப் பார்க்க வியப்பு கூடியது.

''முதலில் இடது கை எக்ஸ்ரே எடுக்கணும். பிரபா இருந்தால் வீல் சேர் எடுத்துட்டு வரச் சொல்லு...'' என்றதும், இவன் புறம் ஒரு பார்வையைக் கொடுத்து விட்டு, உள்ளே சென்றாள்.

''சாரி பாஸ். என் மேலே இருக்கும் அதீதமான அக்கறையில் சொல்லிட்டாங்க. உங்க பேரென்ன? எங்கே இருக்கீங்க? என்ன செய்றீங்க?''

''என் கார்ட் வச்சுக்கோங்க. இன்னொரு நாள் சாவகாசமா பேசலாம். கிளம்புகிறேன்.'' என்று தன் அடையாள அட்டையை அவன் சட்டை பையில் இயல்பாக செருகிவிட்டு நகர முயன்றவனின் கை பற்றி நிறுத்தினான்.

''உங்க பேஸ் எனக்கு எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கு. எங்கே என்று சட்டுன்னு ஞாபகம் வரலை. உங்களுக்கு ரொம்ப அவசரமான வேலை இல்லை என்றால் பத்து நிமிஷம் உட்காருங்க. எக்ஸ்ரே எடுத்துட்டு வந்துடறேன்...''

''நான் இன்னொரு நாள் வந்து பார்க்கிறேன் டாக்டர். இப்ப கிளம்புகிறேன்.''

''என்னுடைய மெமரி மேலே எனக்கு நம்பிக்கை இல்லை. எங்க வீட்டில் தேன்மொழி என்று ஒரு யானை

இருக்கு. அதுக்கு இந்நேரம் தகவல் போய் இருக்கும். அதிகபட்சம் பதினைந்து நிமிடத்தில் இங்கே அவள் வந்த உடனே நீங்க யார் என்று கண்டு பிடித்து விடுவேன்'' என்று வீல் சேரில் சென்றவனைப் பார்த்தபடி இருக் கையில் அமர்ந்தான்.

பாலாஜி வரக் காத்திருக்கும் நேரத்தில் அன்று மாலை எடுத்த படங்களைக் காமராவில் மீண்டும் பார்த்து. தேவை இல்லாதவற்றைக் கழித்துக் கொண்டு இருக்கும் நேரத்தில் பின்புறம் ஒரு அதட்டல் கேட்டது.

''மே...கா...! பிரபா, பாலாக்கு என்ன ஆச்சு? எங்கே இருக்கான்?'' என்ற அக்கறையும் அதட்டலும் கலந்த குரல் கேட்டுத் திரும்பியவன் ஒரு கணம் திகைத்து நின்றான். அவளும் டாக்டராக இருக்க வேண்டும்.

''நீ..ங்..க..தே..ன்...மொ..ழி..யா?''

''ஆமா! அதுக்கென்ன?''

''மிஸ்டர் பாலாஜி... உங்களை...'' ஒரு இளம் பெண் னிடம் நேரடியாக உருவத்தை குறை சொல்லும் வார்த்தை சொல்ல விரும்பாமல் நிறுத்தியவனுக்கு அவன் யானை என்று சொன்னது நினைவில் வந்து சிரிப்பு பொங் கியது.

அவன் சொன்னதற்கும் அவளின் உருவத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லையே? ஏன் அப்படிச் சொன் னான்? அவன் யோசனையில் இருந்த இடைவெளியில் விபத்து விபரம் அவள் காதுகளுக்குப் போய் சேர்ந்து இருக்க, வீடியோ காமராவில் அவன் படம் பிடித்து இருந்த காதலர் தினக் கொண்டாட்ட நிகழ்ச்சிகளுக்கு என்று காதலர்கள் போஸ் கொடுத்த படங்களில்

அவளின் பார்வை பதிய உதடு இகழ்ச்சியாகப் பிதுங் கியது.

''ரோட்டில் போகும் வரும் இளம் ஜோடிகளை எல் லாம் படம் பிடித்து இதே மாதிரி கண்ணை மூடி பைக் ஓட்டினால் உயிர் காக்கும் மருத்துவருக்கும் மற்றவருக் கும் வித்தியாசம் தெரியுமா? உங்களை மாதிரி ஆட்களை எல்லாம் நடு ரோட்டில் நிற்க வைத்து...'' என்று ஆத் திரத்தில் பொரிந்தவளைக் கண்டு முதல் கணம் திகைத் தவன், பின் சத்தமாகச் சிரிக்க ஆரம்பித்தான்.



தான் கோபமாகப் பேசுவதைச் சட்டை செய்யாமல் சிரித்த அவ னைப் பார்க்கத் தேன்மொழிக்கு மேலும் கோபம் பெருக, ''உன் னிடம் எனக்கு என்ன பேச்சு? நான் பேச வேண்டிய இடத்துல பேசிக்கிறேன்'' என்று உள்ளே சென்றவளைப் பார்த்தபடி சில கணங்கள் நின்றான்.

அவன் மேல் அக்கறை வைத்து இருக்கும் இரண்டு பேர் இருக்கும் இடத்தில் தான் உதவ வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. இதுக்கு மேலே இங்கே நின்று 'தன் மேல் தப்பில்லை' என்று விளக்கம் சொல்லிக் கொண்டு இருப்பதை விடக் கிளம்பலாம் என்று பாலாஜியின் வரு கைக்காகக் காத்திருக்காமல் கிளம்பி விட்டான் தமிழ் வேந்தன்.

பாலாஜிக்கு கட்டுப் போடுவது வரை உள்ளேயே இருந்த தேன்மொழி 'அவன் மேல் தப்பில்லை. நான் தான் பாய்ந்து வெளியே சென்றேன்.' என்று சமாதானம்

சொன்னதை கவனிக்கவே இல்லை. சிகிச்சை முடிந்து வெளியே வந்தபோது அவள் அங்கே இல்லை.

"தமிழ் என்று ஒருவர் இங்கே இருந்தாரே..." என்று வரவேற்பில் இருந்த ஆளிடம் பாலாஜி விசாரிக்க முயல தேன்மொழி மேலும் கடுப்பானாள்.

"உனக்குக் கோபமே வராதா? உன்னை பைக்கில் இடிச்சுத் தள்ளி உடைச்சுக் கட்டுப்போட வச்ச இருக்கான்? அவனைப் போய் இருக்கானா? சாப்பிட்டானா என்று விசாரிக்கிற?"

"என்ன நடந்தது என்று முழுசா தெரிஞ்சுக்காமலேயே..."

"நான் என்ன தெரிஞ்சுக்கணும்? உன்னை எனக்கு இருபது வருஷமா தெரியும். நீ எட்டு வருஷமா பைக் ஓட்டுகிறாய். நீ ஓட்டினால், சைக்கிள்காரன் கூட ஓவர்டேக் பண்ண வாய்ப்பு இருக்கு. தப்பு அவன் மேலே தான் நிச்சயம் இருக்கணும்" என்று தீர்மானமாகச் சொன்ன தங்கையை மறுத்துப் பேச முடியாமல் அசடு வழிந்தான் பாலாஜி.

இத்தனை ஆண்டு காலமாக பைக் ஓட்டியதற்கும், இன்று பைக் ஓட்டியதற்கும் பெரிய வித்தியாசம் உண்டு. அப்போது அவன் சிறகு முளைக்காமல் பறந்தான். சுற்றுப்புறம் பற்றிய நினைவே இல்லை என்பதை இவளிடம் எப்படிச் சொல்வது?

"நின்று கொண்டே கனவு காணாதே! வா, உன்னை வீட்டில் விட்டு விட்டுக் கிளம்புகிறேன்."

"எங்கே கிளம்புகிறாய்?" என்று அவன் கேட்ட கேள்விக்கு அவளிடமே பதில் இல்லை. அவனை தன் காரில் ஏற்றி வீட்டில் கொண்டு வந்து தள்ளி விட்டு, வாசலில் காத்திருந்த அப்பாவை ஏற்றிக் கொண்டு சந்தோம் காவல் நிலையத்திற்குச் சென்றாள்.

* * *

"அம்மா என் பிங்க் சுடிதார் எங்கே? நான் ஹாஸ்பிடல் கிளம்பணும். மணி ஏழரை..." என்று அலறிய தேன்மொழியின் குரலைக் கேட்டதும், ஹாலில் பேப்பர் படித்துக் கொண்டு இருந்த பாலாஜியும், உணவு மேஜையில் காலை நேரச் சிற்றுண்டியை எடுத்து வைத்துக் கொண்டு இருந்த பூங்கோதையும் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டனர். பதினைந்து வயதானாலே என்ற எரிச்சலில் வெளியே வந்த தேன்மொழியின் கண்களில் அந்த சிரிப்பு பட மேலும் கடுப்பானாள்.

"நான் அம்மாவிடம் ஏதாவது கேட்டால் உனக்கென்னடா சிரிப்பு வேண்டிக் கிடக்கு? ஜாலியா வீட்டில் கால் மேல் கால் போட்டு உட்கார்ந்து இருக்க உனக்கு எப்படி என் அவசரம் புரியும்?"

"ஹாஸ்பிடல் போகாமல் இருப்பதுதான் எனக்கு அவஸ்தை என்று உனக்குத் தெரியுமா? போ போ. கிளம்புற வழியைப் பாரு..."

"உன்னை நான் சாயங்காலம் வந்து வச்சுக்குறேன். அம்மா என் பிங்க் சுடிதார் எங்கே என்று கேட்டேனே? உங்களுக்குக் காது கேட்காதா?"

"அம்மாவை ஏன் மிரட்டுகிறாய்? ட்ரெஸ் போட்ட உடனே சாப்பாட்டுக்கு வந்து நிப்பியே? உன் ஒவ்வொரு வேலைக்கும் ஒருத்தரை ஏவாமல், நீயே பார்க்கப் பழகு" என்று சமாதானம் செய்ய, "நான் உன்னிடம் கேட்கவில்லை" என்று பாய்ந்தாள்.

''பதிலுக்கு பதில் பேசிட்டே இருக்காதே தேன்மொழி. அலமாரியில் அயன் பண்ணி அடுக்கி வச்சு இருக்கும். அத்தனை துணியை விட்டுட்டு அந்த பிங்க் சுடிதார்தான் வேண்டுமா? இருப்பதில் எதையாவது போட்டுட்டுப் போ'' என்று அதட்டினார் பூங்கோதை.

''ஏன் நேற்று உங்க அருமை பிள்ளைக் கேட்டதும், நீங்க அடுப்பில் வேலை இருந்தாலும் அதை நிறுத்திட்டு வந்து, அயர்ன் பண்ணி தந்தீங்க. இப்ப எனக்கு எதை யாவது போட்டுட்டுப் போ என்று இலவச அறி வுரையா?''

''அவன் என்னிக்காவது ஒரு நாள் ஏதாவது ஒரு வேலை கேட்பான். அதைக்கூட செய்யலைன்னா எப்படி?'' என்று விளக்கம் சொல்லும் போதே ஹாலில் போன் ஒலித்தது. அதை எடுத்துப் பேசிய பாலாஜி, ''தேனு உனக்கு போன். சாந்தோம் இன்ஸ்பெக்டர் பேசு றார்'' என்று சொல்லும்போதே கோபத்தைக் காட்டி னான்.

''உன் ஆக்சிடென்ட் கேஸ் நேற்று கம்ப்ளைன்ட் கொடுத்தேன். அதுக்கு வரச் சொல்லி இருப்பார்...'' என்று பதில் சொன்னவள் போனை வாங்கினாள். ''சொல் லுங்க சார், தேன்மொழி தான் பேசுறேன்'' என்று ஆரம் பித்தவள் போனை வைத்து முடிக்கும் வரை அம்மாவும் பையனும் அவளையே பார்த்துக் கொண்டு இருந் தனர்.

''நானே போலீஸ் கம்ப்ளைன்ட் கொடுக்கலை. உன்னை யார் போய்க் கொடுக்கச் சொன்னா?'' என்று அவள் போனை வைத்துவிட்டுத் திரும்பியதுமே அதட்டி னான் பாலாஜி.

''அப்பா தான் கொடுக்கச் சொன்னார். அவரையே கேட்டுக்கோ'' என்று சொல்லி விட்டு அவளின் அறைக் குள் ஓடிவிட்டாள்.

''என்னப்பா இது? அவள்தான் சின்ன பிள்ளை புரியாமல் சொல்றா என்றால் நீங்களும் கூடச் சேர்ந்து போய் கம்ப்ளைன்ட் கொடுத்தீங்களா?''

''பாலா, என்னைப் பொறுத்தவரை அது தப்பு இல்லை. விபத்து நேர்ந்ததில் நீ பாதிக்கப்பட்டு இருக் கிறாய். அதற்குக் காரணம் ஆனவன் மீது நடவடிக்கை எடுக்க புகார் கொடுப்பது தப்பு இல்லை. நம்ம சமூ கத்தில் பெண்கள் போலீஸ் ஸ்டேஷன் வாசல் மிதிக்கக் கூடாது என்று நீங்க இரண்டு பேரும் பேசினால் அதுக்கு நான் ஆள் இல்லை...''

''பெண்ணை தைரியமா வளர்க்கணும் என்பதை நானும் ஒத்துக் கொள்கிறேன். ஆனால் சுதந்திரம் என்ற பெயரில் அவளுக்கு அளவு மீறி உரிமை கொடுக் கிறோமோ என்று எனக்கு பயமா இருக்கு'' என்று சொன்ன பூங்கோதையின் குரலில் கவலை இருந்தது.

''நேற்று நடந்தது விபத்து என்று வைத்துக் கொண் டால், அதில் நிச்சயம் அவன் தப்பு இல்லைப்பா. கம்ப்ளைன்ட் வாபஸ் வாங்கிக்கலாம் என்பது என் கருத்து. சம்பவ இடத்தில் இல்லாத, சம்பவத்தைப் பார்த்தே இராத அவளின் அபிப்ராயத்தை விட என் கருத்துக்கு மதிப்பு கூடுதல் இல்லையாப்பா? நீங்க போகாவிட் டால், நானே நேரில் போய்...''

''ஏன்டா இவ்வளவு உணர்ச்சி வசப்படுகிறாய்? ரெண்டு மூணு நாள் ப்ரெஸ் பண்ணாமல் விட்டாலே அவங்களுக்கு இன்ட்ரெஸ்ட் குறைந்து விடும்.''

"நோப்பா! இது நீங்க அவளுக்காக சொல்றீங்க..."

"ஆமா! எனக்காக சொல்றாங்க. அப்பா ப்ரெஸ் பண்ணாமல் விட்டாலும் நான் விடப் போவதில்லை. இன்று மாலை காலேஜில் இருந்து வரும்போது அங்கே போய் பார்த்து விட்டு தான் வருவேன். அம்மா நான் கிளம்புறேன்."

"அண்ணனோடும் அப்பாவோடும் மனஸ்தாபம் என்றால் சாப்பாடு என்ன பாவம் பண்ணியது?" என்று அழைத்தார் பூங்கோதை.

"அட நீங்க வேறம்மா! காண்டீனில் புதன் கிழமை காலையில் பொங்கல் சூப்பரா இருக்கும். அதனால் கிளம்புகிறாள். அவள் பட்டினியா போகிறாள் என்று பீல் பண்ண வேண்டாம்..."

"அப்பா, இவனை சும்மா இருக்கச் சொல்லுங்க. நான் கிளம்புறேன்..." என்று கைகடிகாரத்தைப் பார்த்துவிட்டு அவசரமாக வெளியேறிய மகளைச் சிரிப்போடு பார்த்து ரசித்தனர்.

"என்ன பாலா, அவளை வம்பிழுத்து ரொம்ப நாளாச்சே? திடீர்னு பத்து வருஷம் பின்னாடி போன மாதிரி ஒரு பீலிங். ஸ்கூலில் படிக்கும்போது தான் இப்படி அடிச்சுக்குவீங்க. நாலு நாள் பேசாமல் இருப்பீங்க. என்ன என்ன ஆச்சு?" என்று கேட்டார் விஜயகுமார்.

"அவளுக்கு வரும் வெள்ளியோடு இருபத்தி இரண்டு வயசு முடியப் போகுது. இன்னும் சின்னக் குழந்தை மாதிரி வச்சு இருக்கோம். அவளுக்குக் கல்யாணம் பண்ண வேண்டாமா?" என்று பாலாஜி சொன்னதை ஒத்துக் கொண்டார் விஜயகுமார்.

எப்போதும் பெண்ணுக்கு ஆதரவாகப் பேசும் விஜய குமாரே பெண் வளர்ந்து விட்டதை வியப்போடு நினைவு கூற, ஒரு நாளைக்கு மூன்று முறை சொல்லிக் காட்டும் பூங்கோதை அதில் கவனம் செலுத்தாமல் மகனின் பேச்சுக்கு என்ன காரணம் என்று யோசிக்க ஆரம்பித்தார்.

* * *

மாலையில் மகள் கல்லூரியில் இருந்து திரும்பி வரும்போது சாந்தோம் காவல் நிலையத்திற்கு வருவதை நினைவு கூர்ந்து அங்கே சென்றபோது, அதே நேரத்தில், பைக்கை நிறுத்திவிட்டு, ஹெல்மெட்டைக் கழற்றிய அந்த வாலிபனை அவர் பார்த்து இருக்கிறார். எங்கே? எப்போது...? "தம்பி, ஒரு நிமிஷம்..." என்று அவசரமாக அழைக்க அவன் திரும்பி புன்னகைத்தான்.

"உங்களை நான் எங்கேயோ பார்த்து இருக்கிறேன். ரொம்பப் பழகிய முகமா இருக்கே? எங்கே என்று ஞாபகம் இல்லை..."

"தமிழ்நாட்டில் இயற்கை பற்றிய ப்ரோக்ராமை டி.வி.யில் பார்க்கும் அனைவருக்கும் என்னைத் தெரிய வாய்ப்பு உண்டு. நான் தமிழ்வேந்தன். என்னை முகில் டி.வி.ல பார்த்து இருக்கலாம்" என்று அவரிடம் கை குலுக்க, 'தமிழ்வேந்தன்' என்ற அவனின் பெயரைக் கேட்டதும் அவரின் கண்கள் வியப்பில் விரிந்தது.



ஏற்கனவே எங்கேயோ பார்த்த மாதிரி தோன்றுகிறதே என்று எண்ணிய விஜயகுமாருக்கு, அவன் தன் பெயரை 'தமிழ்வேந்தன்'

என்று அறிமுகப்படுத்திக் கொண்ட உடனேயே மின்னல் தோன்றியது. பாலாஜிக்கு மெடிக்கல் சீட் அட்மிஷன் போட வேண்டிய நேரத்தில் ஆடிட்டிங் போய் மதுரை மில் மாட்டிக் கொண்ட போது உதவிக்கரம் நீட்டிய குடும்பத்தின் இளைய தலைமுறை!

''ஹேய் தமிழ்... நீயா? விஸ்காம் கிராஜுவேட். சிங்கப்பூர் ரிடான்... கரெக்டா...? தமிழ், நீ டி.வி.ல சேர்ந்து இயற்கை பற்றி சொல்ல ஆரம்பிக்கும் முன்பே எனக்கு தனியா ஒரு ராத்திரி முழுவதும் ஓடும் ரயிலில் பாடம் எடுத்து இருக்கிறாய் நினைவிருக்கா?'' என்று உற்சாக மாய் அவர் பேச, அவனுக்கும் நினைவு வந்தது.

''ஓ! அங்கிள்... அப்போ... பையனுக்கு அட்மிஷன் என்று... மதுரையில் இருந்து சென்னை வர பாண்டியன் எக்ஸ்ப்ரெசில்... நீங்களா? எப்படி இருக்கீங்க? பையன் என்ன செய்கிறார்?'' என்று அவனும் ஆர்வமாகவே விசாரித்தான்.

''நான் நல்லா இருக்கேன். பையன் எம்.எஸ். முடித்து விட்டான். சாந்தோம்ல கிளினிக் வச்சு இருக்கான். பொண்ணும் எம்.பி.பி.எஸ். படிக்கிறாள். இந்த வருடம் முடிக்கிறாள். பையன் க்ளினிக்லேயே சேர்ந்து ப்ராக்டீஸ் பண்ணச் சொல்ல வேண்டியதுதான். உங்க அம்மா அப்பா எப்படி இருக்காங்க? எங்கே இருக்காங்க? இங் கேயா மதுரையிலா?'' என்று விசாரித்ததுமே அதுவரை இருந்த புன்னகை மறைந்தது.

''அம்மா இங்கேதான் என்னுடன் இருக்காங்க. எம்.ஆர்.சி. நகரில் இருக்கோம்'' என்றவன் அப்பா பற்றி சொல்வதைத் தவிர்த்தான்.

''அப்பா...'' என்று இழுத்தார். அவன் தவிர்த்ததில் அவர் இல்லை என்பதை உணர முடிந்தது.

''இறந்து எட்டு வருடம் ஆச்சு...''

''எட்டு வருஷமா? நாம் சந்தித்து அவ்வளவு நாள் தானேப்பா இருக்கும்?''

''ம்ம்ம். ஆமா அங்கிள். நாம் சந்தித்த மறுநாளே... ஒரு சாலை விபத்தில்...''

''மறுநாளே! மை காட்... அப்ப நீ... சிங்கப்பூர்... அம்மா...''

''நான் சிங்கப்பூர் போகலை அங்கிள். மதுரைக்குத் திரும்பிட்டேன். நான் தான் அம்மாவை பார்த்துக் கொண்டேன். இருப்பதை வைத்து... ப்ச்! அதெல்லாம் பழைய கதை அங்கிள். டைம் கிடைக்கும் போது ஒரு நாள் வீட்டிற்கு வாங்க. இது என்னுடைய கார்ட்'' என்று சட்டை பையில் இருந்து எடுத்து நீட்டியவன், சுதாரித்து இருந்தான். பொது இடத்தில் அதற்கு மேல் துக்கம் விசாரிக்க விரும்பவில்லை என்றாலும் அவன் சொன்ன செய்தியின் தாக்கத்தை உள்வாங்கி ஜீரணிக்க அவருக்கு அதிக நேரம் தேவைப்பட்டது.

''நாங்க வருத்தப்படுவதைப் பார்க்க எங்க அப்பா வுக்கே பிடிக்காது. எனக்குப் பிடித்த வேலை செய்றேன். நிறைவான சம்பளம். எங்க இருவரின் ஆசைகள் அளவு மீறியவை இல்லை என்பதால் இப்ப நாங்க ரொம்ப நல்லா இருக்கோம். நீங்க எங்கே இங்கே...?''

''என்னைக் கேட்கிறாயே? டி.வி.காரனுக்கு போலீஸ் ஸ்டேஷனில் என்ன வேலை?'' என்று தன்னையும் அந்த அதிர்ச்சியில் இருந்து மீட்டுக் கொண்டவர் விசாரித் தார்.

"நான்தான் முதலில் கேட்டேன்..." என்று சொல்லும்போதே வந்து நின்ற அந்தக் காரை அவன் நேற்று பாலாஜி பாலி க்ளினிக்கில் பார்த்து இருக்கிறானே? இங்கே வருவது தேன்மொழியா?

"தமிழ், என் பொண்ணு வந்தாச்சு. அவளுக்காக தான் இங்கே வந்தேன். அறிமுகப்படுத்தி வைக்கிறேன்..." என்று நடந்தவரை பின் தொடர கால்கள் வராமல் அங்கேயே நின்றான். பாலாஜி இவரின் மகனா? நேற்று பாலாஜிக்கு நிகழ்ந்த விபத்திற்கு தான் காரணம் என்று தெரிந்தால் இவரின் இந்தக் கரிசனம் தொடருமா?

"வா வா, தேனு. கரெக்டா உனக்கு முன்னாடி அப்பா ஆஜர் ஆகிட்டேனா? உனக்கு என்னுடைய பழைய பிரெண்ட் ஒருத்தரை அறிமுகப்படுத்தி வைக்கிறேன்..."

"உங்க பழைய பிரெண்ட் அறிமுகப்படுத்தி வைங்க. ஆனால் அதுக்கு முன்னாடி எதிரியோட என்னப்பா சிரிச்சுச் சிரிச்சுப் பேச்சு வேண்டி கிடக்கு?"

"எதிரியா? யாரைம்மா சொல்ற?"

"அந்த பிரெஞ்ச் ப்ரூ ஷர்ட் போட்டு காமராவோடு ஸ்டைலா நம்மளை முறைச்சுப் பார்க்கிறானே அவனைத் தான் சொல்றேன்..."

"யாரு தமிழா? அவன் நமக்கு எதிரியா? என்ன உளறுகிறாய்?" என்று பதறியவரின் குரலில் அவள் எதிர்பார்க்காத பதட்டம் இருந்தது.

"அவன் தான் தமிழ். நேற்று பாலாஜிக்கு ஆக்சிடெண்ட் ஆனதுக்கு அவன்தான் காரணம் என்று கம்ப்ளைன்ட் கொடுத்து இருக்கோம். ஒண்ணுமே தெரியாத மாதிரி கேட்கறீங்க?"

"அவனாவது ஆக்சிடெண்ட் பண்றதாவது? அதுக்கு சான்ஸ் இல்லை..."

"அப்பா..."

"தேன்மொழி! அப்படியே நடந்து இருந்தாலும் அது விபத்து. அவனை மீறி நடந்ததா நினைத்து விட்டு விடலாம். புகார் வாபஸ் வாங்குவதாக எழுதிக் கொடுப்பது என்றால் மட்டும் உள்ளே போகலாம். இல்லை என்றால் இப்படியே கிளம்பலாம்..."

"என்னப்பா இப்படிச் சொல்றீங்க? அவன்..."

"தேனு. அப்பா சொல்றதை மறுத்துப் பேசாமல் கேட்பாய் என்று நம்புகிறேன். இதோடு விடு. ஒரு நிமிஷம். முகவரி சொல்லி வீட்டுக்கு வரச் சொல்லிட்டு உன்னுடனேயே வரேன். கோபப்படாதே" என்று சொல்லி நகர அவரை நம்ப முடியாமல் பார்த்தாள் தேன்மொழி.

இதுவரை அப்பா தான் சொன்ன, செய்ய ஆசைப்பட்ட எதற்குமே தடை போட்டதே இல்லை. அதுவும் அந்த பழவேற்காடு படகுப் போட்டியில் அம்மாவுக்கும் பாலாக்கும் காயம் பட்டதற்கு. தான் காரணம் என்பது சந்தேகம் இல்லாமல் நிரூபணம் ஆன பிறகு கூட, அப்பா தன்னைக் கட்டுப்படுத்தியதே இல்லை. இவனுக்கு என்ன அவ்வளவு முக்கியத்துவம்? பாலாஜியை விட அம்மாவை விட இவன் உசத்தியா?

"என்ன தமிழ் என் பெண்ணிற்கு அறிமுகம் செய்து வைக்கிறேன் என்று அழைத்தால் இங்கேயே நின்று விட்டாய். என் பெண்ணைப் பார்த்தால் அவ்வளவு பயமா?" என்று விசாரித்தபடி தமிழன் அருகில் வர தமிழுக்கு அவரின் நடவடிக்கை வியப்பை அளித்தது.

"அதெல்லாம் இல்லை சார், அவங்களைப் பார்த்து எனக்கென்ன பயம்?"

"இதுல வீட்டு முகவரி இருக்கு. நீ உங்க வீட்டிற்குப் போற. உங்க அம்மாவை கையோடு அழைத்துக் கொண்டு... வீட்டுல அம்மா தவிர வேறே யாரும் இல்லையே?"

"இல்லை அங்கிள். இன்னும் கல்யாணம் ஆகலை. வீட்டில் நானும் அம்மாவும் தான். ஒரு சின்ன லட்சியம் இருக்கு. அதை முடிச்சுட்டுக் கல்யாணம் பண்ணிக் கணும்..." என்றவன் குரலில் உறுதி இருந்தது.

"ஓகே, உங்க அம்மாவைக் கையோடு அழைத்துக் கொண்டு இன்னும் அரை மணி நேரத்துல எங்க வீட்டுக்கு வருகிறாய்..."

"இன்னிக்கா? இல்லை சார்... இன்னொரு நாள்..."

"ப்ச்! சாரா? உதை வாங்குவ. அங்கிள் எங்கே போச்சு? நானே போய் இப்ப புகாரை வாபஸ் வாங்கிட்டால் இங்கே உனக்கு என்ன வேலை? இன்று நைட் சாப்பாடு எங்க வீட்டுல தான். அங்கே நாம் எல்லா விபரமும் பேசறோம். ஓகே?"

"அங்கிள் ப்ளீஸ்! உங்க வீட்டில் இருப்பவங்களுக்கு வசதிப்பட வேண்டாமா? நான் இன்னொரு நாள்..."

"தேன்மொழிக்காக பார்க்கிறாயா? கொஞ்சம் பட படப்பு அவ்வளவுதான்..."

"நான் ஒண்ணும் தப்பா சொல்லவில்லை அங்கிள்..."

"எதுவா இருந்தாலும் வீட்டுல பேசிக்கலாம். உன் வருகையை எதிர்பார்க்கிறேன்" என்று முடித்து விட்டுக் கிளம்ப அவன் யோசனையுடன் நின்று இருந்தான்.

"தேனு. உன்னிடம் வீட்டுக்குப் போவதற்கு முன்னால் ஒரு முக்கியமான விஷயம் கேட்க வேண்டும். பீச் போறியா?" என்று காரில் ஏறி அமர்ந்த உடனே மகளிடம் விண்ணப்பம் வைக்க வியப்பாகத் திரும்பிப் பார்த்தாள்.

"அப்பா, உடம்பு எதுவும் சரி இல்லையா?" என்று கேட்டபடி தன் இடது கையை அவரின் நெற்றியில் வைத்துப் பார்த்தாள் தேன்மொழி.

"உடம்பு சரியாத்தான் இருக்கு. மனசுதான் சரி இல்லைம்மா..." என்றவரின் குரலில் மிதமிஞ்சிய வருத்தம் இருந்தது.

"ஏன்பா...? என்ன ஆச்சு?"

"என்னால் ஒரு குடும்பமே சிதைஞ்சு போச்சோ என்று குற்ற உணர்வு இருக்கும்மா. அதை எப்படி சரி செய்ய என்று யோசித்துக் கொண்டு இருக்கிறேன்..."

பீச்சில் மணல் பரப்பில் வந்து அமர்ந்து பத்து நிமிடங்கள் ஆகியும் விஜயகுமார் பேசவே இல்லை என்பதால் அவளே ஆரம்பித்தாள். "என்னப்பா, முகமே சரியா இல்லை. பேசணும் என்று சொன்னீங்க. யோசிச்சுட்டே இருக்கீங்க. என்ன விஷயம்? சொல்லுங்கப்பா..."

"தேன்மொழி, நான் கேட்கிற கேள்விக்கு உண்மையான பதில் சொல்லணும்..."

"உங்களிடம் நான் எப்போ பொய் சொல்லி இருக்கேன்பா? கேளுங்கப்பா..."

"தேனு... நீ யாரையாவது காதலிக்கிறாயா?" என்று அவர் கேட்ட அடுத்த கேள்வியின் முடிவில், அந்த தமிழின் முகம் ஒரு வினாடி தோன்றி மறைந்தது. அப்பா

இவனை மனதில் வைத்து தான் இந்தக் கேள்வியை கேட்கிறார் என்பது இருநூறு சதவிகிதம் உறுதியாகத் தோன்றியது. இவன் எப்படி அப்பாவை இவ்வளவு தூரம் பார்க்கிறான்? 'இது வரைக்கும் இல்லைப்பா' என்று உண்மையைச் சொன்ன உடன் அவரின் முகம் மலர, அதுவும் அவளுக்கு எரிச்சலையும் ஏமாற்றத்தையுமே தந்தது.



ஸ்டேஷனில் உனக்கு எந்த வேலையும் இல்லை என்பது அழுத்தமாகச் சொல்லி விட்டு விஜயகுமார் தன் மகளுடன் கிளம்பி விட்டார் என்பது தெரிந்தாலும் தான் போகாமல் இருப்பது சரி இல்லை என்பதால் உள்ளே சென்று தன் விலாச அட்டையை ஆய்வாளரிடம் நீட்டி, வரச் சொன்னதை நினைவூட்டினான் தமிழ்வேந்தன்.

''டி.வி. நிரூபரா? முதலில் பேசும்போதே சொல்லி இருக்கலாமே சார். ஒரு பொண்ணு நேற்று புகார் கொடுத்தாங்க. டாக்டர் என்று சொன்னாங்க. மறுக்க முடியலை. இன்று காலையில் போன் பண்ணி நாலு மணிக்கு வரச் சொல்லிச் சொல்லி இருந்தேன். ஆளைக் காணோமே? கிளம்புங்க சார், பார்த்துக்கறேன்...'' என்று அனுப்ப வெளியே வந்தவனுக்கு நீண்ட நாட்களுக்குப் பிறகு அப்பாவின் நினைவு தோன்றி ஒரு மாதிரி இருந்தது.

இரவு உணவுக்கு தன் வீட்டிற்கு வரச் சொன்ன, விஜயகுமாரின் அழைப்பை ஏற்றுக் கொள்ளும் எண்ணமே இல்லை. பார்த்த வேகத்தில் அழைத்து விட்டார்.

அதற்காக உடனே போய் நின்றால் நம்மைப் பற்றி என்ன நினைப்பார் என்ற கேள்வி அவனைக் கட்டிப் போட்டது.

''என்ன தம்பி இவ்வளவு சீக்கிரம் வந்துட்ட? உடம்பு சரி இல்லையா?'' என்ற அம்மாவின் கேள்வி வீட்டுக்குள் அடி எடுத்து வைக்கும்போதே வரவேற்றது.

''இப்படி வாசல் கதவைத் திறந்து வைக்காதீங்க என்று எத்தனை தடவை சொன்னாலும் ஏன்மா காதிலேயே போட்டுக்க மாட்டேங்கறீங்க?'' என்று அதட்டினான்.

''நான் மாலையில் விளக்கேற்றும் நேரத்தில் மட்டும் பத்து நிமிடம் வாசல் கதவைத் திறந்து வைப்பேன் என்பதும், அந்த நேரத்தில் இங்கே ஹாலிலேயே இருப்பேன் என்பதும் புதுசு இல்லையே? உடம்பு சரி இல்லையா? ஏன் சீகிரம் வந்து விட்டாய் என்று கேட்டேனே. நீ ஏன் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லாமல் பேச்சை மாற்றுகிறாய்?''

''உடம்பு நல்லா தான் இருக்கு. சாந்தோம் போலீஸ் ஸ்டேஷனில் ரொம்ப நாளைக்குப் பிறகு ஒருத்தரைப் பார்த்தேன். மனசு சங்கடப்பட்டது. நேரே வீட்டுக்கு வந்து விட்டேன்...''

''சூடா காபி வேணும்னா தரட்டுமா?''

''ப்ச்! மணி ஆறாச்சே? வேண்டாம்மா...''

''என்னப்பா இது? உன் மனசு சரி இல்லாமல் போகிற அளவுக்கு பாதித்தது யாரு?''

''வி..ஜ..ய..கு..மா..ர்...''

''ஓ!'' என்று மட்டும் சொன்னவருக்கு அந்த ஒரு வார்த்தையில் அவன் யாரைச் சொல்கிறான் என்பதும்

உடனடியாகப் புரிந்து விட்டது. எப்படி மறக்க முடியும்? அன்று வரை அளவான குடும்பத்தில் வருமானம் குறை வாக இருந்தாலும் மன நிறைவோடு வாழ்ந்தவர்கள் இவரை சந்தித்த தினத்திற்குப் பிறகு குழல் மாறிய தினம் அல்லவா?

ஒருவேளை மகனை வழி அனுப்ப சென்னைக்கு சென்று இருந்தால் உயிரோடு இருந்து இருப்பாரோ என்று ஒவ்வொரு நாளும் இல்லை என்றாலும் அவ்வப் போது மனது நினைக்கிறதே? தனக்கே இப்படி இருக்கும் போது அவனுக்கு எப்படி இருக்கும்? அவனுடைய எதிர்காலக் கனவுகளை ஒதுக்கி வைத்துவிட்டு உடனே திரும்பி வந்தானே!

அவன் ஆசைப்பட்ட துறையில் பேர் சொல்லும் நிலையில் நன்றாகவே சம்பாதிக்கிறான் என்றாலும் கூட அவனின் சிங்கப்பூர் பல்கலைக் கழகத்தில் படிக்க வேண்டும் என்ற ஆசை நிறைவேறவில்லை. தன் சக்திக்கு மீறிய செலவு என்ற போதிலும், சிங்கப்பூருக்கு படிக்க அனுப்ப முன் வந்த ஜெயராமன் இப்போது உயிரோடு இல்லை. அதற்குக் காரணம், இவருக்கு பயணம் செய்ய தன் டிக்கெட்டை அவர் விட்டுக் கொடுத்தது...

''அ...ம்...மா...'' என்ற அதட்டலான தமிழின் குரல் அவரை நடப்புக்குக் கொண்டு வந்தது.

''இந்த மாதிரி நாம் வருத்தப் படுகிறோம் என்று தெரிந்தால், அப்பா நம்மை மன்னிக்க மாட்டார். பார்த்த உடனே எனக்கும் சின்ன சஞ்சலம் இருந்தது. சரியாக விட்டேன். நீங்களும் சரி ஆகணும்'' என்று தாய்க்கு அறிவுரை சொல்ல அவர் தலை அசைத்தார்.

''சென்னைக்கு வந்து அதே மாதிரி ஒரு விபத்தில் உயிர் போய் இருந்தால் நாம் என்ன செய்து இருக்க முடியும்? அவரோட ஆயுசு முடிந்தது போய் சேர்ந்தார். சரி விடு. அவர் எங்கே இருக்கிறார்? அவரோட பையனாவது அட்மிஷன் கிடைச்சு நல்லா இருக்கிறானா?''

''என்னம்மா சின்னப் பசங்களைக் கேட்பது போல அவன் இவன் என்று சொல்றீங்க? அவர் இப்போ பெரிய டாக்டர். எம்.எஸ். ரெண்டும் முடிச்சு இருக்கார். பேர் பாலாஜி. சாந்தோம்ல கிளினிக் வச்சு இருக்கார்...''

''உனக்கு எப்படி அவர் பையனைத் தெரியும்?''

''அது ஒரு பெரிய கதை நேற்று நடந்தது. நேற்று விஜய் அங்கிளோட பையன் என்று தெரியாமல் நேற்று பார்த்தேன். சின்ன ஆக்சிடென்ட்.''

''ஆக்சிடென்டா? யாருக்கு என்ன ஆச்சு? நீ மோதி விட்டாயா? அடி பலம் இல்லையே?''

''நேற்று நடந்த விபத்துக்கு இப்ப ரியாக்ஷன் கொடுக்கிறீங்க? செம ஸ்பீட்மா நீங்க...''

''டேய்! விளையாடாமல் சொல்லு. யாருக்கும் உயிருக்கு ஆபத்து இல்லையே?''

''உயிருக்கு ஆபத்து இல்லை. இடது கையில் பிராக்சர். பாலாஜி அவர் கிளினிக்கில் இருந்து ஏதோ அவசர வேலையா வெளியே பைக்கில் வந்தபோது நான் சாந்தோம் ரோட்டில் பீச் சைடில் இருந்து வந்தேன். அப்ப சின்ன விபத்து நடந்து விட்டது. அடி பலம் இல்லை.''

''சரி... இதுல அவர் எங்கே வருகிறார்? அவரை எப்படி சந்தித்தாய்? பாலாஜி அவர் பையன் என்பது

உனக்கு எப்படித் தெரிய வந்தது என்ற விபரம் இல்லையே?''

''ம்ம்ம்... சொல்றேன்'' என்று இழுக்கும்போதே அவளின் முகம் மனக்கண்ணில் தோன்றி மறைந்தது. அவள் தன்னை தேவை இல்லாமல் கடுப்படித்தாள் என்பதை அம்மாவிடம் அவசியம் சொல்ல வேண்டுமா? வேண்டாம் இனிய உளவாக இன்னாதவை கூற வேண்டிய அவசியம் என்ன?

''நேற்று மாலை நடந்த விபத்துக் குறித்து சாந்தோம் காவல் நிலையத்தில் ஒரு புகார் பதிவு பண்ணி என்னை விசாரணைக்குக் கூப்பிட்டு இருந்தாங்க. அங்கே பையன் சார்பா அங்கிள் வந்து இருந்தார். அப்ப பார்த்தேன்.''

''அவர்... விஜயகுமார் சார் நல்லா இருக்கிறாரா?''

''நல்லா இருக்காங்க. அவங்க பொண்ணையும் பார்த்தேன். அவங்களும் டாக்டருக்குப் படிக்கிறாங்க. இன்னும் ரெண்டு மாசத்துல ஹவுஸ் சர்ஜன் முடிக்கப் போறாங்க. அவரோட வீட்டுக்கு நைட் கூட சாப்பிட கூப்பிட்டார்...''

''ஓ! பரவாயில்லையே ரொம்ப தன்மையா இருக்காங்களே?''

''ஆமா! அப்பா தகவல் தெரிஞ்சு ரொம்ப பீல் பண்ணினார்...''

''அவர் என்ன பண்ணினார் பாவம்? மதுரை வீடு விலைக்கு வாங்க பணம் புரட்டச் சொன்னேனே?''

''வானம் டி.வி.ல ஒரு ப்ரோக்ராமுக்கு பேசிட்டு இருக்கேன். அனேகமா செட்டில் ஆகும் என்று நினைக்

கிறேன். அதை வச்சு பேங்க் லோன் மூவ் பண்ணி சுலபமா வாங்கிடலாம்...''

''அதுக்குள்ளே வீடு ஏலம் வந்து விட்டால்...''

''வராதும்மா. அதுக்குள்ளே ஏற்பாடு பண்ணிடலாம் அம்மா. கவலைப் படாதீங்க. 'அந்த பாரதி இல்லம் இந்த பானுமதிக்கு தான் போதுமா...'' என்று நம்பிக்கையோடு சொன்ன வார்த்தை அவர் முகத்தில் பெரிய மலர்ச்சியையும் எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தியது.



வீட்டுக்குப் போவதற்கு முன்பு உன்னிடம் முக்கியமான விஷயம் பேச வேண்டும். பீச்சுக்கு போ என்று அப்பா அழைத்தபோதே ஆச்சரியப்பட்ட தேன்மொழி, ''நீ யாரையாவது லவ் பண்றியா?'' என்ற அவரின் விசாரணையில் மேலும் வியப்படைந்தாள். அது அந்த தமிழோடு தொடர்புடையது என்பதும் புரிந்ததால் எரிச்சலும் தோன்றியது.

''என்னப்பா வார்த்தைகளை எண்ணி எண்ணி பேசுற மாதிரி இருக்கு? என்னப்பா பிரச்னை? என்னிடம் சொல்லலாம் என்று தானே அழைத்து வந்தீர்கள்? அப்புறம் என்ன யோசனை?'' என்று மீண்டும் அப்பாவை பேசத் தூண்டினாள் தேன்மொழி.

''இன்னிக்குக் காலையில் பாலா உனக்குக் கல்யாணம் பண்ணும் வயசாச்சு என்று நினைவு படுத்தினான்...'' என்று இடைவெளி விட்டு அவளின் பிரதிபலிப்பை ஆராய முயன்றார்.

'ஒரு அண்ணனா அவன் சொன்னதில் என்ன வியப்பு?' என்ற ரீதியில் அவளின் அமைதி தொடர, அவரே மீண்டும் ஆரம்பித்தார்.

''காலையில் ப்ரோக்கரை வரச் சொல்லி உன் ஜாதகம் போட்டோ எல்லாம் கொடுத்தோம். அவர் ஒரு வாரத்துல நாலஞ்சு ஜாதகம் பொருத்தம் பார்த்து எடுத்துட்டு வரேன் என்று சொன்னார். உனக்கு வரப் போகும் கணவன் என்ன படித்து இருக்கணும்? எப்படி இருக்கணும் என்ற எதிர்பார்ப்பு ஏதாவது இருக்காம்மா?''

''அப்பா! நீங்க சுத்தி வளைக்கறீங்க. இன்னும் விஷயத்துக்கு வரலை...''

''உனக்கு வரப் போகும் மாப்பிள்ளையும் டாக்டரா இருக்கணும் என்ற மாதிரி...''

''நிச்சயம் இல்லை'' என்று வேகமாக வந்தது பதில்.

''என்னம்மா இவ்வளவு வேகமா சொல்ற? உனக்கு இந்த பீல்ட் பிடிக்கலையா? நானும் பாலாவும் சொல்கிறோம் என்பதற்காக...''

''என்னப்பா இப்படிச் சொல்லிட்டீங்க? பிடிக்கலை என்று சொல்லலைப்பா. ஆனால் ஒரே ப்ரோபஷனில் கணவன் மனைவி இரண்டு பேருமே இருந்தால் என்னைப் பொறுத்தவரைக்கும் சரியா வராது. எனக்கு ஹாஸ்பிடல், பேஷண்ட்ஸ், ட்ரீட்மென்ட் இதை தவிரவும் வேறே ஏதாவது அப்பப்போ பேசணும்...''

''ஓ.கே. இன்னும் ஒரே ஒரு கேள்வி. அப்பா யாரையாவது மாப்பிள்ளை பார்த்து, இவரை கல்யாணம் பண்ணிக்கோ என்று சொன்னால் உனக்கு ஆட்சேபனை இருக்குமா?''

''என்னைவிட, என் கல்யாணத்தில் உங்களுக்கு அதிக அக்கறை இருக்கும் என்பதில் எனக்கு சந்தேகம் இல்லைப்பா. முதலில் நீங்க மாப்பிள்ளை யார் என்றே சொல்லவும் இல்லை. இப்பவே எஸ். நோ, சொல்ல வேண்டிய கட்டாயம் என்னப்பா?'' என்று கேள்விகளை அடுக்கினாலும் உள்ளுக்குள் சிந்தனை ஓடிக்கொண்டே இருந்தது.

''நீ சொல்ற மாதிரி இது உடனே முடிவெடுக்கிற சமாச்சாரம் இல்லைதான். ஆனால் இந்த மாதிரி விஷயத்தில் பேச்சை ஆரம்பிப்பதற்கு முன்னால் உன் மனசில் என்ன இருக்கு என்பதையும் நான் தெரிந்து கொள்ளணும் இல்லையா? அதுக்கு தான் கேட்டேன். அதற்கு மேல் கடவுள் விட்ட வழி. சரி வாம்மா கிளம்பலாம்...''

''அ..வ்..வ..ள..வு..தா..னா?'' என்றவள் குரலில் ஏமாற்றம் வெளிப்படையாகத் தெரிந்தது. அப்பாவைப் பின்பற்றி காருக்கு நடந்தாலும் குழப்பமாக இருந்தது.

''இன்று இரவு சாப்பாட்டுக்கு நம் வீட்டிற்கு இரண்டு விருந்தினர்கள் வருவாங்க. ஏதாவது ஸ்வீட் சேர்த்து டிபன் பண்ணிடும்மா'' என்று காரில் பயணிக்கும்போது, வீட்டுக்கு போன் பண்ணி, அம்மாவிடம் சொல்ல அப்பாவைத் திரும்பிப் பார்த்து விட்டு சாலையில் கவனத்தைப் பதித்தாலும், காதுகள் தானாகக் கூர்மை அடைந்தது.

அம்மா எதிர்முனையில் யார் அது?'' என்று கேட்டு இருக்க வேண்டும். 'வந்து சொல்றேன்' என்று அப்பா பேச்சை முடித்தது காதில் விழுந்தது. அந்த இரண்டு விருந்தினர்கள், அவனும் அவன் வீட்டில் உள்ள இன்னும் யாரோவும்தான். அது அம்மாவோ... அப்பாவோ...

மனைவியோ... மனைவியாக இருக்க வாய்ப்பு இல்லை' என்ற எண்ணம் உடனடியாகத் தோன்ற அதுவும் அவனுக்கு எரிச்சலைத் தந்தது. அவனுக்கு மனைவி இருந்தால் என்ன இல்லாவிட்டால் தனக்கு என்ன?

ஆறு மணி அளவில் வீட்டிற்கு வந்து, காலேஜுக்குப் போன உடையை மாற்றி குளித்து இரவு உடை அணிவது வழக்கம் என்றாலும் அப்பாவின் சொல்லை ஏற்று மீண்டும் சுடிதார் அணிந்து காத்து இருந்தாள். இரண்டாவதாக அவனுடன் வரப் போவது யார் என்பதை அறிந்து கொள்ள விருப்பமின்றி காத்திருப்பதாகச் சொல்லிக் கொண்டாலும், அவள் விரும்பியது அன்று இரவு நடக்கவில்லை. அவன் வரவே இல்லை.

* * *

படுத்த சில நிமிடங்களில் உறங்கி விடும் வழக்கம் உள்ள விஜயகுமார் வெகு நேரம் படுக்கையில் புரண்டு கொண்டு இருக்க அருகில் இருந்த பூங்கோதை எழுந்து படுக்கையின் அருகில் இருந்த விளக்கைப் போட்டு கணவனின் முகத்தை ஆராய்ந்தார்.

"என்ன எழுந்து உட்கார்ந்து இருக்க?" என்று கேட்ட கணவனைப் பார்த்துப் புன்னகைத்தார்.

"சாயங்காலம் ஆறு மணிக்கு வந்ததில் இருந்து பார்க்கிறேன். ஏதோ யோசனையாவே இருக்கீங்க. என்ன உங்க மனசை போட்டு அரிச்சுட்டு இருக்கு? பட்டுன்னு சொல்லுங்க" என்று கேட்க அவரும் எழுந்து அமர்ந்தார்.

"என் குழப்பத்தை எல்லாரும் சரியா புரிஞ்சுக்குவாங்களா என்று தெரியலை கோதை..."

"எல்லோரும் ஏன் புரிஞ்சுக்கணும்? நான் புரிந்து கொள்கிறேன். சொல்லுங்க..."

"பாலா ப்ளஸ் டூ முடித்த பின், இன்டெர்னல் ஆடிட்டிங் செய்ய ஆபீஸ் வேலையா மதுரை போய் இருந்தேனே? உனக்கு ஞாபகம் இருக்கா?"

"இன்று வந்துடறேன்... இன்று வந்துடறேன் என்று ஒரே பதிலை மூன்று நாளா சொல்லிட்டு கடைசியில் வேறே வழி இல்லாமல் ராத்திரியோட ராத்திரியா ட்ரையின் பிடிச்சு வந்து சேர்ந்தீங்க நல்லா ஞாபகம் இருக்கு..."

"அப்ப அந்தப் பயணம் சுகமா நடக்க ஒருத்தர் தன் டிக்கெட்டை விட்டுக் கொடுத்தார் என்று சொன்னேனே? அது ஞாபகம் இருக்கா?"

"தேனு கூட ஆள் மாறாட்டம் பண்ணின கேஸ்ல உங்களை ரெயில்வே போலீஸ் பிடிக்கலையா என்று கிண்டல் பண்ணினாளே? அதுக்கு என்ன இப்ப?"

"அவரோட பையனை இன்று சாந்தோம் போலீஸ் ஸ்டேஷனில் பார்த்தேன்..."

"ஓ! அவருக்கு ஏதாவது பிரச்னையா? ஏதாவது உதவி தேவை என்றால் செய்யலாம். அதுக்கா இப்படி குழம்பு றீங்க?"

"இல்லைம்மா. முழுசா என்னை பேசவிடேன்."

"எப்பவும் நீங்க என்ன சொல்லப் போறீங்க என்பதை என்னால் ஊகிக்க முடியும். ஆனால் இப்ப க்ளூ இல்லாமல் விழிக்கிறேன். சொல்லி முடிங்க. நான் குறுக்கே பேசலை" என்று சொன்ன பூங்கோதையின் கைகளை தன் கைகளுக்குள் எடுத்து வைத்துக் கொண்டார்.

"தேங்க்ஸ் கோதை. நான் டென்ஷனா இருக்கிறேன். கில்டியா பீல் பண்றேன். முழுசும் கேட்ட பிறகு நீ என்ன

நினைக்கிறாய் என்பதை ஒபனா சொல்லலாம். ஓ.கே?'' என்று கேட்டு ஒப்புதலைப் பெற்றுக் கொண்டவர் சொல்ல ஆரம்பித்தார்.

''அந்தப் பையன் பேர் தமிழ்வேந்தன் அன்று. விக வல் கம்ப்யூனிகேஷன் பட்டப்படிப்பு படிக்க சிங்கப் பூருக்குப் போவதாகவும், அவனை சென்னைக்கு வந்து வழி அனுப்பி அவங்க அப்பா உடன் வருவதாகவும் இருந்தது. நான் டி.டி. ஆரிடம் பேசியதைக் கேட்டு, அவர்களாகவே முன் வந்து அவரின் டிக்கெட்டை எனக்குக் கொடுக்க முன் வந்தார்கள். அதுக்கு நான் உரிய பணம் கொடுத்து விட்டேன் என்பது வேறே விஷயம்... ஆனால் அதற்குப் பிறகு...''

''அதன் பிறகு என்ன ஆச்சு? அந்த பையன் படிப்பை முடிச்சானா இல்லையா?''

''அவன் சிங்கப்பூர் போகவே இல்லை. மறுநாளே அவன் மதுரைக்குத் திரும்ப வேண்டிய கட்டாயம் வந்துவிட்டது.''

''ஓ! அவங்க வீட்டில் யாராவது...'' இறந்து விட் டார்கள் என்பதை உணர்ந்தாலும் கேட்க முடியாமல் பாதியில் நிறுத்தினார் பூங்கோதை.

''ம்ம்ம். அவங்க அப்பா மறுநாள் காலையில் ஒன்பது மணிக்கு போட்ட லீவை கேன்சல் பண்ணிட்டு வேலைக் குப் போகும் போது சாலை விபத்தில் இறந்து விட்டா ராம்...''

''பார்த்தே இருக்காத அந்த நல்ல மனுஷங்களுக்காக மனசு பதறுது. ஒருவேளை அவர் ரயிலில் பயணம் செய்து இருந்தால் அந்த விபத்து நடந்து இருக்காதோ என்ற உங்க பதட்டம் புரியுது. கடவுளே...''

''அதை அவன் சொன்னதும் ஆடிப் போயிட்டேன். ரொம்ப கஷ்டமா இருந்தது கோதை அந்தப் பைய னுக்காக நாம் ஏதாவது செய்யணும் என்று மனசு துடிக்குது...''

''அந்தப் பையன் என்ன பண்றான்? படிக்க வேலை என்று ஏதாவது உதவி தேவையாக இருந்தால் நிச்சயம் செய்யலாம்.''

''இல்லை கோதை. நான் அந்த மாதிரி யோசிக்கலை. அவன் விஸ்காம் முடிச்சு, இப்ப முகில் டி.வி.ல நேச்சர் பற்றி ஒரு வாராந்திர ப்ரோக்ராம் பண்றான். வாழ்க் கையில் அவன் செட்டில் ஆகிட்டான். இப்ப பணத் தேவை இல்லை...''

''வேறென்ன செய்ய முடியும்?'' என்று குழப்பத் துடன் கேட்டார் பூங்கோதை.

''காலையில் பாலா கூட தேனுக்கு கல்யாணம் பண் ணும் வயசு வந்து விட்டது என்று நினைவு படுத்தினான் இல்லையா?'' என்று ஆரம்பித்து மீண்டும் இடைவெளி விட பூங்கோதைக்கு சுறுசுறுவென்று எரிச்சல் மூண்டது.

ரயிலில் பிரயாணம் பண்ண ஒரு டிக்கெட் கொடுத்த தற்காக, இருபத்திரண்டு வருடம் வளர்த்து ஆளாக்கிய பெண்ணைக் கட்டிக் கொடுக்கணும் என்று சொல்ல வருகிறாரா?

''நேற்று பாலாக்கு ஆக்சிடென்ட் ஆனது என்று தேன் மொழி சாந்தோம் ஸ்டேஷனில் கம்ப்ளைன்ட் கொடுத் ததைக் கூட வாபஸ் வாங்கச் சொன்னாயே?''

''ஆமா சொன்னேன். அதுக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம்?''

"அது அவனுக்கு எதிரான புகார்தான். அவன் நல்ல சாப்பாடு, அவன் தெரிஞ்சு பண்ணினான் என்று பாலாஜி கூட சொன்னானே" என்று மீண்டும் இழுத்தார் விருமாயி.

"இருக்கட்டும், அதை வாபஸ் வாங்க சொல்லி யார்கிட்டே? தேனு இன்னும் வாங்கலையா? சரி நான் காலையில் கண்டிப்பா வாபஸ் வாங்கச் சொல்லிடுறேன். நீங்க நிம்மதியா படுத்து தூங்குங்க" என்று முடிக்க முயன்றார் பூங்கோதை.

"அதில்லைம்மா, இவள் வாபஸ் வாங்கா விட்டாலும் அவனால இந்த கேஸில் இருந்து வெளிவந்துவிட முடியும். அவனுக்கு அது பெரிய விஷயம் இல்லை. நான் சொல்ல வந்தது வேறே விஷயம்..."

"நமக்கே ஒப்புதல் இல்லாத விஷயமா இருந்தால் பிறர் ஏற்றுக்கொள்ள மாட்டார்களோ என்ற சந்தேகம் இருந்தால் ஒரு விஷயத்தைச் சொல்லாமல் இழுத்தடிப் போம். தேங்காய் உடைச்ச மாதிரி விஷயத்தைப் பட்டுன்னு சொல்லுங்க."

"அந்தப் பையனுக்கு தேன்மொழியை திருமணம் செய்து கொடுக்க எங்களுக்கு விருப்பம், உங்களுக்குச் சம்மதமா என்று நாளைக்கு அவனிடம் கேட்கலாமா?" என்று அவர் சொல்லி முடிக்கும் முன்பே, "இப்படி ஒரு முடிவெடுக்க, உங்களுக்கு என்ன பைத்தியமா பிடித்து இருக்கு" என்ற பூங்கோதையின் கோபமான குரல் இடையிட்டது.



விளக்கை அணைத்து அருகில் படுத்து விட்டாலும் பூங்கோதைக்குத் தூக்கம் வரவில்லை. ஏறத்தாழ

முப்பது வருட தாம்பத்தியம், பெரியவனுக்கு இருபத்தி எட்டு வயது முடியப் போகிறது. கௌரவமான உத்தி யோகம், கை நிறையச் சம்பளம் அறிவான குழந்தைகள், நிறைவான குடும்ப வாழ்க்கையை இதுவரை வாழ்ந்தாகி விட்டது. இப்போது என்ன மனஸ்தாபம்? மகளின் திருமணம் முக்கியமான விஷயம் இல்லையா? இதை லேசாக எடுத்துக் கொள்ளலாமா? மனக கேட்காமல் மீண்டும் பேச்சை அவரே ஆரம்பித்தார்.

"நீங்களே சொன்ன மாதிரி உங்களுக்கு மனக இன்று சரி இல்லாதபோது நேது கல்யாணம் மாதிரி பெரிய முடிவு இன்று எடுக்க வேண்டாமே? கொஞ்சம் ஆறப் போட்டு அப்புறமா ஒரு நல்ல முடிவா எடுக்கலாம்..."

"நான் கல்யாண முடிவு எடுத்து விட்டேன் என்று உன்னிடம் சொன்னேனா கோதை?"

"கொஞ்ச முன்னாடி அப்படித்தானே கேட்டீங்க?"

"அந்த பையனிடம் கேட்கலாமா என்று உன்னிடம் அபிப்பிராயம் கேட்டேன். இந்தப் பேச்சை ஆரம்பிக் கும்போதே நீ உன் கருத்தைக் கூறலாம் என்று சொல்ல வில்லையா?"

"வாய்தான் அப்படிச் சொல்லுது, என் அபிப்ராயத் தைக் கேட்ட பிறகு எதுக்கு இந்தக் கோபம்?"

"எனக்கு மட்டும் தேன்மொழி மேலே அக்கறை இல்லையா? நான் யோசிக்கவே இல்லை என்பது மாதிரி தான் ஏன் கடுமையான வார்த்தைகளை அள்ளி வீசு கிறாய்?"

"அப்ப தேன்மொழி கல்யாணத்தில் என் அபிப்ராயத் திற்கு மரியாதை இல்லையா?"

''பாரு மறுபடியும் அவசரப்படுகிறாய். யாரோ ஒரு ப்ரோக்கர் ஒரு ஜாதகம் கொண்டு வந்து கொடுத்தால் அது நம் குடும்பத்துக்கு பொருந்துமா? பெண்ணுக்குப் பிடிக்குமா என்பதை அலச மாட்டோமா? அந்த அளவு மரியாதை கூட பெற்ற தந்தை சொல்லும் ஒரு வரனுக்கு இருக்காதா கோதை?''

''ப்ச்! என்னங்க, நீங்க...? இங்கே பாருங்க. நீங்க உங்க குற்ற உணர்வைப் போக்க பரிகாரம் பண்ணுகிறேன் பேர்வழி என்று இந்தக் கல்யாணப் பேச்சை ஆரம்பித்த மாதிரி இருந்ததனாலதான் எனக்குக் கோபம் வந்தது. கல்யாணம் இந்த மாதிரி காரணத்துக்காக நடக்கக் கூடாது...''

''பரிகாரமா கல்யாணம் என்று நானும் சொல்ல வில்லை. முதலில் குடும்ப சூழ்நிலை ஒத்து வரணும். அவங்க வீட்டில் நம் பெண்ணை பண்ணிக் கொள்ளச் சம்மதிக்கணும். நம் பெண்ணுக்கு அந்தப் பையனைப் பிடிக்கணும். எவ்வளவோ இருக்கு. இது பற்றி யோசிக்கலாமா என்று தான் கேட்டேன். அதுக்குள்ளே நீ பொங்கிட்ட?''

''சரி அந்த பையனை வீட்டுக்கு வேண்டுமானால் வரச் சொல்லுங்க. பார்ப்போம்...''

''நேற்று இரவு அவனையும் அவங்க அம்மாவையும் வரச் சொல்லி அழைப்பு விடுத்தேன். வரவில்லையே?''

''ஒருவேளை அவங்களுக்கு உங்க மேலே கோபம் இருக்கலாம் இல்லையா? அதனால் வராமல் இருந்து இருக்கலாம்...''

''அப்படித் தோன்றவில்லை. நேரம் கிடைக்கும்போது அவங்க வீட்டுக்கு நாமே ஒரு முறை போய் வந்தால் என்ன?''

''இப்ப பாலாஜி கையில் அடிபட்டு வீட்டில் இருக்கும்போது எப்படிப் போறது? ஒரு வாரம் பத்து நாள் ஆகட்டும். அவன் கிளினிக் போக ஆரம்பித்த பிறகு போகலாம்...''

''சரிம்மா. நான் பெண்ணைத் தரதரன்னு இழுத்துட்டுப் போய் ராட்ஷசன் கையில பொழுது விடிவதற்குள் பிடிச்சுக் கொடுக்கப் போவது மாதிரி நினைச்சுக்காதே. முதலில் அந்தப் பையனைப் பற்றி பாலாஜிகிட்டே சொல்லி விசாரிக்கச் சொல்றேன். போதுமா?''

''பாலாஜி கிட்டே என்ன விஷயம் என்று சொல்லாமலே விசாரிக்கச் சொல்லுங்க. கல்யாணம் என்று முதலில் சொல்ல வேண்டாம். அப்புறம் இன்னொரு விஷயம். தேன்மொழி சம்மதம் சொன்ன பிறகு தான் கல்யாணப் பேச்சை ஆரம்பிக்கணும்'' என்று முடிவாகச் சொல்லிவிட்டுக் கண்களை மூடினார் பூங்கோதை.

* * *

இரவு உணவிற்காக நாலு பேரும் அமர்ந்து இருக்கும்போது, ''பாலா, என் மொபைல் ரீ சார்ஜ் பண்ணச் சொன்னேனே பண்ணினாயா?'' என்று ஆரம்பித்தாள் தேன்மொழி.

''மறந்துட்டேன்...''

''எதைக் கேட்டாலும் மறந்துட்டேன் என்று ஒரு ரெடிமேட் பதில். சாப்பிட மறக்கிறாயா? குளிக்க மறக்கிறாயா? எனக்கு போன் ரீசார்ஜ் பண்ண மட்டும் மறந்து விடுவாயா?''

''தேனு பாலாஜி இன்று மதியம் சாப்பிட்டதையே மறந்து விட்டான்...''

''என்னம்மா கதை இது? சாப்பிட்டதை எப்படி மறக்க முடியும்?''

''உன்னை போஸ்ட் பெயிட் போன் மாத்திக்கோ என்று எத்தனை தடவை சொல்றது? ப்ரீ பெயிடா இருந்தாலும் ஆன்லைன் ரீசார்ஜ்-ன்னு ஒண்ணு இருக்கு அதை பண்ணலாம். அடுத்தவங்களை குதிரை ஓட்டியே...'' என்று அம்மாவைச் சொல்ல விடாமல் தடுக்க முயன்றாள் பாலாஜி.

''பேச்சை மாத்தாதே அம்மா நீங்க சொல்லுங்க. மதியம் அவன் என்ன செய்தான்?''

''அம்மா... ப்ளீஸ்...'' என்று அவன் கண்களால் கெஞ்ச, ''பாலா மதியம் சரியா சாப்பிடலை போல. மூணு மணிக்குச் சாப்பிட ஏதாவது இருக்கா என்று கேட்டான். அவ்வளவு தான்'' என்று பூங்கோதை சமாளித்தாலும் அதை அவள் நம்பவில்லை. மீண்டும் ஆரம்பிக்கும் போது விஜயகுமார் இடையிட்டார்.

''பாலா போன வாரம் தமிழ் பற்றி விசாரிக்கச் சொன்னேனே? அதுவாவது ஞாபகம் இருக்கா? அதையும் மறந்து விட்டாயா?''

''என்னப்பா நீங்க? இவளுக்கு யாரையாவது ஏதாவது வேலை ஏவிட்டே இருக்கணும். அதனால் அவள் சொல்ற வேலையில் சிலதை மறப்பேன். நீங்க எப்பவாவது என்னிடம் வேலை சொல்லும்போது மறப்பேனாப்பா? கேட்டேன்பா...''

''தமிழ் மேலே தேனு கொடுத்த கம்ப்ளைன்ட் பற்றி மேலே ப்ரெஸ் பண்ணாமல் இருக்க தான் விசாரிக்கச் சொன்னேன். ஆள் எப்படிப் பரவாயில்லையா பாலா?''

''கம்ப்ளைன்ட் தான் அன்றே நான் கொடுக்க வேண்டாம் என்று சொல்லிட்டேனேப்பா?'' இன்னுமா நீங்க அதை மறக்கலை?''

''எதை நினைக்கணும். எதை மறக்கணும் என்று நீ சொல்றதை நாங்க கேட்போமா?'' என்ற தேன்மொழியை, ''முக்கியமான விஷயம் பேசும்போது குறுக்கே பேசாதே தேனு. நீ சொல்லு பாலா'' என்று இடையிட்ட அப்பாவை நம்ப முடியாமல் பார்த்தாள்.

''முகில் டி.வி.ல ப்ரோக்ராம் பண்ணினாலும் அங்கே பெர்மனன்ட் ஸ்டாப் இல்லைப்பா...''

''அப்புறம் வருமானம் எப்படி...''

''பதிமூன்று வாரம் வரும் நிகழ்ச்சிக்கு. நான்கு அல்லது ஐந்து லட்சம் பணம் வாங்குகிறான். சொந்தமா வீட்டிலேயே இசை சேர்க்கும் ஸ்டுடியோ வைத்து இருக்கிறான். வீட்டில் இசை சேர்த்து நிறைய டி.வி. சீரியல்களுக்கு இசை அமைக்கிறாங்க. மாசத்துக்கு ஒரு லட்சம் வரை சம்பாதிக்கிறான். வீடு சொந்த வீடு. அம்மா பிள்ளை ரெண்டே பேரு. ஜம்முன்னு இருக்காங்க.''

''படிப்பு பழக்க வழக்கம் எல்லாம் எப்படி?''

''பி.எஸ்ஸி விஸ்காம் மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தில் படிச்சு இருக்கான். அதுக்கு அப்புறம் பி.ஏ. மியூசிக் அங்கேயே படிச்சு இருக்கிறான். எப்பவும் காமரா தான் துணை. ஊர் ஊரா சுத்தி படம் பிடிப்பது வேலை. அமைதியான வாழ்க்கை...''

''தேனு நீ தமிழ் பார்த்து இருக்கிறாய் தானே? அவனைப் பற்றி என்ன நினைக்கிறாய்?'' என்று விஜயகுமார் கேட்க அவசரமாகப் பூங்கோதை இடையிட்டார்.

''மொட்டையா கேட்டால் எப்படி? அவன் படிப்பு இது. குடும்ப விபரம் இது. அவனைக் கல்யாணம் பண்ணி வைக்கலாமா என்று பார்க்கிறோம். சம்மதமா என்று விபரத்தை சொல்லிக் கேளுங்க'' என்று பூங் கோதை அதட்ட பாலா ஆச்சரியமாக திரும்பிப் பார்த் தான்.

''பாவம்மா அவன். ரொம்ப அமைதியான பிள்ளை அவனும் அவங்க அம்மாவும் என்று சின்ன உலகத்துல நிம்மதியா வாழ்ந்துட்டு இருக்காங்க. அவன் வேற யாராவது நல்ல பெண்ணைக் கட்டிட்டு சந்தோஷமா இருக்கட்டுமே?'' என்று கேலியாக பாலாஜி சொன்ன வினாடியில் தட்டில் சாப்பாட்டை உதறி விட்டு எழுந் தாள் தேன்மொழி.

''என்னைக் கல்யாணம் பண்ணிக் கொண்டால் அவன் கஷ்டப்படணுமா? கூடப் பிறந்த என்னை விட நேற்று பார்த்த அவன் உனக்கு உசத்தி இல்லை...'' என்று தட்டைத் தள்ளி வைத்து விட்டு எழுந்து நகர்ந்தவளை பூங்கோதையின் அதட்டல் தடுத்து நிறுத்தியது.

''தேனு. இதென்ன பாதி சாப்பாட்டுல எழுந்து போற பழக்கம்? யார் மேலே கோபம் இருந்தாலும் அதை சாப்பாட்டு மேலேயா காட்டுவது?''

''உங்களுக்கு எப்போதுமே பிள்ளை சொல் தான் வேதம்...''

''அவன் சொல்வது சரியா இல்லையா என்ற விவா தத்திற்கு அப்புறம் போகலாம். ஆனால் நீ செய்வது நி சயம் சரி இல்லை. முதலில் உட்கார்'' என்று பூங்கோதை அதட்ட அவள் அம்மாவையும் அண்ணனையும் மாற மாறி முறைத்தாள்.

''தேனு. அவன் என்ன சொல்லிட்டான்? ஒரு சின்ன கேலிப் பேச்சு. அதை ஏன்மா இவ்வளவு சீரியஸா எடுத்துக் கொள்கிறாய்? அவன் வேண்டாம் என்று சொன்னால் ஆச்சா? உனக்குப் பிடித்து இருக்கா என்று நீ சொல்லு. அது போதும்'' என்று விஜயகுமார் சமாதானப்படுத்த அம்மாவும் பிள்ளையும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

* * *

இரவு ஒன்பது மணிக்கு அவசரமாக சூட்கேசில் துணிகளை அடுக்கிக் கொண்டு இருந்த தமிழ்வேந்தன் அருகில் வந்து நின்றார் பானுமதி.

''என்னப்பா திடுதிப்புன்னு ஒரு வாரம் ஊருக்குக் கிளம்புகிறேன் என்று சொல்கிறாய்?''

''திடீர்னு இல்லையேம்மா? ஏற்கனவே மதுரை வீட்டை ஏலம் எடுக்கத் தேவையான பணம் இதுல வரும் என்று போன வாரமே கோடி காட்டினேனே.''

''அதை கவனித்தேன். நீ வெளியூர் போகணும் என்று சொன்னாயா என்ன?''

''என்னம்மா, பணம் வரும் என்றால் படம் எடுக்க வேண்டும். எல்லா படத்தையும் சென்னையில் மட்டுமே எடுக்க முடியாதே? லொகேஷன் பார்க்கணும். படப் பிடிப்பு ஆரம்பிக்கணும். ஒரே மாசத்துல பிராட்காஸ்ட் ஆரம்பிக்கணும். ஒரு வாரம் என்பது அதிக பட்சம்தான். மூன்று நான்கு நாட்களில் கூட வந்து விட வாய்ப்பு இருக்கு...'' என்று விளக்கம் சொல்லும்போதே அவனின் அலைபேசி அழைத்தது. விஜய் அங்கிள் ஏன் போன் பண்ணுகிறார்? யோசனையோடு போனை பார்த்தான் தமிழ்வேந்தன்.



8

இரவு உணவுக்குப் பிறகு காதில் ஹெட் போனை மாட்டிக் கொண்டு பாலாஜி மொட்டை மாடிக்குச் சென்றுவிட, வேலை களை முடித்துக் கொண்டு அங்கே சென்றார் பூங்கோதை.

''அம்மா... நீங்களா? நீங்க எங்கே இந்நேரத்துல இங்கே வந்தீங்க?''

''ஏன்டா! இது எங்க வீட்டுக்காரர் கட்டிய வீடு. நீ சம்பாதிச்சு சொந்தமா கட்டியது கூட இல்லை. இங்கே நான் வரக்கூடாதா?''

''நான் என்ன சொன்னால் நீங்க எப்படி ட்விஸ்ட் பண்றீங்க? உங்களுக்கு என்ன ஆச்சு?''

''எனக்கு என்ன ஆச்சு என்பது இருக்கட்டும். உனக்கு என்ன ஆச்சு?''

''எனக்கு என்ன? நல்லா இருக்கிறேன். பிராக்சர் ஆன கை கூட வலி இல்லை. நாளைக்கே ஹாஸ்பிடல் போகலாமா என்று பார்க்கிறேன்...''

''கையில் அடிபட்டாலும், வலி இருந்தாலும் பரவா யில்லை என்று ஹாஸ்பிடல் போகத் துடிப்பதற்கு என்ன காரணம் என்று நான் தெரிஞ்சுக்கலாமா?''

''டாக்டர் நான். ஹாஸ்பிடல் போகணும் என்று சொல்வதற்கு விளக்கம் கேட்கறீங்க?''

''டேய்! நீ பத்து நாளா கனவில மிதக்கிறாய் எனக்குத் தெரியும். தங்கை வளர்ந்து விட்டாள் என்று திடீர் ஞானோதயம் வருகிறது. அவளுக்கு சீக்கிரம் கல்யாணம் பண்ணனும் என்று சொல்கிறாய். அவளுக்கு மாப்

பிள்ளை பார்த்து விசாரிக்கச் சொன்னால் அரக்கப் பறக்க வெளியே போகாத போதும் போனில் வேலை முடிக் கிறாய். மதியம் சாப்பிட்டதை மறந்து விட்டு. மறுபடி சாப்பிட வந்து உட்காருகிறாய்? இதுக்கு எல்லாம் என்ன காரணம் என்று எனக்குத் தெரியணும். சொல்லு.''

''அ..ம்..மா! தங்கை படிப்பை முடிக்கப் போகிறாள். இருபத்தி இரண்டு வயசாகிறது என்றால் கல்யாணம் பண்ண வேண்டாமா? அப்பா மகனிடம் ஒரு வேலை கொடுத்தால் அதை முடித்துத் தர வேண்டாமா? பசித்துச் சாப்பாடு கேட்டால், அம்மாவா சாப்பாடு போடாமல், கணக்கு பிள்ளை மாதிரி கணக்கு பார்க்கறீங்க? உங் களுக்கு என்ன ஆச்சு என்று நான் தான் சண்டை போடணும். நீங்க என்னிடம் சண்டைக்கு நிற்கறீங்க...''

''நீ மாறி இருக்கிறாய் என்பதற்கு இந்த ஒரு சாட்சியே போதும். இது மாதிரி இத்தனை வருஷத்தில் நீ என்னை மடக்கிப் பேசினதே இல்லை...''

''அம்மா... இப்ப உங்களுக்கு என்ன தெரியணும்?'' என்று கெஞ்சலாகச் சொன்னவன் அருகில் வந்து கன் னத்தில் செல்லமாக முத்தமிட அவர் தட்டி விட்டார்.

''இதை நீ முழ நீள விளக்கம் சொல்வதற்கு முன் னால் செய்து இருந்தால் நம்பி இருப்பேன். இப்ப நான் உன்னை நம்புவதாக இல்லை. என்ன விஷயம் சொல்லு...''

''அம்மா, அந்த தமிழ் ரொம்ப நல்ல அமைதியான பையன். நடுத்தரக் குடும்பம் என்றாலும் பாசமா இருப்பாங்க. தேனை நல்லா பார்த்துப்பாங்க. இவள் கொஞ்சம் அனுசரணையா இருந்தால் எல்லோருக்கும் ரொம்ப நல்லது. அடுத்தவங்களுக்கு நல்லது செய்ய

ணும் என்று நினைக்கும் ஆட்களே கம்மி அவங்க அந்த மாதிரி ஆட்கள்...'' என்று பேச்சை மாற்றுவதே தெரியாமல் மாற்றல் அவரும் அதையே தொடர்ந்தார்.

''என்னதான் அவன் நல்லவனா இருந்தாலும் ஏன்டா அவனைத் தாங்குகிறேன் என்று தேனு காலை வாரினாய்? நமக்குள் கேலி செய்வது வேறு வெளி ஆளோடு ஒப்பிட்டு, அவள் மோசம் என்று சொன்னால், அவளுக்கு ஒரு மாதிரி ஆகி விட்டது பாவம். நான் ஒரு பக்கம் திட்ட, அவள் தினற, அப்பா அவளை சமாதானம் செய்ய வாக்கிங் அழைத்துக் கொண்டு போய் இருக்கிறார்...''

''அம்மா, அப்பா அவளைச் சமாதானப்படுத்த அழைத்துப் போகவில்லை. தமிழைக் கல்யாணம் பண்ணிக் கொள்வதில் அவளுக்கு ஏதாவது சின்னச் சின்ன சந்தேகங்கள் இருந்தால் அதை நிவர்த்தி செய்ய அழைத்துப் போய் இருக்கிறார்...''

''அதெப்படி உனக்குத் தெரியும்?''

''கடந்த ஒரு வாரத்தில் தமிழைப் பற்றி அவர் என்னிடம் எத்தனை முறை பேசினார் என்பது எனக்குத் தானே தெரியும். வாக்கிங் போய் திரும்பி வந்ததும், அவர் உங்களிடம் சொல்லப் போகும் முதல் வாக்கியம் 'கோதை, நாளைக்கு நாம் இருவரும் அந்த தமிழின் வீட்டுக்குப் போய் வரலாமா என்பதாகத்தான் இருக்கும். நீங்க வேண்டுமானால் பாருங்க'' என்று ஆரூடம் சொன்னான் பாலாஜி.

''அப்படிச் சொன்னால் உனக்கு ரூட் கிளியர் ஆகி விடும் என்று நினைக்கிறாயா பாலா...''

''உங்க ஆசையை நான் ஏன் கெடுக்கணும்? அப்படி தான் வச்சுக்கோங்க'' என்று கண் சிமிட்ட, ''கத்தரிக்காய் முற்றினால் சந்தைக்கு வந்துதானே ஆக வேண்டும். அப்ப பார்த்துக்கிறேன்'' என்று மகனின் தலையில் செல்லமாக ஒரு கொட்டு வைத்துவிட்டு படிகளில் இறங்கினார் பூங்கோதை.

* * *

பாலாஜியுடனும் அம்மாவுடனும் ஏற்பட்ட வாக்கு வாதத்தினால் முகம் வாடி இருந்த தேன்மொழியை. 'கொஞ்ச தூரம் நடந்து போய் விட்டு வரலாம் வாம்மா' என்று அழைத்து வந்து இருந்தார் விஜயகுமார்.

''தேனு, காலேஜுக்கு இன்னும் எத்தனை நாள் போகணும்? மேலே என்ன பண்ணுவது என்று பேசினீங்களா? பிரெண்ட்ஸ் என்ன சொல்றாங்க?'' என்று பேச்சை ஆரம்பித்தார்.

''இன்னும் ஒரு மாசத்துல முடிந்து விடும்பா. மேலே படிக்கலாம் என்று நினைத்தேன். நீங்கதான்...'' என்று குற்றம் சாட்டும் தொனியில் சொல்லி நிறுத்தினாள்.

''யார் மேலே படிக்க வேண்டாம் என்று சொன்னது? உன்னிடம் கேட்டு விட்டு தானேம்மா தமிழைப் பற்றி விசாரிக்கச் சொன்னேன். கல்யாணம் பண்ணிக் கொண்டு தொடர்ந்து படிக்க வேண்டியது தானே?''

''தமிழை உனக்கு மாப்பிள்ளை பார்த்து இருக்கிறேன் என்று சொன்னீங்களாப்பா?''

''இல்லை. ஆனால் கல்யாணம் பற்றிப் பேசப் போகிறேன் என்று சொன்னேன். நீ வேறு யாரையாவது காதலிக்கிறாயா என்று கேட்டேன்.''

''நான் வேறு யாரையும் காதலிக்கவில்லை என்றால் இவரைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டும் என்று அர்த்தமாப்பா?''

''சரிம்மா, நீயும் தமிழைப் பார்த்து இருக்கிறாய் என்று பாலாஜி சொன்னான். உனக்கு ஏன் அவனைப் பிடிக்க வில்லை?''

''ப்ச்! என்னப்பா சொல்றது? முதன் முதலில் பார்க் கும் போதே...''

''ஏன்மா தமிழ் பார்க்க நல்லா இருக்கிறான் தானே?''

''கல்யாணம் பண்ணிக்க அது மட்டும் போது மாப்பா?''

''நிச்சயமா போதாது. படிப்பு போதலை என்று நினைக் கிறாயாம்மா?''

''என்ன படிப்பு வேண்டுமானாலும், எந்த வயதில் வேண்டுமானாலும் படிக்கும் வசதியும் வாய்ப்பும் இப்போ இருக்கு. திறமைக்கும், சம்பாத்தியத்திற்கும், படிப்புக்கும் சம்பந்தம் இல்லை. அப்புறம் அதைப் பற்றி என்ன?''

''அப்புறம் வேறே எதுதான்மா உன்னோட பிரச்னை? அவரோட வசதி வாய்ப்பு போதாது என்று நினைக் கிறாயா?''

''செல்வம் என்ற பெயருக்கே செல்வோம் என்ற அர்த்தம் என்று பாட்டி சொல்லி கேட்டது இல்லையா? நிலை இல்லாத ஒரு பொருளை வைத்து நிலையான் மனிதர்களை எடை போடக்கூடாதுப்பா...''

''என்னம்மா நீ? உனக்குத் தமிழை ஏன் பிடிக்கலை என்று நீயே ஒரு காரணம் சொல்லிடு.''

''நான் எங்கேப்பா பிடிக்கலை என்று சொன்னேன்?''

''அப்ப பிடிச்சு இருக்கா?''

''அ..ப்..பா...!'' என்று பல்லைக் கடித்தவளைச் சமாதானப்படுத்தினார் விஜயகுமார்.

''கருப்பு வெள்ளைக்கு நடுவில் நிறமே இல்லை யாப்பா? சும்மா போகிற போக்கில் அஞ்சு நிமிஷம் பார்த்த ஒருத்தரை, பிடிச்சு இருக்கா இல்லையா என்று பட்டி மன்றம் நடத்துறீங்க. உடனே கல்யாணம் பண் ணிக்க சம்மதம் கேட்டால் எப்படிப்பா?''

''தமிழிடம் சொல்றேன். நீங்க ரெண்டு பேரும் உட் கார்ந்து பேசி, ஒரு முடிவுக்கு வாங்க...''

''நீங்க ஏன்பா அவனைப் பார்த்ததில் இருந்து இப்படி என்னை அவன் கையில் பிடித்துக் கொடுத்தே தீர வேண்டும் என்று இருக்கீங்க? என்னைத்தான் கல்யாணம் பண்ணிக்கணும் என்று அவன் ஒற்றைக் காலில் தவம் இருக்கிறானா? இல்லை உங்க பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொடுத்தாக வேண்டும் என்று உங்களை மிரட்டுகிறானா?''

''ரெண்டும் இல்லை தேனு, எனக்கு தான் உன்னை அவனுக்குக் கல்யாணம் பண்ணித் தர வேண்டும் என்று தீராத பிரார்த்தனை. நானும் அம்மாவும் அவனிடம் போய் பேசட்டுமா?''

''அ..ப்...பா! அவனிடம் பேசட்டுமா என்றால் என்ன அர்த்தம்? இதுவரை அவனிடம் நீங்க கல்யாணத்தைப் பற்றிப் பேசவே இல்லையா?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டாள்.

''இல்லைம்மா. அவனுடைய நலனில் அக்கறை இருக்கிறது என்றாலும், உன் நல வாழ்வு அதைவிட

முக்கியம். உன் சம்மதம் இல்லாமல் எப்படி அவனிடம் பேசுவேன்? நானும் அம்மாவும் நாளைக்கு அவங்க வீட்டுக்குப் போகட்டுமா?'' என்று அதிலேயே குறியாக இருக்க, அவள் யோசித்தாள்.

அவளாக அவனைப் பிடிக்கவில்லை என்று சொன்னால் அப்பா விடப் போவதில்லை. 'பிடிக்க வில்லை என்று அவனைச் சொல்ல வைத்து விட்டால்...' என்ற யோசனை எழுந்ததன் பயனாக, தேன்மொழியின் கண்கள் பிரகாசமுற்றது. ''சரிப்பா. ஆனால் கல்யாணப் பேச்சு வார்த்தை தீவிரமாவதற்கு முன் நான் அவனிடம் தனியா கொஞ்சம் பேசணும்'' என்று இழுத்தாள்.

''அதுக்கென்னம்மா? நீயே பேசி எங்கே எப்போ சந்திக்கலாம் என்று முடிவு பண்ணிக்கோ...'' என்று சொன்னவர் தன் மொபைலில் சேமித்து வைத்து இருந்த அவனின் எண்ணுக்கு போன் போட்டு அவளிடம் கொடுத்தார்.

''நீங்க ரெண்டு வார்த்தை பேசிட்டுக் கொடுங்க...'' என்று போனை வாங்காமல் ஜாடை செய்ததை அவர் கண்டுகொள்ளவே இல்லை. ''நீ பேசிட்டு இரு வரேன்...'' என்று அந்த இடத்தை விட்டு நகர்ந்தவர் மனதில், 'இருவரும் இணைந்து பல்லாண்டு காலம் சந்தோஷமாக வாழ அருள் செய் கடவுளே' என்ற பிரார்த் தனை இருந்தது.

* * *

''தமிழ்! கண்ணைத் திறந்துகிட்டே தூங்குகிறாயா? போன் அடித்தால் எடுக்காமல் பார்த்துட்டு இருந்தால் என்ன அர்த்தம்? யாரா இருந்தாலும் எடுத்துப் பேச வேண்

டியது தானே?'' என்று தமிழ்வேந்தனை அதட்டினார் பானுமதி.

''விஜய் அங்கிள் தான் பேசுறார். இந்த நேரத்துல ஏன்...?'' என்று தமிழ் தயங்க, ''எடுத்துப் பேசினால் எதுக்குக் கூப்பிட்டார் என்று தெரியும்? கொடு. நான் பேசுகிறேன்...'' என்று போனை வாங்கினார் பானுமதி.

''அண்ணே! நான் தமிழோட அம்மா பானுமதி பேசுறேன். பார்த்து எட்டு பத்து வருஷம் இருக்குமே? நீங்க, அண்ணி, குழந்தைங்க எல்லாம் சௌக்கியமா இருக்கீங்களா?'' என்று சரளமாகப் பேசிய அந்தக் குரலைக் கேட்ட தேன்மொழிக்கு ஆச்சரியமாக இருந்தது.

ஒரே ஒரு முறை. எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பு சில நிமிடங்கள் ரயில் நிலையத்தில் அப்பாவைப் பார்த்ததை வைத்து, இப்படி உரிமையாக முறை வைத்து அழைத்து, இதுவரை பார்த்தே இராத அவரின் மனைவி குழந்தைகள் பற்றி இப்படி அக்கறையோடு ஒருத்தர் விசாரிக்க முடியுமா? அவளே கேட்டிரா விட்டால் நம்பி இருக்க மாட்டாள். இந்தப் பாசப் பிணைப்பிற்கு தான் அப்பா அடி பணிந்து இருக்க வேண்டும்.

''நான் விஜயகுமாரோட பொண்ணு தேன்மொழி பேசுறேன். தமிழ்வேந்தன் இல்லையா?'' என்று முடிப்ப தற்குள் அவளுக்கு மூச்சு முட்டியது.

''தேன்மொழியா உன் பேரு? தமிழ் ஊருக்குக் கிளம் பிட்டு இருக்கான். அதான் நான் எடுத்தேன்.''

''ஓ! சரி... நான் அப்புறமா பேசறேன்...''

''நீ டாக்டர் படிப்பு படிச்சுட்டு இருக்க என்று சொன் னான். படிப்பு எல்லாம் எப்படி இருக்கு?''

"நல்லா போயிட்டு இருக்கு ஆன்ட்டி. தேங்க்ஸ்..."

"உங்களை போன வாரம் பார்த்ததா தமிழ் சொன்னான். நீங்க சாப்பிட வரச் சொன்னீங்களாம்..." என்று பானுமதி பேச்சுக் கொடுக்க அம்மாவிடம் இருந்து போனை வாங்கினான் தமிழ்.

"சாரி மிஸ் தேன்மொழி. நான் தமிழ் பேசுகிறேன். அம்மா மரியாதை குறைச்சலா ஒருமையில பசியதை மனசுல வைச்சுக்காதீங்க. நீங்க என்ன விஷயமா போன் பண்ணினீங்க என்று நான் தெரிஞ்சுக்கலாமா?"

"பரவாயில்லை. நீங்க அவசரமா ஊருக்குக் கிளம்பு நீங்க என்று சொன்னாங்க. போற போக்கில் பேசும் விஷயம் இல்லை இது. நீங்க ஊரில் இருந்து வந்த பிறகு பேசலாம்."

"நான் ஊரில் இருந்து வர ஒரு வாரம் ஆகும். அது வரை அவசரம் இல்லையே?"

"ஒரு வாரம் எங்கே..." என்று எதிர்கேள்வி கேட்டு விட்டு நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

"ஐந்து வகை நிலங்களைப் பற்றி ஒரு டாக்கு மெண்ட்ரி எடுக்கணும். லொகேஷன் பார்க்கப் போகிறேன். நீங்க பேச வந்த விஷயம் அவசரம் இல்லையே?"

"இல்லை. இல்லை. நீங்க ஊரில் இருந்து வந்த பிறகே பேசிக்கலாம்..."

"ராத்திரி ஒன்பதரை மணிக்கு போன் பண்ணி அப்புறம் பேசுறேன். அப்புறம் பேசுறேன் என்று திருப்பித் திருப்பிச் சொன்னால் என்னால் அடுத்த வேலை பார்க்க முடியுமா? டாக்டர் பாலாஜி ஆக்சிடென்ட் கேஸ் விஷயமா எதுவும் பேசணுமா?"

"இ...ல்...லை..."

"வேறென்ன? உங்களுக்குத் தெரிஞ்சவங்க வேண்டியவங்க யாருக்காவது டி.வி.ல நடிக்கப் பட சான்ஸ் இந்த மாதிரி ஏதாவது..."

"அதுவும் இல்லை. வேறே எதுவும் கெஸ் இருக்கா?" என்று எரிச்சலுடன் கேட்டாள்.

"ஒரு ஊகம் இருக்கு. ஆனால் அதைச் சொன்னால் அடிக்க வர மாட்டீர்கள் என்ற உத்திரவாதம் இருந்தால் சொல்றேன்..."

"போனில் அடிக்கக் கூடிய வசதி இன்னும் வரவில்லை என்று நினைக்கிறேன்..."

"அப்ப சரி! தைரியமா சொல்லலாம்..." என்று சத்தமாகச் சொன்னவன், குரலை தணித்து, "நீங்க உங்க காதலைப் பற்றிச் சொல்ல போன் பண்ணினீங்க?" என்று சொல்ல அவள் இவனுக்கு எவ்வளவு தைரியம் இருந்தால் இப்படி ஒரு வார்த்தை சொல்வான்?" என்ற அதிர்ச்சியில் எதிர்முனையில் விக்கித்து நின்றாள்.



தேன்மொழி தன் அப்பாவின் அலைபேசியில் இருந்து இரவு ஒன்பதரை மணிக்கு மேல் அந்த நேரத்தில் தன்னை அழைப்பாள் என்பதை அதீதக் கற்பனையிலும் எதிர்பார்த்து இருக்காத தமிழ்வேந்தனுக்கு அது உற்சாகத்தைத் தந்து இருக்க வேண்டும். என்ன பேசுகிறோம் என்பது தெரியாமலேயே அந்தக் கடைசி வாக்கியம் வந்துவிட அடுத்த வினாடி விக்கித்துப் போனான். எப்படி இந்த மாதிரி ஒரு வார்த்தையைச் சொன்னான்?

ஒரே ஒரு முறை சில நிமிடங்கள் மட்டும் பார்த்த ஒரு பெண். தன் மேல் நம்பிக்கையும் அன்பும் வைத்து இருக்கும் ஒருவரின் மகள். அவளிடம் இந்த மாதிரி... தப்பு தமிழ்... என்று மனசாட்சி பலமாகக் குட்ட அவ சரமாகத் தொண்டையைக் கனைத்தான் தமிழ்வேந்தன்.

''சாரி மிஸ் தேன்மொழி. அது சும்மா விளையாட்டுக்குச் சொன்னது. விட்டுடுங்க. ப்ளீஸ். ஒன்ஸ் அகைன் சாரி'' என்று கெஞ்சல் குரலுடன் சாரி சொன்னான்.

''யாரிடம் என்ன பேசுகிறோம் என்ற நினைவே இல்லாமல் வாய்க்கு வந்ததைப் பேசி விட்டு, மன்னிப்புக் கேட்டு விட்டால் ஆச்சா?'' என்று ஆத்திரமாகக் கேட்டாலும் இந்த மாதிரி மன்னிப்புக் கேட்பதும் அவளுக்குப் பழக்கம் இல்லை.

''மேலே என்ன செய்வது என்று புரியவில்லை. ஐ ஆம் எக்ஸ்ட்ரீம்லி சாரி...''

''ப்ச்! இட் இஸ் ஓ.கே. நான் அப்புறம் பேசுகிறேன்...''

''ஹலோ ஒரு நிமிஷம்...'' என்று அவசரமாகச் சொன்னான் தமிழ்.

''என்ன சொல்லுங்க...''

''இது உங்க அப்பா போன் இல்லையா? நான் திரும்பி வந்ததும் இதே எண்ணில் தகவல் சொல்லட்டுமா? அல்லது...'' என இழுத்தவன் உன் நம்பர் தா என்று கேட்பது புரிந்தது. அவளுக்குத் தர இஷ்டம் இல்லை.

''நீங்க ரொம்ப டிஸ்டர்ப்டா இருக்கீங்க. எந்தக் கேள்விக்குமே சரியா பதில் சொல்ல மாட்டேங்கறீங்க. ஒண்ணு சொல்லவா?''

''வேண்டாம் என்றால் விடவா போகிறாய்?'' என்று நினைத்தபடி அமைதி காத்தாள்.

''வாழும் காலம் கொஞ்சம். அதை சந்தோஷமா வாழ முயற்சி பண்ணுங்க. எந்தக் கவலையா இருந்தாலும் அதைத் தூரப் போட்டு விட்டு, ஏதாவது இதமான இசை கேட்டபடி தூங்குங்க. காலையில் எழுந்து பார்த்தால் பெரிசு பெரிசா தெரிஞ்ச பிரச்னை எல்லாம் கண்ணுக்கே தெரியாமல் காணாமல் போகக் கூடும்...''

''ஆமா! இந்த உலகத்துல யாருக்குமே தெரியாத புது விஷயம். இவர்தான் அதுவும் இன்னிக்குத்தான் கண்டு பிடிச்சார் என்று மனதிற்குள் பொருமினாலும் அதை வெளிக்காட்டவில்லை என்பதால் அவனின் அக்கறையான உபதேசம் தொடர்ந்தது.

''... அப்படிக் காணாமல் போகவில்லை என்றாலும் அதற்கான ஒரு தீர்வு கண் முன்னால் தெரியும். நான் ஊரில் இருந்து திரும்பி வந்த உடனே உங்க அப்பாவுக்கே தகவல் சொல்றேன். இந்த ஒரு வாரத்தில் நீங்க என்னை அழைக்க நினைத்த காரணம் கூட காணாமல் போகலாம். குட்லக்'' என்று முடித்து தமிழ் போனை வைத்த பிறகும் சில வினாடிகள் போனை காதை விட்டு எடுக்காமல் வைத்து இருந்தாள் தேன்மொழி.

''என்ன தமிழ் சொல்லுச்சு அந்த பொண்ணு'' என்று போனை வைத்த அடுத்த வினாடி அருகில் வந்து நின்ற அம்மாவைப் பார்த்தபோது அவனுக்குச் சிரிப்புதான் வந்தது.

இவருக்கு என்ன சொல்வது? அவள் ஒன்றுமே சொல்லவில்லை என்று சொன்னால் அம்மா நம்பப் போவதில்லை. இவ்வளவு நேரம் என்ன பேசினாய் என்று

கேட்பார்கள். "நான் சொன்னால் நம்பப் போவதில்லை... என்று இழுத்தான் தமிழ்.

"என்ன பேசினாய் என்று சொன்னால் தானே நம் வதா வேண்டாமா என்று நான் முடிவு பண்ண மு யும்?"

"அது உலக மகா ரகசியம். கிட்டே வாங்க..." என் ரகசியமாக அழைத்து அவரின் காதில், "அவங்க அப்ப அம்மா, நாளைக்கு உங்களைப் பார்த்துச் சம்பந்தம் பே வராங்களாம்" என்று கிசுகிசுப்பாகச் சொன்ன வேளையி சுற்றி இருந்த தேவதைகள் 'அப்படியே ஆகட்டும்' என் ஆசீர்வாதம் செய்தாலும், பானுமதி அவன் முதுகில் ஓ அடி வைத்தார்.

"டேய்! இந்த மாதிரி விஷயத்துல எல்லாம் விளை யாடாதே. சொல்ல இஷ்டம் இல்லை என்றால் அப்படி சொல்லிட்டுப் போ. அதை விட்டு இல்லாதது பொ லாததை எல்லாம் சொல்லாதே. அது சரி உனக்கு ரயிலுக் நேரமாகலையா?" என்று அதட்டினார்.

"ஊர் ஊராக போக வேண்டி இருப்பதால் கார்தா வசதி. பத்து மணிக்கு வரச் சொல்லி இருக்கிறேன் வந்துடும்" என்று புன்னகை செய்தவன் அடுத்த சி நிமிடங்களில் அம்மாவிடம் விடைபெற்றுக் கிளம்பி னான்.

* * *

மகள் போன் பேசி முடிக்கும் வரை அவள் பார்வை யில் படும் தூரத்தில் அலையில் கால் நனைத்தப மகளின் மேல் கவனத்தை பதித்து இருந்தவர், போ பேசி முடித்ததும் அருகே வந்து, "போகலாமா தேனு என்று விசாரித்தார் விஜயகுமார்.

"போகலாம்பா..." என்று முணுமுணுத்தபடி எழுந்து பின்புறத்தில் இருந்த மணலைத் தட்டி விட்டாள் தேன் மொழி.

"தமிழிடம் பேசினாயாம்மா? நாளைக்கு ப்ரீயா? எப்போ வருகிறேன் என்று சொன்னார்?"

"ம்கூம். அவர் அடுத்த ஒரு வாரம் வெளியூர் டூர் போறாராம். வந்த பிறகு உங்களுக்குத் தகவல் சொல் றேன் என்று சொல்லி இருக்கார். அப்புறம் தான் பேச ணும்."

"ஓஹோ! எந்த ஊர்?"

"அதெப்படிப்பா எனக்குத் தெரியும்?"

"சரிம்மா. தெரியலைன்னா தெரியலை என்று சொல் லேன். அதுக்கு ஏன்டா இந்தக் கோபம்?"

"ஒவ்வொரு வார்த்தைக்கும் நீங்க மடக்கி மடக்கிக் கேள்வி கேட்டால் எனக்கு ரொம்ப எரிச்சலா இருக் குப்பா..."

"சரி தேனு ஏதாவது பாட்டுப் போடறேன். ராத்திரி நேரத்துல ஆர்க்கியூமென்ட் வேண்டாம். காலையில் பேசிக்கலாம். சீட்டில் சாய்ஞ்சு கண்ணை மூடிட்டுக் கேளு" என்ற அப்பாவின் வார்த்தைகள் மீண்டும் அவனை நினைவு படுத்தியது.

சீட்டில் சரிந்து படுத்து கண்களை மூடிய சில வினாடி களில் சி.டி. ப்ளேயரில் ஒலித்த, "நீ முத்தம் ஒன்று கொடுத்தால் முத்தமிழ். நீ வெட்கப்பட்டு சிரித்தால் செந்தமிழ். நீ பேசிய வார்த்தைகள் பைந்தமிழ்" என்று தமிழின் புகழைப் பாடிய பாடல் சரிந்து அமர்ந்து இருந்த தேன்மொழியை திடுக்கிட்டு நிமிர வைத்தது.

* * *

பீச்சில் இருந்து காரில் திரும்பி வந்த கணவனையும் மகளையும் வாசலிலேயே எதிர்கொண்டு அழைத்த பூங்கோதை இருவரின் முக பாவனையில் இருந்து அவர்களின் மனநிலையை கணிக்க முயன்றார். கணவனின் முகத்தில் வருத்தமும், மகளின் முகத்தில் குழப்பமும் இருந்ததாகத் தோன்றியது. கணவனிடம் விசாரிக்க வேண்டும்.

''பால் தரட்டுமா தேனு?'' என்று கேட்ட அம்மாவிற்கு. வேண்டாம்மா என்ற ஒற்றை வார்த்தையில் பதில் சொல்லி விட்டு நகர, கணவனைத் தேடி தங்களின் அறைக்கு வந்தார்.

''என்னங்க தேனு முகம் இன்னும் ஏன் சரியாகலை நீங்க ஏதாவது சொன்னீங்களா?''

''நான் என்ன புதுசா சொல்லப் போறேன்? ஏற்கனவே இங்கே பேசியதை தான் பீச்சிலும்...'' என்று ஆரம்பித்த வரைக் கை காட்டி நிறுத்தினார் பூங்கோதை.

''தமிழை அவளுக்குப் பிடிக்கலை என்றால் ப்ரெஸ் பண்ணக்கூடாது என்று தானே நாம் ஏற்கனவே பேசி இருந்தோம்.''

''ஆமா! நான் அவளை வற்புறுத்தவில்லையே? அவள் மனசில் என்ன இருக்கு என்று விசாரித்தேன் அதுல என்ன தப்பு இருக்கு?''

''நீங்க முதலில் அங்கே பேசியவற்றைச் சொல்லுங்க தப்பு இருக்கா இல்லையா என்று நான் சொல்கிறேன்'' என்று கணவனிடம் விபரம் அறிந்த பிறகும் அவரால் எந்த முடிவுக்கும் வர முடியவில்லை.

''அவளுக்குப் பிடிக்கவில்லை என்று வெளிப்படை யாகச் சொல்லலை. என்ன காரணத்திற்காகத்

தயங்குகிறாள் என்று தெரியலை'' என்று இழுத்தார் விஜயகுமார்.

''ஒரு வேளை பாலாஜி ஆக்சிடென்ட் சமயத்தில் சந்தித்ததை ஒரு அபசகுனம் என்று நினைக்கிறாளோ?''

''சுபசகுனம் அபசகுனம் என்று நாம் சொன்னாலே நக்கல் அடித்துச் சிரிக்கக் கூடியவளா அதை எல்லாம் பார்ப்பாள்? எனக்கு நம்பிக்கை இல்லை...''

''என்னதான் செய்யணும் என்று சொல்றீங்க? எதுக்கு எடுத்தாலும் அந்த பையனுக்குச் சாதகமாக மடக்கி மடக்கிப் பேசினால் எனக்கே ஒரு மாதிரி இருக்கு. அப்புறம் அவளுக்கு எப்படி இருக்கும்? அந்தப் பையன் தான் ஒரு வாரம் ஊரில் இல்லையே? ஒரு வாரம் ஆறப் போடுங்க. பிறகு பேசலாம்.''

''கல்யாணப்பேச்சு நிதானமா பேசலாம் என்பதை நானும் ஒத்துக் கொள்கிறேன். ஆனால் நாளைக்கு அல்லது நாளை மறுநாள், உனக்கு வேலை எப்படி இருக்கு என்று பார்த்து சும்மா அவர்கள் வீட்டிற்கு ஒரு முறை போய் வரலாமே?'' என்று இழுத்த கணவனை புன்னகை யோடு பார்த்தார்.

''நான் என்ன சொன்னாலும் அதற்கு ஒரு விளக்கம் சொல்லப் போறீங்க. எதற்கு விவாதம்? அவங்க வீட் டுக்கு நாளைக்கே போகலாம். ஆனால் ஒரு கண் டிஷன்...'' என்று மிரட்டலாக நிறுத்தினார் பூங்கோதை.

''மனல் கயிறு எஸ்.வி.சேகர் மாதிரி இல்லாமல் கண்டிஷனைப் பார்த்துப் போடும்மா. விஜய் பாவம் இல்ல...''

''அவங்க வீட்டுக்குப் போக தேன்மொழி சந்தோஷமா பெர்மிஷன் கொடுக்கணும்.''

''அதுக்கென்ன? அப்படியே செய்துடலாம். நாளைக் காலை அவள் வாயாலேயே சம்மதம் சொல்ல வச்சுட றேன்...'' என்று உறுதி அளித்த விஜயகுமார் அதை செயலிலும் காட்டினார்.

காலை அவள் தோட்டத்தில் நடக்கும் போதே உடன் நடந்து, ''கல்யாணப் பேச்சுகள் எப்படி வேண்டு மானாலும் மெதுவாக நடக்கட்டும். அது நடக்கவில்லை என்றாலும் கூட நல்ல குடும்பம் தேனு. அவர்களுடன் நட்பு வைத்துக் கொள்வதில் தப்பு இல்லையே? அந்தப் பையனும் ஊரில் இல்லாத நேரத்தில் நாம் போய் வந்தால் அவர்களுக்கும் சந்தோஷமா இருக்காது?'' என்று கரைத்ததிலும், முதல் நாள் பாசத்தோடு ஒலித்த பானு மதியின் அந்தக் குரலிலும், தேன்மொழி சந்தோஷமாகச் சம்மதம் சொன்னாள்.



தமிழ்வேந்தன் ஊருக்குப் போய் இருப்பதால் ஒரேயடியாக சமையலை முடித்துக் காலை பத்தரை மணி அளவில் பானுமதி சாப்பிட உட்கார்ந்த போது அழைப்பு மணி அடித்தது.

''இந்த நேரத்தில் யார்?'' என்று யோசனையோடு வாசலுக்கு வந்தவருக்கு அங்கே மலர்ந்த முகத்துடன், தம்பதி சமேதராய் நின்று இருந்தவர்களை அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. வீட்டில் யாரும் இல்லாத வேளையில் கதவைத் திறக்கலாமா?

''வணக்கம்மா! நான் விஜயகுமார். இது என் மனைவி பூங்கோதை. தமிழிடம் நாங்க வருவதைப் பற்றிச்

சொல்ல வேண்டும் என்று நினைத்தோம். ஆனால்...'' என்று சரளமாகப் பேசியதைக் கேட்ட பானுமதிக்கு மூச்சடைத்தது. நேற்று விளையாட்டாகச் சொல்கிறான் என்று நினைத்தோமே? இப்படி அடுத்த நாளே வந்து நிற்பார்கள் என்று எதிர்பார்க்கவே இல்லையே? கம்பி கேட்டில் இருந்த பூட்டிற்கான சாவியை அவசரமாக எடுத்துத் திறந்தார்.

''வாங்க வாங்க. நேற்று தமிழ் சொன்னான். நான் நம்பவில்லை. அவன் இல்லாத நேரத்தில் நீங்க... இப்படி அடுத்த நாளே... வந்து நிற்பீர்கள் என்று எதிர்பார்க்கவே இல்லை'' என்று பரபரப்புடன் அவர்களை வரவேற்றார் பானுமதி.

''நாங்க வருவது எப்படி அவருக்குத் தெரியும்?'' என்று கேட்ட பூங்கோதை ஆச்சரியமாக கணவனைப் பார்க்க அவர் முகத்திலும் அதே பாவனை இருந்தது.

''உங்களைப் பார்த்த உடனே அடையாளம் தெரியலை. மன்னிச்சுக்கோங்க. ஒரு முறை பல ஆண்டுகளுக்கு முன்னால் பார்த்தது. அதான் சட்டுன்னு ஞாபகம் வரலை...'' என்று வருத்தமான குரலில் பானுமதி சொல்ல அவர்கள் இயல்புக்கு வந்தனர்.

''இதுக்கு எதுக்குங்க மன்னிப்பு எல்லாம்? யார் என்று தெரியாமல் கதவைத் திறப்பது உசிதமான காரியம் இல்லையே? இதுல தப்பா நினைக்க என்ன இருக்கு'' என்று வந்து அமர்ந்தவர்கள் கண்களில் தட்டில் பரிமாறி இருந்த உணவு பட்டது.

''சாப்பாட்டு வேளையில் தொந்தரவு பண்ணி விட்டோம் போல. நீங்க முடிச்சுட்டு வாங்கம்மா. நாங்க காத்

திருக்கிறோம்'' என்று சம்பிரதாயமாக சொன்னா விஜயகுமார்.

''வராத விருந்தாளி வீட்டுக்கு வந்து இருக்கீங்க சாப்பாடா முக்கியம்? அதை அப்புறம் பார்த்துக்கறேன் நீங்க என்ன சாப்பிடுறீங்க என்று சொல்லுங்க. சூட காபி தரட்டுமா இல்லை ஜில்லுன்னு மோர் தரட்டுமா எலுமிச்சம்பழம்கூட இருக்கு. எது ஒத்துக் கொள்ளு என்று சொன்னால் அதையே தரேன்...'' என்று வேகமா உபசாரத்தில் இறங்கிய பானுமதியின் வார்த்தைகளில் கிராமிய மணமும் பாசமும் தூக்கலாகத் தெரிந்தது.

''கொஞ்ச நேரம் கழித்து லெமன் ஜூஸ் குடிக்கலாம் பாதி சாப்பாட்டில் நீங்க எழுந்ததை நினைத்தால் எங் களுக்கு ஒரு மாதிரி இருக்கு. சாப்பிட்டுட்டு வாங்க'' என்று பூங்கோதை சொல்ல அவருக்காக உணவு மேஜையில் அமர்ந்து தட்டில் இருந்ததை சில நிமிடங்களில் காலி செய்துவிட்டு வந்து அமர்ந்தார் பானுமதி.

''உங்க பையனுக்கு அடிபட்டு இருக்கு என்று சொன் னானே தமிழ். பரவாயில்லையா?'' என்ற பானுமதியின் குரலில் பதற்றம் தெரிய பூங்கோதைக்கு மனம் நெகிழ்ந்தது.

''ம்ம்ம். இப்ப பரவாயில்லை கட்டு இன்னும் பிரிக் கலை. ரெஸ்ட் எடுத்துக்கோ என்று சொல்லச் சொல்லக் கேட்காமல் கிளினிக் கிளம்பிப் போய் விட்டான்'' என்று பூங்கோதை சொல்ல விஜயகுமார் இடையிட்டார்.

''நாம் சொல்வதை பசங்க எங்கே கேட்கிறாங்க? என்ன வேண்டும் என்ன வேண்டாம் என்று அவங்க முடிவு பண்றதுதான் பைனல். யாரும் எதுவும் கேட்க முடியாது...''

''வளர்ந்த பிள்ளைகளுக்கு நல்லது கெட்டது தெரியுமில்ல? நம்ம காலத்தை விடவும் அவங்களுக்கு பலப் பல விஷயங்கள் தெரிய நிறைய வசதி வாய்ப்புகள் இருக்கு. அதனால அவங்க சொல்ற எல்லாமே தப்பு என்ற முடிவுக்கும் நாம் வர முடியாதே?'' என்று இளைய தலைமுறையைத் தாங்கிப் பேச, கேட்ட இருவருக்கும் புன்னகை மலர்ந்தது.

''பையன் வெளியூருக்குப் போய்விட்டானே? இங்கே தனியா எப்படி...'' என்று எதார்த்தமாக விசாரித்தார் பூங்கோதை.

''அதெல்லாம் பயம் இல்லை. செக்யூரிட்டி இருக்கு. அனுமதி இல்லாமல் யாரும் புதுசா வர முடியாது. வீட்டு வேலை செய்யும் பெண்ணை ராத்திரிக்கு மட்டும் துணைக்கு வரச் சொல்லிட்டுப் போய் இருக்கான். எனக்கு அவன் அப்பப்போ வெளியூர் போறது பழகிடுச்சு...'' என்று சிரித்தபடி பானுமதி சொல்ல அதை அப்படியே தனக்கு சாதகமாக மாற்றி பேச்சினைத் தொடர்ந்தார் விஜயகுமார்.

''தமிழுக்கு அப்ப நான் ஸ்டேஷனில் பார்க்கும்போதே பதினெட்டு. இந்நேரம் இருபத்தி ஆறு முடிஞ்சு இருக்குமே? தங்கைக்கு முதலில் செய்ய வேண்டும் என்ற மாதிரி தேவை கூட இல்லை. சீக்கிரம் பையனுக்கு ஒரு கல்யாணம் பண்ணி வச்சுட்டா துணைக்கு மருமகள் இருந்துட்டுப் போகப் போறா. தமிழும் நிம்மதியா வெளியூர் பிரயாணம் போகலாம். பையனுக்கு ஏதாவது பொண்ணு பார்த்து இருக்கீங்களா?'' என்று விஜயகுமார் விசாரிக்க பூங்கோதை முறைத்தார்.

''சொல்லி இருக்கேன்! ஒன்றும் சரியா வரலை. உங்க வீட்டுல எப்படி? பொண்ணு பையன் இரண்டு பேரில் யாருக்கு முதலில் பண்ணப் போறீங்க? பார்த்துட்டு இருக்கீங்களா?'' என்று கேட்ட பானுமதியின் குரலில் லேசான பரபரப்பு இருந்தது. முந்தைய நாள் தமிழ் சொன்ன வார்த்தைகளின் நிஜத்தை இந்தக் கேள்விக்கான பதில் சொல்லி விடும் என்பதால் இயல்பாகப் பேச்சை அவரின் போக்கிலேயே வளர்த்தார்.

''பொண்ணு படிச்சுட்டு இருக்கா. ஒரு மாதத்தில் கோர்ஸ் முடிக்கிறாள். அவளுக்கு பண்ணிட்டு பையனுக்கு பார்க்கணும். சந்தர்ப்பம் சாதகமா அமைந்தால் ஒரே மேடையில் இரண்டு கல்யாணத்தையும் செய்யலாம்'' என்று முடித்தார் விஜயகுமார்.

அவருக்கு பதில் சொல்ல வாய் எடுக்கும்போது வீட்டு போன் அடிப்பது கேட்க, 'தமிழா இருக்கும்' என்று பெருமையாகச் சொன்னபடி எழுந்து சென்ற பானுமதி, ''தமிழா பேசறது?'' என்று நம்பிக்கையோடு கேட்க, ''நான் வேறே மொழியில் பேசினால் உங்களுக்குப் புரியுமா?'' என்று எதிர்முனையில் சிரித்தான் தமிழ் வேந்தன்.

''ஆயுசு நூறு தமிழ். இப்பதான் உன்னைப் பற்றி பேசிகிட்டே இருந்தேன். நீ போனில் வந்து விட்டாய்'' என்று சந்தோஷமாகச் சொல்ல அவன் ஆச்சரியமானான்.

''யாரிடம் பேசிட்டே இருந்தீங்க? போன் எங்கேஜ்டா இல்லையே?''

''போனில் இல்ல... நேரில்...'' என்று அவர் முடிக்கும் முன்பே வேகமாக இடையிட்டான்.

''வீட்டுக்கு யாரும்மா வந்து இருக்காங்க?'' என்றவன் புலன்கள் சட்டென்று கூர்மை பெற்றது. விஜய் அங்கிளாக இருக்க வேண்டும். இவரின் வருகை குறித்துப் பேசத்தான் அவள் போனில் அழைத்தாளா? அவரின் வருகையில் அவளுக்கு ஏதோ பிடிக்கவில்லை.

''அதான் நேற்று சொன்னாயே? விஜயகுமார் அண்ணன் அவங்க வீட்டுலயும் அழைச்சுட்டு வந்து இருக்காங்க'' என்ற பானுமதியின் குரல் இறங்கி ரகசியத்திற்குப் போனது. தான் ஊரில் இல்லை என்பதால் அவரின் வருகை தள்ளிப்போகக் கூடும் என்று நினைத்து இருப்பாள். அவர் இன்றே வரக்கூடும் என்பதை அவள் எதிர் பார்க்கவில்லையா? என்ன விஷயமாக வந்து இருப்பார்கள்? நேற்று தான் விளையாட்டுக்கு உளறியதை அம்மா சொல்லி விட்டால் வம்பே வேண்டாம். அவசரமாக தலையை உலுக்கி நனவுக்கு வந்தான்.

''அம்மா, அவங்க ஏதாவது கேட்காமல் நீங்க எதையாவது எசகு பிசகா பேசிடாதீங்க. வாங்க, உட்காருங்க. நல்லா இருக்கீங்களா? என்று சம்பிரதாயமா நாலு வார்த்தை பேசி, அவங்களை அனுப்பி வைக்கப் பாருங்க. எதுவா இருந்தாலும் தமிழ் ஊரில் இருந்து வந்த பிறகு உங்களை நேரில் வந்து பார்க்கச் சொல்கிறேன் என்று அனுப்பிடுங்க...''

''என்னடா வீடு தேடி வந்தவங்களைச் சாப்பிட்டுப் போகச் சொல்லுங்க என்று சொல்லாமல் சும்மா அனுப்பிடுங்க என்று சொல்ற? நான் உன்னைப் பற்றி எதுவும் பேசலை.''

''என்னைப் பற்றி பேசினால் கவலை இல்லை. நான் சொல்ல வருவதே வேறே. அ..ம்..மா..! உங்களுக்கு எப்படிச் சொல்லிப் புரிய வைப்பேன்?''

''எனக்கு ஒண்ணுமே புரியலை...!''

''சரி சுருக்கமா ஒரே ஒரு வரியில சொல்றேன். அவங்க வீட்டுல இருக்கவங்களைப் பற்றி, குறிப்பா அவங்க பெண்ணைப் பற்றி பேச வேண்டாம். அவங்க பொண்ணு சொன்னதா நான் நேற்று சொன்ன விஷயத்தை அவர்களிடம் சொல்ல வேண்டாம். புரிஞ்சுதா?''

''ஏற்கனவே நான் அதைப் பற்றி பேசியாச்சே? என் தமிழ் ஏதாவது பிரச்சனையா?'' என்றவரின் குரலில் கவலை தெரிந்தது.

''அவங்க வந்து எவ்வளவு நேரமாச்சு? அதுக்குள்ளே எப்படிம்மா?'' என்றவனுக்கு எரிச்சல் வந்தாலும் அம்மாவின் குரலில் தெரிந்த கவலை வெளியே காட்டவிடாமல் செய்தது.

''சரிம்மா, விடுங்க. நான் பார்த்துக் கொள்கிறேன். வந்தவங்களை நல்லபடியா கவனிச்சு அனுப்புங்க. கடையில் எதுவும் வாங்க வேண்டும் என்றால் செக்யூரிட்டியை வரச் சொல்லவா?'' என்று சமாதானமாகக் கேட்டான்.

''இல்லை. வீட்டிலேயே எல்லாம் இருக்கு. நீ வேலை வேலை என்று சாப்பிட மறந்து விடாதே. உடம்பையும் பார்த்துக்கோ. சீக்கிரம் வேலையை முடிச்சுட்டு வா.''

''ம்ம். சரிம்மா. சனிக்கிழமை வரப் பார்க்கிறேன் பைம்மா'' என்று முடித்து போனை வைத்தவன் சொன்ன படியே வந்து சேர்ந்தான். வந்து சேர்ந்ததுமே முதல் வேலையாக, தன் வருகையை மகனுக்குத் தெரிவிக்க சொல்லி விஜயகுமாருக்கு ஒரு எஸ்.எம்.எஸ். அனுப்பி வைத்தான். அவன் அவசர வருகை பானுமதியையும்

அதிகாலை ஐந்து மணிக்கு அவன் அனுப்பிய எஸ்.எம்.எஸ். விஜயகுமாரையும் வியப்படைய வைத்தது.



11

காலை ஐந்து மணி நடை பயிற்சிக்குக் கிளம்பிய விஜயகுமார், அலைபேசியில் குறுஞ்செய்தி வந்த ஒலி கேட்டதும் வியப்படைந்தார். தமிழிடம் இருந்து செய்தி, என்ற தகவலே ஆச்சரியம் என்றால், 'நான் சென்னைக்கு திரும்பி வந்து விட்டேன் என்ற தகவலை உங்கள் மகளிடம் தெரிவித்து விடுங்கள்' என்ற அந்தச் செய்தியின் உள்ளடக்கம் அவரை வியப்பின் எல்லைக்கே அழைத்துச் சென்றது.

இதை ஏன் தனக்கு அனுப்பினான்? அவளுக்கு நேரே தொலைபேசியில் பேசி இருக்கலாம். அதிகாலை நேரம், பேசுவது முறையில்லை என்று நினைத்து இருந்தாலும் தனக்கு அனுப்பிய செய்தியை அவளுக்கு அனுப்பி இருக்கலாமே? இது குறித்த விளக்கத்தை முதலில் தமிழிடம் கேட்பதா? தேன்மொழியிடம் கேட்பதா? தமிழை விட மகளே முதல் இடத்தைப் பிடித்ததால், அவளின் அறைக்குச் சென்றார் விஜயகுமார்.

கதவைத் தட்டியதுமே, ''குட்மார்னிங்பா'' என்று வந்தவள் முகம் தெளிவாக இருந்தது.

''என்னம்மா இவ்வளவு காலையிலேயே எழுந்து விட்டாய்? தூக்கம் வரலையா?''

''காலேஜ் வேலை இருந்தது. நீங்க என்னப்பா வாக்கிங் போகலையா?''

''இதோ கிளம்பிட்டே இருக்கேன். நீயும் வருகிறாயா தேனு?''

''வரேன்'' என்று சில நிமிடங்களில் நைட்டியில் இருந்து ட்ராக் சூட்டுக்கு மாறி வந்தாள்.

''தேனு, இன்று காலையில் என் கண்ணில் பட்ட முதல் செய்தி என்ன சொல்லு பார்ப்போம்...'' என்று பீச் மணலில் நடந்தவாறே பேச்சைத் துவக்கினார்.

''இதில் என்னப்பா சந்தேகம்? உங்க படுக்கைக்கு நேரே இருக்கும் முருகன் படத்தில் இருக்கும். 'யாமிருக்க பயமேன்' என்று சிரித்தாள்.

''வெளியில் இருந்து எனக்கு போனில் வந்த செய்தி என்ன என்று சொல்லு பார்ப்போம்...''

''போனிலா? அதான் நிமிஷத்துக்கு மூணு தடவை ஏதாவது சர்வீஸ் மெசேஜ் வருமே? எங்க கடையில் இதை வாங்குங்க. இத்தனை பணம் சேமிங்க. அதுல ஏதாவது...''

''அது இல்லை. தமிழ் சென்னைக்கு வந்துட்டானாம். உன்னிடம் தகவல் சொல்ல ஐந்து மணிக்கு எனக்கு எஸ்.எம்.எஸ். ஏன்டா உன் போன் நம்பர் அவனிடம் இல்லையா?''

''என்னப்பா பெரிய யூ.என்.செக்ரெட்டரி ஜெனரல் வெளிநாட்டுப் பயணம் முடிச்சு வந்த மாதிரி சொல்றீங்க? அதென்ன அவ்வளவு பெரிய நியூஸா?''

''தேனு, கேட்ட கேள்விக்கு நேரடியா பதில் சொல்ல மாட்டாயா? உன்னிடம் சொல்லச் சொல்லி எனக்கு ஏன் மெசேஜ் அனுப்பினான்?''

''இது நீங்க அவனைக் கேட்க வேண்டிய கேள்வி'' என்று சொன்னவளை ஆச்சரியமாகப் பார்த்தார்.

இவளுக்கு ஏன் இவ்வளவு கோபம் என்று அந்தப் பேச்சை விஜயகுமார் ஒத்தி வைக்க, அவனைச் சந்திக்க எங்கே எப்போது வரச் சொல்லலாம் என்று தேன்மொழியின் மனதில் சிந்தனை ஓடத் துவங்கி இருந்தது.

அவனை பீச்சுக்கு இன்று மாலை வரச் சொல்லலாமா? தனியாக அவனுக்காகக் காத்திருப்பது மாதிரி தெரிந்தால் ஒரு மாதிரி இருக்கும். பாலாவையும் கூப்பிட்டுக்கலாமா? அவனுக்கு ஒரு கம்பெனி... மகியை வரச் சொல்லலாமா? அவள் என்னவோ அந்த கிளினிக்கை அவள் தான் தாங்கிப் பிடித்துக் கொண்டு இருக்கிற மாதிரி ரொம்ப பிகு பண்ணிக் கொள்வாளே? வெள்ளிக் கிழமை அஷ்டலஷ்மி கோவில் போகணும். அங்கே இருந்து இருபது நிமிடத்தில் கிளினிக் வந்து விடலாம் என்று வரச் சொல்ல வேண்டும்.

உள்ளுக்குள் கேள்விகள் கேட்டு அதற்கான பதில்களையும் தயார் செய்து மாலை ஆறு மணிக்கு தமிழை பெசன்ட் நகர் பீச்சுக்கு வரச் சொல்லி, அப்பாவின் மொபைலில் இருந்து ஒரு குறுஞ்செய்தி அன்று காலேஜ் செல்வதற்குள் அனுப்பி இருந்தாள்.

* * *

அதிகாலை நேரத்தில் அழைப்பு மணி ஒலிக்க, வாசலுக்கு வந்த பானுமதி அங்கே நின்ற தமிழ்வேந்தனைக் கண்டதும் திகைத்தார்.

''நைட் பேசும்போது கூட வரேன் என்று சொல்லலையே? இப்படிக் காலங்கார்த்தால வந்து நிக்குற?'' என்று கதவைத் திறந்தவருக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. சொன்னதை விட ஒரிரு நாட்கள் முன்னதாக

வந்து விடுவது பழக்கம் தான். ஆனால் ஒரு வாரம் என்று சொல்லி மூன்றே நாட்களில் முடிப்பது ரொம்ப சீக்கிரம்.

''உடம்பு எதுவும் சரி இல்லையா தமிழ்?'' என்று அவன் நெற்றியைத் தொட்டுப் பார்க்க முயன்ற அம்மாவை, தொட விடாமல் நுனிக் காலில் நின்று இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் முகத்தைத் திருப்பி சில கணங்கள் ஆட்டம் காட்டியவன் சிரிப்போடு பார்த்தான்.

''ஏன்மா! என்னைப் பார்த்தால் உடம்பு சரி இல்லாதவன் மாதிரியா இருக்கு?''

''ஒழுங்கா சொல்லுடா, நிஜமாவே வேலை முடிந்து விட்டதா?'' என்று சந்தேகமாகக் கேட்ட பானுமதியை முறைத்தான்.

''முதலில் நோயாளி மாதிரி தெரிஞ்சுது. இப்ப பொய் சொல்பவன் மாதிரி தெரியுதா? வேலை முடிஞ்சாச்சு என்று சொன்னால் நம்ப மாட்டீங்களா?''

''நீ சொன்னால் சரி. எனக்கு என்ன தெரியும்? அதனால் உனக்குச் சரியா பேச, நீ சொல்றதைப் புரிஞ்சுக்க, உனக்கு தோதான ஒரு ஆளைப் பிடிச்சுக் கல்யாணம் பண்ணி வச்சுட்டால்...''

''காலையில் வந்ததும் வராததுமா ஆரம்பிச்சுட்டீங்களா? நிக்க வச்சு கேள்வி கேட்டது போதும். அப்படியே குடுகுடுன்னு கிச்சனுக்கு ஓடிப்போய் மணக்க மணக்க ஒரு பில்டர் காபி போட்டு சூடா எடுத்துட்டு வாங்க பார்ப்போம். என் செல்லம்ல...'' என்று அவரின் கன்னத்தைப் பிடித்து ஆட்டி, தோளில் தட்டி பேச்சை மாற்றினான் தமிழ்.

''ஹய்யோ! வெளியூர் போயிட்டு வந்த பிள்ளைக்கு ஒரு வாய் காபி கொடுக்காமல்...'' என்று தன் தலையில் தட்டிக் கொண்டு அவசரமாக அடுப்படிக்கு ஓடிப் போன அம்மாவை கனிவோடு பார்த்தான். இதே வேறே ஆளாக இருந்தால், 'குடுகுடு'ன்னு ஓடற வயசாடா எனக்கு? அதுக்கு தான் உனக்கு ஒரு கால் கட்டுப் போடணும் என்று சொல்றேன். நீ காதுல வாங்கினால் தானே?'' என்று தான் சொன்னதில் இருந்தே மடக்கி இருப்பார்கள்.

'ஸ்வீட் அம்மா! கள்ளம் கபடம் இல்லாமல் இருக்கும் இவர்களை கடைசி வரையில் கனிவோடு பார்த்துக் கொள்ளும் ஒரு நல்ல பெண்ணை காண்பி' என்று கடவுளிடம் வேண்டும் போதே விஜயகுமாரின் நினைவு ஏன் வந்தது?

'அவள்' தான் ஊருக்குக் கிளம்பும்போது என்ன சொல்ல வந்தாள் என்று கேட்க வேண்டும். அப்புறம் தான் மற்ற வேலை. தான் வந்த தகவலை விஜயகுமாருக்கு குறுஞ்செய்தி அனுப்பும்போது மனம் குறுகுறுத்தது.

* * *

மாலை ஐந்து மணி அளவில் பைக்கில் பெசன்ட் நகர் வந்த பாலாஜி, அஷ்டலஷ்மி கோவில் வாசலில் காரில் இருந்த தேன்மொழியிடம், இறங்கச் சொல்லி ஜாடை காட்டினான். ''என்ன திடீர்னு பக்தி பழமாகி விட்டாய்? கோவிலுக்குப் போகணும் என்று கூட தோணுமா உனக்கு? நீ போறது பத்தாது என்று செய்யும் தொழிலே தெய்வம் என்று இருக்கும் என்னையும் வரச் சொல்லி ஏன் படுத்துற?'' என்று சலித்துக் கொண்டான்.

''இந்த மாதிரி கூட்டி வந்தாலாவது, உனக்கு நல்ல புத்தி வந்து விடாதா என்று நப்பாசை தான்'' என்று கண்

சிமிட்டிச் சிரித்தவள் காரில் இருந்து இறங்கும்போது தான் மறுபுறக் கதவைத் திறந்து கொண்டு மேகா இறங்குவதை கவனித்து விழி விரித்தான்.

''இவள் எப்போ வந்தாள்? தன்னிடம் கூடச் சொல்லவே இல்லை. உன்னை... கிளினிக் வா... அப்புறம் வச்சுக்கறேன்...'' என்று செல்லமாகக் கண்களாலேயே சவால் விட்டவன் அருகில் தங்கை இருப்பதை மறந்து விட்டான்.

''ஏழு மணிக்கு வரும் நாலு பேஷண்டை மை பிடிச்சுப் பார்த்து ரெண்டு ஆன்டிபையாட்டிக் எழுதி என்ன பெரிசா பில்ட் ஆப். தங்கை கூப்பிட்டால் சொன்ன இடத்திற்கு, சொன்ன நேரத்திற்கு...'' என்று ஆரம்பித்தவன் அவர்கள் இருவருக்கும் இடையே நடைபெற்ற பார்வை பரிமாற்றத்தைக் கண்டு பாதியில் நிறுத்தினாள்.

ம்ஹூம்... இங்கே தனி ட்ராக் ஓடுவது போல இருக்கே? மேகாவின் கட்டடத்தை வாடகைக்கு எடுத்து பாலா கிளினிக் நடத்துகிறான். எம்.பி.ஏ. ஹாஸ்பிடல் மேனேஜ்மென்ட் படித்து இருப்பதால் இங்கே வேலை பார்க்கிறேன். சம்பளம் பெரிதில்லை. அனுபவம் கிடைக்கட்டும் என்று கதை சொன்னது. எட்டு மணி நேர வேலை கணக்குப் பார்க்காமல் கிளினிக்கே கதி என்று கிடப்பது. ஆகியவற்றின் காரணம் இதுதானா?

''நான் போய் அர்ச்சனை தட்டு வாங்கி வருகிறேன். நீங்க இங்கேயே இருங்க...'' என்று சொல்லிவிட்டுச் சில அடிகள் நடந்தவள் நின்று திரும்பிப் பார்த்தாள்.

பைக்கில் இருந்து இறங்காமல் அவன் பேச, அவனைச் சமாதானப்படுத்த, அவன் கைகளை அழுத்தி, பைக்கில்

சாய்ந்து நின்று மெல்லிய குரலில் அவள் சொன்ன விளக்கம் காதில் விழவில்லை. ஆனால் நின்று இருந்த தோரணை ஓராயிரம் கதைகளைச் சொன்னது.

''டேய் உன்னை நான் என்னவோ நினைச்சேன்டா...'' என்று கேலி செய்தபடி மீண்டும் பூக்கடைக்கு அர்ச்சனைத் தட்டு வாங்கத் திரும்பும் போது, அவள் மீது ஒரு மத்திய வயதில் இருக்கும் பெண்மணி மோதிக் கீழே விழுந்தார். பின்னால் திரும்பித் திரும்பிப் பார்த்து நடந்ததில் இவர் வருவதை கவனிக்காமல் மோதி கீழே விழுந்து விட்டாரே?

''ஹையோ சாரிம்மா... நான் கவனிக்கலை... அடி பட்டுடுச்சா?'' என்று பதறியபடி கீழே குனிந்து அவரைத் தூக்கி விட்டார்.

''இல்லைம்மா. நான் ஸ்லோகம் சொல்லிட்டே நடந்ததில் நீ வந்ததைக் கவனிக்கலை'' என்று அவளின் கையைப் பற்றி எழுந்தார்.

''அச்சச்சோ... முழங்கையில் சிராய்ப்பு இருக்கே? சிமெண்ட் ரோடில் லேசாக உரசினால் கூட காயம் பட்டு விடும். வண்டியில் முதலுதவிப் பெட்டி இருக்கு. துடைச்சு மருந்து போட்டு விடுறேன். தனியாவா வந்தீங்க?'' என்று அவரின் முழங்கை காயத்தை பரிசோதித்தவாறே கேட்டாள் தேன்மொழி.

''பையன் வந்து இருக்கான். தை வெள்ளி இல்லையா? அதான் இவ்வளவு கூட்டம். வண்டி பார்க் பண்ண இங்கே இடமே இல்லையே? பீச் பக்கம் பார்க் பண்ணிட்டு வரேன் என்று போனான். காணோம்...'' என்றவரின் கண்கள் கூட்டத்துள் மகனைத் தேடியது.

''சாரிம்மா உங்க தட்டில் இருந்த பொருள் எல்லாம் கீழே விழுந்து விட்டது போல...'' என்று வருத்தத்துடன் சொன்னாள் தேன்மொழி.

''அட! நானே பூவும் குங்குமமும் தான் அர்ச்சனைக்கு வாங்கினேன். பூ அப்படியே இருக்கு. குங்கும பாக்கெட் உடைஞ்சு போச்சு. பரவாயில்லை, உனக்கு ஒரு விஷயம் தெரியுமா? குங்குமம் கொட்டினால் அந்த வீட்டில் கல்யாணம் நடக்கும் என்று சொல்வாங்க. தெருவில் கொட்டினால் யாருக்குக் கல்யாணம் நடக்குமோ? ஆமா உனக்குக் கல்யாணம் ஆகி விட்டதா?'' என்று சர்வ சாதாரணமாகக் கேட்க அவள் புன்னகைத்தாள்.



''உனக்குக் கல்யாணம் ஆகி விட்டதா?'' என்று வெகு இயல்பாகக் கேட்ட பானுமதியைப் பார்த்து புன்னகை செய்த தேன்மொழி, ''எனக்கு எப்போ நடக்கும் என்று எனக்குத் தெரியாது. ஆனால் அதோ அங்கே நிற்கிறார் பாருங்க. அவருக்குக் கல்யாணம் நடக்கப் போகுது...'' என்று அவள் பாலாஜியை சுட்டிக் காட்டிய திசையில், சற்று தள்ளி தூரத்தில் வந்து கொண்டு இருந்தது தமிழ்வேந்தன்.

சீக்கிரமே கல்யாணம் நடக்கப் போகிறது என்று தேன்மொழி சுட்டிக் காட்டிய திசையில், அவள் சுட்டிக் காட்ட விரும்பிய பாலாஜியைத் தாண்டி தூரத்தில் வந்து கொண்டு இருந்த மகனே பானுமதியின் கண்ணில் பட்டதால், அவரின் உற்சாகம் கரைபுரண்டது.

''உன் வாக்கு மட்டும் பலிக்கட்டும் உன் வாயில் ஒரு கிலோ சர்க்கரை கொட்டறேன்'' என்று அவளின் உச்சியில் இருந்து கன்னத்தை வழித்து திருஷ்டி கழித்தார் பானுமதி.

கீழே விழுந்த பூவை எடுக்கும்போது அருகில் கொட்டி இருந்த குங்குமம் அவரின் விரல் நுனியில் ஒட்டி, அது திருஷ்டி கழிக்கும் வேளையில் தேன்மொழியின் கன்னத்தில் அழகாக சிவப்பு வண்ணத்தில் கோடு போட அவர் பதறினார். ''கையில் இருக்கும் குங்குமம் கன்னத்தில் பட்டு விட்டது. முகத்தைத் துடைத்துக் கொள்கிறாயா?''

''ஓ! பரவாயில்லை, சிவப்பு வண்ணம் தானே? கன்னம் சிவப்பா அழகா இருக்கு என்று பார்ப்பவங்க நினைத்துக் கொள்ளட்டும்'' என்று கண் சிமிட்ட அவர் அவசரமாக அவளுக்கே வக்காலத்து வாங்கினார்.

''உனக்கென்னம்மா குறைச்சல்? அந்தக் குங்குமம் இல்லா விட்டாலும் அழகா இருக்கே.''

''ஆஹா! எங்க அம்மா இதைக் கேட்கணும். அவங்களுக்கு அவங்க பையன் தான் சிவப்பு. சரி வாங்க, உங்க கையில் மருந்து போடுறேன். எங்க அண்ணா காத்திருக்கிறான்'' என்று அவரை அழைத்துப் போய், பாலாஜியின் பெயர் இல்லாமல் அண்ணா என்றும், மேகாவை பெயர் சொல்லியும் அறிமுகம் நடந்து, அவரின் முழங்கையில் இருந்த காயத்தை சுத்தம் செய்து, மருந்திட்டு சின்ன பிளாஸ்டர் போடும் வரை தமிழ் கண்ணில் படவே இல்லை.

''எங்கே போனான்? இப்ப பார்த்தேன். அதுக்குள்ளே காணோமே?'' என்று அவர் மகனைத் தேட, 'பரவாயில்

லைம்மா. நேரமாச்சு இன்னொரு நாள் பார்க்கிறோம்' என்று மூவரும் பானுமதியிடம் விடை பெற்றுச் சென்றனர். அவர்கள் மூவரும் கோவிலுக்குள் சென்ற அடுத்த நிமிடம் அருகே வந்த தமிழைப் பார்த்து சலித்துக் கொண்டார் பானுமதி.

''இவ்வளவு நேரம் எங்கேடா போன? உன்னைப் பார்க்க இவ்வளவு நேரம் அவங்க மூன்று பேரும் காத்திருந்தாங்க தெரியுமா?''

''இங்கே நின்ற மூணு நிமிஷத்துல மூணு பேரை பிரெண்ட் பிடிச்சாச்சா? கையில என்ன?'' என்று விசாரித்தான்.

''அந்தப் பொண்ணு மேலே மோதி விழுந்துட்டேன். சின்ன சிராய்ப்பு. அதுக்கே பதறி கட்டுப் போட்டு விட்டாள். அவங்க அண்ணனோடு வந்து இருந்தாள். கோவிலுக்குள் தான் போய் இருக்காங்க. வா போய் பார்க்கலாம்...'' என்று அவர் அப்பாவியாய் விலாவாரியாக விவரிக்க அவன் புன்னகையோடு கேட்டு நின்றான்.

அவள் அம்மாவிடம் பேசியதையும், அங்கே நடந்ததையும் பார்த்துக் கொண்டு தானே இருந்தான்? அவள் முகத்தில் இருந்த பதட்டம், கனிவு, அதன் பின்பு வந்த கேலிச் சிரிப்பு, எல்லாவற்றையும் ரசித்தவனுக்கு அவளின் முன்னால் வரப் பிரியம் இல்லை. இருக்கும் சிரிப்பு தன்னைக் கண்டதும் மறைந்து விடக் கூடாது என்று வரவில்லை.

அவள் என்ன பேசப் போகிறாளோ? பேசிய பின்பு தேவைப் பட்டால் அம்மாவிடம் அவளைப் பற்றிச் சொல்லலாம். இல்லை என்றால் சென்னையில் இருக்கும் எத்தனையோ பெண்களில் இவளும் ஒருத்தி என்று

இருக்கட்டும். இப்போதே அவள் விஜயகுமாரின் பெண் என்பதைச் சொன்னால் அம்மா இன்னும் அதிக பிரியம் வைக்கக்கூடும்...

''என்ன யோசனை? நான் பேசிட்டே இருக்கேன். நீ எங்கே பார்த்துக் கொண்டு நிற்கிறாய்? சீக்கிரம் வா, கோவிலுக்குப் போகலாம்'' என்று பானுமதி பதற, அவன் புன்னகைத்தான்.

''இல்லைம்மா, நான் கோவிலுக்கு வரவில்லை. வேறே ஒரு வேலையா என் பிரெண்ட் ஒருத்தரைப் பார்க்க வந்தேன். நீங்க இங்கே சாமி தரிசனம் முடித்து விட்டு இருங்க. நான் ஒரு மணி நேரத்தில் வந்து உங்களைக் கூப்பிட்டுக்கறேன் ஜாக்கிரதை...'' என்று எச்சரித்து விட்டு பீச்சை நோக்கி நடந்தான் தமிழ்.

குழந்தைகள் விளையாட மாநகராட்சியால் நிறுவப் பட்டு இருந்த பார்க்கின் அருகில் இருந்த சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்து, 'அவள் என்ன பேச நினைக்கிறாள்? ஏன் தன்னைப் பார்க்க வேண்டும்? தன்னைப் பார்த்தால் பொறுக்கி மாதிரியா இருக்கு? மொபைல் எண்ணைக் கொடுக்க மறுக்கிறாள்?'' என்று யோசித்தபடி அவளின் வருகைக்காகக் காத்து இருந்தான். குழந்தைகளின் விளையாட்டை வேடிக்கை பார்த்தவன் பத்து நிமிடத்தில் தன்னையே மறந்து போனான்.

''ஹலோ! ரொம்ப நேரமா வெயிட் பண்றீங்களா?'' என்ற தேன்மொழியின் குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தவன் புன்னகைத்தான்.

''அப்படி இல்லை. பீச்சுக்கு வருவது எனக்குப் பிடிக்கும். நீங்க அழைக்கா விட்டாலுமே வாரத்திற்கு இரண்டு முறை கட்டாயம் மெரினாவுக்குப் போவேன்.

அது என்னுடைய வேலைக்கு உபயோகமாக இருக்கும். அதனால் எந்தப் பிரச்னையும் இல்லை'' என்று புன்னகை செய்தான் தமிழ்.

''ம்... அதான் அன்று கிளினிக்கில் பார்த்தேனே... எங்கே உங்க மூன்றாவது கண்ணை காணோம்?'' என்று அவள் பேசியதில் அவனுக்குத் தலையும் வாலும் புரியவில்லை.

''மூன்றாவது கண்... யு மீன்... காமரா...'' என்று சற்று நேரத்தில் யூகித்துக் கேட்டதும் அவள் கண்களில் சின்ன பாராட்டு ஒரே ஒரு வினாடி தோன்றி மறைந்தது.

''ம்ம்ம், அதான் எந்த இடத்தில் என்ன வேலையா இருந்தாலும் உடனே காமராவை திறந்து வேலை செய்ய ஆரம்பிச்சுடுவீங்களே? இங்கே காணோம்?'' என்று சொல்லும் போதே அவள் குரலில் அன்றைய தினம் அவனுடைய காமராவில் கண்ட காட்சிகளின் நினைவில் லேசாகக் கோபம் தொனித்தது.

''வேலை இருக்கும்போது செய்ய வேண்டியதுதான். இங்கே நீ கூப்பிட்டு வந்து இருக்கேன். அதனால் எடுத்து வரவில்லை. இந்தக் குழந்தைகளை வேடிக்கை பார்த்ததில் நேரம் போனதே தெரியலை. பாலாஜி கிளம்பிட்டாரா?''

''கிளம்பிட்டான். பாலா வந்தது உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''ஏன் இவ்வளவு ஆச்சரியம்? பாலாஜி வந்ததைப் பார்த்தேன். மேகா இருந்ததையும் பார்த்தேன்.''

''மேகாவை உங்களுக்குத் தெரியுமா?''

''இன்னிக்கு இதுவரைக்கும் நீங்க பேசியது எல்லாமே கேள்வி தான். ஒரு மாற்றத்துக்கு பதில் சொல்லுங்க. கூடா குடிக்க காபி, டீ, மாதிரி ஏதாவது வாங்கி வரட்டுமா?''

''கூடாதான் குடிக்கணுமா?''

''அதுவும் கேள்வியா?''

''ஏன் கேள்வி கேட்கக் கூடாது என்று உங்க டி.வி.ல புதுசா சட்டம் போட்டு இருக்கீங்களா?''

''க..ட..வு..ளே! அதுக்கு ஒரு கேள்வியா?''

''எல்லார் பற்றியும் எல்லாம் தெரிந்த மாதிரி பேசினால், எப்படி அனுமதிக்க முடியும்?''

''நான் எப்போதுமே எனக்கு எல்லாம் தெரியும் என்று நினைக்க மாட்டேன். கற்றது கையளவு. கல்லாதது உலகளவு என்ற எண்ணம்தான்...''

''பாலா, மேகா பற்றி உங்களுக்கு என்ன தெரியும்?'' என்றவளின் கேள்வியில் சற்று முன்பு தான் கண்டு பிடித்த விஷயம் குறித்த பெருமையும் உனக்கு என்ன தெரியும் என்ற அலட்சியமும் இருந்தது.

''பாலா மேகா ரெண்டு பேருமே லவர்ஸ். அவங்க காதலை பத்து நாளைக்கு முன்பு, பிப்ரவரி பதினான்கு அன்று பகிர்ந்து கொண்டார்கள். அதனால் அன்று தலை கால் புரியாமல் பாலாஜி பறந்து வந்து விபத்து நடந்தது. அதனால் என் தலை அன்று உருண்டது என்பது மட்டும் எனக்குத் தெரியும். இதுக்கு மேலே அவருடைய தங்கை என்ற முறையில் உங்களுக்கு நிறைய விஷயம் தெரிந்து இருக்கலாம்...''

இதென்ன புதுக் கதை? தனக்குத் தெரிந்ததை விட அதிகமாக இவன் அறிந்து வைத்து இருக்கிறானே? இவனுக்கு எப்படித் தெரிந்தது? அன்று அப்பாவும் பாலாஜியும் இவன் மேல் தப்பில்லை என்று திருப்பித் திருப்பிச் சொன்னது இதனால்தானா? பாலா இந்த விஷயத்தைத் தன்னிடம் சொல்லவே இல்லையே?

''ஹலோ... தேன்மொழி மேடம்... இங்கே இருக்கீங்களா?'' என்று குரல் உயர்த்தி அவள் முகத்தின் முன்னால் சொடக்குப் போட்டு அழைத்தான் தமிழ்.

''யா... இருக்கேன்...''

''வாவ்! முதன் முதலா பதில் சொல்லி இருக்கீங்க. ரொம்ப சந்தோஷம் சூடா வேண்டாம் என்று சொல்லிட்டீங்க. ஜில்லுன்னு ஐஸ்க்ரீம் வாங்கிட்டு வரேன். ஓகே?'' என்று கேட்டவன் அவளின் பதிலை எதிர்பார்க்காமல் சென்று அருகில் இருந்த வண்டியில் இரண்டு கப் ஐஸ்க்ரீமுடன் வந்து அருகில் அமர்ந்து அவளிடம் ஒன்றை நீட்டினான்.

''தேங்க்ஸ், வனிலா எனக்குப் பிடிக்கும் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று அவனிடம் வாங்கியபடி அவள் கேட்க அவன் அவளைப் பார்த்து புன்னகை செய்தான்.

''இன்னும் ஒரு கேள்வியா என்று நினைக்கிறீங்க என்று தெரியுது. அந்த எண்ணிக்கையில் இன்னும் ஒன்று சேர்த்துக்கோங்க. இந்த நேரத்தில் ஐஸ்க்ரீம் வாங்கி வந்து இருக்கீங்க. உங்களுக்குப் பிடிக்குமா?''

''உங்களுக்கு தேன்மொழி என்று பேர் வச்சதுக்கு பதில் கேள்மொழி என்று வைத்து இருக்க வேண்டும். எனக்கு என்ன பிடிக்கும் பிடிக்காது என்பதைப் பற்றியா பேச அழைத்தீங்க?''

''இல்லை. இதுவரைக்கும் நமக்குள் நேரடியான அறிமுகம் எதுவும் கிடையாது. ஒரு முக்கியமான விஷயம் பேசுவதற்கு முன்னால் ஒருவரைப் பற்றி ஒருவர் பரஸ்பரம் அறிந்து கொள்ளலாமே என்று கேட்டேன்.

சொல்ல விருப்பம் இல்லை என்றால் விடுங்க...'' என்று இழுத்தவளுக்கு எப்படி பேச்சைத் தொடர்வது என்று புரியவில்லை.

''என்ன மேடம்? ஏதோ சொல்ல வேண்டும் என்று தானே அழைத்தீர்கள்? எதற்கு இவ்வளவு யோசனை? நான் ஏதாவது உதவி செய்ய வேண்டுமா? தயங்காமல் சொல்லுங்க..''

''மேடமா... அதெல்லாம் வேண்டாம்... வயசான மாதிரி இருக்கு...'' என்று அவசரமாகச் சொன்னவளை சிரிப்போடு பார்த்தான்.

''எங்க அப்பாவிற்கு ரொம்ப அவசியமான நேரத்துல நீங்க ஒரு முக்கியமான உதவி செய்தீங்க என்று உங்க பேமிலி மேலே அவருக்கு ரொம்ப அபிமானம்...''

''தெரியும். அது அவரோட பெருந்தன்மையை, நன்றி மறவாத நல்ல குணத்தைக் காட்டுது...''

''நன்றி இருப்பது மட்டுமில்லை. உங்க அப்பா இறந்ததற்கு தான் தான் காரணமோ என்ற குற்ற உணர்வு கூட அவரிடம் கொஞ்சம் இருக்கு...''

''அவரே என்னிடமும் சொன்னார். அதற்கு அவசியம் இல்லை என்று நானே அவரிடம் சொல்லி விட்டேனே? மனிதனின் ஆரம்பமும் முடிவும் நம் கையிலா இருக்கு?''

''அது உங்களுக்கும் எனக்கும் தெரியுது. ஆனால் அவர்...''

''அதை விடுங்க தேன்மொழி. எப்போதோ நடந்து முடிந்த விஷயம். நீங்க என்ன விஷயமா என்னை வரச் சொன்னீங்க என்ற விஷயத்திற்கு நீங்க வரலை...''

''நான் பேசப் போகும் விஷயமும் அதோடு தொடர் புடையதுதான்...''

''எங்க அப்பா இறந்ததற்கும் நீங்க பேசப் போகும் விஷயத்திற்கும் தொடர்பு இருக்கா? புரியலையே?''

எங்க அப்பா உன்னிடம் நம் திருமணம் பற்றிப் பேசினால் என்னைப் பிடிக்கவில்லை என்று சொல்லிவிடு என்ற கோரிக்கையை எப்படி அவன் முன் வைப்பது? 'இவன் மூலம், அப்பாவிடம் சொல்லலாம்' என்ற ஐடியா நினைக்கும்போது பிரமாதமாகத் தோன்றினாலும் இப்போது பிசுபிசுத்தது.

''ஹலோ! என்ன ஆச்சு? சத்தமே காணோம்...'' என்று அவன் மீண்டும் துருவ, அவள் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

''நான் சொல்வதைக் கேட்டால் உங்களுக்கு பைத்தியக் காரத்தனமா தோன்றலாம்... ஆனால்...'' என்று மீண்டும் தன் கையில் வைத்து இருந்த ஐஸ்க்ரீம் கப்பை உருட்ட, அவனின் ஆர்வம் அதிகமானது. அமைதியோடு காத்திருக்க, அவளே மீண்டும் மூச்சை பிடித்துக் கொண்டு சொல்ல ஆரம்பித்தாள்.

''எங்க அப்பாவுக்கு உங்களைப் பிடித்து இருக்கு. அதோடு உங்க அப்பாவின் மரணத்திற்கு தான் காரணம் என்ற எண்ணமும் இருக்கு. அதனால் அதற்குப் பிராயச் சித்தமாக உங்களுக்கு என்னைத் திருமணம் செய்து வைக்க விரும்புகிறார். நீங்க தடுத்து நிறுத்த வேண்டும். அதை சொல்லத்தான் அழைத்தேன்'' என்று வேகமாகச் சொல்லி முடித்தாள்.

''இதுக்கா இவ்வளவு தயங்கினீங்க? இதை நேரடியா சொல்ல வேண்டியதுதானே? நீங்க சொல்லும் கருத்தில் எனக்கு நூறு சதவிகிதம் உடன்பாடு உண்டு. நான் நாளைக்கே உங்க அப்பாவிடம் பேசுகிறேன். தைரியமா

கிளம்புங்க'' என்று தமிழ் வாக்குறுதி அளிக்க, இப்போது திகைப்புடன் பார்த்தது தேன்மொழி. இதென்ன உடனே ஒத்துக் கொண்டான்? அவனுக்கும் தன்னைப் பிடிக்க வில்லையா? உள்ளுக்குள் ஏதோ உடைந்தது.



ஒரு ஆணையும் பெண்ணையும் மண வாழ்வில் இணைக்கும் புனிதமான திருமண பந்தத்தை உருவாக்க எத்தனையோ காரணங்கள் இருக்கையில், பிராயச்சித்தம் செய்வதற்காக ஒரு திருமணம் நடக்க முடியாது என்பதில் தெளிவாக இருந்த தமிழ்வேந்தன், அதை தயக்கம் எதுவுமின்றி உடனடியாக வெளிப்படுத்தவும் செய்தான். ஆனால் அந்த வார்த்தைகள், அவளின் முகத்தில் மலர்ச்சியை உருவாக்கும் என்று அவன் எதிர்பார்க்க அதில் தெரிந்த குழப்பம் அவனுக்கு வியப்பை ஏற்படுத்தியது.

சுற்றிலும் இருள் படர்ந்து வந்த நிலையில், சாலையோரம் இருந்த பெஞ்சில் அமர்ந்து இருந்ததனால் தெரு விளக்குகளின் வெளிச்சத்தில் தெரிந்த அவளின் கன்னத்தில், தண்ணீரில் நனைந்த கைக் குட்டையால் துடைத்த பிறகும், பானுமதியின் விரல்களில் இருந்த குங்குமம், கோடாக இருந்தது. கூர்ந்து கவனித்த அவன் கண்ணில் பட்டது.

''கன்னத்தில் எப்போ எப்படிப் பட்டது? இவ்வளவு நேரம் என் கண்ணில் படலையே?'' என்று பதட்டமாக விசாரித்தான் தமிழ்.

''கன்னத்தில் அடியா? ஏன் அப்படிக் கேட்கறீங்க?'' என்று அவளின் குழப்பத்தை மீறி, அவன் பதட்டம் ஏற்படுத்திய ஆச்சரியத்துடன் திருப்பி எதிர்கேள்வி கேட்டாள் தேன்மொழி.

''கன்றிப் போன மாதிரி... இடது கன்னத்தில் நீளமா சிவப்பா கோடு மாதிரி இருக்கே?''

''ஓ! இதுவா? அது காயம் இல்லை. குங்குமம். கொஞ்சம் முன்னாடி கோவில் வாசலில் ஒரு அம்மாவின் மேல் மோதி விட்டேன். அவங்க கையில் இருந்த அர்ச்சனை தட்டி கொட்டி, குங்குமம் சிந்தி, அதை அள்ளி, அந்தக் கையோடு என்னைத் தொட்டதில் வந்த தடம் அது. கழுவினேனே? இன்னுமா போகவில்லை...'' என்று கன்னத்தை அழுந்த துடைக்க, குங்குமத்தால் மட்டும் இல்லாமல், அவள் அழுத்திய இடத்தில் ரத்தம் பாய்ந்து அந்த இடம் மேலும் சிவப்பாக அது அவன் கண்களையும் மனதையும் கவர்ந்தது.

''ஓ! இப்படி கன்னத்தைக் கறையாக்கி விட்டார்களே என்று உங்களுக்கு அவங்க மேல் கோபம் வரலையா?'' என்று கேட்டவனின் குரலில் வியப்பு இருந்தது. அன்று பாலாஜிக்கு அடிபட்டு இருந்த போது தன் மேல் காரணமே இல்லாமல் அப்படிப் பாய்ந்தாளே? இப்போது அம்மாவை எப்படி விட்டு வைத்தாள் என்ற ஆச்சரியம் வந்தது.

''சே! சே! அவங்களை மாதிரி அவ்வளவு இன்ன சண்டா இருக்கிறவங்க கிட்டே எல்லாம் கோபப்பட முடியாது. சிலரைப் பார்த்தால் பார்த்த உடனே கோபம் வரும்...''

''அன்று பாலாஜிக்கு அடிபட்ட போது என் மேல் வந்த மாதிரி...'' என்று அவன் உடனடியாக சற்று முன்பு

மனதில் நினைத்ததைச் சொல்லிவிட அவள் முறைத்தாள்.

''இந்த மாதிரி விதண்டாவாதம் பேசினால் கோபம் வராமல் என்ன செய்யும்? சரி நேரமாச்சு. நான் கிளம்புகிறேன். நாளைக்கு அப்பாவிடம் பேச மறந்து விட வேண்டாம்'' என்று பையைத் தூக்கிக் கொண்டு எழ அவனும் கூடவே எழுந்து நடந்தான்.

''ஒரே ஒரு சந்தேகம் கேட்கலாமா?''

''எதுக்குத் தலையைச் சுற்றி மூக்கைத் தொட வேண்டும்? நேரடியாக உங்க அப்பாவிடமே இதை சொல்லி இருக்கலாமே. எதுக்கு என்னிடம் வந்து கேட்க வேண்டும். அதானே?''

''ஆஹா! இது எனக்குத் தோன்றவே இல்லையே? எதுக்காக நீங்க உங்க அப்பாவை விட்டுட்டு என்னிடம் கோரிக்கை வைக்க வேண்டும்?''

''அப்ப நீங்க இதை கேட்க நினைக்கலையா? வேறென்ன நினைத்தீங்க?''

''கேள்விகளின் நாயகி எப்போ கேள்வி கேட்பதை நிறுத்திட்டு பதில் சொல்வாங்க என்று கேட்க நினைத்தேன்...'' என்றவன் முகத்தில் சிரிப்பு இருக்க அவளின் பொறுமை பறந்தது.

''உங்களிடம் போய் உதவி கேட்கலாம் என்று வந்தேன் பாருங்க... என்னைச் சொல்லணும்'' என்று முனகி விட்டு வேகமாக நடக்க, அவளின் வேகத்திற்கு ஈடு கொடுத்து நடந்தான்.

''ஹேய் இதென்ன பொசுக் பொசுக்குன்னு உங்களுக்குக் கோபம் வருது. காலேஜில் ரன்னிங் ரேஸ் போனால் முதல் பரிசு உங்களுக்கு தானா?''

''இப்ப என்ன வேண்டும் உங்களுக்கு? சும்மா வளவளன்னு பேசாம சுருக்கமா சொல்லுங்க.''

''உங்களை மாதிரி வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்று பேச இனிமேல் கற்றுக் கொள்கிறேன். இவ்வளவு தூரம் உங்க வாழ்க்கையையே நிர்ணயிக்கும் முக்கிய மான விஷயத்தை என்னை நம்பி ஒப்படைத்து இருக் கீங்க. ஒருவேளை...'' என்று அவன் இடைவெளி கொடுக்க, ''என்னதான்டா சொல்ல வருகிறாய்?'' என்ற சலிப்பான கேள்வி தேன்மொழி கண்களில் தோன்றியது.

''உங்க அப்பா நான் சொல்வதைக் கேட்கவில்லை என்றால் என்ன செய்யப் போறீங்க என்று முதலில் கேட்க நினைத்தேன். ஆனால் நீங்க சொன்ன பிறகுதான். நீங்க ஏன் உங்க அப்பாவிடம் இந்தத் திருமணம் வேண் டாம் என்று சொல்லவில்லை என்ற அந்தக் கேள்வியும் தோன்றியது. ரெண்டுக்குமே பதில் சொல்லிடுங் களேன்...''

''உங்க முதல் கேள்விக்கு பதில். முயற்சி பண்ணு வதுதான் என் வேலை. இது ஒரு முயற்சி. ஆனால் ஒரே முயற்சியில் வெற்றி கிடைக்கும் என்று நான் கையைக் கட்டிக் கொண்டு காத்திருப்பதில்லை. வேறு வழி களிலும் முயற்சி பண்ணுவேன்...''

''குட்... அடுத்த கேள்வி...''

''எனக்கும் எங்க அப்பாவுக்கும் இருக்கும் நல்லுறவு இந்த மாதிரி வாக்குவாதத்தினால் பாதிக்கப்படக் கூடாது என்று நினைக்கிறேன்...''

''அந்த எண்ணம் இருந்தால் அப்பாவின் பேச்சை ஒத்துக் கொள்ள வேண்டும்...''

''இதென்ன விதண்டாவாதம்? உங்களால் முடியாது என்று நினைத்தால் அதை நேரடியா சொல்ல வேண் டியதுதானே? எதுக்கு இப்படி சுத்தி வளைக்கறீங்க?''

''அப்படி நான் நினைத்து இருந்தால், உங்களிடம் முதலில் வாக்குக் கொடுத்து இருக்க மாட்டேனே? நானும் என்னால் ஆன முயற்சியைச் செய்வேன். ஆனால் முடிவு என் கையில் இல்லை என்பதை உங்களுக்குத் தெளிவு படுத்தத்தான் இந்த விளக்கம்...''

''எங்க அப்பாவை என்னால் மறுத்துப் பேச முடியாது என்பதில்லை. மறுத்துப்பேச எனக்கு விருப்பமில்லை. நீங்க சொன்னதை மட்டும் செய்ங்க. புரிந்ததா?'' என்று முடித்தவள் காரில் ஏறிக் கிளம்பிப் போக அவளை புன்னகையுடன் பார்த்தபடி நின்றவனுக்குக் கொஞ்சம் நேரம் கழித்தே அம்மா தனக்காக கோவிலில் காத்து இருப்பார்கள் என்ற நினைவு வர, அவசரமாக பைக்கை நோக்கி நடந்தான்.

இரண்டே நிமிடத்தில் கோவில் வாசலில் காத்திருந்த அம்மாவை பைக்கில் ஏற்றிக் கொண்டு வீடு நோக்கிப் போகும்போது அவளிடம் பேசிய வார்த்தைகள் ஒவ் வொன்றும் பல முறை அவன் காதுகளில் மீண்டும் மீண்டும் ஒலித்துக் கொண்டே இருந்தது.

''தமிழ்... என்ன ரொம்ப அமைதியா இருக்கிறாய்? போன வேலை சரியா முடியலையா?'' என்று வீடு வந்ததும் விசாரித்தார் பானுமதி.

''என்ன வேலை?'' என்று இயல்பாகக் கேட்டு விட்டே நாக்கைக் கடித்தான்.

''அதான்பா... பீச்சுல யாரையோ பார்க்கப் போனாயே...'' என்று கேட்டவரை யோசனையோடு பார்த்தான்.

அம்மாவின் வெள்ளந்தியான குணத்தை அவள் ரசித்த மாதிரி தான். அவள் பேசும்போது தோன்றியது. இவருக்கு அவளின் படபடப்பான பேச்சு பிடித்து இருக்கிறதா? இதென்ன வேண்டாத வேலை? அவளிடம் சொன்னது என்ன? செய்வது என்ன என்று மூளை இடித்தாலும், பதிலை அறிந்து கொள்ள வேண்டும் போல இதயம் படபடத்தது.

''என்மா, அஷ்டலஷ்மி கோவில் வாசலில் கீழே விழுந்து புதையல் எடுத்த போது அந்த பொண்ணு என்ன சொன்னாள்?'' என்று கேலியாக விசாரித்தாள்.

''என்னடா நக்கலா? இரத்தம் கசிகிறதே என்று பதறிக் கட்டு போட்டு விட்டாள். அவங்க அண்ணனை அறிமுகப்படுத்தினாள். தனியாவா வந்தீங்க என்று அக்கறையோடு கேட்டாள். உன்னை மாதிரி கேலி பேசலை...''

''இவ்வளவு வக்காலத்து வாங்குறீங்க! அந்த பொண்ணு பேர் கேட்டீங்களா?''

''இல்லையே? டாக்டர் என்று சொன்னாள். பேர் என்ன...'' என்று வருத்தத்துடன் தன் நெற்றியில் லேசாகத் தட்டிக் கொண்டார்.

''ஏற்கனவே அங்கே இருப்பது கொஞ்சம் தான். இப்படி தினமும் நூறு முறை தட்டினால்... அப்புறம் காணாமல் போய் விடப் போகிறது. அந்தப் பொண்ணு பேர் எனக்குத் தெரியும்...'' என்று அவரின் கன்னத்தைச் செல்லமாகப் பிடித்து ஆட்ட, அவர் கண்களை விரித்தார்.

''நீ தான் அவளைப் பார்க்கவே இல்லையே? எல்லாமே உனக்கு விளையாட்டு தான். நான் நம்ப மாட்டேன். போ...''

''ஹையோ அ..ம்..மா..! நான் பொய் சொல்லும்போது அதை நம்புங்க. ஆனால் நிஜம் சொல்லும்போது நம்பாதீங்க. எனக்கு அந்தப் பொண்ணோட பேர் தெரியும்...''

''தமிழ்... நிஜமாவா... சொல்ற?''

''நிஜம்மாவே அந்த பொண்ணு பேர் மட்டுமில்லை. அவங்க அண்ணன் பேரு, அவங்க அப்பா பேர், அம்மா பேர், எல்லாமே தெரியும்...''

''எப்படித் தெரியும்?''

''இப்ப அவங்களைத் தானே பார்க்கப் போனேன்...'' என்று அவன் கண் சிமிட்டிச் சிரிக்க அவர் கண்கள் மேலும் வியப்பில் விரிந்தது.

''ஹய்யோ! அப்ப நானும் உன் கூடவே வந்து அவளைப் பார்த்து இருப்பேனே? பரவாயில்லை ஞாயிற்றுக்கிழமை நம் வீட்டுக்கு அந்தப் பெண்ணை வரச் சொல்லு, பொண்ணு என்ன பொண்ணு. முதலில் அவள் பேர் சொல்லு. போன் நம்பர் வச்சு இருக்கியா? நான் அவங்க அம்மாவிடம் பேசுகிறேன்...''

''என்ன வேகம்? எனக்குப் பசிக்குது. முதலில் சாப்பாடு... அப்புறம் தான் பதில்...''

''மணி இன்னும் எட்டு கூட ஆகலை. அதுக்குள்ளே என்ன பசிக்குது? முதலில் பதிலை சொல்லு. அப்புறம் தான் சாப்பாடு...''

''எங்க அம்மா கூட என்னை மடக்கிப் பேசக் கற்றுக் கொண்டார்களே? பேசுவது அம்மாதானா?''

''பதில் சொல்ல முரண்டு பண்ணினால் சாப்பாடே இல்லை என்று சொல்லிடுவேன். ஜாக்கிரதை...'' என்று

அவர் ஒரு விரல் காட்டி மிரட்ட தமிழுக்கு ரொம்ப சந்தோஷமாக இருந்தது. அவருக்கு அவளைப் பிடித்து இருக்கு என்பதன் அடையாளம் அல்லவா இது?

''ரொம்ப தேறிட்டீங்கம்மா. பசி வயிற்றைக் கிள்ளுது. பேரைச் சொல்லிடறேன். அவங்க பேர் தேன்மொழி...''

''தேன்மொழியா? நீ ஊருக்குப் போவதற்கு முன்னால் ராத்திரி போனில் பேசினாளே அந்தப் பொண்ணா? அவங்க அப்பா விஜய் அண்ணனா? அதான் அவ்வளவு அக்கறையா பேசினாளா? ஏற்கனவே உன்னைத் தெரியும் என்பதனால் அப்புறமா பார்க்கிறோம் என்று கிளம்பிட்டாங்களா? அவளுக்கு என்னை ஏற்கனவே தெரிந்து இருக்கும் போல? அந்த பையனுக்கு தானே கையில் அடிபட்டது? கையில் கட்டு ஒன்றும் இல்லையே? அதோடு பைக் வேறே ஓட்டிட்டு வந்தான்? கை சரியாகிடுச்சா? விஜய் அண்ணனுக்கு ஒரு பையன் ஒரு பொண்ணு தானே சொன்னாய்? கூட இருந்த இன்னொரு பொண்ணு யாரு?...''

அவர் பேசப் பேச, கை விரல்களை ஒவ்வொன்றாக விரித்தவன், பத்து விரல்களும் முடிந்த உடனே சிரிக்க ஆரம்பித்தான். ''அ...ம்...மா...! கை விரல் பத்தும் முடிஞ்சுடுச்சு. இன்னும் உங்க கேள்விகளின் பட்டியல் முடியலை. அப்படியே உங்களை மாதிரியே ஒரு வாரிசு அங்கே உருவாகிறது...'' என்று சொல்லிவிட்டு மேலும் சிரித்தான் தமிழ்.

''ரொம்ப தெரிஞ்ச பொண்ணு என்றதும் சந்தோஷம் தாங்கலை. அந்த அண்ணனும் அண்ணியும் தான் ஏற்கனவே வீட்டுக்கு வந்துட்டாங்க. நாம் அவங்க வீட்டுக்குப் போயிட்டு வருவோமா? வர ஞாயிற்றுக் கிழமை வேறெந்த வேலையும் வச்சுக்காதே. கொஞ்சம் ஸ்வீட் வாங்கிட்டு அவங்க வீட்டுக்குப் போய் பார்த்துட்டு வருவோம். என்ன சரியா?'' என்று உற்சாகமாக பானுமதி கேட்க, சிரித்துவிட்டு அவனும் தலை அசைத்தான்.

நாளை பேசுகிறேன் என்று அவளிடம் வாக்குக் கொடுத்தான். ஆனால் இந்த மாதிரி சென்சிடிவான பெர்சனல் விஷயத்தை போனில் பேசுவதைவிட நேரில் பேசுவது பெட்டர். அதோடு, தான் எடுத்த முயற்சி அவளுக்கும் தெரியட்டுமே? ஞாயிறு அன்று வீட்டில் போய் பேசி விடலாம் என்று விஜயகுமாரை போனில் அழைத்தான்.

''ஹலோ அங்கிள்... நான் தமிழ் பேசுகிறேன்...'' என்று ஆரம்பிக்கும் முன்பே அவரின் உற்சாகமான குரல் இடையிட்டது.

''ஹேய் தமிழ்! அது தெரியாமலா இருக்கிறேன்? உன் நம்பர் ஸ்டோர் பண்ணி வைத்து இருக்கேனே? உனக்கு ஆயுசு நூறு. தேனு உன்னைப் பார்த்தாள் என்ற தகவல் தெரிந்த வினாடியில் இருந்து உன் அழைப்பிற்காகக் காத்திருக்கிறேன். சொல்லுப்பா...''

''நான் உங்களிடம் நேரில் பேச வேண்டும் அங்கிள். எப்ப ப்ரீ சொல்லுங்க...''

''வீ.ஆர்.எஸ். கொடுத்த பேங்க் ஸ்டாப் எல்லா நேரமும் ப்ரீதான். என்ன விஷயம் சொல்லு.''

''நானும்... அம்மாவும்... வரும் ஞாயிற்றுக்கிழமை... உங்க வீட்டுக்கு வரலாமா... என்று...'' அவன் இழுக்கையில் அவர் உற்சாகமாக இடையிட்டார்.

''இதென்ன கேள்வி? நான் உன்னை பத்து நாளைக்கு முன்பே அழைத்தேன். நீதான் வரலை. சண்டே கட் டாயம் வாங்க. நாங்க காத்திருக்கிறோம்...'' என்று மகிழ்ச்சியுடன் சொல்ல அவன் புன்னகையோடு போனை வைத்தான்.



பெசன்ட் நகர் பீச்சில் இருந்து கிளம்பும் போது காரணம் புரியா மல் ஒரு எரிச்சல் இருந்தாலும் தேன்மொழிக்கு வியப்பே அதிகம் இருந்தது. எதற்கெடுத்தாலும் ஒரு விளக்கம் சொல்கிறானே? கோபப்பட்டு குரல் உயர்த்தினாலும் கூட நிதானமாக இருக்கிறானே? என்ன மனிதன் இவன்? சின்ன பாப்பா மாதிரி அவன் நீட்டி யதும் வாங்கி இருக்கக் கூடாது. ஐஸ்க்ரீமுக்கு பறக் கிறேன் என்று நினைத்து இருப்பானோ? ச்சே! ச்சே! அப்படி எல்லாம் இருக்காது. அவனைப் பற்றி எதிரும் புதிருமான அபிப்ராயங்களின் தாக்கத்துடன் வீடு வந்து சேர்ந்தவளை அம்மாவின் குரல் வரவேற்றது.

''தேனு, என்ன இவ்வளவு நேரம்? நெற்றியில் குங்குமம் இருக்கு. கோயிலுக்குப் போனாயா?'' என்ற அம்மாவின் குரல் கேட்டதும் மற்ற எல்லாம் பின்னால் போய் பதிலுக்கு பதில் வாயடிக்கும் ஆசை வந்தது.

''கேள்விக்கான பதிலையும் நீங்க சொல்வதென்றால், எதுக்கு என்னை கேட்கணும்?''

''என்னங்க, அங்கே போனில் யாரிடம் பேசிட்டு இருக்கீங்க? தேன்மொழி ரொம்ப கோபமாக இருக்கிறாள். ஜில்லுன்னு ஒரு கப் ஐஸ்க்ரீம் எடுத்துட்டு வாங்க...''

''எனக்கு ஐஸ் வைப்பது இருக்கட்டும். நான் உங்க புத்திரனைப் பற்றி ஒரு முக்கியமான விஷயம் சொல்லணும்...'' என்று குரலைத் தணித்துச் சொன்னாள் தேன்மொழி.

''அவன் ஒரு பெண்ணை லவ் பன்றான். அதான் சொல்லப் போகிறாய்?'' என்று அவளுக்கு மேலே குரலை தணித்து ரகசியமாகச் சொன்னாலும் அவரின் கண்களில் சிரிப்பு இருந்தது.

''உங்களுக்கு ஏற்கனவே தெரியுமா? அவன் அந்தப் பெண்ணைக் கூட்டிட்டு, பீச் கோவில் என்று ஊர் சுத்துறான். அந்த பொண்ணோட பேர் கெட்டுப் போவ தற்கு முன்னால் அவளையே பேசாமல் கல்யாணம் பண்ணி வச்சுடுங்க'' என்று சலித்துக் கொள்வது போல அவனுடைய திருமணத்திற்கு அடி போட்டாள் தேன் மொழி.

''அண்ணனும் தங்கையும் என்னமா ஒருத்தர் மேலே ஒருத்தர் பாசமா இருக்கீங்க? உனக்குக் கல்யாணம் பண்ணனும் என்று அவன் தவிக்கிறான். அவனுக்குக் கல்யாணம் பண்ணனும் என்று நீ தவிக்கிறாய். ரெண்டு பேரும் பக்கத்து இலைக்கு பாயாசம் கேட்கறீங்களா?'' என்று பூங்கோதை சலித்துக் கொள்ள, உள்ளே அறை யில் இருந்து வந்த விஜயகுமார், ''ரெண்டு பேருக்கும் ஒரே நேரத்தில் கல்யாணம் பண்ணிடலாம். எதுக்கு ஒருத்தர் ஆசையை நிறைவேற்றி இன்னொருத்தரை குறை சொல்ல வைக்கணும்?'' என்று சிரிப்புடன் கேட்டார்.

''அவங்களுக்குப் பிடிச்ச பொண்ணு மாப்பிள்ளை அமைந்தால், பண்ணலாமே? நானா வேண்டாம் என்று சொல்கிறேன்?''

"இதைத்தான் நான் எதிர்பார்த்தேன். ஸ்வீட் அம்மா..." என்று அவரை கன்னத்தில் முத்தமிட, அவளின் உற்சாகத்தை வியப்புடன் பார்த்தபடி, "பாலாஜிக்குப் பிடித்த அந்த பொண்ணு யார் தேனு?" என்று விசாரித்தார் விஜயகுமார்.

"நம்ம மூணு பேருக்குமே நல்லா தெரிஞ்ச பொண்ணு தான்பா..."

"மூணு பேருக்கும் தெரிஞ்ச பெண்ணா...?" என்று விஜயகுமாரும், "சொந்தமா...?" என்று பூங்கோதையும் கேட்க அவள் பதில் சொல்லாமல் இருவரையும் மாறி மாறிப் பார்த்தாள்.

"இப்ப நான் பாலாக்கு போன் போடறேன். யார் எடுக்கிறா என்று பாருங்க..." என்று அலைபேசியில் முயற்சி செய்தவள். மணி அடிக்கும்போது ஸ்பீக்கரில் போட்டாள்.

"ஹாய் தேனு. வீட்டுக்குப் போயாச்சா?" என்ற உரிமையுடனும் அக்கறையுடனும் விசாரித்தது மேகா.

"பாலா எங்கே மேகா? நீ ஏன் அவன் போனை எடுக்கிறாய்?"

"கிளினிக்கில் இருக்கும்போது போன் இங்கே இருக்கும் விஷயம் தெரியாத மாதிரி கேட்கிறாய்?"

"இத்தனை நான் போன் இங்கே இருக்கும் என்ற நினைவு மட்டும் தான் தெரியும் மேகா. இன்று தான் அது அங்கே இருந்து என்ற விளக்கம் புரிந்தது..." என்று போனில் சொல்லி விட்டு, அம்மா அப்பாவைப் பார்த்து புன்னகை செய்தாள்.

"நீ என்ன சொல்ற என்றே புரியலை. பாலா பேஷண்ட்ஸ் பார்த்துட்டு இருக்கார். ஏதாவது அர்ஜண்டா சொல்லணுமா?"

"ஆமா! பாலாக்கு எங்க அம்மா ஒரு பொண்ணு பார்த்து நிச்சயம் பண்ணிட்டாங்க என்ற தகவலைச் சொல்லி விடுகிறாயா? ப்ளீஸ்..." என்று சொல்லி அவளின் பதிலை எதிர்பார்க்காமல் போனை வைத்த பத்தாவது நிமிடம், பாலாஜி வீட்டில் இருந்தான்.

அவனைப் பார்த்த பூங்கோதையின் முகம் வாடியது. அப்படி என்றால் தான் ஏற்கனவே நினைத்தது சரி. அதைத் தன்னிடம் அவன் ஒத்துக் கொள்ளவில்லை. இன்று இவள் சொல்லி அவன் ஒத்துக் கொள்ளப் போகிறானா? மனசு வலித்தது.

"போன் பண்ணிட்டு நான் என்ன சொன்னேன்?" என்று இல்லாத காலரை உயர்த்தி விட்டு தேன்மொழியைப் பார்த்து முறைத்தான் பாலாஜி.

"என்ன சின்டு முடிஞ்சா அம்மாகிட்டே? உனக்குப் படிக்கிற வேலை எல்லாம் கிடையாதா? காலேஜில் இருந்து வந்ததும் வராததுமா அம்மா அப்பாவிடம் என்ன சொன்னாய்?"

"அங்கே என்டா பாடுற? என்னிடம் கேளு உன் கேள்வியை?" என்று இடையிட்டார் விஜயகுமார்.

"அப்பா, நீங்க அவளுக்குக் குடுக்கிற செல்லத்துல என்ன பேசறோம் என்றே தெரியாமல் வாய்க்கு வீறி வினையாடுகிறாள். அவ போன் பண்ணி மேகாவிடம் என்ன சொன்னா என்று கேளுங்க. அவ உங்க பேரையும் சேர்த்து ரிப்போர் பண்றா. அங்கே அவள் கண்ணுல

தண்ணி கரை கட்டி நிக்குது...'' என்றவன் குரலில் வேகமும் கோபமும் இருந்தது.

''அவ மேகாவிடம் என்ன சொன்னாள் என்று எங்களுக்குத் தெரியும்...'' என்று அழுத்தம் திருத்தமாக பூங்கோதை சொல்ல அவன் திகைத்து நின்றான்.

''அம்மா... நீங்க... என்ன சொல்றீங்க?'' என்று திணறிய பாலாஜியை, ''தேன்மொழி உனக்குக் கல்யாணம் என்று மேகாவிடம் சொன்னால் அவள் கண்ணில் ஏன் தண்ணீர் கரை கட்டணும்?'' என்று பூங்கோதை விசாரிக்க அவன் மேலும் திணறினான்.

இதென்ன வம்பா போச்சு? எப்போதும் அம்மா தனக்கு சாதகமாகப் பேசுவார்கள். இன்று அவரே கேள்வி கேட்டு மடக்கினால் என்ன செய்வது? இவள் அவர்களிடம் என்ன சொன்னாள் என்றும் தெரியாமல் எப்படிச் சமாளிப்பது என்று புரியாமல் அப்பாவையும் அம்மாவையும் மாறி மாறிப் பரிதாபமாகப் பார்த்தான்.

''தேனு உனக்கு பொண்ணு பார்த்தாச்சு என்று மேகாவிடம் சொன்னாளே? அதுல உனக்கு என்ன ஆட்சேபணை என்பதைச் சொல்லு...'' என்று விஜயகுமார் ஆதரவாகக் கேட்க, அவன் அம்மாவிடம் திரும்பினான். அவரின் பார்வை அவனைக் கூறு போட்டது. ஏற்கனவே கத்தரிக்காய் முற்றி சந்தைக்கு வரட்டும் என்று சொன்னவர் தானே?

''அம்மா... தேனு கல்யாணம் முடிஞ்சப்புறம்... நானே... உங்களிடம்...'' என்று வார்த்தைகள் தடுமாற்றத்துடன் வெளிவர பூங்கோதை கை உயர்த்தி தடுத்து நிறுத்தினார்.

''நான் என் பிள்ளையைப் பற்றி ரொம்ப பெருமையா நினைச்சு இருந்தேன்டா. என் பையன் எனக்குத் தெரியாமல் எதுவும் செய்ய மாட்டான் என்று கர்வத்தோடு இருந்தேன்டா. அந்த பெருமையில் இப்படி மண் அள்ளிப் போட்டு விட்டாயே?'' என்றவரின் மனசு சங்கடப்படுவதை பாலாஜியால் தாங்க முடியவில்லை.

''ஏன்மா வீட்டுல வயசு வந்த பொண்ணு இருக்கும் போது தன்னுடைய காதலை வீட்டில் சொல்லக்கூடாது என்று நினைக்கும் ஒரு பண்பான அண்ணனா என்னைப் பார்க்க மாட்டீங்களா? அதைப் பார்த்துப் பெருமைப்படக் கூடாதா?'' என்று பாலாஜி அம்மாவைச் சமாதானப் படுத்த முயலும் போதே தேன்மொழி பாய்ந்தாள்.

''அங்கே சுத்தி இங்கே சுத்தி எதுக்கு நீ இப்ப என் தலையில் கை வைக்கிற...? உனக்கு மேகாவைக் கல்யாணம் பண்ணிக்க வேண்டும் என்றால் அதைப் பற்றிப் பேசு. என்னை நடுவில் இழுக்காதே. இப்பவே சொல்லிட்டேன். அம்மா உங்களுக்கும் தான்...''

''உன்னை நான் இழுக்கக் கூடாதா? அதை நீ அப்போதே யோசித்து இருக்க வேண்டும். நான் நேரம் பார்த்து அம்மாவிடம் அவங்க மனசு நோகாமல் சொல்லி இருப்பேன். உன்னை யார் அவசரமா எடுத்தேன் கவிழ்த்தேன் என்று இன்றே போட்டு உடைக்கச் சொன்னது? நான் உன்னிடம் கேட்டேனா?''

''எனக்கு அவசரமா கல்யாணம் பண்ணி வைக்கச் சொல்லி அம்மாவிடம் நீ ஏன் பேசுகிறாய்? நான் உன்னிடம் கேட்டேனா?''

''நான் உனக்கு அண்ணன். அப்படித்தான் பேசுவேன்...''

''நீ எனக்கு அண்ணன் என்பதால் என் கல்யாணத்தைப் பற்றிப் பேச உனக்கு உரிமை இருக்கு என்றால் நான் உன் தங்கை. அந்த உரிமை எனக்கு மட்டும் கிடையாதா? இதென்ன நியாயம்...?''

''நான் உன்னைவிட மூத்தவன்...''

''நாலு வருஷம் முன்னால் பிறந்ததால் மூத்தவன். அதென்ன பெரிய குவாலிபிகேஷனா?''

''ஷ் அப்பா! போதும் உங்க சண்டையை நிறுத்துங்க. தேனு. பாலா சொல்வதில் தப்பு இல்லை. அது உனக்கும் தெரியும். எதுக்கு வாதாடுகிறாய்? நான் உன் கல்யாணத்தைப் பற்றி பீச்சில் முதன் முதலில் பேசும்போது என்ன சொன்னாய் என்று மறந்து விட்டாயா?'' என்று இருவருக்கும் இடையே சமாதானம் செய்து வைக்க முயன்றார் விஜயகுமார்.

''இவனைப் பற்றி நான் என்ன சொன்னேன்?'' என்று அவள் தலையைச் சிலுப்ப, ''தேனு, கோபத்தில் மாறி மாறிப் பேசக் கூடாது. உங்க மூன்று பேருக்கும் எனக்கு என்ன வேண்டும் என்று தெரியாதா என்று அவனையும் சேர்த்துத் தான் சொன்னாய். இப்ப எதுக்குக் கோபம்?'' என்று மீண்டும் மென்மையாக எடுத்துச் சொன்னார் விஜயகுமார்.

''எனக்கு ஒன்றும் கோபம் இல்லை. அவனுக்கு நல்லது என்று நினைத்து நான் செய்ததற்கு அவன் தான் தேவை இல்லாமல் சண்டை போடுறான்...'' என்றவளின் குரல் பெருமளவு தாழ்ந்து இருந்தது.

''அப்ப அண்ணனிடம் சாரி சொல்லு...'' என்று உடனே விஜயகுமார் சொல்ல அவன் அருகில் வந்தாள்.

''அப்பா சொல்றதுக்காக சாரி சொல்றேன். உடனே என் கல்யாணத்தைப் பற்றி என்ன வேண்டுமானாலும் பேச உனக்கு ரைட்ஸ் எழுதிக் கொடுத்துட்ட மாதிரி துள்ளாதே. நான் இங்கே இருந்தால் ஏதாவது சொல்லிட்டே இருப்பேன். அதனால் உள்ளே போறேன். நீ அம்மாவிடம் உன் விஷயம் மட்டும் பேசு. என் கல்யாணம் பற்றி அம்மாவிடம் நான் பேசிக் கொள்வேன். புரிஞ்சுதா?'' என்று மன்னிப்பைக் கூட மிரட்டலாகக் கேட்டு விட்டு, உள்ளே சென்றாள் தேன்மொழி.

''சாரிம்மா...'' என்று பாலாஜி சொல்ல ஆரம்பிக்கும் போதே அந்த இடத்தை விட்டு அகன்று இருந்தார் பூங்கோதை. அம்மா தன்னிடம் பாராமுகம் காட்டுவதை ஜீரணிக்க முடியாமல் திகைத்து நின்ற பாலாஜியின் தோளில் கை வைத்து அழுத்தினார் விஜயகுமார்.

''அவள் பேசா விட்டாலும் கூட போய் விடாமல் பேசு. சீக்கிரம் சரியாகி விடுவாள்...'' என்று தலை அசைக்க, அவன் வருத்தமாகப் புன்னகை செய்தான்.

''சாரிப்பா... உங்களுக்குக் கோபம் இல்லையா?...'' என்று அவரின் கையைப் பற்றி கன்னத்தில் அழுத்திக் கேட்டான்.

''இல்லை பாலா. நான் வெளி உலகம் பார்க்கிறேன். எனக்கு நட்பு வட்டம் ஜாஸ்தி. ஊர் உலகத்தில் பிள்ளைகள் எப்படி எல்லாம் நடந்து கொள்கிறார்கள் என்று எனக்குத் தெரியும். ஆனால் அவளுக்கு நாம் மூன்று பேர் தான் உலகம். 'என் பையனா...? என்னிடம் சொல்லாமல் காதலா...?' என்று அதிர்ந்து விட்டாள். மேலும் நல்ல பொண்ணு தான். அவளும் ஒத்துக் கொள்வா

பக்குவமாக பேசு'' என்று தட்டிக் கொடுத்தார் விஜய குமார்.

''மேகா நம் குடும்பத்திற்குப் பொருத்தமாக இருப் பாள் என்று தான்... நான்...''

''இ...தை அ...ங்..கே. போய் சொல்லு. போ...'' என்று பாதியிலேயே இடை மறித்து அனுப்பி வைக்க ஹால் சோபாவிற்கு வந்தான் பாலாஜி. அவனைக் கண்டதும் எழ முயன்ற அம்மாவை, மடியில் கை வைத்து அழுத்தி அமர வைத்தான்.

''என் கையை எடுத்துட்டு முடிந்தால் எழுந்து போங்க...'' என்று அவரின் இரு புறமும் கை பதித்து தரை யில் அமர்ந்தான் பாலாஜி.

''டேய்! உன் வயசுக்கு இருக்கும் பலத்தைக் காட்ட நான் தான் கிடைத்தேனா? மரியாதையா கையை எடு...''

''கையை எடுக்க என்னால் முடியாது. முடிஞ்சால் நீங்க என்னைத் தள்ளிட்டு வெளியே போங்க. அது வரைக்கும் நீங்க பெரியவங்க. அதனால் மரியாதையா கேளுங்க என்று மிரட்ட முடியாது. வேறென்ன சொல்ல லாம்...? ஹா! மரியாதை இல்லாமல் நான் என்ன சொல்ல வரேன் என்று கேளுங்க...'' என்று மிரட்ட அவர் முறைத்தார்.

''என்ன நக்கலா...?''

''ச்சே ச்சே... சத்தியமா சொல்றேன். நான் பேசுவதைக் கேட்காமல் நீங்க இந்த இடத்தை விட்டு நகரவே முடி யாது. எனக்கு மேகாவை நான் படிப்பு முடிச்சு கிளினிக் ஆம்பிச்ச இந்த நாலு வருஷமா தெரியும். பிடிக்கும். முதல் இரண்டு வருடம் அவள் படிக்கிறாள் என்ன

பெண்ணின் மனசை கெடுக்கக் கூடாது என்று ஒதுங் கியே இருந்தேன்...''

''இப்ப அவள் பாட்டியாகி விட்டாளா?''

''அய்யய்ய! நீங்க உங்க பையனுக்கு ஒரு பாட்டி யையா கல்யாணம் பண்ணி வைப்பீங்க? என்னம்மா இது! உங்க டேஸ்ட் இப்படி இருக்கு? நல்ல வேளை நானே பொண்ணைப் பார்த்துட்டேன். தேனுக்கு நானும் அப்பாவும் தான் மாப்பிள்ளை பார்க்கப் போறோம். நீங்க சொல்லும் அபிப்ராயம் செல்லாது...''

''எல்லா விஷயத்தையும் நீங்களே முடிவெடுத்துக் கொள்ளுங்க. நீங்க சொல்றதுக்கு எல்லாம் தலை ஆட்டத்தானே இங்கே ஒருத்தி அம்மா என்று இருக் கேன்?''

''முன்பே சொல்லவில்லை என்று தானே கோபம்? உங்களுக்கு ரெண்டு விஷயம் சொல்லிடறேன். காதல் என்பது இந்த நேரம் இந்த இடத்தில் இன்னார் மேல் வருகிறேன் என்று சொல்லிக் கொண்டு வருவதில்லை. இரண்டாவது, உங்களின் மனப்பூர்வமான சம்மதம் இல்லாமல் மேகாவை நான் கல்யாணம் பண்ணிக்கப் போவதில்லை...''

''இந்தக் கதை எல்லாம் காதுல பூ சுத்தி இருக்கும் யாரிடமாவது போய் சொல்லு. என்னிடம் விடாதே...''

''இது கதை இல்லைம்மா. சத்தியம். அவளை எனக்கு ரெண்டு வருஷமா ரொம்பப் பிடிக்கும். ஒரு வருஷமா எனக்குள் அவளை அழுத்தமா காதலிக்கிறேன். ஆனால் ஆயிரம் முறை விதம் விதமா யோசித்துப் பத்து நாள் முன்னாடி தான் அவளிடம் என் மனதைச் சொல்

னேன். உங்களிடமும் சொல்லலாம் என்று தான் இருந்தேன்...''

''நடுவில் பூதம் வந்து உன் வாயை தைச்சு விட்டது...''

''பூதம் தைக்கவில்லை. எங்க அம்மா எனக்குச் சொல்லிக் கொடுத்த பண்பாடு தைத்து விட்டது. வீட்டில் இருக்கும் வயது பெண்ணிற்கு, என் காதல் திருமணத்தினால் அவளின் திருமண வாழ்க்கைக்குப் பேச்சளவில் கூட சின்ன பின்னடைவு கூட வந்துவிடக் கூடாது என்ற காரணத்திற்காகத்தான் மூடி வைத்தேனே தவிர உங்களிடம் மறைக்க வேண்டும் என்பதில்லை. அதை முதலில் புரிஞ்சுக்கோங்க.''

''.....''

''நீங்க ஒரு வாரம் முன்னாடியே என் மனசில் இருப்பதை கிட்டத்தட்ட கண்டு பிடிச்சுட்டீங்க. அப்பவும் உங்களிடம் சொல்லவில்லை என்பதுதான் உங்களுடைய வருத்தம். சரியா?''

''இந்த வாய்க்கு மட்டும் குறைச்சல் இல்லை'' என்றவரின் குரலில் கோபம் பெருமளவு குறைந்து இருந்தது.

''நான் எந்த அர்த்தத்தில் அமைதியா இருந்தேன் என்பதை புரிஞ்சுக்கோங்கம்மா தேன்மொழி திருமணம் நிச்சயம் முடியட்டும் என்று காத்திருந்தேன்...''

''இப்ப மட்டும் தேன்மொழி திருமணம் முடிஞ்சுடுச்சாக்கும்...?''

''கிட்டத்தட்ட மாப்பிள்ளை பார்த்த மாதிரி தானே? அப்பா சொன்ன தமிழ்வேந்தன். அவனும் அவங்க

அம்மாவும் மட்டும் தான். அவங்க அம்மா நல்ல மாதிரி தெரியுறாங்க என்று நீங்ககூடச் சொன்னீங்களே...''

''ஆனால் அவனை தேனுக்குப் பிடிக்கலை போலச் சொன்னாளே...''

''நல்ல கதை இது. நானும் மேகாவும் லவ் பண்றது அவளுக்கு எப்படித் தெரிந்தது என்று நீங்க அவளைக் கேட்டு இருக்கணும்? அப்ப உண்மை தெரிஞ்சு இருக்கும். அதை அப்பா எனக்குச் சொன்னார். அவர் போனில் அவங்க ரெண்டு பேரும் எஸ்.எம்.எஸ். அனுப்புறாங்க. பேசிக்கறாங்க. ரெண்டு பேரும் பீச்சில் தனியா மீட் பண்ணுறாங்க...''

''என்னடா உளறுகிறாய்? லவ் பண்றவங்க அவங்க போனை விட்டுட்டு வேற யார் போனிலாவது பேசுவாங்களாடா? ரகசியம் வெளியே தெரியக்கூடாது என்று நினைக்க மாட்டாங்களா?''

''என்னை நல்லா மடக்கி மடக்கி கேள்வி கேளுங்க. அடிப்படை விஷயத்தை மறந்துடுங்க. அவங்க லவர்ஸ் இல்லை. அப்பா பார்த்த மாப்பிள்ளை. அவளுக்கு அவனைப் பிடிக்காமல் இல்லை என்பதுதான் நான் சொல்ல வரும் விஷயம்...''

''உனக்கு அவனைப் பிடிச்சு இருக்கா?''

''உங்களுக்கு அவனைப் பிடிச்சு இருக்கா? அதை முதலில் சொல்லுங்க...''

''நான் அவனை இன்னும் நேரில் பார்க்கவில்லை. எனக்கு அவங்க அம்மாவைப் பிடிச்சு இருந்தது. இவளோட துடுக்குத் தனமான பேச்சை தவறா எடுத்துக் கொள்ளாமல், அன்பா பார்த்துக் கொள்வாங்க என்ற

நம்பிக்கை வந்தது. பையன் எப்படி? உனக்குப் பிடிச்சு இருக்கா?''

''வர சண்டே அவங்களை வரச் சொல்லுவோம். பாருங்க. பேசுங்க. உங்களுக்கு நிச்சயம் அவனைப் பிடிக்கும்...''

''இப்போதைக்கு இந்த வார்த்தை போதும். ஆனால் கல்யாணத்திற்கு அது மட்டும் போதாது. அவனை எனக்கும் பிடிக்கணும்...'' என்று கண்டிப்பாகச் சொன்ன பூங்கோதை, ஞாயிறன்று அவன் அம்மாவோடு வருவ தற்கு அனுமதி கொடுத்ததை புன்னகையுடன் கேட்டு இருந்தார் விஜயகுமார். தேன்மொழி அந்த வட்டாரத் திலேயே இல்லை.



முதல் நாள் மாலையில் பீச்சில் வைத்து தனக்குக் கொடுத்த வாக்கை தமிழ்வேந்தன் காப்பாற்றி விடுவான் என்ற நம்பிக்கையில் இருந்த தேன்மொழி அதைப் பற்றி பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. அன்று மாலை யில் தன்னிடம் அப்பா இது குறித்துப் பேசுவதற்காக தன்னை பீச்சுக்கு அழைப்பார் என்று எதிர்பார்த்தவள். இரவு உணவுக்கான ஏழரை மணி வரை தன்னை அழைக் காமல் போக ஏமாற்றம் படர ஆரம்பித்தது.

முதல் நாள் சண்டையில் ஆரம்பித்தாலும் இருபத்தி நாலு மணி நேரத்திற்குள்ளேயே, பாலாஜி அம்மாவை சரிக்கட்டி அம்மாவும் பையனும் மேகாவிற்கு என்ன பட்டுப் புடவை எடுக்கலாம்? என்ன நகை வாங்கலாம்? அவளுக்கு என்ன வண்ணம் பிடிக்கும்? என்ன உடை,

உணவு பிடிக்கும் என்று கலந்துரையாட, அவளுக்குத் தன்னை தவிர எல்லோரும் சந்தோஷமாக இருப்பது மாதிரி ஒரு உணர்வு வந்தது.

உணவு முடிந்த பிறகு அப்பா வாசல் வராந்தாவில் அமர்ந்து காற்று வாங்கிக் கொண்டு இருக்க அவரைத் தேடி வந்த தேன்மொழி, தரையில் அமர்ந்து ''இன்னிக்கு எங்கே போனீங்க? யாரைப் பார்த்தீங்க? ஏதாவது செய்தி உண்டா?'' என்று விசாரித்தாள்.

''இன்னிக்கு மேகாவைப் பார்க்க அவங்க வீட்டுக்குப் போய் இருந்தோம். அவங்க பாட்டி பண்ணின அலம்பல் தாங்கலை. பாவம் அந்தப் பொண்ணு எப்படித்தான் அந்த வீட்டில் காலம் தள்ளினாள் என்று அம்மாவே ஆச்சரியப்பட்டாள் என்றால் பார்த்துக்கோ...''

''எப்படிப்பா அம்மா இவ்வளவு சீக்கிரம் சமாதானம் ஆனாங்க?'' என்று தான் வந்த வேலையை மறந்து அந்த விசாரணையில் இறங்கினாள்.

''உங்க அம்மாவுக்கு எப்போதுமே உங்க சந்தோஷம் தான் முக்கியம். ஆனால் உங்களுக்கு விபரமா போதாது. சின்ன பிள்ளைகள். அதனால் தானே முன்னின்று அதைச் செய்யணும் என்று நினைப்பாள். உங்களின் நினைப்பு சரி என்று நீங்க அவளை நம்ப வைக்கணும். அவள் விதண்டாவாதம் பண்ணுவதில்லை. வறட்டுப் பிடிவாதம் பிடிப்பதில்லை. நேற்று பாலாஜி தன் மனசில் இருப்பதைச் சொன்னான். மேகா நல்ல பொண்ணு என்று அவளுக்கே தெரியும். ஓகே சொல்லிட்டாள்...'' என்று அவர் சொல்ல அவளுக்கும் அந்த கருத்தில் உடன்பாடு ஏற்பட்டது.

தமிழ் கை விட்டாலும் அம்மாவை வைத்து அப்பா விடம் பேசச் சொல்லலாம். முதலில் தனக்கு தமிழ் மேல் பெரிதாக அபிப்ராயம் இல்லை என்பதை நம்ப வைக்க வேண்டும். அதற்கு முன்னால் இவரிடம் அவன் பேசி னானா என்பதும், அதற்கு இவரின் பிரதிபலிப்பு என்ன என்பதும் தெரிந்து விட்டால் நன்றாக இருக்கும்.

''பாலாஜி கல்யாணம் பற்றியே பேசாமல் அடுத்த ஆட்களைப் பற்றியும் பேசுங்கப்பா.''

''பாலாஜி கல்யாணத்தை விட்டால் அடுத்து உன் கல்யாணம் பற்றி தான் பேசணும். பேசட்டுமா...''

''ஆஹா! தான் எதுவும் கேட்காமலேயே பழம் நழுவிப் பாலில் விழுந்து, அதுவும் நழுவி வாயில் விழுகிறதே...'' என்று எண்ணிய தேன்மொழி ''உங்களுக்கு இதை விட்டால் வேறே பேச்சே இல்லையாப்பா?'' என்று போலி யாகச் சலித்துக் கொண்ட வேளையில் அங்கே வந்தார் பூங்கோதை.

''ஐம்பதுக்கு மேலே வயதிருக்கும் பெற்றோர்களுக்கு தங்கள் பிள்ளைகளின் திருமணத்தைத் தவிர முக்கியமா வேறென்ன பேச்சு இருக்க முடியும் தேனு?'' என்று கேட்டபடி அருகில் அமர்ந்தவர் அவளின் தலையை வருடினார்.

''நான் கூடத் தேன்மொழியை எப்பப் பார்த்தாலும் அவனோடு வார்த்தைக்கு வார்த்தை மல்லு கட்டும் வாயாடி என்று நினைத்தேன். ஆனால் அவளுக்கு பாலாஜி மேல் பொறுப்பு, அக்கறை, எல்லாம் இருக்கு என்று காட்டி விட்டாள் பார்த்தீங்களா?'' என்று சொல்ல நைட்டியில் இல்லாத காலரைத் தூக்கி விட்டுக் கொண் டாள் தேன்மொழி.

''என்ன பண்ண என் நேரம் அப்படி. நம்மளோட அருமை பெருமை எல்லாம் அம்மாவுக்கே இப்பதான் தெரியுது. மற்றவங்களுக்கு எல்லாம் எப்போ புரி யுமோ...?''

''உன் நல்ல குணம் தெரியாமல் இல்லை தேனு. ஆனால் கூடவே இருக்கும் துடுக்குப் பேச்சு பயம் தரும். நாளைக்கு நீ வாழப் போகும் வீட்டில், அதை தப்பா நினைத்து ஒருத்தர் உன்னை குறை சொல்லி விடக் கூடாதே என்ற அக்கறை தான் தட்டி வைக்கச் சொல் லும்...'' என்று பூங்கோதை விளக்கம் சொல்ல அவரின் மடியில் சாய்ந்து கொண்டாள்.

''அப்படி குறை சொல்ல யாருமே இல்லாத வீட் டுக்கோ, அல்லது குறை சொல்லத் தெரியாத ஒருத்தர் இருக்கும் வீட்டுக்கு என்னை அனுப்பி வச்சுடுங்க. பிரச்னை தீர்ந்தது'' என்று கண் சிமிட்டிச் சிரிக்க, பூங் கோதைக்கு முதல் நாள் பாலாஜியிடம் தமிழின் அம்மா பற்றிச் சொன்னது நினைவில் வந்தது.

''உங்களுக்கு பால் இங்கேயே எடுத்து வரட்டுமா என்று கேட்க வந்து நீ அடிக்கிற அரட்டையில் இங்கேயே உட்கார்ந்து விட்டேன். அடுப்பில் பால் இருக்கு...'' என்று விரட்டிய பூங்கோதையைப் பார்த்து மூறைத்தாள் தேன் மொழி.

''வந்த வேலையை மறந்து, கதை அடிச்சுட்டு இருந்தது நீங்க. இதுல குறை சொல்வது என்னையா நல்லா இருக்கும்மா உங்க நியாயம்...?''

''இந்தப் பேச்சைதான் குறை என்று சொல்லிட்டே இருக்கேன். அதை மட்டும் கேட்டுடாதே'' என்

அவளின் கன்னத்தை நிமிண்டி விட்டு அடுக்களைக்குள் சென்ற அம்மாவைப் பார்த்து பழிப்பு காட்டி விட்டு அப்பாவிடம் திரும்பினாள்.

''இன்று அம்மாவை தவிர வேறு யாரும் என் கல்யாணம் பற்றிப் பேசினாங்களாப்பா?''

''அம்மாவைத் தவிர உன் கல்யாணத்தைப் பற்றி வேறே யாருடா பேசப் போறாங்க?''

''ஏன்பா, பாலாக்கு இருக்கும் ரைட்ஸ் பற்றி நேற்று அவ்வளவு பேசினீங்க. அதெல்லாம் சும்மாவா?'' என்று கேட்டவளுக்கு தமிழின் பெயரைக் குறிப்பிடாமல் வேறு என்ன கேட்பது என்றும் தெரியவில்லை.

''அவனுக்கு அவன் கல்யாணம் பற்றிப் பேசவே நேரம் போதவில்லை. உன்னைப் பற்றி பேசலை...'' என்று உறுதியாகச் சொல்ல அவளுக்குப் பற்றிக் கொண்டு வந்தது. நேற்று அவ்வளவு தூரம் சொல்லி இருக்கிறாள். பேசிக் கிழிக்கிறேன் என்று தன்னிடம் வாக்குக் கொடுத்து இருக்கிறான். அதுக்காக முழுசா இருபத்தி நாலு மணி நேரம் போன பின்பும் ஒரு துரும்பைக் கூட கிள்ளிப் போடவில்லை. இவனை...

ப்ச்! என்ன செய்து என்ன பிரயோஜனம்? அம்மாவிடம் பேசலாம் என்று முடிவு பண்ணியவளுக்கு அவனைச் சும்மா விடவும் விருப்பம் இல்லை.

''மனுஷனா பிறந்தால், அதிலும் ஒருவருக்கு வாக்குக் கொடுத்தால், அதைக் காப்பாற்றத் தெரியணும்...'' என்று தலையும் இல்லாமல் வாலும் இல்லாமல் அவன் அலைபேசிக்கு ஒரு குறுஞ்செய்தி அனுப்பினாள் தேன் மொழி.

''தேங்காய் பால் இடியாப்பம் திகட்டுது. கொஞ்சம் லெமன் கலந்து தாங்க'' என்று சலித்தபடி ஸ்பூனால் எடுத்து உண்ட தமிழ்வேந்தன் அலைபேசி, செய்தி வந்து இருப்பதைச் சொல்ல எடுத்துப் பார்த்தான்.

''எலுமிச்சம் பழம் இருந்தால் செய்து வைத்து இருக்க மாட்டேனா?'' என்று வருத்தமாக பார்த்த பானுமதியின் முகத்தைப் பார்த்த உடனேயே அவனுக்கு மனம் இளகி விட்டது.

''சரி, தோசை ஊத்துங்க...'' என்று அம்மாவை சமாதானம் செய்தவன் கண்கள் அலைபேசி செய்தியைப் பார்த்ததும் விரிந்தது. புது நம்பர், தலையும் வாலும் இல்லாமல் வந்த செய்தியைப் பார்த்ததுமே அது யார் என்று தெரிந்து விட்டது. பொறுமையின் சிகரம் அதுக்குள்ளே பொங்கிட்டாங்களா? இது தான் அவளின் நம்பரா? இப்ப மட்டும் நம்பர் கொடுக்க எப்படி மனசு வந்தது? அவளை அறியாமலேயே கொடுத்து இருக்க வேண்டும். பதட்டத்தில் இருக்கிறாள். வார்த்தைக்கு வார்த்தை மடக்கி வம்பிழுக்க ஆசை வந்தது.

''மனிதனாகப் பிறந்தால் ஒருவரின் அலைபேசிக்கு செய்தி அனுப்பும் போது நான் இன்னார் என்று சொல்லி அனுப்புவது நல்லது. நான் தமிழ்வேந்தன், இது யார்?'' என்று பதில் செய்தி அனுப்பியவன் கண்களில் குறும்பு கொப்பளித்தது. பதில் என்ன வரும் என்பதை அறிய குறுகுறுப்புடன் காத்து இருந்தான்.

''நான் தேன்மொழி. செய்தி அனுப்பும் போது பெயர் சொல்லி நான் மனித இனம் என்று நிரூபித்து விட்டேன். நீங்க?'' என்று நிறுத்தி இருந்ததைப் பார்க்கச் சிரிப்பு வந்தது.

அந்த நம்பரை 'ஹனி' என்ற பெயரில் ஸ்டோர் பண்ணி விட்டு, ''தேன்மொழி என்பது இந்த நாட்டின் பிரதமரா? தெரியாமல் இருப்பதற்கு மன்னிக்கவும்...'' என்று பதில் அனுப்பினான்.

''சொன்ன வாக்கைக் காப்பாற்ற ஒன்றும் செய்ய வில்லை என்று பார்த்தேன். சொன்ன வாக்கையே மறந்தாச்சு என்று இப்ப தானே தெரியுது. நீங்க எனக்காக எதுவும் செய்ய வேண்டாம். என் வழியை நானே பார்த் துக் கொள்கிறேன். குட் பை'' என்று சில வினாடிகளில் செய்தி வந்தது.

விளையாடியது போதும் என்ற எண்ணத்தில் அவளை அழைக்க முடிவு பண்ணினான் தமிழ்வேந்தன். அவசர மாக உணவை முடித்து விட்டு மேஜையில் இருந்து எழுந்து தன் அறைக்குப் போனவனைப் பார்த்து தோசையுடன் வந்த பானுமதி விழித்தார்.

''தமிழ், தோசை எடுத்து வருவதற்கு முன்பே எழுந்து விட்டாயே? ஏன்டா...'' என்று அவன் பின்னாலேயே வந்தார்.

''சாப்பிட்டேன்மா. போதும்'' என்றவனின் பேச்சு புரியாமல் உணவு மேஜைக்கு வந்தால், அங்கே இருந்த இடியாப்பம் காலியாகி இருந்ததைப் பார்த்த உடனே ஒன்றும் புரியவில்லை. இப்பதான் ஸ்வீட் திகட்டுது என்று சொன்னான். கல் காய்ந்து ஒரு தோசை ஊற்ற மூன்று நிமிடங்கள் ஆகி இருக்குமா? அதற்குள் காலி யாகி விட்டதே என்று குழம்பினார் பானுமதி.

அறைக்குள் தனது அலைபேசியில் இருந்து அவ ளுக்கு மீண்டும் மீண்டும் முயன்றும் அது எடுக்கப்பட

வில்லை. இப்படிக் கோபப்பட்டால் எப்படி? அடுத்தவர் பக்கம் ஒரு நியாயம் இருக்கலாம் என்பதை நினைத்துப் பார்க்க மாட்டாளா? எல்லோரிடமும் இப்படித் தான் பொறுமை இன்றி பேசுவாளா?

இல்லையே! நேற்று அம்மாவிடம் நன்றாகத் தானே பேசினாள். ஆனால் பாலாஜிக்கு அடிபட்ட அன்றும் சரி, தன்னைப் பார்த்த மூன்று தருணங்களிலும் பொறுமை இல்லாமல் தான் பேசுகிறாள். தன் வயதை ஒத்தவர் களிடம் மட்டும் விட்டுக் கொடுக்க மறுக்கும் பிடி வாதமோ? தன்னிலை விளக்கம் சொல்லலாம் என்று அழைத்தால் கூட எடுக்க மாட்டேன் என்கிறாளே? நாளை அவளின் வீட்டிற்குப் போகும்போது ஏதாவது வெடுக் என்று சொல்லி விட்டால் நன்றாக இருக்காதே?

ப்ச்! தனக்கும் புத்தி புல் மேய போய் விட்டது. அவள் செய்தது தப்பு என்றால் அவன் செய்தது மட்டும் சரியா? அவனும் தான் அவளிடம் போட்டி போட்டான். அவள் தான் என்று தெரிந்த உடனே பேச வேண்டியதுதானே? இதுதான் கடைசி முறை. இப்போது எடுக்கா விட்டால், நாளைக்கு அவங்க வீட்டுக்கே போக வேண்டாம் என்ற தீர்மானமான முடிவுக்கு வந்தான்.

அலை பேசி அடிக்க, அதை எடுத்துப் பார்த்த தேன் மொழிக்கு அவன் அழைத்ததும் எரிச்சலைக் கூட்டியது. தன்னை யார் என்றே தெரியாத மாதிரி, தான் என்ன பேசுகிறோம் என்பதும் புரியாத மாதிரி நடித்தவனுக்கு இப்போது திடீர் என்று ஞானோதயம் பிறந்து விட் டதா?

மூன்று மெசேஜ் அனுப்பியதற்கு நக்கல் அடித்தவன் மூன்று முறை அழைக்கட்டும் அதன் பிறகு எடுக்கலாம்.

இந்த தேன்மொழியை அவன் என்ன என்று நினைத்தான் என்று எரிச்சலுடன் முனகி விட்டு தன் அறைக்குள் சென்ற தேன்மொழி போனை டி.வி. மேல் வைத்து விட்டுச் செல்ல, கணவருக்கு பாலைக் கொடுத்து விட்டு வந்த பூங்கோதை விடாமல் போன் அடிப்பதைப் பார்த்து எடுத்தார். அதில் வந்த தமிழ் என்ற பெயர் அவரை ஈர்க்க, எடுத்து ஹலோ சொல்வதற்கு முன்பே அவன் பேச ஆரம்பித்து இருந்தான்.

''ஐ ஆம் சாரி தேன்மொழி விளையாட்டாகச் சொன்னதை சீரியஸா எடுத்துக் கொள்ள வேண்டாம். நான் சொன்ன எதையும் மறக்கவில்லை. கொடுத்த வாக்கையும் மறக்கவில்லை. மிருக சீரிஷ நட்சத்திரத்தின் சிறப்பு தெரியுமா? அந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் சொன்ன வாக்கைக் காப்பாற்றுவார்கள். ஏற்கனவே சொன்ன மாதிரி அப்பாவிடம் உன் சார்பில் நிச்சயம் பேசுவேன். நான் இவ்வளவு சொன்ன பிறகும் கோபம் இருந்தால் ஒரு கப் வெனிலா ஐஸ்க்ரீம் ஹோம் டெலிவரி பண்ணச் சொல்றேன். நாளை பார்க்கலாம்'' என்று சுருக்கமாக முடித்து போனை வைத்து விட்டான் தமிழ்வேந்தன்.

அவன் பேசியதைக் கேட்ட பூங்கோதை வியப்பில் விழி விரிக்க, அம்மாவின் கையில் போன் இருப்பதை பார்த்த தேன்மொழி குழப்பத்தில் புருவம் சுருக்கினாள்.



அம்மா தன் அலைபேசியைக் கையில் வைத்திருப்பதைப் பார்த்த தேன்மொழி, ''யாரும்மா போனில...?'' என்று கேட்டு விட்டு நாக்கைக்

கடித்துக் கொண்டாள். ''உனக்கு வரும் போனை எல்லாம் அட்டென்ட் பண்ணி உனக்கு தகவல் சொல்ல நான் என்ன உனக்கு பி.ஏ.வா? ஏன் நீயே போனை எடுத்துப் பேசி இருக்க வேண்டியதுதானே?'' என்று கேட்டவருக்கு கலவையான உணர்ச்சி ஏற்பட்டது.

தன் பெண் இன்னும் சிறு பிள்ளைத்தனமாக அவனுடன் மல்லுக்கு நிற்கிறாள் என்பது புரிந்தது. அதோடு பதிலுக்குப் பதில் என்ற வேகத்தில் முதலில் விளையாடினாலும், அவளுக்குப் பிடிக்கவில்லை என்பதை உணர்ந்த உடனே, மன்னிப்பு கேட்க அவன் தயங்கவில்லை.

இவளுக்காக விட்டுத் தரத் தயாராக இருக்கிறான். சொன்ன வாக்கைக் காப்பாற்றுவேன் என்று உறுதி அளிக்கிறான். தவறு என்று உணர்ந்ததும் மன்னிப்புக் கேட்க கௌரவம் பார்க்கவில்லை. இந்த மூன்று குணங்களுமே, சந்தோஷமான மண வாழ்வு அமைய அடிப்படைத் தேவை என்ற அனுபவ உண்மை புரிந்ததால் அவனைப் பார்ப்பதற்கு முன்பே, அவனைப் பற்றிய ஒரு நல்ல அபிப்ராயம் பூங்கோதையின் மனதில் விழுந்தது.

''ம்கூம்! நீங்க சொல்லா விட்டால், யார் பேசினாங்க? என்ன பேசினாங்க என்று எனக்குத் தெரியாமலேயே போய் விடுமாக்கும்?'' என்று பதில் சொல்லியபடி அவள் போனை எடுத்துப் பார்க்க, அதுவும் அவரின் முகத்தில் முறுவலை வரவழைத்தது. தமிழ் தான் அழைத்தது என்பதை உறுதி செய்த பின் அவனுடைய அலைபேசிக்கு முயன்றபோது, முதல் ஒலியிலேயே எடுக்கப்பட்டது.

''போன் அடித்தால் அடிக்கட்டும் என்று அப்படியே விடுவது எனக்குப் பழக்கம் இல்லை. வேறு வேலையில் இருந்தால் கூட, உடனே எடுத்து ஹலோ சொல்வது தான் எனக்கு வழக்கம்...'' என்று சொன்ன தமிழின் முகத்தில் புன்னகை இருந்தது.

''நான் தேன்மொழி பேசுகிறேன் என்று பேர் சொல்லி அறிமுகம் செய்து தான் எனக்குப் பழக்கம். எங்க அம்மாவிடம் என்ன ஏடாகூடமா சொன்னீங்க? உடனே போனை வச்சுட்டாங்க?'' என்று அவள் அலட்சியமாகக் கேட்டதும் தமிழுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

''ஹைய்யோ! கொஞ்சம் முன்னால் நான் பேசிய போது எடுத்தது உங்க அம்மாவா? நீ என்று நினைத்து... கடவுளே...'' என்று முனக அவளுக்கு ஆர்வம் பிறந்தது.

''ஏன் நான் என்று நினைத்து ஏதாவது மரியாதை குறைச்சலா பேசித் திட்டி விட்டீங்களா?'' என்று கேட்ட வளுக்கு, அப்படி ஏதாவது இவன் திட்டி, அம்மா விற்கு இவனைப் பிடிக்காமல் போய் இருந்தால் ரொம்ப நல்லா இருக்குமே என்ற எண்ணத்தில் உற்சாகம் பொங் கியது.

''நீ என்ன நினைத்துக் கேட்கிறாய் என்று புரிகிறது. ஆனால் சாரி, அந்த மாதிரி எதுவும் நடக்கவில்லை. நான் பொதுவாகவே யாரையும் திட்டுவதில்லை. உன்னைப் போய் ஏன் திட்டப் போகிறேன்? பொதுவா என்னைப் பற்றி நான் நல்லவன். சொன்ன வாக்கைக் காப்பாற்று பவன். ரொம்பக் கோபமா இருந்தால் ஐஸ்க்ரீம் வாங்கிக் கொடுத்து சமாதானப்படுத்துபவன்...'' என்று சிரிப்போடு சொல்ல, அவள் பதறினாள்.

''ஹைய்யோ... இதெல்லாமா சொன்னீங்க...?''

''ஆமா! அப்படியே இந்த வார்த்தையில் இல்லை... இந்த அர்த்தத்தில்... ஏன் என்ன ஆச்சு?''

''இதுவரைக்கும் ஆனதெல்லாம் போதும். இனி ஒண்ணும் ஆக வேண்டாம். நீங்க எப்போ அப்பாவிடம் பேசப் போறீங்க?''

''நாளைக்குக் காலை பத்து மணிக்கு உங்க வீட்டுக்கு அம்மாவுடன் வருகிறேன் என்று சொல்லி இருக்கிறேன். மதிய உணவு வரை இருப்பேன். உங்க அப்பாவிடம் பொருத்தமான நேரத்தில் பேசி விடுகிறேன். சரி தானே?''

''அப்பாவிடம் என்ன... எப்படிச் சொல்வீங்க... நான் உங்களிடம் பேசியதை...'' அப்பாவிடம் சொல்லாதே என்று சொல்ல முடியாமல் பாதியில் நிறுத்தியதைப் பார்த்ததும் அவனுக்கு அடக்க மாட்டாமல் சிரிப்பு வந்தது.

''என்ன சிரிப்பு...?'' என்று எரிச்சலோடு கேட்ட தேன்மொழியின் குரல் அவனுக்கு மேலும் சிரிப்பை வரவழைக்க, சிரமப்பட்டு அடக்கியபடி, பதில் சொன் னான்.

''இது உனக்கு எரிச்சல் மூட்டும் என்று தெரியும். ஆனால் சொல்லாமல் இருக்க முடியவில்லை. நீ சொன் னதைக் கேட்டதும் எனக்கு படையப்பா பட ரஜினி - செந்தில் ஷர்ட் காமெடி நினைவுக்கு வந்தது...'' என்று மேலும் சிரிக்க போனை பட்டென்று வைத்தாள்.

''ஈ என்று இளிக்கும் அந்த பல்லைத் தட்டிக் கையில் கொடுக்கணும். ஜோக் சொல்ற மூஞ்சியைப் பாரு.

பெரிய ஹீரோ என்று நினைப்பு இடியட்!'' என்று முணுமுணுத்தபடி நடந்தவள் அம்மா மேல் மோதி நின்றாள்.

''என்ன தேனு, யாருக்கு அர்ச்சனை?'' என்று சிரிப் போடு கேட்க, ''எல்லாம் நான் நல்லவன்... வல்லவன்... நாலும் தெரிஞ்சவன்... என்று தன்னைப் பற்றி தானே பெருமை பேசும் ஆட்களுக்குத்தான்...'' என்று எரிச்ச லோடு முனகி விட்டுச் செல்ல, அவள் சொல்வது தமிழை என்பது புரிந்த உடனே அவரின் சிரிப்பு மேலும் விரிந்தது.

* * *

காலையில் பத்து மணிக்கு விஜயகுமாரின் வீட் டிற்குப் போக வேண்டும் என்று தமிழ் சொன்ன நிமிடத் தில் இருந்து அந்த வீட்டுக்குச் செல்ல, மைசூர்பாக்கு, நெய்முறுக்கு, என்று பலகாரம் செய்து அதை பாத் திரங்களில் அடுக்கிக் கொண்டு இருந்த பானுமதியை புன்னகையோடு பார்த்தான் தமிழ்வேந்தன்.

''அம்மா! அவங்க வீட்டுக்குப் போய் ஒரு ஹலோ சொல்லிட்டு வரப் போறோம். அதுக்கு ஏன்மா இவ்வளவு பரபரப்பா இருக்கீங்க? மணி ஒன்பதரை ஆச்சு. கிளம்ப லாமா?''

''நல்லா சொன்ன போ! அவங்க நம் வீட்டுக்கு வந்த போது என்ன எல்லாம் வாங்கிட்டு வந்தாங்க தெரியுமா? நம் வீட்டில் சாப்பிட ஆள் இல்லை. ஆனால் அங்கே ரெண்டு வயசு பசங்க இருக்காங்க...''

''ரெண்டு வயசு பசங்க இவ்வளவு நெய் போட்ட மைசூர்பாக்கு, முறுக்கு எல்லாம் சாப்பிட்டால் வயிற் றுக்கு ஒத்துக்குமாம்மா...?''

''ஏன்டா அப்படிச் சொல்றே? தரமான சாமானா பார்த்து வாங்கி வீட்டுல செய்தது தானே?'' என்று அவன் கேலி கூட புரியாமல், பானுமதி விளக்கம் கேட்க அவன் அம்மாவின் கன்னத்தில் கிள்ளி, ''ரெண்டு வயசு பசங்க என்று நான் குழந்தை என்ற அர்த்தத்தில் சொன் னேன். அது கூடப் புரியலையா? மை ஸ்வீட் அம்மா. கிளம்பலாமா?'' என்று அவரை அழைத்துக் கொண்டு கிளம்பியவன் மனம் உற்சாகமாக இருக்க, பைக் பறந்தது.

* * *

''தேனு, காலையில் இருந்து சொல்லிட்டே இருக் கேன். காதுல வாங்க மாட்டாயா? புடவை கட்டிக்கோ' என்று அதட்டிய பூங்கோதையை அவள் சட்டை செய்ய வில்லை.

''வழக்கமா ஞாயிற்றுக் கிழமை நான் வீட்டில் நைட்டி போட்டு இருப்பேன். யாரோ கெஸ்ட் வராங்க என்று நீங்க சொன்னீங்களே என்று சுடிதார் போட்டேன். புடவை கட்டுவதற்கு சான்சே இல்லை'' என்று சத்த மாகவும், 'இவன் வரான் என்று புடவை கட்டணுமா கும்...' என்று முனகலாகவும் சொன்னாள் தேன்மொழி.

''யாரோ கெஸ்டா..? உன்னை...'' என்று பூங்கோதை பல்லைக் கடிக்க, விஜயகுமார் மனைவியிடம் வந்தார்.

''நீ விரட்டினால் அவளிடம் காரியம் நடக்காது பரவாயில்லை விடு. அவளுக்கு எது பிடிச்சு இருக்கோ அதில இருக்கட்டும் சந்தோஷமா இருந்தால் போதும்...'' என்று சமாதானம் செய்த விஜயகுமாரை முறைத்தார்.

''நீங்க செல்லம் கொடுத்து தான் இவள் இப்ப இருக்கிறாள். நேற்று கூட ராத்திரி அவனோடு... ப்

நீங்க சொல்லிச் சொல்லி எனக்கும் அவன் இவன் என்று வருது. அவரோடு போனில் சண்டை...'' என்று தாழ்ந்த குரலில் பூங்கோதை அவரை அதட்டிக் கொண்டு இருக்க பாலாஜி உள்ளே வந்தான்.

''உங்களுக்கு உங்க பெண்ணைப் பற்றி இன்னும் தெரியலை. அவள் புடவை கட்ட மாட்டேன் என்று சொல்வதற்கு என்ன காரணம் என்று புரியாமல் ரெண்டு பேரும் பேசிட்டு இருக்கீங்க...'' என்று பாலாஜி கண் சிமிட்ட இருவரும் அவனையே புரியாமல் பார்த்தனர்.

''நான் புடவை கட்டாமல் இருப்பதற்குக் காரணம் ஐன்ஸ்டீன் மாதிரி ஆராய்ச்சி பண்ணி பாலாஜி சொல்றார். எல்லோரும் கேளுங்கப்பா...'' என்று கிண்டலாகச் சொல்லியபடி மேஜையில் இருந்த திரட்டுப் பாலை ஸ்பூனால் எடுத்து வாயில் போட்டுப் பார்த்தாள் தேன் மொழி.

''ஸ்வீட் ஓகே. பாஸ் மார்க் வாங்கிடுவீங்க. என்ன காரம் பண்ணி இருக்கீங்க?'' என்றவள் அடுக்களையில் தாழ்ந்த குரலில் பேச்சு வார்த்தை நடப்பது புரிய, கூர்ந்து கவனித்தாள்.

''அவளுக்குப் புடவை கட்டத் தெரியாது. அப்படியே தப்பித் தவறி கட்டினாலும் இடுப்பில் நிற்காது. அதனால் தான் புடவை கட்ட மறுக்கிறாள். அது போக, ஒருவேளை தமிழ் மாடர்ன் ட்ரெஸ் தான் பிடிக்கும் என்று சொல்லி இருக்கானோ என்னவோ? இது புரியாமல் நீங்க புடவை கட்டு என்று சொன்னால் அவள் என்ன பண்ணுவாள். பாவம்?''

''அவளுக்கு புடவை கட்டத் தெரியாது என்று உன்னிடம் வந்து சொன்னாளா?'' என்று ஆரம்பித்த

பூங்கோதையை பாலாஜி கண்ணால் அடக்கினான். அவனின் ஜாடை புரிந்து,

''மேகாவிற்காவது புடவை கட்டத் தெரியுமா?'' என்று பூங்கோதை கேட்க அவன் ஆர்வத்துடன் மனைவி பற்றிய அருமை பெருமைகளை அள்ளி விட ஆரம்பித்தான்.

''மேகா காலேஜ் படிக்கும்போதே வாரத்துல மூன்று நாள் புடவை கட்டுவாள். அவங்க பாட்டி உயிரை வாங்கிடுவாங்க. ஆனால் இப்போ கம்பீரமா மரியாதை தரும் விதத்தில் இருக்கு என்று அவளாகவே முடிவு பண்ணி க்ளினிக்கில் தினமும் கட்டுகிறாள்...'' என்று அவன் பேச ஹாலில் அவள் நடமாடும் ஒலி நின்று, வாசலில் பைக் வந்து நின்ற ஒலி கேட்டது.

''தமிழ் வந்து விட்டான் என்று நினைக்கிறேன்...'' என்று சொன்னபடி பாலாஜி வாசலுக்கு வர அவனைப் பின் தொடர்ந்து இருவரும் வந்தனர்.

''வணக்கம்மா, வாங்க... வாங்க...'' என்று பூங்கோதை பானுமதியை சம்பிரதாயமாக வரவேற்றாலும் தமிழை முதன் முதலில் பார்க்கப் போகும் ஆர்வம் இருந்ததால், அவனுக்கு கை கொடுத்துப் பேசிக் கொண்டு இருந்த பாலாஜியை தாண்டி ஊடுருவினார்.

''என்ன தமிழ், ஞாயிற்றுக்கிழமை காலை தூக்கம் எங்களால் இன்று கெட்டதா?'' என்ற பாலாஜியின் உயரமும் தமிழின் உயரமும் ஒன்றாக இருக்க, அவன் முகம் அவருக்குத் தெரியவில்லை.

''அப்படி எல்லாம் இல்லை டாக்டர்...''

''டாக்டர் எல்லாம் வேண்டாம் தமிழ். பாலா என்று கூப்பிட்டால் போதும்...'' என்று விஜயகுமார் சொல்ல,

'ஹலோ அங்கிள், வணக்கம் ஆன்ட்டி...' என்று மரியாதை செலுத்திய தமிழின் முகத்தைப் பார்த்த பூங்கோதையின் கண்கள் வியப்பில் விரிந்தது.

''நீங்களா தமிழ்? நான் உங்களை எங்கேயோ பார்த்து இருக்கிறேனே... ரொம்பப் பரிச்சயமான முகம்...'' என்று வேகமாக இடையிட்டார்.

''டி.வி.ல பார்த்து இருப்பீங்கம்மா. நிலா டி.வி.ல சார் இயற்கையை நேசிப்போம் என்று வாராந்திர ப்ரோக்ராம் பண்ணுகிறார்...''

''என்ன அங்கிள், என்னை டாக்டர் என்று கூப்பிட வேண்டாம் என்று சொல்லிட்டு உங்க பையனை மட்டும் சார் என்று சொல்லச் சொல்லி இருக்கீங்க?'' என்று தமிழ் மடக்க,

''ஹப்பா அவளை மாதிரியே உங்களுக்கும் உடனே பதிலுக்கு பதில் சொல்லிடணுமா?'' என்று பாலாஜி சிரிக்க,

''என்னண்ணா! நான் உங்களை யார் என்று தெரியாமல் வாசலில் நிறுத்தி வைத்தேன். அதனால் வாசலிலேயே நின்று பேசணுமா? உள்ளே போய் உட்கார்ந்து பேசலாமே'' என்று பானுமதி சொல்ல,

'அந்த பரபரப்பில் 'நான் அந்த ப்ரோக்ராம் பார்த்ததே இல்லை. பின்னே எப்படி பரிச்சயமா இருக்கும்?' என்று பூங்கோதை சொல்ல நினைத்தது காற்றில் கரைந்து போனது.

''உள்ளே வாங்கம்மா...'' என்று மூவரும் ஒரே குரலில் வரவேற்க, அம்மாவைப் பின் பற்றி, கவனமாக வலது கால் வைத்து வீட்டின் உள்ளே வந்த தமிழின் கண்கள் தேன்மொழியைத் தேடியது.

''கிடைப்பதே ஞாயிற்றுக்கிழமை ஒரு நாள் தான் ஒய்வு. அதுலயும் ஒண்ணுக்கு ரெண்டா வீட்டுல டாக்டர் இருக்கும்போது அது கூட நிச்சயமா சொல்ல முடியாது. அந்த ஒரு நாள் ஒய்வையும் நாங்க வந்து உங்களைத் தொந்தரவு பண்ணிட்டோமா ஆன்ட்டி?'' என்று சிரிப்போடு விசாரித்தான் தமிழ்.

விஜயகுமாரின் அறிமுகம் ஏற்கனவே இருக்கிறது என்பதும், முந்தைய நாள் போனில் சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் பேசியதைப் பற்றிய சின்ன விளக்கம் அவரிடம் சொல்ல வேண்டும் என்பதும் அவனை உந்த, வலிய அவரிடம் பேச்சை வளர்த்தான்.

அவன் பூங்கோதையிடம் பேச, பாலாஜி, மருத்துவராக மாறி பானுமதியின் உடல் நலம் விசாரிக்க, விஜயகுமார் சத்தமின்றி மகள் என்ன செய்கிறாள் என்று பார்க்க அவளின் அறைக்குச் சென்றார்.

பூங்கோதை, அவர் காதில் விழுந்த சில வார்த்தைகளை வைத்து தேன்மொழி பற்றிய அவனுக்கு ஏதாவது குறைவான அபிப்ராயம் இருந்தால் அதை மாற்ற வேண்டும் என்று அவனிடம் விருப்பமாகவே பேச்சை வளர்த்தார்.

''வீடு என்று இருந்தால் நல்ல நாள் பெரிய நாள் என்று நாலு பேர் சந்தோஷமா வந்து போக வேண்டும் என்று நினைக்கும் ஆள் நான். காலையில் எழுந்து கொள்வதோ, வேலை செய்வதோ சிரமம் என்று நான் நினைப்பதில்லை. ஆனால் தேன்மொழி இன்னும் அதற்குப் பழகவில்லை. கொஞ்சம் விளையாட்டுத் தனமாக இருக்கிறாள்...''

''தனக்கு யார் நெருக்கம் என்று நினைக்கிறாளோ அவர்களிடம் மட்டும் தான் அந்த விளையாட்டுத் தனம் இருக்கு. நீங்க நல்லா கவனித்தால் தெரியும். வெளி ஆட்களிடம் பேசும் போதோ பழகும் போதோ அது இல்லை. அதனால் நீங்க கவலைப்படத் தேவை இல்லை ஆன்ட்டி'' என்று அவசரமாக தன் மகளுக்கு தன்னிடம் வக்காலத்து வாங்கியவனை வியப்புடன் பார்த்தார் பூங்கோதை.

''என்ன அப்படிப் பார்க்கறீங்க ஆன்ட்டி?'' என்றவன் சிரிக்க அவர் புன்னகை செய்தார்.

பார்க்க அழகாக இருக்கிறான். பேச்சில் தெளிவு இருக்கு. மகளின் மேல் விருப்பம் இருப்பதை ஊகிக்க முடிகிறது. கோடீஸ்வரன் என்று சொல்ல முடியாது. டீசண்டான வாழ்க்கையைக் கொடுக்கக் கூடிய அளவுக் கான தொழில் இருக்கு. கடமை பொறுப்புகள் என்று பெரிதாக எதுவும் இல்லை. எல்லாவற்றிற்கும் மேலாக இவனின் அம்மா. அவசரமாகத் திரும்பி பானுமதியைப் பார்த்தார்.

''நீ இருமலுக்கு மருந்து கொடுத்தால் நான் மூணு நாளைக்கு எழுந்திரிக்க முடியாது. தூக்கம் தூக்கமா வரும். அதுக்கு மிளகுப் பொடியும் மஞ்சள் பொடியும் போட்டு பாலைக் காய்ச்சி, அதில் பனங்கல்கண்டு போட்டு குடிச்சால் போதும் மூன்றே வேளையில் இருமல் காணா மல் போய்விடும்...'' என்று மருத்துவருக்கே வைத்தியம் சொல்லிக் கொண்டு இருக்க புன்னகையுடன் தமிழின் புறம் திரும்பினார்.

''தேன்மொழியைப் பற்றி நான் கவலைப்பட வேண் டாம் என்று நீங்களே சொன்ன பிறகு எனக்கு பிரச்னை

இல்லை. உங்க அம்மாவுக்கு அவளைப் பிடித்து இருக்கா? பேசினீங்களா?'' என்று கேட்க அவன் திகைத் தான்.

பூங்கோதை இந்தக் கேள்வியை தன்னிடம் நேரடி யாக, அதுவும் இவ்வளவு சீக்கிரம் கேட்பார் என்று அவன் எதிர்பார்க்கவே இல்லை.

''அம்மாவிடம்... நான் இன்னும்...'' என்று ஆரம்பித் தவன் கண்களில், மெரூன் வண்ண பட்டுப் புடவை யில், நீளமான பின்னலில், அடர்த்தியான மல்லிகைச் சரம் தோளோடு ஒட்டி உரச, தேவதை போல படிகளில் இறங்கி வந்த தேன்மொழி பட்டுப் பேச்சை மட்டுமல் லாமல் அவனின் மூச்சையும் சில வினாடிகள் சேர்த்து நிறுத்தினாள்.



தன்னிடம் சரளமாக பேசிக் கொண்டு இருந்தவனின் பேச்சு, தான் கேட்ட முக்கியமான கேள்வி யில் தினறி, சுத்தமாக நின்று விட, நிமிர்ந்த பூங்கோதை, அவன் பார்வை சென்ற திசையை நோக்க, புன்னகை விரிந்தது. தன்னை விட பாலாஜி கெட்டிக்காரன். காலையில் இருந்து இரண்டு மணி நேரமாக கத்தி தன்னால் சாதிக்க முடியாததை இரண்டே வரி சீண்டலில் சாதித்து விட் டானே?

படிகளில் இறங்கிய தேன்மொழியை, மகளுக்கு வந்தவர்களை வாங்க என்று வரவேற்கவும் வணக்கம் சொல்லவும் மெல்லிய குரலில் கோடி காட்டியபடி பின் தொடர்ந்தார் விஜயகுமார்.

''அவங்க அம்மாவிற்கு வணக்கம் சொல்கிறேன்'' என்று சொல்லிவிட்டு வேண்டும் என்றே தமிழை கண்டு கொள்ளாமல் தாண்டி அடுத்த சோபாவில் பாலாஜியோடு அமர்ந்து பேசிக் கொண்டு இருந்த பானுமதியைப் பார்த்த உடன் அவள் விழிகள் விரிந்தது.

முதல் வினாடி தமிழைத் தவிர்க்க வேண்டும் என்று குறிப்பாக நினைத்தவளுக்கு இப்போது அது பெரிதாகத் தோன்றவில்லை. இவங்க தமிழின் அம்மாவா? வெள்ளந் தியான இவங்களுக்கு அப்படி ஒரு விதண்டாவாதம் பண்ணும் பிள்ளையா? போறான் போ.

''ஹலோ ஆன்ட்டி, கை எப்படி இருக்கு? ரெண்டே நாளில் பிளாஸ்டர் காணோம். நம்ம வைத்தியம் குப்பரா?'' என்று கேட்டபடி அவரின் முழங்கையைத் தூக்கி பார்க்க, எல்லோரின் பார்வையும் அவளிடம் குவிந்தது.

''தேன்மொழி மாதிரி கைராசி டாக்டர் கை பட்ட பிறகு காயம் எப்படி இருக்கும்? இலவசமா வைத்தியம் பார்க்கக் கூடாது என்று எங்க பக்கம் சொல்வாங்க. அன்னிக்கு உன் பேர் விலாசம் சொல்லாமலே கிளம்பி விட்டாய். எப்படி பீஸ் கொடுக்கப் போறேனோ என்று யோசித்துக் கொண்டே இருந்தேன். கரெக்டா ரெண்டே நாளில் என் பையன் உன் வீடு தேடி வந்து இறக்கி விட்டு, நீ செய்த வைத்தியத்துக்கு பீஸ் கொடுக்க வச் சுட்டான் பார்த்தாயா?'' என்று கூறி கையோடு கொண்டு வந்து இருந்த பலகாரங்களும் பூவும் இருந்த பையை அவளிடம் நீட்ட அங்கே இருந்த நான்கு பேரின் முகத் திலும் முறுவல் விரிந்தது.

''பீஸுக்கு பதில் ஸ்வீட்டா ஆன்ட்டி? நல்ல பண்ட மாற்று முறையா இருக்கே? என்ன ஸ்வீட் பண்ணி இருக்கீங்க? அப்போ இருமல் இருந்துச்சே? இப்போ இப்படி இருக்கு?'' என்று அக்கறையாக விசாரித்தபடி அவள் உள்ளே இருந்த பாத்திரத்தை எடுக்க முயல, பூங்கோதை புன்னகையோடு தமிழின் புறம் திரும்பிய அதே நேரம், ''எங்க அம்மாவுக்குப் பிடிச்சு இருக்கா என்று நீங்க உங்கள் கண்ணால் பார்த்துக்கோங்க...'' என்று சுட்டிக் காட்டியபடி தமிழும் அவர் புறம் திரும்பினான்.

''ஏற்கனவே தேன்மொழி உங்க அம்மாவைப் பார்த்து இருக்கிறாளா?'' என்று பூங்கோதை கேட்க, ''எனக்குத் தெரியலை ஆன்ட்டி, போன வெள்ளிக்கிழமை கோவி லில் பார்த்து இருக்காங்க போல'' என்று சிரிப்போடு சொன்னான்.

''தேனு, என்ன இங்கே உட்கார்ந்து ஆன்ட்டியோடு அரட்டை அடிச்சுட்டு இருக்க? அவங்களுக்கு ஏதாவது சாப்பிட எடுத்துட்டு வா'' என்று பாலாஜி சொல்ல எழுந் தாள்.

''ஆன்ட்டி, உங்களுக்கு இருமல் இருக்கு. அதனால் அம்மா போட்ட ஜூஸ் வேண்டாம். நானே காபி போட்டு எடுத்துட்டு வரேன். சர்க்கரை போடலாமா? பாலா, அம்மா, அப்பா...'' என்று ஒவ்வொரு வரையாக 'காபி ஓகேயா?' என்று கேட்டவள் கடைசியாக தமிழின் முகத்தில் பார்வையைப் பதித்து, 'உங்களுக்கு...' என்று நிறுத்தினாள்.

''எனக்கு காபி வேண்டாம்...'' என்று மறுப்பாகச் சொல்ல அவள் 'ரொம்ப நல்லது' என்று முனகியபடி வேகமாக நகர முயன்றாள்.

''காபி வேண்டாம்னா என்ன வேண்டும் என்று கேட்டுட்டு போ தேனு'' என்று பூங்கோதை அவளைத் தடுத்து நிறுத்த, மறுக்க முடியாமல் நின்று திரும்பிய வளின் கண்கள் பிறர் அறியாமல் அவனைச் சுட் டெரித்தது.

''எற்களவே ரொம்ப ஹாட்டா இருக்கு. சோ ஜில் லுன்னு ஒரு...'', 'ஜஸ்க்ரீம் இருந்தால்' என்று புன்னகை யோடு சொல்ல ஆரம்பித்தவன் அவள் கண்களில் எரிமலை பொங்க, ஜில்லுன்னு ஒரு கிளாஸ் தண்ணி கொடுங்க'' என்று முடித்தான்.

மற்ற அனைவரும் காபிக்கு ஓகே சொன்ன பிறகு இவன் மட்டும் ஜில்லுன்னு கேட்டதால் அம்மா அனத்திப் போட வைத்தார்கள் என்பதற்காக, சர்க்கரை போட வேண்டும் என்றே மறந்து விட்டு கிரேப் ஜூஸ் என்ற பெயரில் ஒரு திரவத்தைக் கொண்டு வந்து வைத்தாள்.

ஆனால் அந்த ஜூஸைக் கூடச் சொட்டு விடாமல் ரசித்து ருசித்துக் குடித்துவிட்டு, அப்பாவுடனும் பாலாஜி யுடனும், கடந்த இரண்டு மணி நேரமாக உடன் அமர்ந்து நாட்டு நடப்பு, அரசியல், இடைத் தேர்தல், பட்ஜெட், விளையாட்டு, சுற்றுச் சூழல் மாசுபடுதல், சினிமா என்று பல தரப்பட்ட தலைப்புகளை, அலசி ஆராய்ந்த பிறகும் அப்பாவிடம் அவள் தனியாகப் பேசவில்லை என்றதைக் கண்டு தேன்மொழிக்கு எரிச்சல் பொங்கியது.

அடுப்படியில் அம்மாவும் பானும்மாவும் சமைத்துக் கொண்டு இருக்கையில், அங்கே ஒரு மனதாக நின்று உதவி செய்யவும் முடியாமல், வெளியில் இவர்கள்

அரட்டை அடிப்பதை கேட்க ஹாலில் அமரவும் முடி யாமல் தவித்தாள்.

''பரவாயில்லை தேனு, கொஞ்ச நேரம் காத்தாட ஹாலில் உட்கார். நாங்க ரெண்டு பேரும் பார்த்துக்கு வோம். என்ன அண்ணி சொல்றீங்க?'' என்று பானுமதி கேட்ட பிறகு பூங்கோதை வேறு வழி இன்றி தலை அசைக்க அவள் வேகமாக அப்பாவின் அருகே வந்து அவர் இருந்த ஒற்றை சோபாவின் கைப்பிடியில் அமர்ந்தாள் தேன்மொழி.

''அப்பா உங்களிடம் ஏதோ முக்கியமான விஷயம் சொல்லணும் என்று தமிழ்வேந்தன் ரொம்ப நேரமா ட்ரை பண்றார். அவருக்குக் கொஞ்சம் பேச அப்பாவும் பிள்ளையும் பெரிய மனசு பண்ணி சான்ஸ் கொடுங்க ளேன். ப்ளீஸ்...'' என்று அவளே ஆரம்பித்து விட்டு அவனைப் பார்க்கப் புன்னகைத்தாள்.

''தமிழ், நான் கூட உன்னிடம் ஒரு முக்கியமான விஷயம் பேசணும் என்று நினைத்தேன். சாப்பாட்டுக்கு அப்புறமா பூங்கோதையும் வந்த பிறகு உங்க அம்மா விடம் பேசுகிறேன். நீ சொல்ல வந்ததைச் சொல்லு...'' என்று விஜயகுமார் ஆவலாக விசாரித்தார்.

''அங்கிள்... நம்ம பாலாக்கு பொண்ணு பார்த்தாச்சு இல்லையா? கல்யாணம் எப்போ வைக்கலாம் என்று முடிவு பண்ணிட்டீங்களா?'' என்று பேச்சை ஆரம்பித் தான்.

''மேகாவுக்கு அம்மா அப்பா இல்லை. அதனால் அவங்க பாட்டி உடனே கல்யாணம் வைக்கணும் என்று ரொம்ப அவசரப்படுறாங்க. நான் தேனு படிப்பை முடிக்கட்டும். இரண்டு கல்யாணத்தையும் சேர்த்து

வைத்துக் கொள்ளலாம் என்று சொன்னேன். அவங்களுக்கு அதில் உடன்பாடு இல்லை. இன்னும் முடிவு பண்ணலை. அதிருக்கட்டும். நீ என்ன பேச நினைத்தாய்...? அதைச் சொல்லலையே?''

''நான் தான் உங்களுக்கு சான்ஸ் வாங்கிக் கொடுத்தேன் என்பதை ஞாபகம் வச்சு கரெக்டா பேசுங்க...'' என்று கேலியாகச் சொல்வது போல தமிழிடம் மீண்டும் தன் கோரிக்கையை வலியுறுத்த, அவன் புன்னகையோடு தன் நெற்றியில் கை வைத்து சலாமிட்டு நன்றி சொல்லி தலை அசைத்தான்.

அந்த இடத்தை விட்டு நகர்ந்தவள் அடுப்படிக்குப் போகவில்லை. இந்தப் பேச்சு காதில் விழும் தூரத்தில் இருப்பாள் என்பதை தமிழால் கணிக்க முடிந்தது. தேன் மொழியின் கேலிப் பேச்சு, தமிழின் நன்றி சொல்லும் ஜாடை இரண்டையுமே கவனித்த பாலாஜி, விஜய குமார் இருவருக்குமே சின்ன புன்னகை மலர்ந்தது.

''என்ன தமிழ், அப்பாவிடம் தனியா பேசணுமா? நான் வேண்டுமானால் கிளம்பட்டுமா?'' என்று பாலாஜி அவனின் தயக்கத்தைப் பார்த்துக் கேட்க அவன் மறுப்பாகத் தலை அசைத்தான்.

''இல்லை... அப்படி இல்லை... எங்கே ஆரம்பிப்பது என்று தான் தெரியலை...'' என்று மீண்டும் பெருமூச்சு விட்டான் தமிழ்.

இந்த விஷயம் பேசுவது இவ்வளவு கடினமாக இருக்கும் என்று அவன் எதிர்பார்க்கவே இல்லை. அவள் முதன் முதலில் சொன்னபோது அந்தக் கருத்தில் உடன்பாடு இருந்தது உண்மைதான். ஆனால் இப்போது அந்த வார்த்தையைச் சொல்லப் பிடிக்கவில்லை.

அதுவும் அவளை பீச்சில் நேரில் பார்த்த பிறகு, சேர்ந்து அமர்ந்து அரை இருட்டில் பேசியபடி ஐஸ்க்ரீம் சாப்பிட்ட பின்பு, கன்னத்தில் அந்த குங்குமக் கறையைப் பார்த்து காயமோ என்று பதறிய பின்பு, போனில் அவள் என்று தெரிந்த பின்பு வம்பிழுத்து எஸ்.எம்.எஸ். அனுப்பிய பிறகு, போனில் பதிலுக்கு பதில் மடக்கி பேசிச் சிரித்த பிறகு அந்த வார்த்தையைச் சொல்லப் பிடிக்கவில்லை.

அவ்வளவு ஏன்? இங்கே இன்ன காரணத்திற்காக வந்து இருக்கிறோம் என்பது நன்றாகத் தெரிந்த பிறகும், வலது காலை கவனமாக எடுத்து வைத்து உள்ளே வந்த பிறகு, அவள் கொடுத்த சர்க்கரை இல்லாத ஜூஸைக் கூட ரசித்து உண்ட பிறகு, சர்வ அலங்கார பூஷிதையாக பட்டுப் புடவையில் அவளைப் பார்த்த பிறகு, இப்போது அந்த வார்த்தையைச் சொல்லப் பிடிக்கவில்லை.

''அங்கிள், நீங்க உங்க பெண்ணின் திருமணம் பற்றிப் பல கனவுகள் வைத்து இருப்பீங்க இல்லையா?'' என்று ஒரு பெருமூச்சை வெளியேற்றி பேச்சை ஆரம்பித்தான். எவ்வளவு கசப்பாக இருந்தாலும் தேவை என்றால் மருந்தை உண்டு தான் ஆக வேண்டும். இனிமேலும் தள்ளிப் போட முடியாது.

''தமிழ், நீ எதுக்கு இவ்வளவு யோசிக்கிறாய் என்று என்னால் ஊகிக்க முடிகிறது. நான் வேண்டுமானால் ஹெல்ப் பண்ணட்டுமா?'' என்று சிரிப்போடு பாலாஜி கேட்க, ஒரு கணம் கண்களை இறுக மூடித் திறந்தான்.

''இல்லை பாலா. நான் என்ன பேசப் போகிறேன் என்று உங்களால் ஊகிக்க முடியாது. அங்கிள்... நீங்க சொல்லுங்க...''

"இருக்கு தமிழ். பையன் மட்டும் நல்லா இருந்தால் போதாது. குடும்பப் பின்னணியும் முக்கியம். ஒரே பொண்ணு. செல்லமா வளர்ந்து விட்டாள். கொஞ்சம் விளையாட்டுத் தனம் இருக்கு. அதனால் எனக்கு..." என்று இப்போது விஜயகுமார் தயங்கினார்.

ஹாலில் நடந்த பேச்சு வார்த்தை உள்ளேயும் கேட்க அவசரமாக பூங்கோதை பானுமதியையும் அழைத்துக் கொண்டு அவசரமாக வெளியே வந்தார்.

"இதோ கோதையும் வந்தாச்சே. வாங்க. நீங்களும் வந்து உட்காருங்க. பேச்சை ஆரம்பிச்சாச்சு. அப்படியே முடிவெடுத்து விடலாம். தேனு... எங்கே இருக்கடா...?" என்று விஜயகுமார் மகளையும் அழைத்தார்.

"இங்கே தான் இருக்கேன்பா..."

"பானும்மா, உங்களிடம் ஒரு முக்கியமான விஷயம் சொல்லணும். எனக்கும் கோதைக்கும், உங்களையும் உங்க பையனையும் ரொம்பப் பிடிச்சு இருக்கு. அதனால் என் பெண்ணை தமிழுக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுக்கலாம் என்று நினைக்கிறோம். நீங்க என்ன சொல்றீங்க?"

"அண்ணா! இப்படி திடுதிப்புன்னு கேட்டால் எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியலை. எனக்கு தேன் மொழியைப் பிடிச்சு இருக்கு. பொண்ணுக்கும் பையனுக்கும் பிடிச்சு இருக்கா என்று கேட்டுட்டீங்களா? இல்லை இப்ப தான் பேச்சை ஆரம்பிக்குறீங்களா? தமிழ் நீ என்ன சொல்ற?" என்று பரபரப்பாகச் சொன்னார் பானுமதி.

"அ..ங்..கி..ள்..! நீங்க இப்படி நேரடியா உங்க பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொடுப்பதைப் பற்றி பேசுவீங்க என்று நான் எதிர்பார்க்கவில்லை. அதுக்கு முன்னாடி நான் உங்களிடம் ஒரு விஷயம் கேட்க வேண்டும். இந்தக் கல்யாணப் பேச்சு எப்படி ஆரம்பித்தது?"

"தமிழ்! கேட்ட கேள்விக்கு பதில் சொல்லாமல் வயசுல பெரியவங்களிடம் எதிர்கேள்வி கேட்கிறாய்?" என்று பானுமதி அடக்க முயன்றார்.

"இல்லைம்மா, இது முக்கியமான விஷயம். அங்கிள் பதில் சொல்லட்டும் சொல்லுங்க அங்கிள் ப்ளீஸ். இந்தக் கல்யாணப் பேச்சு எப்போ எப்படி ஆரம்பித்தது? ஏன் கேட்கிறேன் என்றால், நீங்க பத்து நாளைக்கு முன்பு என்னை முதன் முதலில் பார்த்ததில் இருந்து என்னை ரொம்ப அன்போடு நடத்தறது மாதிரி ஒரு பீலிங். அது அன்பா... இல்லை... நன்றி கடன் பிராயச்சித்தம் இந்த மாதிரியா என்று எனக்குப் பிரிச்சுப் பார்க்கத் தெரியலை. சொல்லுங்க ப்ளீஸ்... இந்தக் கல்யாணப் பேச்சு எப்போ எப்படி ஆரம்பித்தது?" என்று கேட்ட தமிழை திருப்தியோடு பார்த்தார் பூங்கோதை. முதன் முதலில் இவர் பேச்சை ஆரம்பித்தபோது தான் கேட்ட அதே கேள்வி. சபாஷ் கண்ணா!

"தமிழ், இந்தப் பேச்சு எப்போ எப்படி ஆரம்பித்தது என்று எல்லாம் எனக்குச் சொல்லத் தெரியவில்லை. உன்னைப் பார்த்த வினாடி, உன்னை அடையாளம் தெரியவில்லை. ஆனால் உன் பேரைக் கேட்டதும் எனக்கு நினைவு வந்தது. எட்டு வருடத்திற்கு முன்பு நீ பேசிய பேச்சுக்கும் இப்போ இருக்கும் நிலைக்கும் எந்த மாற்றமும் இல்லை. அந்த மாறாத குணம் பிடித்தது.

உங்க அப்பாவின் மரணம் என்னை அதிர வைத்தது உண்மைதான்...''

''அங்கிள் ப்ளீஸ்... எங்க அப்பாவின் மரணத்திற்கு நீங்க காரணமோ என்ற குற்ற உணர்வில்... அதற்குப் பிராயச்சித்தமாய் என்று...''

''என்ன பேசுற தமிழ் நீ? இந்த வார்த்தை சொன்னதன் மூலம் உன்னையே நீ தாழ்த்திக் கொள்கிறாய்...''

''அதைத் தான் அங்கிள் நானும் சொல்ல நினைத்தேன். என்னை எனக்காக, நான் எப்படி இருக்கிறேனோ அப்படியே நிறை குறையுடன் ஏற்றுக் கொள்ளும் ஒரு பெண்ணோடு இணையும் திருமண பந்தம் தான் நிலையான மகிழ்ச்சி கொடுக்குமே தவிர, பிறரின் நிர்பந்தத்தால் கட்டுப்பட்டு அமையும். திருமணம் நிலைக்க முடியாது. அப்படியே நிலைத்தாலும் நிரந்தர சந்தோஷம் தர முடியாது. அது எனக்கு வேண்டாம்...''

''தமிழ். உன் ஆதங்கம் எனக்குப் புரிகிறது. இயற்கையையும், சக மனிதர்களையும் நேசிக்கும், அருகில் இருப்பவர்களுக்கு உதவி செய்யத் தயாராக இருக்கும் உங்கள் குடும்பத்தின் அந்த ஒட்டு மொத்த மனநிலை என்னைக் கவர்ந்தது. அதனால் தான் இந்த பேச்சு ஆரம்பித்தேனே தவிர, பிராயச்சித்தமாக இல்லை. எனக்கு உன்னைப் பிடித்து இருக்கு. உங்க அம்மாவும் தேன்மொழியைப் பிடித்து இருக்கு என்று சொல்லிட்டாங்க. உனக்குத் தேன்மொழியைப் பிடித்து இருக்கா என்று நீ சொல்லு...'' என்று தீர்மானமாக முடித்தார் விஜயகுமார்.

''நீங்க உங்க வீட்டில் இதைப் பற்றி எவ்வளவு வெளிப்படையாகப் பேசினீர்கள் என்று எனக்குத்

தெரியலை. அதனால்.. நான் சம்மதம் சொல்வதற்கு முன்னால் நான் என்னைப் பற்றி ஒரு முக்கியமான விஷயம் சொல்லணும்'' என்று இடைவெளி விட்டான் தமிழ்.

''நீயா பேசு என்றால் என்னை இழுத்து விடப் பார்க்கிறாயா? மறுபடி சுற்றி வளைத்து அதே இடத்தில் நிறுத்தும் உன்னை...'' என்று மனதிற்குள் தேன்மொழி அர்ச்சனை செய்ய மற்ற நால்வரும் அவனை புதிரோடு பார்த்தனர்.

''நான் ஒரு பெண்ணை லவ் பண்றேன். எங்க அம்மாவுக்குத் தெரியாது. ஆனால் அந்தப் பெண்ணுக்கு என் மேல் பெரிதாக அபிப்ராயம் இல்லை. அதனால் இந்தக் கல்யாணம் நடப்பது சிரமம் அங்கிள். நான் உங்களை எந்த விதத்திலாவது மரியாதை குறைச்சலாக பேசி இருந்தால் மன்னிச்சுடுங்க. அம்மா, கிளம்பலாமா?'' என்று விஜயகுமாரிடம் முடிவைச் சொல்லிவிட்டு அம்மாவை அழைத்த தமிழின் பேச்சு அங்கிருந்த ஐந்து பேரில் யாருக்கு அதிக அதிர்ச்சியை ஏற்படுத்தியது என்று நிர்ணயம் செய்ய முடியவில்லை.



தமிழ் தான் ஒரு பெண்ணைக் காதலிப்பதாகச் சொன்ன முதல் வினாடி அங்கிருந்த அனைவருக்குமே அதிர்ச்சியை ஏற்படுத்தினாலும் முதலில் மீண்டது பாலாஜி.

''தமிழ், நீங்க தேன்மொழியைக் கல்யாணம் பண்ணிக் கொள்வதும் கொள்ளாததும் வேற விஷயம். அதுக்காக ஏன் உடனே ஆன்ட்டியை வீட்டுக்குக் கடத்திட்டுப்

போகணும் என்று நினைக்கறீங்க? எங்க அம்மா குப்பரா சமைப்பாங்க. சாப்பிட்டுட்டுப் போகலாம். என்னம்மா சாப்பிடச் சொல்லுங்க...'' என்று தூண்டி விட்டான்.

''தமிழ், கல்யாண விஷயம் பேசறதுக்காக மட்டும் நான் உங்களை வரச் சொல்லவில்லை. ஒரு நல்ல மனுஷங்களோட பழக்கம் இருக்கட்டும் என்று தான் வரச் சொன்னேன். பரவாயில்லை அதை மறந்து விடலாம்...'' என்று விஜயகுமாரும் சுதாரித்துக் கொள்ள பானுமதியின் முகம் இன்னும் தெளிவாகவில்லை.

'இவன் ஒரு பெண்ணைக் காதலிக்கிறானா? தன்னிடம் முன்பே சொல்லி இருந்தால் அவள் காலில் கையில் விழுந்தாவது அவளைக் கல்யாணம் பண்ணி வைத்து இருக்க மாட்டாரா? அதை ஏன் இங்கே வந்து சொல்கிறான்?' என்று அவனைப் பார்க்க, அவரின் தோளில் கை வைத்து அழுத்தி பூங்கோதை எழுப்பினார்.

''வாங்க அண்ணி, தேனுக்கு சாப்பாட்டை விட நொறுக்குத் தீனி தான் இஷ்டம். பாலா தான் எங்க வீட்டுல நல்லா ரசிச்சுச் சாப்பிடுவான். நீங்க தேங்காய் பால் எடுத்து செஞ்சீங்களே சொதி அதை பாலாக்கு பரிமாறுங்க. தமிழ் எப்படி சாப்பிட்டு பிரியரா? ஸ்நாக்ஸ் பிரியரா?'' என்று பேசி அவரை இயல்பு நிலைக்குக் கொண்டு வந்தார் பூங்கோதை. அவருக்குள் தமிழின் பேச்சில் ஏதோ உதைத்தாலும் வெளியே காட்டிக் கொள்ளவில்லை.

''வாப்பா சாப்பிடலாம்...'' என்று உடனே இயல்பு நிலைக்கு வந்து, உபசரித்த பானுமதியை வியப்போடு பார்த்தான் பாலா.

''ஆன்ட்டி, நீங்க எங்க வீட்டுக்கு விருந்தாளி. நீங்க உட்காருங்க. தேனு என்ன அங்கேயே நின்று வேடிக்கைப் பார்த்துக் கொண்டு இருக்கிறாய்? வா, அம்மாவுடன் சேர்ந்து பரிமாறு...'' என்று பாலாஜி அதட்ட, தேன்மொழி என்ற சிலைக்கு அப்போதுதான் உயிர் வந்தது.

தான் சொன்னது என்ன? சுற்றிலும் நடப்பது என்ன என்று திகைத்த தமிழின் தோளில் தட்டி, ''வா, சாப்பிடலாம். பிறருக்கு நல்லது செய்ய மனசார நினைப்பவர்களுக்கு ஆண்டவன் ஒரு குறையும் வைக்க மாட்டான். யார் கண்டா? நீ விரும்பும் அந்த பெண்ணே வந்து உன்னைத் திருமணம் செய்து கொள்ளச் சம்மதம் தெரிவிக்கலாம்'' என்று விஜயகுமார் சொல்ல தமிழின் பார்வை தேன்மொழியின் பக்கம் பாய்ந்தது.

அந்த நிமிடம் தன்னைப் பார்த்துக் கொண்டு இருந்தவளின் கண்களில் என்ன இருந்தது? அவள் நினைத்தபடி கல்யாண ஏற்பாடுகள் நின்று விட்டது என்ற எண்ணத்தில் சந்தோஷம் பொங்க வேண்டுமே? சந்தோஷம் அவள் முகத்திலோ கண்ணிலோ இல்லை.

'அவளை திருமணம் செய்துகொள்ள முடியாது என்று சொல்ல வேண்டிய ஒரு கட்டாயம் வந்து விட்டதே' என்று தன்னைத் தானே நொந்து கொண்டு மனமின்றி அந்த வார்த்தைகளைச் சொன்னவன் அவளின் முகத்தைப் பார்த்த முதல் வினாடி அதிர்ந்தான்.

''இங்கே முகம் கழுவலாமா?'' என்று சமாளித்துக் கேட்டவன் கண்களில், 'நான் உன்னிடம் பேசணும்' என்ற செய்தியும் இருந்தது.

"ம்ம்ம்..." என்று கதவை விட்டு விலகியவள் அங்கே காத்திருந்தாள். அவன் திரும்பி வந்தபோது விஜயகுமார் ஏற்கனவே உணவு மேஜைக்கு சென்று இருந்ததால் அவள் மட்டும் இருக்க அவன் சுற்று முற்றும் பார்த்து விட்டு குரலை தணித்தான்.

"என்ன மேடம். நீங்க நினைத்த மாதிரியே கல்யாணப் பேச்சை தள்ளிப் போட்டாச்சு தானே? இப்ப சந்தோஷமா?" என்று அவன் கேட்க அவள் அவனையே தீர்க்கமாகப் பார்த்தாள்.

"என்ன...? பதில் சொல்லாமல் பார்த்தால் என்ன அர்த்தம்?"

"நீங்க யாரையோ லவ் பண்றேன் என்று சொன்னது பொய் தானே?" என்று கேட்க சற்று முன்பு அவள் பார்த்ததன் அர்த்தம் புரிந்து, சந்தோஷம் முளை விட்டது.

"இல்லையே! நான் லவ் பண்றேன் என்று சொன்னது பொய் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று கேலியாகக் கேட்டான்.

"அப்படி யாரையாவது நீங்க நேசித்து இருந்தால், அதை அன்றே நான் பீச்சில் கோரிக்கை வைத்தபோதே சொல்லி இருப்பீங்களே?"

"அது என்னுடைய பெர்சனல் விஷயம். அதை நான் ஏன் உங்களிடம் சொல்ல வேண்டும்?"

"இது விதண்டாவாதம். இப்ப மட்டும் ஏன் சொன்னீங்க? நான் என்..." என்று ஆரம்பித்தவள் பாதியில் பேச்சை நிறுத்தினாள். நான் என் பெர்சனல் விஷயம் சொல்லவில்லையா என்று கேட்க முடியவில்லை. அது உன் விருப்பம் என்று அவன் சுலபமாகச் சொல்லி

விடலாமே? ப்ச்! எக்கேடோ கேட்டு ஒழியுறான் என்று ஏன் விட முடியவில்லை?

'தேனு, தமிழைச் சாப்பிடக் கூட்டிட்டு வா. எல்லோரும் காத்திருக்காங்க பாரு..." என்று அம்மாவின் குரல் வர அதற்கு மேல் பேச்சை வளர்க்காமல் முன்னால் நடந்தவளை சிரிப்புடன் பின் தொடர்ந்தான்.

சிறு பிள்ளைத்தனமாக அவள் சொல்வதைக் கேட்டுக் கொண்டு விஜய் அங்கிளிடம் கல்யாணம் நடப்பது சிரமம் என்று மறுப்பாகச் சொல்லி இருக்க வேண்டாம். யோசித்துச் சொல்கிறேன் என்று சொல்லி கொஞ்சம் தள்ளிப் போட்டு இருக்கலாமோ? அப்புறம் ஏதாவது சொல்லி சமாளிக்கலாம். முதலில் இவளை சரி பண்ண வேண்டும். யோசனையோடு வந்தவனை பூங்கோதையின் வரவேற்பு இந்த உலகத்திற்கு அழைத்து வந்தது.

"வா வா தமிழ். உட்கார். சாப்பாட்டில் உனக்கு என்ன ரொம்பப் பிடிக்கும்?" என்று உபசரிக்க அவன் வியப்பாக நிமிர்ந்து பார்த்தான்.

"என்ன அப்படிப் பார்க்கிற? இவ்வளவு நேரம் நீ மாப்பிள்ளையாக வரப் போகிறாயோ என்று வாங்க போங்க என்று பேசிட்டு இருந்தேன். இப்பதான் அது இல்லை என்று ஆச்சே. வா போ என்று பேசினால் தப்பா எடுத்துக் கொள்ள மாட்டாய் தானே?"

"இல்லை ஆன்ட்டி. நீங்க வயசுல பெரியவங்க. இதுல தப்பா எடுத்துக்க என்ன இருக்கு?" என்று புன்னகை செய்தவன் கண்கள் தேன்மொழியைத் தொட்டுத் திரும்பியது.

"உன்னை இன்று தான் முதல் முறை பார்ப்பது மாதிரியே இல்லை தமிழ். ரொம்ப நாள் பழகிய

நெருங்கிய உறவு மாதிரி இருக்கு. ஏன் என்றே தெரியலை...''

''உறவு என்பது நாம் நினைத்துக் கொள்வது தானே ஆன்ட்டி யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று கேட்ட தில்லையா? நாம் உறவினர்கள் என்று வைத்துக் கொள்ள வேண்டியதுதானே? பாலா ஏதோ நீங்க திரட்டுப் பால் செய்ததா சொன்னானே? அது வைங்க. ஸ்வீட்டோட கொண்டாடலாம்.''

''உனக்கு ஸ்வீட் பிடிக்குமா? குட். நேற்று ஏதோ போனில் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுவதற்கு என்னவோ நட்சத்திரக் கதை எல்லாம் சொன்னாயே? அது என்ன நிஜமா? இல்லை புருடாவா...?'' என்று பரிமாறியபடி விசாரித்தார் பூங்கோதை.

''நோ ஆன்ட்டி, ஆதிசங்கரர் சொன்ன கதை இது. வேடன் ஒருவன் மானை விரட்டி அதைக் கொல்ல முயன்ற போது 'என் மனைவியிடம் சொல்லி விட்டு வந்து உனக்கு உணவாகிறேன்' என்றது. இரக்கம் கொண்ட வேடனும் அனுப்பி வைத்தான். சற்று நேரத் தில் ஆண் மானுடன் பெண் மானும் அதன் இரு குட்டி களும் அவன் முன் வந்து நின்றன. 'ஒருவரை விட்டு ஒருவர் வாழ்வதில் அர்த்தமில்லை. எங்கள் நால்வரை யும் கொன்றுவிடு' என்று பெண்மான் வேடனிடம் சொல்ல, மிருக ஜாதியிலும் நாணயமும், பாசபந்தமும் இருப்பதை அறிந்த வேடனுள் இரக்கம் ஊற்றெடுத்தது. சிவன், அம்பிகையோடு எழுந்தருளி வேடனுக்கு மோட்சமளித்தார். மான்களுக்கு நட்சத்திரப் பதவி அளித்தார். மிருகசீரிட நட்சத்திரத்தினர் வாக்குத் தவறா தவர்கள், உயிருக்கு பயப்படாதவர்கள். பாசத்திற்குக்

கட்டுப்படுபவர்கள் ஆன்ட்டி. அதைத்தான் சொன்னேன். புருடா இல்லை...''

''இதெல்லாம் படிக்க நேரம் இருக்கா? எங்க அம்மா விடம் இந்த மாதிரி அப்பப்போ ஏதாவது சொன்னால் ஜாலியா கேட்பாங்க...'' என்று பாலாஜி சொல்ல அவன் சிரித்தான்.

''நேரம் இல்லாமல் என்ன பாலா? எந்த நேரமும் யாராவது தேடி வர நான் என்ன டாக்டரா? ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும், கோ கிரீன் என்.ஜி.ஒ. மூலமா மரம் நடு நிகழ்ச்சிக்கு போவோம். அந்த நிகழ்ச்சிக்கு பல தரப்பட்ட பிரிவில் இருக்கும் ஆட்கள் வருவார்கள். மீடியாவில் இருப்பதால் நிறைய பேருடன் பேசும் போது நிறைய விஷயம் தெரிய வரும்'' என்று சொன்ன தமிழை விஜயகுமாரும் பூங்கோதையும் பெருமையாகப் பார்த் தனர்.

''மரம் நடுவது தொழில் ரீதியா போய்டுமே. ஓய்வு நேரத்துல ஏதாவது விளையாடுவியா?'' என்று விஜய குமார் விசாரிக்க தேன்மொழிக்கு பற்றிக் கொண்டு வந்தது.

''எங்க அம்மாவிற்கு நான் சின்னக் குழந்தைகளோடு ஸ்விம்மிங் பூலில் லூட்டி அடிக்கிறேன் என்பது பெரிய மனக்குறை சாயங்காலம் ப்ரீ டைம் கிடைத்தால் ப்ளாட்ல நீச்சல் குளம் இருக்கு. குழந்தைகளுக்கு சொல்லிக் கொடுப் பேன். காசு வாங்காத வாத்தியார் நான். யாருக்காவது நீச்சல் கத்துக்கணும் என்றால் எங்க வீட்டுக்கு வாங்க...'' என்று அவன் சொல்லும் போதே பானுமதி இடை யிட்டார்.

''மனக்குறை எல்லாம் இல்லை. தமிழ் நீச்சலில் சாம்பியன். அவன் பத்தாவது படிக்கும்போது...'' என்று மகனின் பெருமையைக் கேட்க காதுகள் கிடைத்த சந்தோஷத்தில் பேச்சை ஆரம்பிக்க, தேன்மொழியின் பொறுமை எல்லைக்கோட்டை கடந்தது.

'அம்மா அப்பா அண்ணன் என்று மூன்று பேரும் மாறி மாறி அவனை ஏதாவது கேட்டுப் பெருமையாக பேசிட்டு இருக்காங்க. இங்கே ஒரு ஆள் இருப்பது கண்ணில் தெரியலை பாரு...' என்று மனதிற்குள் பொருமியவள் கையில் இருந்த தண்ணீர் ஜக்கை மேஜையின் மேல் வைக்கும் போதே சரிக்க, அதில் இருந்து தண்ணீர் வழிந்து மேஜையை கடந்து வழிந்து அவன் ஆடையை நனைத்தது.

''தேனு... என்ன வேலை பண்ற? செய்யும் வேலையை கவனமாக செய்ய வேண்டாமா?'' என்று பூங்கோதை அதட்ட, அவள் வேகமாக, ''சாரி... சாரி... தெரியாமல்...'' என்று அவசரமாக மன்னிப்புக் கேட்டாலும் கண்களில் அந்தப் பதட்டமும் வருத்தமும் இல்லை என்பதை பூங்கோதை தமிழ்வேந்தன் இருவராலுமே உணர முடிந்தது.

அவசரமாக துண்டு ஒன்றை எடுத்து தமிழிடம் நீட்டிய விஜயகுமார் மகளை விநோதமாகப் பார்த்தார். எப்போதுமே உணவு மேஜையில் கலகலவென்று பேசிச் சிரித்தபடி சாப்பிடுவது தேன்மொழிக்கு பழக்கம். சொல்லப் போனால் இந்த மாதிரி வாய் ஓயாமல் பேசாதே என்று கோதை அதட்டுவார். ஆனால் இன்று... அப்பா துண்டை நீட்டியபடி தன்னை வித்தியாசமாகப் பார்க்க அவளுக்கே ஒரு மாதிரி இருந்தது. ச்சே! தனக்கு என்ன ஆச்சு?

''ட்ரெஸ் வேண்டுமானால் மாத்திக்கறீங்களோ தமிழ்'' என்று பாலாஜி உபசரிக்க, ''அதெல்லாம் வேண்டாம். தண்ணிதானே? அதுவும் கொஞ்சம் தான்...'' என்று புன்னகையோடு அவனிடம் சொல்லிவிட்டு தேன்மொழியிடம் திரும்பினான்.

'நல்லவேளை! உங்க கையில தண்ணீர் ஜக் இருந்தது. சூடான சாம்பார் ரசம் மாதிரி இருந்தால் என் நிலை என்ன?' என்று கேலியாகச் சொல்ல, 'சாரி...' என்று முணுமுணுத்தபடி அந்த இடத்தை விட்டு அகன்றாள்.

''அண்ணி, உங்களிடம் ஒரு விஷயம் சொல்லணும்...'' என்று பூங்கோதை கண் காட்ட அவர் பின்னால் வந்தார் பானுமதி.

''இங்கே வரும்போது இருந்ததற்கு உங்க முகம் ரொம்ப வாடி இருக்கு. வீட்டுக்குப் போன பிறகு, தமிழிடம் அந்தப் பொண்ணு யார் என்ன என்று விசாரித்து அவங்க வீட்டில் பேசி ஏற்பாடு பண்ணுங்க. அந்தப் பொண்ணு செட் ஆகலை என்றால் கவலைப் படாதீங்க. தமிழ் ஜாதகம் கொடுங்க. நானும் நல்ல பொண்ணா பார்த்து சொல்றேன். தமிழ் தேனு இரண்டு பேருக்கும் இளமேலா பொண்ணு பையன் பிறக்கப் போறாங்க? எங்கே இருக்காங்க என்று தேடிக் கண்டு பிடிச்சுடுவோம்'' என்று சொல்ல, அவரின் முகம் தெளிந்தது.

''சரி அங்கிள். ரொம்ப நாளைக்குப் பிறகு உங்க வீட்டுல கலகலப்பாகப் பேசிட்டு இருந்தது நல்லா இருந்தது. அம்மா தனியா இருப்பதனால் இந்த மாதிரி எங்கேயாவது கூட்டிட்டுப் போனால் ரொம்ப

சந்தோஷப்படுவாங்க. நாங்க கிளம்புகிறோம்...'' என்று விடை பெற்றான்.

''தேன்மொழி இல்ல?'' என்று கேட்ட பானுமதிக்கு, ''பட்டுப் புடவை கட்டி ரொம்ப நேரம் இருந்து அவளுக்குப் பழக்கம் இல்லை அண்ணி. நீங்க வரீங்க என்று கட்டினாள். வசதியா இல்லை என்று உடை மாற்றுகிறாள். அவள் வர நேரமாகும் பரவாயில்லை. நான் சொல்லி விடுகிறேன்'' என்று பூங்கோதையே பதில் சொல்ல வேறு வழி இன்றி இருவரும் கிளம்பினர்.

அங்கே நடந்த களேபரத்தில் பானுமதி சொல்ல வந்த பதினைந்து வயதில் நீச்சலில் ஸ்டேட் சாம்பியனாக வெற்றி பெற்றதும், அதனைத் தொடர்ந்து பழவேற்காடு போனதும், அங்கே இருவரை நீரில் இருந்து காப்பாற்றியதற்காக தீர செயல் செய்தமைக்காக மாநில அரசின் விருது பெற்றதும் அங்கே சொல்லப் படாமல் போனது.



விஜயகுமாரின் வீட்டில் இருந்து திரும்பி வந்த பிறகு உடை மாற்றி அறையில் படுத்த தமிழை பார்க்க சில நிமிடங்களில் தேடி வந்து கட்டிலில் அருகே அமர்ந்தார் பானுமதி.

''என்னம்மா படுக்கலையா? கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுக்க வேண்டியது தானே?'' என்று கேட்டபடி தலை யணையில் இருந்து அவரின் மடிக்கு நகர்ந்தான்.

''நீ தூங்கப் போகிறாயா தமிழ்?'' அவனின் நெற் றியை வருடி மென்மையாகக் கேட்டார்.

''கொஞ்ச நேரம் தூங்கலாம் என்று படுத்தேன். ஆனால் நீங்க ஏதோ பேசணும் என்று வந்து இருக்கீங்க போல சொல்லுங்க...''

''தமிழ், உன் அளவுக்கு எனக்கு விபரம் இல்லாமல் இருக்கலாம். ஆனால் இந்த வீட்டுல இருப்பதே இரண்டு பேர். நான் என்ன நினைக்கிறேன் என்று உனக்கு சொல்லாமல், நீ என்ன நினைக்கிறாய் என்று எனக்குச் சொல்லாமல் இருந்தால் அது நல்லாவா இருக்கும்?''

மடியில் படுத்து விளையாட்டாகக் கேட்டுக் கொண்டு இருந்தவன் அவரின் குரலில் இருந்த வருத்தத்தை உணர்ந்ததும் அவசரமாக எழுந்து அவரின் கன்னத்தைப் பற்றி நிமிர்த்தி, ''அம்மா...! என்ன ஆச்சு? ஒரே பீலிங்க்ஸ் ஆஃப் சென்னை. உங்களுக்குத் தெரியாமல் நான் என்ன செய்தேன்?'' என்று கேட்டான்.

''இதுவரைக்கு நீ ஆசைப்பட்டு கேட்டது எதற்காவது நான் இல்லை என்று சொல்லி இருக்கேனா? அப்பா இல்லாத போது கூட, சுயமா சம்பாதிக்காத போதும் கூட வீட்டு மேல் கடன் வாங்கிப் படிக்க வைக்கவில்லையா?'' என்ற பானுமதியின் கண்களில் கண்ணீர் இருக்க அவன் திடுக்கிட்டான்.

''எ..ன்..ன...ம்..மா? நீங்க இதுவரை எனக்கு எந்தக் குறையும் வைத்ததே இல்லை. நான் ஒன்றைக் கேட்டு அதை நீங்க இல்லை என்று சொன்னதே இல்லை. ஆனால் என்ன விஷயம் என்றே சொல்லாமல் இப்படிக் கேட்டால் நான் என்ன நினைப்பதும்மா?'' என்று யோசனையோடு கேட்டவனுக்கு விஷயம் புரிவது போல இருந்தது.

''உனக்கு ஒருத்திப் பிடித்து இருந்தால் நானே அவளிடம் போய் பேசிக் கல்யாணம் முடித்து வைத்து இருக்க மாட்டேனா? அவள் உன்னை வேண்டாம் என்று சொன்னதை மனசுக்குள் வச்சு நீ மருகினால்...''

''ஹேய்! அசட்டு அம்மா...! நான் விஜய் அங்கிள் வீட்டுல ஒரு பெண்ணை லவ் பண்றேன். அவள் என்னை வேண்டாம் என்று சொல்லி விட்டாள் என்று சொன்னதை நினைத்து பீல் பண்றீங்களா? அதை நேரடியா கேட்காமல் நீங்க குழம்பிட்டே இருந்தீங்களா? இப்ப சொல்றேன் கேட்டுக்கோங்க. நான் எந்தப் பெண்ணிடமும் என் காதலைச் சொல்லவும் இல்லை. அவள் என் காதலை வேண்டாம் என்று சொல்லவும் இல்லை. அவள் என்னை லவ் பண்றாள். அவளே வந்து காதலைச் சொல்வாள். போதுமா?''

''அப்ப அங்கே ஏன் அப்படிச் சொன்னாய்? அது பொய்யா?''

''இல்லைம்மா. அங்கே சொன்னதும் நிஜம். இப்ப நான் உங்களிடம் சொல்றதும் நிஜம். நான் கல்யாணம் பண்ணிக்காமல் தேவதாஸ் மாதிரி ஆகிடுவேனா என்று பயந்துட்டீங்களா? கவலைப்படாதீங்க. சீக்கிரமே கல்யாணம் பண்ணிக்குவேன். அதுவும் உங்களுக்குப் பிடிச்ச பொண்ணா பார்த்துக் கல்யாணம் பண்ணிக்குவேன்...''

''ஏன் தமிழ், உனக்கு தேன்மொழியைப் பிடிக்கலையா?''

''அப்படின்னு நான் சொன்னேனா?''

''அங்கே விஜய் அண்ணன் கல்யாணம் பண்ணிக்கோ என்று சொன்னபோது வேண்டாம் என்று சொன்னாயே?''

''அது அப்போ...''

''என்னடா சொல்ற? எனக்கு தலை சுத்துது. ஒண்ணுமே புரியலை...''

''நீங்க நான் சொல்றதை எல்லாம் சமத்தா கேளுங்க. எல்லாம் நல்லதாவே நடக்கும்...''

''ப்ச்! கோதை அண்ணி, உன் ஜாதகம் கொடுத்தால் ப்ரோக்கரிடம் கொடுத்து வரன் பார்த்துச் சொல்றேன் என்று சொன்னாங்க. இப்ப நான் அவங்களுக்கு என்ன பதில் சொல்வது?'' என்று ஒன்றும் புரியாமல் தலையைப் பிய்த்துக் கொண்டார் பானுமதி.

''அங்கே இருக்கிறதே சின்ன மூளை. அதைப் போட்டு இப்படிக் கசக்கினால் அது என்ன ஆகும்? நான் சொல்றதைச் செய்ங்க. அவங்க கேட்ட மாதிரியே ஜாதகம் கொடுங்க...''

''அவங்க ப்ரோக்கர் சொன்னார் என்று ஏதாவது பொண்ணு விபரம் சொன்னால்...''

''அவங்களையும் கூட்டிட்டுப் போய் அந்தப் பொண்ணைப் பார்க்கலாம்...''

''டேய்! நான் எனக்கு தேன்மொழியைப் பிடித்து இருக்கு என்று சொல்லிட்டு இருக்கேன். உனக்கும் பிடிச்சு இருக்கு என்று சொல்கிறாய். அப்புறம் எதுக்கு நாம் வேறே பொண்ணு பார்க்கப் போகணும்? நீ என்ன சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் பேசுற?''

''நான் சம்பந்தத்தோடுதான் பேசுறேன். வரும் வெள்ளிக்கிழமை அஷ்டலஷ்மி கோவில் போய் உங்க கோரிக்கையை வைங்க. லஷ்மி மேடம் கட்டாயம் நிறைவேத்துவாங்க. கவலைப்படாதீங்க...'' என்று

உறுதியாகச் சொல்ல அவனைச் சில கணங்கள் பார்த்தவர், ''என்னவோ நீ சொல்ற. பார்க்கலாம்...'' என்று அரை மனசாக எழுந்து சென்றார்.

★ திங்கள் மாலை ஏழு முப்பது மணி ★

இரவு உணவிற்காக தேன்மொழி சென்றபோது அம்மாவும் அப்பாவும் பேசிக்கொண்டு இருந்தது கண்ணில் பட்டது.

''இன்று மதியம் எங்களோடு வாங்க என்று கூப்பிட்டால் நிறைய வேலை இருக்கு என்று ரொம்ப பிகு பண்ணிகிட்டீங்க. நானும் பானு அண்ணியும் போய் ப்ரோக்கரை பார்த்துட்டு வந்துட்டோம்...''

''அப்படி என்ன அவசரம்? நான் தான் நாளைக்குப் போகலாம் என்று சொன்னேனே?''

''நாளைக்கு செவ்வாய்க்கிழமையா இருக்கு. அதான் இன்றே போய் நாலு ஜாதகம் ப்ரோக்கரிடம் வாங்கி வச்சு இருக்கேன். அவங்க தமிழ் ஜாதகமும் கொடுத்துட்டுப் போய் இருக்காங்க. நாளைக்குக் காலையில் பதினோரு மணிக்கு நம்ம ஜோசியர் ரங்கநாதனை வரச் சொல்றீங்களா? பொருத்தம் பார்க்கணும்...''

''எதுக்கும்மா ஜோசியர்?'' என்று அவசரமாகக் கேட்டாள் தேன்மொழி.

''மனசுக்குப் பிடிச்ச பிறகு ஜாதகம் பார்க்க வேண்டிய அவசியம் பாலாக்கும் மேகாவுக்கும் இல்லை. ஆனால் உனக்குப் பார்க்கணுமே? அதோடு தமிழுக்கும் ஜாதகம் வாங்கிட்டு வந்து இருக்கேன்...''

''தமிழுக்கு நீங்க ஏன் ஜாதகம் பார்க்கறீங்க?''

''அதை ஏன் நீ கேட்கிற?''

''ப்ச்! என்னம்மா நீங்க? அவன் ஏதோ ஒரு பெண்ணை லவ் பண்றான் என்று அன்னிக்கே சொன்னானே? அதற்கப்புறம் நீங்க வேறே பொண்ணு ஜாதகம் ஏன் பார்க்கணும்?''

''அவன் லவ் பண்ற பொண்ணு ஜாதகத்தை வைத்து தான் பொருத்தம் பார்க்கப் போறேன்...'' என்று பூங்கோதை அழுத்தம் திருத்தமாகச் சொல்ல அவளுக்கு உள்ளுக்குள் ஏதோ உடைந்தது. அவன் அன்று பொய் சொல்கிறான் என்று நினைத்தாளே? நிஜமாவே அவன் ஒரு பெண்ணை லவ் பண்ணுகிறானா?

''என்ன சத்தமே காணோம்?''

''அந்தப் பொண்ணுக்கு அவனைப் பிடிக்கலை என்று...''

''அப்படின்னு உனக்கு யார் சொன்னா?''

''நீங்க ஏதோ நக்கலாப் பேசற மாதிரி இருக்கு. நீங்க யாருக்குப் பொண்ணு பார்த்தால் ஜாதகம் பார்த்தால் எனக்கென்ன? இப்ப சாப்பிடலாமா? எனக்குப் பசிக்குது'' என்று முகத்தைத் திருப்பிக் கொண்டு உண்பதில் முனைந்தாள் தேன்மொழி.

★ புதன் இரவு ஏழு முப்பது மணி ★

அதே இரவு உணவு வேளையில் பாலாஜி அம்மாவுடன் தீவிரமான விவாதம் நடத்திக் கொண்டு இருக்க தேன்மொழி அங்கே வந்ததும் இருவரும் பேச்சை நிறுத்தியது ஒரு மாதிரி இருந்தது.

''என்ன பாலா ஒரே காரசாரமான விவாதம் போல? சத்தத்துல பார்லிமென்ட் தோத்துடும் போல இருக்கே? என்ன விஷயம்?''

"ப்ச்! அதைப் பத்தி உனக்கென்ன? நீ உன் வேலையைப் பாரு..."

"என்னம்மா பாலா சொல்ல மாட்டேன் என்று ரொம்ப பிகு பண்ணிக்கிறான். நீங்க சொல்லுங்களேன்..."

"ஒன்னும் இல்லை தேனு. நீ சாப்பிடு..."

"அப்பா. இந்த வீட்டு ஆளா என்னை இவங்க ரெண்டு பேருமே மதிக்கலை. நீங்களாவது சொல்லுங்க. என்ன விஷயத்துக்கு ரெண்டு பேரும் இப்படி அடிச்சக் கிறாங்க..."

"நேற்று எஸ்.எஸ்.ஆர். கல்யாண மண்டபம் கிடைக் கலை. அதனால் பாலா - மேகா கல்யாணத்தைக் கொஞ்சம் தள்ளி வைக்கலாம் என்று சொன்னேன் இல்லையா..."

"அப்பா ப்ளீஸ்! இதைச் சொல்லி அவ மனசைக் கஷ்டப்படுத்தாதீங்க" என்று பாலாஜி இடைமிட அவனை முறைத்தாள் தேன்மொழி.

"ஹேய் லூசு! நீ சொல்ல வேண்டாம் என்று சொன்னால் தான் நம்மளை ஒதுக்கி வைக்கறாங்க என்று மனசுக்குக் கஷ்டமா இருக்கும். நீங்க சொல்லுங்கப்பா..."

"அதை நானும் அம்மாவும் இன்று மேகா வீட்டில் சொல்லப் போனோம். அதுக்கு அவங்க ஒத்துக் கொள்ள வில்லை..."

"ஏனாம்...?"

"அவங்க பாட்டிக்கு எப்ப என்ன ஆகுமோ என்று பயமா இருப்பதனால் உடனே கல்யாணம் முடிக்கச் சொல்றாங்க."

"சரி, அதுக்கு இவங்க ரெண்டு பேரும் ஏன் அடிச் சுக்கிறாங்க?"

"அம்மா, கோவிலில் கல்யாணம் வைத்து விட்டு ஹோட்டலில் ரிசப்ஷன் வைத்து விடலாம் என்று சொல்கிறாள். ஆனால் பாலா ஒத்துக் கொள்ள மாட்டேன் என்கிறான். ரெண்டு பேருக்கும் அவங்கவங்க வாதம் முக்கியம். விவாதம் மூன்று மணி நேரமாகத் தொடர் கிறது. அவன் கிளினிக் கூடப் போகலை..."

"ஏய் பாலா! உனக்கென்ன பைத்தியமா? கிளினிக் கூடப் போகாமல் அம்மா கூட சண்டை பிடிக்கிற அள வுக்கு இதுல என்ன இருக்கு? மனசுக்குப் பிடிச்ச பொண்ணு. உடனே கல்யாணம். ஜூலியா தலை ஆட்ட வேண்டியதுதானே?"

"உன்னை மாதிரி எடுத்தேன் கவிழ்த்தேன் என்று நினைத்த நேரம் நினைவு முடிவு என்னால் எடுக்க முடி யாது தேனு..."

"மேகாவைக் கல்யாணம் பண்ணுவது ஏற்கனவே எடுத்த முடிவு தானே? இப்ப என்ன புதுசா முடிவு எடுக்கப் போற நீ?"

"வீட்டுல வயசுப் பொண்ணு இருக்கும்போது கல் யாணம் பண்ணிக்கக் கூடாது என்பதில் அவள் அன்றும் இன்றும் உறுதியா இருக்காள். அவள் மேல் வைத்து இருக்கும் அக்கறை அது. நீ அவளுக்கு என்ன செய்யப் போகிறாய்?" என்று பூங்கோதை வேகமாக கேட்க, நிகைத்தாள் தேன்மொழி.

"நானா? இதுக்கு நான் என்ன பண்ண முடியும்?"

"நீ கல்யாணம் பண்ணிக்கச் சம்மதித்தால் பிரச்னை முடிந்து விடும்..."

"நான் நேற்று அவ்வளவு நேரம் பேசி மூணு மாசம் போகட்டும் என்று சொன்னேனே? எதுக்கு மறுபடியும் அதே கதையை ஆரம்பிக்கறீங்க..."

"நான் புதுசா ஆரம்பிக்கலைம்மா. மூணு மாசம் போகட்டும் என்று அதையே தான் உன் அண்ணனும் சொல்றான். அதுக்கு தான் வாக்குவாதம். நீ என்ன விவாதம் என்று கேட்டதால் சொன்னேன்..." என்று பூங்கோதை சொல்ல தேன்மொழி அதிர்ந்து பேச்சை நிறுத்திக் கொள்ள, பாலாஜி தொடர்ந்தான்.

"அம்மா, நீங்க என்ன பேசினாலும் என் முடிவில் மாற்றம் இல்லை."

"டேய்! அந்த பொண்ணு நிலைமையை யோசித் தாயா?" என்று அதட்டிய பூங்கோதைக்கு, "அவள் எனக்கு என்று விதிக்கப்பட்டு இருந்தால் என்ன நடந் தாலும் அவள் எனக்குக் கிடைப்பாள். இல்லை என்றால் நான் தலைகீழா நின்றாலும் எனக்குக் கிடைக்க மாட் டாள். இதுக்கு மேலே சொல்ல ஒன்றும் இல்லை" என்று முடித்து விட்டுக் கிளம்பினான் பாலாஜி.

★ வெள்ளி மாலை ஆறு மணி ★

பெசன்ட் நகர் பீச்சின் அருகே இருந்த சிமெண்ட் பெஞ்சில் கலங்கிய கண்களுடன் மேகா இருக்க அவளைச் சமாதானப்படுத்த முயன்று கொண்டு இருந்தாள் தேன் மொழி.

"அய்யய்ய! என்ன மேகா இது? சின்னப் பிள்ளை மாதிரி அரை மணி நேரமா கண்ணைக் கசக்கிட்டு

இருக்க? என்ன விஷயம் என்று சொன்னால் தானே தெரியும்? இப்ப அழுகையை நிறுத்திட்டு என்ன விஷயம் என்று சொல்லப் போகிறாயா இல்லையா?"

"உனக்கு என் பாட்டியைத் தெரியும் தானே?"

"நல்லா தெரியும். நின்னா குத்தம் உட்கார்ந்தால் குத்தம் என்று தொட்டது தொண்ணூறுக்கும் தப்பு கண்டுபிடிப்பாங்க."

"எப்பவோ வந்து போற உனக்கே அப்படி என்றால், பெற்றோர் இல்லாமல் என்னை எடுத்து வளர்த்து ஆளாக்கிய என்னிடம் எவ்வளவு தப்பு கண்டு பிடிப் பாங்க?"

"அது ஏற்கனவே தெரிஞ்ச விஷயம் தானே? ஆனால் இப்படி மனசு உடைஞ்சு அழற அளவுக்கு இன்று என்ன ஆச்சு? அதைச் சொல்லு..."

"அவங்க நான் லவ் பண்றேன் என்பதையே கொலை குத்தம் மாதிரி பார்த்து, அம்மா வந்து பேசின பிறகு, கொஞ்சம் சமாதானமாக இருந்தாங்க" என்றவளுக்கு மீண்டும் கண்ணீர் துளிர்த்தது.

"இன்னொரு வாட்டி நீ அழறதைப் பார்த்தேன். நான் எழுந்து போயிட்டே இருப்பேன்" என்று தேன்மொழி அதட்ட சிரமத்துடன் கண்களைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்தாள் மேகா.

"உனக்கு என்ன குறைச்சல்? போன வாரம் இதே நேரம் உன் கல்யாணம் பற்றி பேசுவாங்க என்று எதிர் பார்த்தாயா? ஒரு வாரத்தில் என்னென்னவோ நடக் கலை? அழாமல் சொல்லு..."

"பாலாஜியும் பாட்டியும் ஆளுக்கு ஒரு பக்கம் பிடிச்சு இழுத்தால் நான் என்ன பண்ணுவேன் சொல்லு?

இன்னிக்கு உங்க பாட்டிக்கு ரொம்ப அவசரம் என்றால் தெருவில் போகும் யாரையாவது இழுத்துட்டுப் போய் கட்டி வைக்கச் சொல்லு... என்று...'' மேலே முடிக்க முடியாமல் மேகா மீண்டும் கண்ணீர் பெருக்க, அவளை இழுத்து தன் தோளில் சாய்த்து முதுகைத் தடவிக் கொடுத்தாள்.

''ஓகே... ஓகே.. மேகா... ரிலாக்ஸ். அழாதே... இடியட்... அவனுக்கு பைத்தியம் தான் பிடிச்சு இருக்கு. நான் அவனிடம் பேசறேன்.''

''நீ பாலாவிடம் பேசினால் அதுக்கும் என்னிடம் சண்டைக்கு வருவான்...''

''அவன் கிடக்கான். நாளைக்கு அம்மாவையும் அப்பாவையும் வந்து உன் பாட்டியைப் பார்க்கச் சொல்றேன். கண்ணைத் துடை. நீ வீட்டுக்குப் போ. நாலு நாளைக்கு கிளினிக் போகாதே. அவன் கண்ணிலேயே படாதே. அப்பத்தான் அவனுக்கு புத்தி வரும். உன்னை மனசு தேடும்'' என்று இயல்பாக அவளைத் தேற்றச் சொன்ன வார்த்தைகள் அவளுக்குள் தேடலை ஏற்படுத்தியது.

அவனைப் பார்த்து இன்றோடு ஐந்து நாட்களாகிறதா? இந்த மாதிரி சூழ்நிலையில் அவன் என்ன முடிவு சொல்லி இருப்பான்? பிரச்னை என்ன என்று முதலில் கண்டு பிடிக்கணும். இங்கே இவள் அழுவதற்கான பிரச்னை, பாலாஜி திருமணத்தைத் தள்ளி போடுவது. அவன் தள்ளிப் போடுவதற்குக் காரணம், தான் திருமணத்திற்கு ஒத்துக் கொள்ளாதது. தான் திருமணத்திற்கு ஒத்துக் கொள்ளாததற்குக் காரணம்? அதற்கு மேலே மூளை வேலை செய்ய மறுத்தது.



மேகாவைத் தேற்ற வேண்டும் என்ற நோக்கத்தில், ''பாலாஜி கண்ணில் படாமல் தவிக்க விடு'' என்று சொன்ன தேன்மொழி. அதே வாக்கியம் தன்னைத் தாக்கும் என்று எதிர்பார்க்கவில்லை. பாலாவும் மேகாவும் காதலிக்கிறார்கள் என்பதால் நினைத்த அந்த வாக்கியம், தனக்கு தமிழை வைத்து என் தோன்ற வேண்டும் என்ற கேள்வி அந்த வினாடி எழவில்லை என்பதால் மேகாவைத் தொடர்ந்து தேற்றினாள்.

''மேகா, இருட்டி விட்டது. நீ கிளினிக்கில் இல்லை என்பது தெரிந்தால் அதுக்கு வேற பாட்டி திட்டப் போறாங்க. நீ வீட்டுக்குக் கிளம்பு. நாளைக்கு அம்மாவை வரச் சொல்றேன்...''

''அம்மா இன்று மதியமே வந்து பாட்டிகிட்டே பேசினாங்க. அவங்க பிடி கொடுக்கலை. அதுக்கப்புறம் தான் நான் பாலாவிடம் பேசினேன். அதுக்கு தான்... பாலா...'' என்று விசும்பியவளுக்கு மேலே பேச்சைத் தொடர முடியவில்லை.

''அவன் கிடக்கான்! எப்படியாவது முயற்சி பண்ணி பாட்டியைக் கல்யாணத்தைத் தள்ளி போடச் சம்மதிக்க வைப்போம். முடியல என்றால் பாலாஜியை வழிக்கு கொண்டு வருவது என் வேலை. நீ தைரியமா வீட்டுக்குக் கிளம்பு. அழுதுட்டே வண்டி ஓட்டாதே. வீடு போய் சேர்ந்ததும் போன் பண்ணு. ஜாக்கிரதை!'' என்று அவளை அனுப்பி வைத்து விட்டுக் காரை நோக்கி நடந்தவள் கண்ணில் அருகே இருந்த அஷ்டலஷ்மி கோவில் பட்டது.

போன வாரம் இதே இடத்தில் பானுமதியைப் பார்த்ததும், அவர் சொன்ன 'குங்குமம் கொட்டினால் கல்யாணம் நடக்கும்' என்ற ஆசீர்வாதமும் நினைவு வந்தது. கூடவே தமிழின் நினைவு எட்டிப் பார்த்தது. இடி விழுந்தாலும் எவ்வளவு நிதானமாக இருக்கிறான்?

அவனை இப்போ எதுக்கு நினைக்கற? ஆக வேண்டிய வேலையைப் பார் என்று தன்னைத் தானே குட்டிக் கொண்டு காரில் ஏறி, 'பாலா பிடிவாதம் பிடித்து, வரைமுறை இல்லாமல் வார்த்தைகளைப் பேசி மேகாவின் மனதை நோகடிப்பது குறித்து அம்மாவிடம் பேச வேண்டும்' என்று நினைத்தபடி வந்து இறங்கினாள்.

''ஜாதகப் பொருத்தம் பார்த்தாச்சு தானே அண்ணி? இறைவன் மேல் பாரத்தைப் போட்டு தைரியமா கல்யாணம் பண்ணலாம். எல்லாம் நல்லபடியா நடக்கும் என்று நம்புவோமே!'' என்ற பானுமதியின் குரல் கேட்டு வியப்பாக இருந்தது. பதினைந்து நிமிடம் முன்பு இவரை நினைத்தால் இங்கே வந்து இருக்கிறாரே!

''ஹலோ ஆன்ட்டி! எப்படி இருக்கீங்க? தனியாவா வந்தீங்க?'' என்று உற்சாகத்துடன் விசாரித்ததை கவனித்தார் பூங்கோதை.

''ஹேய் தேனு! உன்னைப் பார்க்கத்தான் காத்திருக்கிறேன். இன்று வெள்ளிக்கிழமை இல்லையா? அஷ்டலஷ்மி கோவிலுக்கு வந்தேன். ரிகார்டிங் இருக்கு. வரலேட் ஆகும். போகும்போது ஆட்டோல போங்க என்று கோவில் வாசலில் இறக்கி விட்டுட்டு போய்ட்டான் தமிழ். கோவிலில் சுத்தும்போது, போன வாரம் தேன்மொழியைப் பார்த்தோமே என்று நினைப்பு வந்தது. சரி,

உன்னைப் பார்த்துட்டுப் போகலாம் என்று வந்தேன். காலேஜில் இருந்து வர இவ்வளவு நேரமாகுதா தேனு?'' என்று மூச்சு விடாமல் பானுமதி பேச, தேன்மொழி அம்மாவைப் பார்த்து புன்னகை செய்தாள்.

''ஆன்ட்டி, இத்தனை நாளும் அம்மா 'பேச்சை குறை' என்று சொல்லும்போது, ஏன் அப்படி சொல்றாங்க என்று யோசிச்சு இருக்கேன். அதோட அர்த்தம் இப்பதான் எனக்குப் புரியுது...'' என்று தேன்மொழி கண் சிமிட்ட அவளின் பேச்சு பானுமதிக்குப் புரியவில்லை.

''வீடு என்று இருந்தால் எப்போதும் கலகலன்னு பேசிச் சிரிச்சுட்டு இருக்கணும். நீ எப்பவும் போல பேசு. கேட்க வேறே யாரும் இல்லை என்றாலும் நான் இருக்கிறேன்'' என்று பானுமதி சொல்ல அவள் புன்னகை மேலும் விரிந்தது.

''இதுவே அம்மாவா இருந்தால், தலைவலியும் திருகுவலியும் அவங்கவங்களுக்கு வந்தால் தானே தெரியும் என்று நக்கலா சொல்லி இருப்பாங்க. நீங்க ரொம்ப ஸ்வீட் ஆன்ட்டி. எனக்கு உங்களை ரொம்பப் பிடிச்சு இருக்கு...'' என்று குரலில் பாவனையோடு இழுத்துச் சொன்னாள் தேன்மொழி.

''ரொம்ப சந்தோஷமா இருக்கு தேனு. எனக்கும் உன்னை ரொம்பப் பிடிச்சு இருக்கு...'' என்று அவளை மாதிரியே சொல்ல, அதை ரசித்துச் சிரித்தாள்.

''அம்மா, ஆன்ட்டிக்குச் சாப்பிட குடிக்க ஏதாவது கொடுக்கணுமா? ஏற்கனவே கொடுத்தாச்சா?'' என்று விசாரிக்க, பூங்கோதை புன்னகை செய்தார். வீட்டில் தனக்குத் தேவையான 'ஒரு செல்போன் ரீசார்ஜ்

செய்வதைக் கூட' வேறொருவரை ஏவியே நிறை வேற்றிக் கொள்ளும் தனது அருமை மகள் இன்று இவருக்குச் சாப்பிட ஏதாவது கொடுக்கணுமா என்று விசாரிப்பதை என்ன என்று சொல்வது?

ஒருவர் மேல் ஒருவர் வைத்து இருக்கும் அன்பை வெளிப்படுத்தும் வகையில், லேசான கேலி இழை யோட, பேசிக் கொள்வதை கவனித்த பூங்கோதைக்கு ஆச்சரியம் பெருகியது. சற்று முன்பு பானுமதி சொன்ன, 'இறைவன் மேல் பாரத்தைப் போட்டு கல்யாணத்தை நடத்துவோம். நல்லதே நடக்கும் என்று நம்புவோம்' என்ற வாக்கியத்தின் மேல் நம்பிக்கை முளை விட்டது.

''அவங்க வந்து ஒரு மணி நேரத்திற்கும் மேலாகிறது. உனக்காகத்தான் காத்திருக்காங்க. வர லேட் ஆகும் என்றால் போன் பண்ணிச் சொல்ல வேண்டாமா?'' என்று பூங்கோதை கேட்க அவளின் முகம் வாடியது.

''சாரிம்மா! மேகா கொஞ்சம் மூட் அவுட், அவளைக் கொஞ்சம் பேசி சரி கட்டிட்டு வந்தேன். அதான் லேட் ஆகிடுச்சு. எல்லாம் இந்த பாலாவால் வந்தது'' என்று தாழ்ந்த குரலில் அம்மாவிடம் விளக்கம் சொல்ல அவர் வேகமாக தலை அசைத்து மறுத்தார்.

''உன்னால் தான் அவங்களுக்குள் பிரச்னை வந்தது என்று, பாலா சொல்லலாம் தேனு. அதை மறந்து டாதே!'' என்று பூங்கோதை மறுக்க, ''நீங்க முக்கியமான விஷயம் பேசறீங்க. நான் கிளம்பட்டுமா?'' என்று விடைபெற முயன்றார் பானுமதி.

''என்னண்ணி நீங்க? நாங்க இந்தியா பாகிஸ்தான் வெளியுறவு துறை அமைச்சர்கள்! உங்களுக்குத்

தெரியாமல் ராணுவ ரகசியமா பேசப் போகிறோம்? ஞாயிற்றுக் கிழமை பேசிய பாலா கல்யாண விஷயம் பேச றோம். அதுல சின்ன பிரச்னை. என்னன்னு கேளுங்க'' என்று பூங்கோதை அவரை பேச்சுக்குள் இழுக்க பானுமதி பதறினார்.

''என்ன பிரச்சனை? போன வெள்ளிக்கிழமை கோவில் வாசலில் குங்குமம் கொட்டிய போது, தேன்மொழியிடம் நான் தமிழுக்கு கல்யாணம் நடக்கும் என்று சொன்னேன். அது நடக்கலை என்றாலும் பாலாக்கு நிச்சயம் ஆச்சு என்று சந்தோஷமா இருந்தேனே? இப்ப என்ன ஆச்சு?'' என்று பானுமதி விசாரிக்க அதற்கு பூங்கோதை பதில் சொல்லும் முன்பாகவே தேன்மொழி இடையிட்டாள்.

''ஆன்ட்டி! போன வாரம் தமிழுக்கா கல்யாணம் நடக்கும் என்று ஆசீர்வாதம் பண்ணினீங்க? தமிழ் அப்போ எங்கே வந்தார்? நான் பார்க்கவே இல்லையே!''

''நான் பார்த்தேனே! அவர் உன்னைப் பார்க்க வந்ததா என்னிடம் சொன்னானே? உன்னை பார்க்கலையா?'' என்று பானுமதி கேட்க அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

தான் தமிழைப் பார்த்ததை அம்மாவிடம் சொல்ல வில்லை. இதுவரை அந்த மாதிரி சொல்லாமல் இருந் ததும் இல்லை. செய்த காரியத்தை மறைக்க வேண்டிய ஒரு தேவை அவளுக்கு வந்ததே இல்லை. ஆமாம் என்று சொன்னால் ஏன் என்ற கேள்வி வராதா? அவள் விக்கித்துப் போய் பேச்சை நிறுத்த, தேன்மொழி தமிழைப் பார்த்தது தனக்குத் தெரியும். என்பதை வெளிக் காட்டிக் கொள்ளாமலேயே, பூங்கோதை பேச்சைத் தொடர்ந்தார்.

''தேன்மொழி! நிஜமாவே பாலா மேலயும், மேகா மேலயும் உனக்கு அக்கறை இருந்தால், அவள் மன சுடைந்து அழுகிறாள் என்று பீச்சுல உட்கார்ந்து ஆறுதல் சொல்வதைவிட, அந்த அக்கறையில் பாதியைச் செயலில் காட்டினால் பிரச்னை தீர்ந்து விடும்.''

''என்னை என்னம்மா செய்யச் சொல்றீங்க?''

''ம்ம்ம்... சுரைக்காய்க்கு உப்பில்லை என்று சொல் றாங்க. ஒரு வாரத்துல இது சம்பந்தமா எத்தனை தடவை பேசியாச்சு? புதுசா விளக்கம் கேட்கிற? விடிய விடிய ராமாயணம் கேட்டுட்டு சீதைக்கு ராமன் என்ன முறை என்று நீ கேள்வி கேட்பாய். நான் உனக்கு உட்கார்ந்து விளக்கம் சொல்லணுமா? போய் முகம் கழுவிட்டு வா. அவங்களுக்கு ஏதாவது டிபன் பண்ணலாம்...'' என்று சொல்லி விட்டு எழுந்தார் பூங்கோதை.

''டிபனா? வேண்டாம் அண்ணி. காபி குடிச்சாச்சு இல்லையா? அது போதும். தேன்மொழியைப் பார்க்க வந்தேன். பார்த்தாச்சு. கிளம்பறேன்'' என்று பானுமதி எழுந்தார்.

''தமிழ் வர பத்து மணிக்கு மேலே ஆகும். அங்கே போய் தனியா தானே இருப்பீங்க? பாலா அப்பாவும் வெளியே போய் இருக்காங்க. வர நேரம் தான். அவங் களை பார்த்துட்டு, சாப்பிட்டுட்டு கிளம்பலாம்...'' என்று தடுத்த வேளையில், ''நீங்க எப்படிப் போகப் போறீங்க ஆன்ட்டி? நான் டிராப் பண்ணட்டுமா?'' என்று விசா ரித்தாள் தேன்மொழி.

''உனக்கு எதுக்கும்மா வீண் சிரமம்? நான் ஆட்டோ பிடித்துப் போய் விடுவேன். பக்கம் தானே? பத்து நிமிஷம் கூட ஆகாது...''

''அதனால் தான் சொல்றேன். பத்து நிமிஷம் பானு ஆன்ட்டிக்கு செலவு பண்ணினால் நான் குறைஞ்சு போய்ட மாட்டேன். அப்படியே சண்டே நீங்க கொண்டு வந்த முறுக்கில் மிச்சம் ஏதாவது இருந்தால் எனக்கு தருவீங்க என்று பார்த்தேன். தர மாட்டீங்களா?'' என்று தேன்மொழி கேலிச் சிரிப்புடன் கேட்க பானுமதியின் மனம் இளகி விட்டது.

''உனக்கு என்னென்னவோ செய்து போடத்தான் எனக்கு ஆசை. அதைத்தான் உங்க அம்மாவிடம் நீ வரும் முன்னாலே சொல்லிட்டு இருந்தேன். உனக்கு இல்லாததா?'' என்று உற்சாகமாக அவர் பேச, எதிர் பார்த்த திசையில் பேச்சு நகர்வதை கவனித்த பூங் கோதை, அங்கேயே வைத்து பேச்சை நீடிக்கத் திட்ட மிட்டார்.

''என்ன தேன்மொழி! நான் அவங்களைச் சாப்பிட சொல்லிட்டு இருக்கேன்! நீ என்ன அவங்களைக் கிளம்பச் சொல்கிறாய்?'' என்று அதட்டினார் பூங்கோதை.

''ஹைய்யோ! பாவம் காலேஜில் இருந்து வந்த பொண்ணு ஒண்ணும் சாப்பிடக் கூட இல்லை. என்னை டிராப் பண்றேன் என்று எனக்கு நல்லது செய்வதாக எண்ணி சொன்னாள். அவளைப் போய் எதுக்கு அண்ணி திட்டுறீங்க?'' என்று தனக்கு வக்காலத்து வாங்கிய பானுமதியைப் பார்க்கத் தேன்மொழிக்குப் பெருமையாக இருந்தது.

''இதுதான் ஆன்ட்டி நல்லதுக்கே காலமில்லை என்பது எங்க அம்மாவே என்னைப் புரிஞ்சுக்கலை பாருங்க...''

இது நல்ல கதையாக இருக்கே! தன் பெண்ணை பெற்ற தாய் கேள்வி கேட்பதைத் தட்டி கேட்க ஒரு ஆள். காலேஜில் இருந்து வந்ததும் வராமல், அவரை வீட்டில் டூர் பண்ணட்டுமா என்று கேட்கும் பெண். இவர் களுக்குள் ஒட்டுறவு எப்படி வந்தது?

''என்னவோ அண்ணி, இந்த மாதிரி தடாலடியா எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசும் பெண்ணை நீங்க தான் மெச்சிக்கணும். இவள் நாளைக்குப் போகும் வீட்டில் யாரிடம் எப்படி மொத்து வாங்கப் போகிறாளோ என்ற கவலை எனக்கு எப்போதுமே இருக்கும்...'' என்று மெல்ல தூண்டில் போட்டார் பூங்கோதை.

''யாரிடம் குறை இல்லை என்று நினைக்கறீங்க? மனி தர்கள் எல்லோரிடமுமே நிறை குறைகள் இருக்கத்தான் செய்யும் அண்ணி. அதைப் பெரிது படுத்தாமல் இருக் கணும். எங்க வீட்டுக்கு அனுப்பி வைங்க. எனக்கு பொண்ணு இல்லாத குறையைத் தீர்த்து அவளை நான் என் கண்ணுக்குள் வச்சு பார்த்துப்பேன்...'' என்று அழுத்தம் திருத்தமாக பானுமதி சொல்ல இருவருமே ஒரு கணம் உறைந்தனர்.

''என்ன ரெண்டு பேருமே அமைதி ஆகிட்டீங்க? நான் ஏதாவது தப்பாகச் சொல்லிட்டேனா?'' என்று பரிதாபமாகக் கேட்டார் பானுமதி.

''நீங்க சரியா தான் சொன்னீங்க. ஆனால் இங்கே எங்கள் வீட்டில் தான்... நினைத்தது நடக்காமல்... ஹூம்! வீட்டுல ஒண்ணுக்கு ரெண்டா கல்யாணம் வரும் என்று நினைத்துக் கொண்டு இருந்தால்...'' என்று முடிக்க முடியாமல் நிறுத்தினார் பூங்கோதை.

''எதுக்கு அண்ணி இவ்வளவு பெரிய பெருமூச்சு? பாலா - மேகா கல்யாணம் தான் நிச்சயம் ஆகி விட்டது தானே? அது நல்லபடியா நடக்கும். கவலைப் படா தீங்க.''

''பாலாவுக்கு, தங்கை கல்யாணம் முடித்த பிறகு, தான் கல்யாணம் பண்ணிக்கணும். தேன்மொழிக்கு அம்மா அப்பா பார்த்துச் சொல்லும் பையன் ஓகே. ஆனால் படிப்பு முடிக்கணும். மேகா வீட்டுல உடனே கல்யாணம் முடிக்க அவசரப்படுறாங்க. ஒவ்வொருத்தரும் அவங்க பிடிச்ச முயலுக்கு மூணு கால் என்று பிடிவாதம் பிடித் தால், நான் யாருக்கு என்று பேசுவது? நான் கவலைப் படாமல் எப்படி இருப்பது?'' என்று பூங்கோதை சொல்ல, இந்தப் பிரச்னையை உடனே தீர்க்க வேண்டும் என்ற எண்ணம் பானுமதி மனதில் விழுந்து விதையாய் விழுந்து விருட்சமாய் வளர ஆரம்பித்தது.

''அம்மா! நான் படிப்பை முடிச்சுட்டுக் கல்யாணம் பண்ணிக்கறேன். என்று ஆயிரம் தடவை சொல்லி யாச்சு. மேகா வீட்டுல அவங்க பாட்டி உடனே கல்யாணம் பண்ண அவசரப்படுறாங்க. அவனுக்குப் பிடிச்ச பொண்ணு. ரெண்டு வீட்டிலும் திருமணத்துக்கு சம்மதிச் சாச்சு. என்னைக் காரணம் காட்டி, இவன் ஏன் கல் யாணத்தை தள்ளிப் போடணும்? அவன்தான் அறிவில் லாமல் பேசுகிறான் என்றால் நீங்களும் இது ரெண்டை யும் முடிச்சுப் போட்டால் என்ன அர்த்தம்?''

''ப்ச் தேனு! அவன் சொல்றது சரியா தப்பா என்ற விவாதத்திற்கு நாம் போக வேண்டாம். நீ படிப்பை முடிக்கும் வரை கல்யாணத்தை ஏன் தள்ளிப் போட நினைக்கிறாய்?'' என்று பூங்கோதை இடையிட்டார்.

''என்னதான் நீங்க முகத்தில் அடிச்சாப்புல பேசினாலும், காலையில் எழுந்திரிக்க லேட் ஆனால், படுக்கையில இருந்து எழுந்து அப்படியே காலேஜிற்கு கிளம்பலாம். ஆயிரத்தெட்டு சகஸ்ரநாம அர்ச்சனை பண்ணினாலும், சாப்பிடாமல் போக நீங்க விடுவீங்களா? அவசரத்துக்கு வண்டி ஸ்டார்ட் ஆகலை என்றால் அப்பாவிடம் லிப்ட் கேட்கலாம். காலேஜ் வேலையில் பாதியை பாலா தலையில் கட்டலாம். இதெல்லாம் வேறே எங்கேயாவது போய் உட்கார்ந்தால் நடக்குமா? அதுக்கு தான் ஒரு மாசம் பொறுக்கச் சொல்றேன். போதுமா?''

தேன்மொழி கல்யாணம் செய்து கொள்ள மறுப்பது தான் இங்கே பாலாவுக்கும் மேகாவுக்கும் பிரச்னையாக இருக்கிறதா? இருவரையும் மாறி மாறிப் பார்த்த பானுமதி, ''நீ கல்யாணத்தைத் தள்ளிப் போட 'படிப்பு முடிக்கணும்' என்பது தவிர வேறே ஏதாவது காரணம் இருக்கா தேன்மொழி?'' என்று விசாரித்தார்.

''படிப்பு முடிக்கணும்' என்ற காரணம் போதாதா ஆன்ட்டி?'' என்று கேட்டவளின் குரலில் விவாதம் செய்யும் எண்ணம் இல்லை. விளக்கம் கேட்கும் தொனியே இருந்தது.

''சாதாரண நேரத்தில் போதும். ஆனால் வீட்டுல எல்லோரும் சங்கடப்படுறாங்க என்றால், நாம் கொஞ்சம் விட்டுக் கொடுத்துப் போகலாமே தேனு...'' என்று தணிந்த குரலில் அவளை எப்படியும் சம்மதிக்க வைத்து விடும் நோக்கத்தில் கனிவாகக் கேட்டார் பானுமதி.

அம்மா மாதிரி மடக்கி விடும் வேகத்தில் அதிகாரமாகக் கேட்டு இருந்தால் திருப்பிக் கொடுக்கும் பழக்கம்

இருந்த தேன்மொழிக்கு. இந்தக் குரலும் பாவனையும் புதுசு. பதில் சொல்ல முடியாமல் தடுமாறினாள்.

''நான் என்ன செய்யணும் என்று நினைக்கறீங்க ஆன்ட்டி?''

''இதுக்கு ஒரே வரியில் பதில் சொல்லணும் என்றால், நீ கல்யாணத்திற்குச் சம்மதிக்கணும்'' என்று பட்டென்று பூங்கோதை சொல்ல, ''அம்மா சொல்லும் விதம் கடுமையாக இருப்பது மாதிரி தோன்றினாலும், அது எல்லோருக்குமே நல்லதாக முடியும் தேன்மொழி. நீ ஏன் அதை யோசிக்கக் கூடாதா? நான் உன் சொந்த விஷயத்தில் தலையிடுகிறேன் என்று நினைக்கா விட்டால் ஒன்று சொல்லட்டுமா?'' என்று கேட்ட பானுமதியின் கண்களில் ஆவல் இருந்தது.

''சொல்லுங்க... ஆன்ட்டி...'' என்ற தேன்மொழியின் குரலில் ஒரு எதிர்பார்ப்பு இருந்தது.

''போன வாரமே, உங்க அப்பா தேன்மொழியை தமிழுக்குக் கல்யாணம் பண்ணிக்க சம்மதமா என்று கேட்டார். அப்போதே நான் சம்மதம் சொல்லி இருக்க வேண்டும். நடுவில் அவன் புகுந்து குழப்பி விட்டான். என் பையனுக்கு உன்னைக் கல்யாணம் பண்ணிக்க எனக்கு சம்மதம். உனக்கு சம்மதமா என்று சொல்லு...'' என்று தடாலடியாக பானுமதி கேட்க, அந்த வினாடி தேன்மொழி மட்டுமில்லாமல் பூங்கோதையுமே திகைத்துப் போனார்.



''என் மகனைக் கல்யாணம் செய்து கொள்ளச் சம்மதமா?'' என்ற இந்தக் கேள்வியை இப்படி

தோடியாக பானுமதி கேட்பார் என்பதை தேன்மொழி பூங்கோதை இருவருமே எதிர்பார்க்கவில்லை. மௌனம் சில வினாடிகள் நீடித்தது. இதில் மகளின் அபிப்ராயமே முக்கியம் என்பதால் அவளே பேசட்டும் என்று பூங் கோதை காத்திருக்க, "திடீரென்று இப்படி கேட்டால்... நான்..." என்று பதில் சொல்லத் திணறினாள் தேன் மொழி.

அவள் வெளிப்படையாகவோ உடனடியாகவோ மறுப்பான வார்த்தை சொல்லவில்லை என்பதில் சற்றே நிம்மதி அடைந்த பூங்கோதை, "இது ஒன்றும் திடீர் கேள்வி இல்லை. போன ஞாயிற்றுக் கிழமை ஆரம்பித்த பேச்சு. இன்றும் சொல்லப் போனால் உங்க அப்பா உன்னிடம் இந்தப் பேச்சை ஆரம்பித்து ஒரு மாசத்துக்கு மேலேயே இருக்கும். இப்ப நீ சம்மதம் சொன்னால், அதுதான் கோகிலவும் பாலாவும் தேற்ற நீ செய்யக் கூடிய பெரிய உதவியாக இருக்கும்..." என்று தன் பங்கிற்கு அழுத்தம் கொடுத்தார்.

"பாலாவிற்காக நான் பார்த்தால் எனக்காக யார் பார்ப்பது?" என்றவளின் கேள்வி முடியும் முன்பே, "நான் பார்க்கிறேன் தேன்மொழி" என்று பானுமதியின் குரல் ஒலிக்க இருவரும் திகைப்புடன் திரும்பிப் பார்த்தனர்.

"உன் படிப்புக்கு எந்த இடைஞ்சலும் வராமல் நான் பார்த்துக்கறேன். இந்த படிப்பு மட்டுமில்லை. இதுக்கு மேலே நீ படிக்க ஆசைப்பட்டாலும் நானே படிக்க வைக்கிறேன். நீ உன் அப்பா சொன்ன மாப்பிள்ளையைக் கல்யாணம் பண்ணிக்கப் போவதாகத் தானே சொல் கிறாய்? அது என் தம்பிக்காக இருக்கக் கூடாதா? தனியாக

கல்யாணம் பண்ணிக்கோ என்று முதலில் கேட்டதே உன்னோட அப்பாதானே?" என்று பானுமதி வைத்த அனுசரணையான வாதம் அவளை அசைத்துப் பார்த்தது.

அப்பா ஒரு மாசம் முன்னரேலேயே சொன்னார். ஆனால் அவன் வேறு யாரையோ... ம்ஹூம்! அது தனக்காக சொன்ன பொய்யாக இருக்கலாமோ? இல்லை இல்லை என்று தான் திருப்பி கேட்டபோது, என் ரகசியத்தை நான் ஏன் உன்னிடம் சொல்ல வேண்டும் என்று கேட்டானே? அவன் என்ன நினைக்கிறான் என்று எப்படி கணிப்பது? தனக்குள் அவள் வாத பிரதி வாதங்கள் நடத்திக் கொண்டு இருக்க, பூங்கோதை மகளின் முடிவை எதிர்நோக்கி அமைதியாக காத்திருக்க, பானுமதியே பேச்சைத் தொடர்ந்தார்.

"ரொம்ப யோசிக்காதே தேனு. என் பையனைப் பற்றி நானே பெருமையாகச் சொல்லக்கூடாது. அவனுடைய பதினெட்டு வயதில் அவர் இறந்த பிறகு, எனக்கு விபரம் போதாது என்று என்னை தனியா விட்டு வெளிநாடு போக மனமின்றி மதுரையில் படித்தவன். இப்போதும் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகும் பெண் எனக்குப் பிடிக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருப்பவன். அவன் ரொம்ப நல்லவன் தேனு..."

"நான் இல்லை என்று சொல்லவில்லை ஆன்ட்டி... ஆனால்..."

"ஆனால் என்ன தேன்மொழி? தமிழை நீ கல்யாணம் செய்து கொண்டு எங்க வீட்டிற்கு மருமகளாய், இல்லை... நீ மகளாய் வா. உன்னை நான் என் பொண்ணு மாதிரி பார்த்துக் கொள்வேன். உனக்கு என்மேல் நம்பிக்கை

இருந்தால், இப்பவே கல்யாணத்திற்கு சம்மதம் சொல்லு...'' என்று பானுமதி ஆனித்தரமாக வாதாட, பூங்கோதை வியப்புடன் பார்த்தார்.

பானுமதியின் உணர்வுப் பூர்வமான வார்த்தைகள் தேன்மொழியை மட்டும் இல்லாமல் பூங்கோதையையும் அசைத்துப் பார்த்தது.

''நான் சம்மதம் சொல்லி பிரயோஜனம் இல்லையே ஆன்ட்டி. அன்று தமிழ் தானே அப்பாவிடம் மறுத்தது?'' என்றவளின் குரல் வெளியே எழும்பவே இல்லை.

''தமிழ் சம்மதம் தானே வேண்டும்? இதோ நீயே உன் காதால் கேட்டுக்கோ'' என்று கையில் இருந்த அலை பேசியில் தமிழை அழைத்து விட்டு ஸ்பீக்கரில் போட்டார்.

''தமிழ்... ஒரு இரண்டு நிமிஷம் பேசலாமா?'' என்ற பானுமதியின் கேள்வி முடியும் முன்பே அவனின் குரல் இடைமிட்டது.

''அம்மா, இவ்வளவு நேரம் ஏன் போனை எடுக்கலை? வீட்டுக்குப் போய் இருப்பீங்க என்று அங்கே போட்டால் அங்கேயும் எடுக்கலை. மொபைலையும் எடுக்கலை. என்ன ஆச்சு?'' என்று கவலையாக விசாரித்தான் தமிழ் வேந்தன்.

''ஒரு சின்ன பிரச்னை தமிழ். நான் கேட்பதற்கு பதில் சொல்லு...''

''என்ன ஆச்சும்மா...?'' என்ற தமிழின் பதட்டம், ''உன் கல்யாணத்தை முடிவு பண்ணும் உரிமை எனக்கு இருக்கா தமிழ்?'' என்ற அம்மாவின் கேள்வியைக் கேட்டதும் அடங்கியது.

''இதென்னமா கேள்வி? அந்த உரிமை உங்களுக்கு மட்டும் தான் இருக்கு. என்ன சந்தேகம்?'' என்றவன் காதுகள் கூர்மையாக சுற்றுப் புறத்தை கவனிக்க முயன்றது. சத்தம் எதுவும் இல்லை. அப்படி என்றால் அவர் வெளியில் இல்லை. இப்ப வீட்டு லைனுக்கு முயன்றபோது அவர் எடுக்கவில்லை. அதைத் தவிர வேறு வீடு என்றால், விஜய் அங்கிளின் வீடாகத்தான் இருக்க வேண்டும். அவசரமாக கணக்குப் போட்டவனின் முகம் மலர்ந்தது.

''நான் சொல்லும் பெண்ணை நீ கேள்வி கேட்காமல் கல்யாணம் பண்ணிக் கொள்வாய் தானே?'' என்று சொன்ன அம்மாவின் குரலில் இருந்த தீவிரம் யோசிக்க வைத்தது.

''அம்மா நீ..ங்...க... எ..ங்..கே இருக்கீங்க?''

''அது எதுக்கு உனக்கு? நான் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லு...''

''நீங்க சொல்லும் பெண் எனக்குப் பிடித்து இருந்தால் பண்ணிக் கொள்வேன்...'' என்றவன் குரலில் குதூகலத்தோடு கூடிய சம்மதம் இருந்தது.

''உனக்கு தேன் மொழியைப் பிடிச்சு இருக்கா?'' என்ற அம்மாவின் கேள்வியில் துள்ளாட்டம் போட முயன்ற மனதை அடக்கி, ''எதுக்கும்மா இந்தக் கேள்வி...?'' என்று விசாரிக்க முயன்றான். 'தமிழ் உடனே சரி என்று சொல்லி ரொம்ப வழிவது போல இருக்கக் கூடாது. இது முழுக்க முழுக்க அம்மா ஏற்பாடு செய்தது மாதிரியே இருக்கட்டும். அதுதான் தேன்மொழி பின்னால் கேள்வி கேட்டால் சமாளிக்க உதவும்.

"பிடிச்சிருக்கு பிடிக்கலை இரண்டில் ஒரு பதில் மட்டும் சொல்லு. எதிர்க் கேள்வி கேட்காதே!" என்று கறாராக பானுமதி அதட்ட, 'பிடிச்சிருக்கு!' என்று தமிழ்வேந்தன் அழுத்தமாகச் சொல்ல மூவரின் முகத்திலும் முறுவல் பெரிதாகப் படர்ந்தது.

ஏற்கனவே இரு புறமும் ஊசலாடிக் கொண்டு இருந்த நெஞ்சத்தில், தமிழின் அழுத்தமான 'பிடிச்சிருக்கு' என்ற வார்த்தை அவள் புறம் முழுமையாக சாய்த்து விட்டது என்பதை தேன்மொழி அப்போது உணரவில்லை.

"உங்க அப்பா ஓகே சொல்லியாச்சு. எனக்கு சம்மதம். என் பையனுக்கு சம்மதம். இனி நீதான் முடிவு சொல்லணும்..." என்று அலைபேசி இணைப்பைத் துண்டித்த பானுமதி கேட்க, அவள் முகத்தில் குழப்பத்தை மீறி ஒரு மலர்ச்சி இருந்ததை பூங்கோதை கணித்தார்.

"தேன்மொழிக்குப் பிடிக்காமல் இருந்தால் வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்று எதையும் முகத்திற்கு நேரே பேசி விடும் பழக்கம் உண்டு. என்று முழுங்கும் பழக்கம் கிடையாது. அவள் முக தாட்சண்யம் பார்க்கும் ஒரே ஆள் அவங்க அப்பாதான். அதனால் இந்தத் திருமணத்தில் சம்மதம் என்று கொள்ளலாம் அண்ணி. என்ன நேனு சொல்ற?" என்று அவளிடம் காயை நகர்த்தினார் பூங்கோதை.

"இந்த மாதிரி முக்கியமான விஷயத்தில் ஜகம் எல்லாம் வேண்டாம் அண்ணி. மனசில் இருப்பதை தமிழ் சொன்ன மாதிரி நீயும் பளிச் என்று சொல்லு தேன்மொழி. உனக்கு என்னையும், தமிழையும் பிடித்து இருக்கா?" என்று பானுமதி கேட்டார்.

முதல் பாதிக்கு சிரமம் இல்லாமல் 'ஆம்' என்று சொல்லி விடலாம். பின்பாதிக்குத் தெரியவில்லை. ஆனால், தான் சம்மதம் என்று சொன்னால், மகிழும் உள்ளங்கள் எத்தனை என்ற எண்ணம் தோன்ற மறுப்பான பதிலை அவளால் சொல்ல முடியவில்லை.

"எனக்கு உங்களைப் பிடிச்சு தான் இருக்கு ஆன்ட்டி..." என்று தினறியவளின் முன் பாதி வாக்கியம் தொண்டைக்குள் அடைபட, பின்பாதி வாக்கியத்தில் காதில் விழுந்ததால் இரண்டு அம்மாக்களின் முகமுமே பெரிதாக மலர்ந்தது.

"நான் ஜோசியரிடம் போய் விட்டு வந்து, கொஞ்சம் முன்னாடி என்ன சொன்னேன் அண்ணி? இன்னாருக்கு இன்னார் என்று நாம் இன்றைக்கு முடிவு பண்ணுவதில்லை. மேலே ஒருத்தன் உட்கார்ந்து ஒரு ஆள் பிறக்கும்போது அவங்க தலையில் எழுதி வைத்து விடுவான்..." என்று பானுமதியும்,

"எனக்கு தமிழைப் பார்த்த போதே முதல் முறை பார்ப்பது மாதிரி தோன்றவில்லை. ரொம்ப நெருங்கிய உறவைப் பார்ப்பது மாதிரி தோன்றியது. சில சமயங்களில் உள்ளுணர்வு சொல்வது பொய்க்காது அண்ணி" என்று பூங்கோதையும் குதூகலிக்க, அதற்கு மேல் மறுத்துப் பேச அவளுக்கு வாய் வரவில்லை.

'ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன்' என்று தன் அப்பாவிடம் வெளிப்படையாகச் சொன்ன அவனே அவன் மனசை மாற்றி 'தன்னைப் பிடித்து இருக்கு' என்று அவன் அம்மாவுக்காக சொல்லும்போது, தான் 'பாலாவுக்காக... அப்பா அம்மாவுக்காக...' என்று சம்மதம்

சொன்னால் என்ன என்ற எண்ணம் தோன்ற, அவள் அமைதியானாள்.

''கொஞ்சம் இருங்கண்ணி, நான் ஏதாவது ஸ்வீட் செய்றேன். சாப்பிட்டுட்டுப் போகலாம்...'' என்று பூங்கோதை அடுப்படிக்குள் செல்ல முயல, அவரின் கை பற்றி நிறுத்தினார்.

''இல்லண்ணி, நான் கிளம்பறேன். இப்ப போனில் பேசியதால், தமிழ் வீட்டுக்கு வந்து விடுவான். நம்ம வீட்டில் சாப்பிடுவதற்கு என்ன கணக்கு? குங்குமம் எடுத்துட்டு வா தேனு. உனக்கு வச்சுட்டு நான் கிளம்ப றேன். பயப்படாதே. உன் கன்னத்தில் கறை ஆக்காமல் வைத்து விடுகிறேன்'' என்று புன்னகை செய்ய அவ னுக்கு 'கன்னத்தில் என்ன காயம்?' என்று பதறிய தமிழின் முகம் ஒரு வினாடி மின்னி மறைந்தது.

''நல்லவன் தான்... ஆனால்...'' என்று மனதிற்குள் ஓடிய சிந்தனைக்கு பூங்கோதையின் குரல் கடிவாள மிட்டது.

''என்ன தேனு...? அத்தை சொல்றாங்க இல்ல? அப்படியே நின்று கொண்டே தூங்குகிறாய்? குங்குமம் எடுத்துட்டு வா. அப்படியே அவங்களை வீட்டில் கொண்டு போய் விட்டுட்டு வா. அவங்க இந்நேரத்திற்கு மேல் தனியாகப் போக வேண்டாம்...'' என்ற பூங்கோதை யின் அதட்டலில் அடுத்த சில நிமிடங்களில் பானு மதியும் தேன்மொழியும் காரில் இருந்தனர்.

''நீங்க சென்னைக்கு வந்து எவ்வளவு நாளாச்சு ஆன்ட்டி...?'' என்று இயல்பாகக் கேட்டபடி காரைக் கிளப்ப, அவர் அவளின் காரோட்டும் திறமையைப் பார்த்து ரசித்தார்.

''தமிழ் இங்கே வந்து நாலு வருஷமாச்சு. நான் வந்து இரண்டு வருஷமாச்சு. கார் ரொம்ப நல்லா இருக்கு. நீயும் நல்லா ஓட்டுற. ஒண்ணு வாங்கிக்கச் சொன்னால் தமிழ் வாங்க மாட்டேங்கறேன்...'' என்று முடிக்கும் முன்பே அவருக்கு ஒத்து ஊதினாள் தேன்மொழி.

''பாலாவும் இதே கேஸ் தான். ஒரு டாக்டர் கார் வாங்கிக்கக் கூடாதா? அம்மா சொல்லிச் சொல்லிப் பார்த்து விட்டுட்டாங்க. வாங்க மாட்டேன் என்று சாதிக் கிறான். இந்த பசங்களுக்கு பைக் ஓட்டுறது ஸ்டைல் என்று நினைப்பு. சைட் அடிக்க அதுதான் வசதி...'' என்று அவள் சொன்ன வாக்கியத்தின் பின் பாதியை அவர் காதில் வாங்கவில்லை.

''ஸ்டைல் இல்லை தேனு. ஒருத்தர் போறதுக்கு எதுக்கு கார்? மூன்று பேர் அல்லது அதற்கு மேல் போனால் தான் கார் எடுக்கணும். ஒருத்தர் ரெண்டு பேர் போக பைக் போதும் என்பது தமிழின் பாலிசி...'' என்று அவர் சொன்னது அவளை புருவம் உயர்த்த வைத்தது. நல்ல பாலிசிதான். எந்த ஒரு நாணயத்துக்கும் மறுபக்கம் இருக்கும் என்பதற்கான சான்று.

''தமிழ் சொல்றது கரெக்ட் தான் ஆன்ட்டி, எப்போ போவோம் எப்போ வருவோம் என்று தெரியாத போது பைக் வைத்துக் கொள்வது வசதி. ட்ராபிக் கம்மியாகும். பெட்ரோல் சேமிப்பு இருக்கும்'' என்று முதன் முறை யாக அவனின் கருத்துக்கு வெளிப்படையாக ஒப்புதலை தெரிவித்தவள், பேச்சு வாக்கில் நேராக போக, பானுமதி பதறினார்.

''என்ன நீ நேரா போகிறாய்? இடப்பக்கம் திரும்பி னால், மூன்றாவது பில்டிங். எங்க வீடு உனக்குத்

தெரியாதா?'' என்று கேட்டவரின் குரலில் வியப்பு இருந்தது.

''உங்க வீட்டுக்கு இப்பதானே ஆன்ட்டி முதல் முறை வருகிறேன். எனக்கு எப்படித் தெரியும்? எம்.ஆர்.சி. நகர் என்று பாலா சொல்லித் தெரியும்'' என்று சொல்ல எழுந்த சந்தேகம் அதே வேகத்தில் மறைந்தது.

''அதுவும் பாலா சொல்லித் தானா? தமிழ் சொல்லலையா?'' என்று அவர் கேட்டது காதில் விழ தமிழின் பைக் பாலிசியை விட்டு வெளியே வரவில்லை.

''கல்யாணம் ஆகி, அம்மா, மனைவி ரெண்டு பேரையும் கூட்டிட்டுப் போகணும் என்றால் என்ன செய்வார்?'' என்று கேட்ட பின் ஏன் கேட்டோம் என்று தோன்றியது.

''அதைப் பற்றி நீ கவலைப் படாதே! கல்யாணப் பேச்சு ஆரம்பித்து விட்டால், கல்யாணம் நடப்பதற்கு முன்பே கார் வாங்கி விடுவேன் என்று ஏற்கனவே சொல்லி இருக்கான். ஆனால் அது வரத் தாமதமானாலும் கூட, நான் போட்டிக்கு நிற்க மாட்டேன். நான் வீட்டில் இருந்து விடுவேன். இந்த பில்டிங் தான் தேனு...'' என்று பானுமதி கை காட்டிய கட்டிடத்திற்குள் செலுத்தி ஓரமாக நிறுத்த, அவர் காரில் இருந்து இறங்கும்போதே, நண்டும் சிண்டுமாய், மூன்றில் இருந்து எட்டு வயதுக்குள் இருக்கக் கூடிய ஒரு மழலையர் பட்டாளம் ஓடி வந்தது.

''பாட்டி...! நீங்க காரில் வந்து இறங்குறீங்க?'' ''இது புது காரா...?'' ''நீங்க கார் வாங்கிட்டீங்களா? ஸ்வீட் எங்கே?'' ''எனக்கு ஸ்ட்ராபெரி பபிள்கம்...'' ''இது உங்க

வீட்டுக்கு வந்த ஆன்ட்டியா?'' என்று ஆளுக்கு ஒரு கேள்வி கேட்டபடி அவரை சூழ்ந்து கொள்ள அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

''இது ஆன்ட்டி கார், என்னைக் கொண்டு வந்து விட வந்தாங்க. கார் வாங்கின பிறகு ஸ்வீட் தரேன். என்ன கலர் வாங்கலாம் என்று நீங்க யோசிச்சு சொல்லுங்க. நாளைக்கு தமிழ் சாக்லேட் தருவான். இப்ப போய் ஜாக்கிரதையா விளையாடுங்க'' என்று அவர்களுக்குத் தகுந்த மாதிரி பேசிய பானுமதியைப் பார்க்க அவளுக்கு தெவிட்டவில்லை. சென்னையில் இப்படி எல்லாம் நடக்குமா? குழந்தைகள் என்றுமே கொண்டாடும் இடத்தில்! இவர்களை போலவே தான் அவனும் இருக்கிறான். இவர்களுக்குக் கோபமே வராதா?

''என்ன தேனு... அங்கேயே நின்று என்ன பார்த்துக் கொண்டு இருக்கிறாய்? வா...'' என்று அழைத்த பானுமதியை நோக்கி புன்னகையோடு நடந்தாள்.

''உங்க மனசு மாதிரியே இந்தக் கட்டிடமும் உயரமா இருக்கோ என்று பார்த்தேன்...'' என்று கண் சிமிட்ட, 'பொய்...' என்று சிரித்தார்.

''பரவாயில்லையே கண்டு பிடிச்சுட்டீங்களே? நீங்க எத்தனையாவது மாடியில் இருப்பீங்க? கரண்ட் இல்லை என்றால் என்ன செய்வீங்க என்று யோசித்தேன் ஆன்ட்டி...'' என்று சிரித்தாள்.

''நம் வீடு முதல் மாடியில் தான். கரண்ட் போனாலும் கவலை இல்லை, படி ஏறிப் போய் விடலாம். கரண்ட் போனாலும் லிப்ட் உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகளுக்கு ஜெனரேட்டர் இருக்கு'' என்று சொன்னபடி

''ஹலோ... வாங்க வாங்க...'' என்ற தமிழின் உற்சாகக் குரல் காதில் விழ 'தமிழ்... வீட்டுல இருக்கிறாரா?'' என்று கேட்டபடி அவசரமாகத் திரும்பி பானுமதியைப் பார்க்க அவர் சந்தோஷமாகச் சிரித்தார்.



''தமிழ் வீட்டிலா இருக்கிறார்?'' என்ற தேன்மொழியைப் பார்த்துச் சிரித்தார் பானுமதி.

''அவன் குரல் கேட்பதை வச்சுச் சொல்றியா? இல்லைடா! தமிழ் வீட்டுல இருந்தால் கதவு எப்படி பூட்டி இருக்கும்? காலிங் பெல் மேலே வச்சு இருப்ப. எல்லோரும் என்னென்னவோ சத்தத்தில் மணி வைத்தால், எங்க வீட்டில் அவன் குரலிலேயே அழைப்பு மணி ஒலிக்க செய்து இருக்கிறான். நான் சொல்வதற்கு முன்னாடி அவனே உன்னை வரவேற்று விட்டால். வா வா, வலது கால் எடுத்து வச்சு வா...'' என்று முகம் சந்தோஷத்தில் மலர வரவேற்றார் பானுமதி.

''ஓ!...'' என்று ஒற்றை சொல்லில் முடித்தவளுக்குள் ஏமாற்றம் பரவ, அவளின் கண்கள் ஹால் ஷோ கேசில் அடுக்கி வைத்து இருந்த கோப்பைகளில் பதிந்தது.

''என்ன ஆன்ட்டி இத்தனை ஷீல்ட் வச்சு இருக்கீங்க? எல்லாம் போட்டியில் ஜெயித்ததா? இல்லை...'' என்று கேலியாக கேட்டவளுக்கு அவர் பதில் சொல்ல வில்லை.

''வீட்டில் பால் மட்டும் தானே குடித்தாய். என்ன சாப்பிடுகிறாய்? தோசை ஊத்தட்டுமா? தயங்காமல்

செய்த பால் கொழுக்கட்டை இருக்கு. உனக்குப் பிடிக்குமா? சூடு பண்ணி தருகிறேன்...'' என்று உபசரணையில் இறங்கினார் பானுமதி.

''பால் கொழுக்கட்டை என்றால் ஸ்வீட் தானே ஆன்ட்டி? முதலில் ஸ்வீட் சாப்பிட்டு விட்டால் அப்புறம் பசிக்காது. டிபன் பாக்ஸில் போட்டுக் கொடுங்க. அம்மா அடை என்று சொன்னாங்க. டிபன் வீட்டில் போய் சாப்பிடுறேன்'' என்று கிளம்ப முயற்சித்தாள்.

''என்னம்மா இது உள்ளே கூட வராமல் வாசலோடு கிளம்புகிறாயா? இவன் எப்போ வரான் என்று தெரியலை. வீட்டைப் பாரேன்'' என்று கேட்க அவள் மறுப்பாக தலை அசைத்தாள்.

''இல்லை வேண்டாம் ஆன்ட்டி. இன்னொரு நாள் வரேன். மெல்ல பார்த்துக்கறேன்'' என்று நழுவியவளின் தயக்கம் அவருக்குப் புரியவில்லை.

''ரொம்ப நாள் லேட் பண்ண வேண்டாம் பத்து பதினைந்து நாளிலேயே கூட கல்யாணம் முடிக்கலாம் என்று என்று அம்மாவிடம் சொன்னேன். நீ காலேஜுக்கு ரொம்ப நாள் லீவு கூட போட வேண்டாம். ஒன்று இரண்டு நாட்கள் போட்டால் போதும். நீ நிரந்தரமா இங்கே வரும் நாளை எதிர்பார்த்துட்டே இருக்கேன். சீக்கிரம் வந்துடு. ஓகே?'' என்று அவளின் கன்னத்தை வருடி ஆசையுடன் கேட்டவருக்கு ஒரு புன்னகையை பதிலாகக் கொடுத்துவிட்டு, ''ஜாக்கிரதை. கதவை பூட்டிக்கோங்க'' என்று கிளம்பினாள்.

முதலில் மேகாவிற்கு போன் பண்ணி உன் கல்யாணம் உடனே வருகிறது என்று சொன்னால்

சந்தோஷப்படுவாள். போகும் வழியில் கிளினிக் போய் பார்த்துச் சொல்லிட்டுப் போகலாமா? ஸ்வீட் வேண்டாம். ஜஸ்க்ரீம் பேமிலி பேக் வாங்கலாம். அதுவும் ஒரு ஜஸ்க்ரீம் பைத்தியம் என்று எண்ணியபடி வீட்டில் இருந்து வெளியே வந்தாள்.

அந்த ஜஸ்க்ரீம் பார்லருக்கு நேர் எதிரே கார் நிறுத்த இடம் இருக்காது என்பதால் கிடைத்த இடத்தில நிறுத்தி விட்டு, நூறடி தூரம் இருந்த அந்த பார்லருக்கு நடந்து சென்ற போது, அங்கே அந்த பார்லர் வாசலில் நின்று இருந்த இரண்டு பைக்கில் இருந்த அந்த நாலு பேரைப் பார்த்ததும் அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

தமிழா? தமிழின் பைக்கில்... மேகாவின் பாட்டி? அவருக்கு இவனை எப்படித் தெரியும்? முதலில் இவன் சிகார்டிங்கிற்கு போனதாக தானே பானு ஆன்ட்டி சொன்னார்கள்? இவன் இங்கே என்ன பண்ணுகிறான்? இன்னொரு பைக்கில் பாலாஜியும் மேகாவும். இரண்டு மணி நேரம் முன்னால் அப்படி தன்னிடம் பெசன்ட் நகர் பீச்சில், 'பாலாஜி தன்னை திட்டி விட்டான்' என்ற ரீதியில் அழுது கரைந்தவள், இப்படி முகம் முழுக்க சிரிப்புடன் இழைந்து கொண்டு இருந்தால் என்ன அர்த்தம்?

அவள் நின்ற இடத்தில் சிலையாக சமைந்து இருக்க, அவளை பைக்கின் பக்கவாட்டுக் கண்ணாடியில் முதலில் பார்த்தது தமிழ் தான், "ஹேய்! நீ எப்ப வந்தாய்? ஏன் அங்கேயே நின்று விட்டாய்?" என்று திருப்பி முக மலர்ச்சியோடு கை அசைத்து அழைத்தான்.

பின்னால் ஏறி இருந்த பாட்டியை இறங்கச் சொல்வது கடினம் என்பதால் அமர்ந்த வாக்கிலேயே கை அசைத்து அழைத்தவனை நோக்கி நடக்கப் பிடிக்கவில்லை என்றாலும் என்ன சொல்லி மறுப்பது என்று புரியாததால் அவனை நோக்கி நடந்தவளை, பைக்கில் இருந்து இறங்கி வந்த மேகா கட்டி அணைத்து முத்தமிட்டு நன்றியைத் தெரிவித்தாள்.

"பயங்கரமான ஆள் தான் தேனு நீ. எல்லோர் வாயில் இருந்தும் உண்மையை வரவழைக்கும் நீ மட்டும் யாரிடமும் வாயைத் திறந்து விடாதே. கள்ளி..." என்று அவளின் கன்னத்தைச் செல்லமாகக் கிள்ளவும் செய்ய அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை.

"என்ன பாலாவோட சமாதானம் ஆகியாச்சா? ரெண்டு மணிநேரம் முன்னால் அப்படி கண்ணைக் கசக்கினாய்? இப்ப எப்படி சரியாச்சு? அதுவும் உங்க பாட்டி தமிழோட பைக்கில் எனக்கு ஒண்ணுமே புரியலை. என்ன நடக்குது இங்கே?" என்று கேட்டாள் தேன் மொழி.

"இவ்வளவு நடந்த பின்னும் இந்த மிரட்டல் மட்டும் குறையவே இல்லையே? எப்படி தேனு? பாட்டிமிடம் தமிழ் எல்லா விஷயமும் சொல்லியாச்சு. நீ ஒன்றும் பூசி மொழுக வேண்டாம். ஓகே?" என்று மேகா.

"சரி விடு. இப்பவாவது சம்மதம் சொல்ல மனசு வந்ததே அவளுக்கு. அதுக்கே அவளுக்கு மெரீனா பீச்சில் ஒரு சிலை வைக்கணும்" என்று கிண்டலாக அவளின் பாட்டி.

"அப்பாவின் ஒரு மாத கால வேண்டுகோளை பரிசீலித்து ஏற்றுக் கொண்டதற்கு, தேங்க்ஸ் மிஸ் தேன்

மொழி...'' என்று சிரம் தாழ்த்தி பாலாஜியும் சொல்ல அவர்களை மாறி மாறிப் பார்த்தாள் தேன்மொழி.

''இவங்க எல்லாம் என்ன பேசிக்கிறாங்க? உங்களுக்கு ஏதாவது புரியுதா?'' என்று எரிச்சலுடன் தமிழைப் பார்த்துக் கேட்க அவன் வசீகரமாகப் புன்னகைத்தான்.

''நீ என்னைக் கல்யாணம் பண்ணிக்க சம்மதம் சொன்னதை அவரவர் பாணியில் அங்கீகரிக்கிறார்கள். நீ சம்மதம் சொன்னதாக அவர்கள் நினைப்பது உண்மை தானே? அதில் மாற்றம் இல்லையே?'' என்று கேட்டவனை, 'என்ன கிண்டலா?' என்று முடியைப் பிடித்து உலுக்க வேண்டும் போல இருந்தது.

''உங்க அம்மா வீட்டுல தனியா காத்திருக்காங்க. ஸ்வீட்டா பால் கொழுக்கட்டை பண்ணி வச்சு இருக்காங்க. அதை...'' வாயில் வச்சு அடைச்சுக்கோ என்று சொல்ல நினைத்தவள் பாதியில் நிறுத்தினாள்.

''வருங்கால மாமியார் மீது எவ்வளவு அக்கறை பார்? நீ அம்மாவைப் பற்றி ஏதாவது கேட்டாயா?'' என்று பாலாஜி மேகாவை சீண்ட,

''அட! பரவாயில்லையே, தேன்மொழி கூட இவ்வளவு பொறுப்பா நடந்துக்கறாளே! என் கண்ணே படப் போகுது. தமிழ், நான் தேன்மொழியோட காரில் போகிறேன். எனக்கு பைக் சரி வராது. என்ன தேன்மொழி கொண்டு போய் வீட்டில் விடுவாய் தானே? வா மேகா...'' என்று அவளையும் காருக்கு அழைக்க, பாலா மேகா முகமும் வாடியது.

''பாட்டி, மேகாவை பாலா இன்விடேஷன் மாடல் பார்க்க அழைச்சுட்டுப் போறேன் என்று சொன்னானே?

மறந்துட்டீங்களா? சீக்கிரம் கல்யாணம் நடக்கணும் என்று ஆசைப் பட்டால் மட்டும் போதுமா? ஆளுக்கு ஒரு வேலை பார்த்தால் தானே ஆகும்?'' என்ற தமிழை ''நீ நல்லா பேசக் கத்துக்கிட்டா...'' என்று அவன் கன்னத்தில் லேசாக இடிக்க, மேகா கண் ஜாடையில் தேன்மொழியை சுட்டிக் காட்டி, ''ட்ரெயினிங் யாரு?'' என்று கண் சிமிட்ட சிரிப்பலை எழுந்தது.

''சரி. ஒரு மணி நேரம் தான் உனக்கு டைம். சரியா ஒன்பதரை மணிக்குக் கொண்டு வந்து வீட்டில் விட்டுட்டுப் போகணும். சொல்லிட்டேன். ஜாக்கிரதை'' என்று பாலாஜியிடமும் மேகாவிடமும் கட்டளையிட்டவர். தேன்மொழியிடம் திரும்பி, 'போகலாமா' என்று கேட்க 'நான் என்ன உங்களுக்கு டிரைவரா?' என்று கேட்க பொங்கிய எரிச்சலை தமிழின் முகத்தைப் பார்த்து அடக்கினாள்.

''வாங்க பாட்டி, நான் கொண்டு போய் காரில் உட்கார வைக்கிறேன்...'' என்று சொன்னபடி பாலாஜியும் மேகாவும் ஆளுக்கொரு புறம் கை பற்றி அவரை காருக்கு அழைத்துச் செல்லும் சாக்கில் அவர்களுக்கு தனிமை கொடுத்தார்கள்.

''உன் முகத்தைப் பார்த்தால் ரொம்ப டயர்டா இருக்கிற மாதிரி இருக்கு. ஆனால் பார்ட்டிக்கு வயசாகி விட்டதால் பைக்கில் உட்கார சங்கடப்படுறாங்க. அதனால் காரில் நீ கொண்டு போய்...'' என்று பொதுவாக பேச்சை ஆரம்பித்தான் தமிழ்.

''இப்ப நான் வந்திருக்கா விட்டால் உங்களோடு வந்து இருப்பாங்க தானே?'' என்றவளின் குரலில் எரிச்சல்

இருந்தது. தமிழுக்கு அவளின் மனநிலை புரிந்தது. தன்னை திருமணம் செய்து கொள்ள அம்மாவிடம் சம்மதம் சொல்வதற்கு முன்னால் அவளுக்குள் எத்தனை மனப் போராட்டங்கள் நடந்ததோ?

''அப்படி இல்லை. நீ பைக் ஓட்டுவாய் என்றால்... இதை எடுத்துட்டுப் போ... நான் இவங்களைக் கொண்டு போய் அவங்க வீட்டில் விட்டுட்டு வந்து உங்க வீட்டில் பைக் எடுத்துக்கறேன்... எனக்குச் சிரமமில்லை...'' என்று பைக் சாவியை நீட்டியவனுக்கு அவளின் மனநிலை புரிந்ததால் தணிந்தே போனான்.

''என் வாகனத்தை எப்போதும் யாரிடமும் கொடுப்பதில்லை. நானே கொண்டு போய் பாட்டியை விடுகிறேன். உங்களுக்காக செய்கிறேன் என்று நினைத்துக் கொள்ள வேண்டாம். இது மேகாவிற்காக...'' என்று அழுத்தமாகச் சொல்ல அவன் முகம் மலர்ந்தது.

''தேங்க்ஸ். காலேஜில் இருந்து வந்ததில் இருந்து நிறைய வேலை போல. அம்மாவை வேறு வீட்டில் கொண்டு போய் விட்டாய் என்று நினைக்கிறேன்...''

''என்னைப் பற்றி... என் வேலை பளு பற்றி எல்லாம் நீங்க கவலைப்பட வேண்டாம். நீங்க உங்க வேலையை மட்டும் பாருங்க'' என்று சொல்லி விட்டுத் திரும்பிய வளின் கை பற்றி நிறுத்தி, 'ஒரே நிமிஷம் ப்ளீஸ்...' என்று சொன்னான் தமிழ்.

''என்ன? எதுவா இருந்தாலும் கையை விட்டுட்டுச் சொல்லுங்க...'' என்று வார்த்தைகளை கடித்துத் துப்பிய வளைப் பார்த்துப் புன்னகைத்தான்.

''நீ என் மேல் கோபப்படுவதில் அர்த்தமே இல்லை. நான் இந்தக் கல்யாணப் பேச்சை ஆரம்பிக்கவும்

இல்லை. முடிக்கவும் இல்லை. ரெண்டுமே செய்தது நீ தான்...''

''போதும்! அது முடிஞ்சு போன கதை. அதைப் பற்றிப் பேச எனக்கு விருப்பமில்லை. வேறே ஏதாவது பேசணும் என்றால் பேசுங்க. இல்லை என்றால் நான் கிளம்புகிறேன்.''

''பேச நிறைய இருக்கு. நான் வீட்டுக்குப் போன பிறகு பத்து மணிக்கு மேலே போனில் அழைக்கிறேன். அப்ப பேசலாம் தேன்மொழி...'' என்றவனை முறைத்து விட்டுத் திரும்பியவளின் கை இன்னும் அவன் பிடியிலேயே இருந்தது.

''கையை விடுங்க...''

''நான் இன்னும் பேசி முடிக்கலையே?''

''அங்கே பாட்டி காத்திருக்காங்க...''

''பாட்டிக்காக சொன்னாயா? அப்ப விட வேண்டியது தான். அம்மா உனக்கு கொழுக்கட்டை'' என்று சிரிப்போடு ஆரம்பித்த தமிழைப் பார்த்தவள் கண்களில் கனல் பறந்தது.

''சாரி சாரி! அப்படி முறைக்காதே! ஐ மீன்... கொழுக்கட்டை கொடுத்து வாயை அடைக்க வேண்டும் என்று நீ சொன்ன அதே அர்த்தத்தில் நான் சொல்லவில்லை. முதன் முதலில் வீட்டுக்கு வந்த 'மகளுக்கு...' ஏதாவது சாப்பிடக் கொடுத்தாங்களா என்ற அர்த்தத்தில் கேட்டேன்...'' என்று உரிய ஏற்ற இறக்கங்களுடன் பாவனையோடு சொன்ன தமிழிடம் மேலும் வாக்குவாதம் செய்ய பொறுமை இல்லாமல் காரை நோக்கி நடந்தாள் தேன்மொழி.

தனக்கு அவனைத் திருமணம் செய்து கொள்வதில் விருப்பம் இல்லை என்று இப்போ யாரிடமும் சொல்லக் கூட முடியாதே? அதனால் அவனிடம் பேசும் போது மட்டும் தன் எரிச்சலை முடிந்த அளவு வெளிப்படுத்த அவன் அதை ஒரு ஆர்வத்துடன், சவாலாக ஏற்று சந்தோஷமாகச் சமாளித்தான்.

பாட்டியை வீட்டில் இறக்கி விட்டு, அவள் வீட்டுக்குப் போவதற்கு முன்பே, அம்மாவும் அப்பாவும் கலந்து பேசி, பதினைந்தே நாட்களில் வடபழனி கோவிலில் திருமணம் செய்ய, முடிவு பண்ணியது மட்டும் இல்லாமல் கோவிலிலும் அதற்கான ஏற்பாடுகள் செய்யச் சொல்லி இருந்தார்கள்.

அந்த அதிர்ச்சியை ஜீரணித்து முடியும் முன்னால், அடுத்த அரை மணி நேரத்தில் வந்த பாலாஜி, ஐந்து மாடல் திருமண அழைப்புகளுடன் வந்து, "இதி ரெண்டில் உனக்கு எது பிடித்து இருக்கோ அதை முடிவு பண்ணச் சொல்லி தமிழ் சொல்லிட்டான்..." என்றவன் சட்டையைப் பிடித்து உலுக்க வேண்டும் போல இருந்தது.

"இது ரெண்டுமே பிடிக்கவில்லை... இந்த லைட் கீரீன் தான் பிடிச்ச இருக்கு..." என்று எரிச்சலுடன் தெள்மொழி சொல்ல அவன் விழுந்து விழுந்து சிரித்தான்.

"இங்கே என்ன காமெடி சீனா நடக்குது?" என்று அவன் மேல் பாய்ந்தவனை ரசித்து மேலும் சிரித்தான்.

"காமெடி சீன் இல்லை தேனு. சென்டிமென்ட் சீன் நடக்குது. அவனும் இதை தான் முதலில் தேர்ந்

தெடுத்தான். நான் உனக்கு கிரீன் அவ்வளவா பிடிக்காது என்று சொன்னேனா? அவன் உடனே தனக்கு பிடித்து இருந்தாலும் பரவாயில்லை என்று இதற்கு மாறி விட்டான். ஆனால் நீ அவனுக்கும் பிடித்து இருக்கு என்று கரீனையே செலக்ட் பண்ணினாயா? அதான் சந்தோஷம் தாங்கலை. மேட் பார் ஈச் அதர்..." என்று கண் சிமிட்டி சிரித்த பாலாஜியிடம் தன் வெறுப்பைக் காட்ட முடியவில்லை.

கற்பிலும், அம்மா அப்பா, அண்ணன், தோழி என்று தன் நலம் நாடும் அதனை உள்ளங்களும் வரும் திருமண நாளை ஆவலுடன் எதிர்நோக்கிக் காத்திருக்க, தன் ஆழ் மனநிலையை அவர்களிடம் காட்ட முடியவில்லை என்பதால் அவன் போனிலும் நேரிலும் பேசும்போது எல்லாம் பொறுமை இழந்து அவனை வறுத்தெடுத்தாள்.

ஆனால் அவள் எவ்வளவுக்கு எவ்வளவு பொறுமை இழந்தாளோ, அதை மாதிரி நூறு மடங்கு பொறுமையுடன் தமிழ் நடந்து கொண்டதால், யாருக்கும் காத்திராமல் திருமண நாளும் இனிதே வந்து சேர்ந்தது.



பூங்கோதை - விஜயகுமார் இருவருக்குமே அடுத்து வந்த பனிரெண்டு நாட்களும் வேலை நெட்டி முறித்தது. நிற்க நேரம் இன்றி ஓடிக் கொண்டே இருந்தனர். மகள் மகன் இருவருக்குமே, அதுவும் இரண்டு வாய்களில் நிச்சயிக்கப்பட்டு முடிவான திருமணங்கள். ஒரு மகளாக வரப் போகிறவளுக்குப் பெற்றோர்கள் இல்லை

மகள் வாழ்க்கைப்பட்டுப் போகும் இடத்தில் மாமியார் மட்டுமே. எல்லா வேலைகளையும் இவர்களே செய்ய வேண்டி இருந்தது.

மகள் காலேஜிற்கு லீவு போடத் தயாரில்லை. மகன் மருத்துவர். இருவரையுமே தொந்தரவு பண்ணாமல் அவர்களுக்கு வேண்டிய உடை தேர்ந்தெடுக்க, மட்டுமே அழைத்தவர்கள் மிச்ச வேலை அனைத்தை யுமே, தாங்களே முன்னின்று செயல்படுத்தினர். மரு மகனாக வரப் போகிறவன் வெளி வேலைகளில் விஜய குமாருக்கு தோள் கொடுத்தான் என்றால், மருமகளாக வரப் போகிறவள், வீட்டு வேலைகளில் பூங்கோதைக்கு உறுதுணையாக நின்றாள்.

விடிந்தால் திருமணம் என்ற நிலையில் பரபரப்பாக இயங்கிக் கொண்டு இருந்த பூங்கோதை மறுநாள் கோவிலுக்கு எடுத்துச் செல்ல வேண்டிய பொருட்களை அடுக்கி வைத்த பின்பு, சற்றே ஓய்வாக சோபாவில் சரிய, கையில் ஒரு கோப்பை பாலுடன் வந்து நின்றார் விஜயகுமார்.

''இதென்ன புதுசா பால் எல்லாம் நீங்க எடுத்துட்டு வரீங்க?'' என்று கேட்டவரை பார்த்து புன்னகை செய் தார்.

''எனக்காவது வெளி வேலை மட்டும் தான். அதிலும் தமிழ் ஒத்தாசையாக இருக்கிறான். இந்த ரெண்டு வாரமா சரியான அலைச்சல். களைப்பாக இருக்காதா? வீட்டு வேலையும் பார்த்துக் கொண்டு வெளியிலும் அலை கிறாயே? ஒரு நாள் ஒரு கப் பால் கொடுத்தால் தேய்ந்தா போய் விடுவேன்?'' என்று கேட்டவரைப் பார்த்து சிரித்தார்.

''நீங்க தேய்ந்து போறீங்களோ இல்லையோ? ஆனால் உங்களுக்கு சர்க்கரை போடாத மாதிரி எனக்கும் சர்க்கரை போடாமல் இருந்தால் என்ன செய்வது?'' என்று சிரித்தவரின் முகம் களைப்பாக இருந்தாலும் மனம் உற்சாகமாக இருந்தது.

''எல்லாம் போட்டு இருக்கேன்...'' என்று இழுத்தவர் சுற்றும் முற்றும் பார்த்து விட்டுக் குரலைத் தணித்தார்.

''தேன்மொழி உற்சாகமாக இருப்பது மாதிரி தெரிய லையே கோதை? நானும் ரெண்டு மூணு வாட்டி கேட்டுப் பார்த்தேன். ஒன்றும் இல்லை என்று சொல் கிறாளே தவிர, முகம் உற்சாகமாக மாறவில்லை. கவ னித்தாயா?''

''பார்த்தேங்க. உற்சாகமாக இல்லையே தவிர, எந்த வேலைக்கும் அவள் மறுக்கவும் இல்லை. அன்று தாலிக்கு பொன் உருக்கணும் என்று காலையில் ஆறு மணிக்கு பானும்மா அழைத்தபோது கூட, வந்தாளே? புடவை எடுக்கவும் வந்தாள். பானும்மா கூட நல்லா பேசுகிறாள். தமிழை தவிர்க்கிற மாதிரி இருக்கு. பயமா இருக்கலாம்...''

''பயமா? தேனுக்கா? என்ன கோதை சொல்கிறாய்? ஏன் தமிழைத் தவிர்க்கணும்?''

''அது உங்க பொண்ணைத்தான் கேட்கணும்...''

''கல்யாணத்தில் சந்தோஷம் தானே தேனு என்று மூன்று தடவை கேட்டுட்டேன். என்னப்பா கேள்வி இது? என்று கேள்வி கேட்டாளே தவிர மறுத்துப் பேச வில்லை...''

''அப்புறம் என்ன கவலை? போகப் போகச் சரியாகி விடும். பயப்படாதீங்க...'

''என்னவோ நீ சொல்றதை நம்பி தான்...'' என்று விஜயகுமார் இழுக்க அவர் சிரித்தார்.

''நான் என்ன சொல்றது? அன்னிக்கு ஜாதகம் பார்க்கப் போனபோது, ஜாதகம் ரெண்டும் அமர்க்களமா பொருந்தி இருக்கும்மா, உங்க மாப்பிள்ளை உங்க பொண்ணை உள்ளங்கையில் வச்சு தாங்குவார் என்று ஜோசியர் சொன்னார்...''

''அதென்னவோ நிஜம் தான். அன்று என்னிடமே வேறு ஒரு பெண்ணை விரும்புவதாகச் சொன்னாயே என்று நானும் தமிழிடம் கேட்டேன். நான் விரும்புவதாகச் சொன்ன பெண் யார் என்று நீங்க கேட்டு இருந்தால் அன்றே உங்களுக்குத் தெளிவு அடைந்து இருக்கும் என்று சிரிக்கிறான்...''

''அவனை முன்னாடி நீ வா போ என்று பேசி விட்டு இப்போ மரியாதையா பேசணும் என்று நினைத்தாலும் வர மாட்டேங்குது. அவனும் பரவாயில்லை விடுங்க ஆன்ட்டி என்று சொல்லி விட்டான். தமிழ் ரொம்ப ஸ்வீட்ங்க. ஒரு அம்மாவா தமிழ் மாப்பிள்ளையா வருவதை நினைத்து சந்தோஷப்பட்டாலும், ஒரு தனி மனிஷியா, அவனுக்கு தேனை விட ஒரு நல்ல பொண்ணு கிடைச்க இருக்கலாமோ என்ற எண்ணம் தோன்றுவதைத் தடுக்க முடியலை'' என்று சொல்லும் போதே உள் அறையில் இருந்து தேன்மொழி வரும் அரவம் கேட்க பேச்சு அப்படியே நின்றது.

அறையில் இருந்து கையில் மொபைல் போனுடன் வெளியே வந்த தேன்மொழி போகிற போக்கில், 'இப்ப என்ன வேண்டும் உங்களுக்கு?'' என்று சொன்னது

காதில் விழ அவர்களின் முகம் மேலும் மலர்ந்தது. பேசுவது தமிழ். இவள் தனிமை நாடி வெளியே போகிறாள். வேறென்ன வேண்டும்?

''எனக்கு என்ன வேண்டும் என்பது இருக்கட்டும். உனக்கு என்ன வேண்டும் தேன்மொழி?''

''எனக்கு உங்களிடம் எதுவும் தேவை இல்லை. போனை வைங்க...''

''நீ இப்ப போனை வைத்தாய் என்றால் இன்னும் பத்து நிமிஷத்தில் நான் அங்கே இருப்பேன்...'' என்றவன் குரலில் உறுதி இருந்தது.

''நீங்களா போனை வைக்கும் வரை நீங்க என்ன சொல்றீங்களோ அதைக் கேட்கிறேன்.''

''தேன்மொழி. நான் உன்னிடம் நேரில் பேச மூன்று முறை அழைத்தேன். உனக்கு வர மனம் இல்லை. சரி எல்லோரோடு இருக்கும் போதாவது பேசலாம் என்றாலும் அதற்கும் நீ இடம் கொடுக்கவில்லை. நீ என்னைத் தவிர்க்கிறாய் என்பதை எல்லோரும் கவனிக்கிறாங்க. உனக்குப் புரியுதா இல்லையா?'' என்று மெல்லிய குரலில் கேட்டவனின் குரலில் இருந்த கவலை புரிந்தது. ஆனாலும் அமைதியாக இருந்தாள்.

''பேச்சுக்காக சொல்லவில்லை தேன்மொழி. உனக்கு என்னைக் கல்யாணம் பண்ண ஏதாவது ஆட்சேபணை இருந்தால் இப்பவும் உங்க அப்பாவிடம் சொல்லலாம்.''

''இப்ப எதுக்கு தேவை இந்த வெட்டிப் பேச்சு பேசறீங்க? எங்க அப்பாவிடம் நான் என்ன பேசணும் என்பதை நீங்க எனக்குச் சொல்லித் தர வேண்டிய தில்லை...''

"தேன்மொழி! என் பொறுமைக்கும் எல்லை இருக்கு. நீ என்ன பேசணும் என்பதை நான் சொல்லத் தேவை இல்லை என்றால், நான் என்ன பேசணும் என்று நீ எனக்கு சொல்லவும் தேவை இல்லை. புரிந்ததா? உங்க அப்பா என்னிடம் இன்று மாலை உங்க இருவருக்கும் இந்தக் கல்யாணத்தில் சந்தோஷம் தானே? பெரியவர்களின் வற்புறுத்தலுக்காக சரி என்று சொல்லி விட்டு உள்ளுக் குள் வருத்தப்படுகிறாயா என்று என்னிடம் கவலை யோடு விசாரித்தார். அதற்குக் காரணம் உன் முகம். அதில் இருக்கும் வாட்டம். இனிமேலாவது அதை புரிந்து நடந்து கொள்..."

"நீங்களா உங்க இஷ்டத்துக்கு எதையாவது கற்பனை பண்ணிக்காதீங்க..."

"நான் கற்பனை பண்ண வேண்டிய அவசியம் இல்லை. உனக்கு உங்க அப்பா, அவரோட சந்தோஷம் எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு எனக்கு எங்க அம்மா, அவங்க சந்தோஷம் முக்கியம். அவங்க மனசு கோண நடக்கும் எந்த விஷயத்தையும் நான் பொறுத்துக் கொள்ள மாட்டேன்..."

"எனக்கு உங்களை விட உங்க அம்மாவைப் பிடிச்சு இருக்கு. அவங்க மனசு வாடுற மாதிரி ஒரு சந்தர்ப்பம் என்னால் நிச்சயம் வராது..."

"உன் உறுதி மொழிக்கு நன்றி. இந்த வாக்குறுதியும் அவசியம் என்றாலும் அது மட்டும் கல்யாணத்திற்குப் போதாதே? உனக்கு என்னையும் பிடிக்க வேண்டும். நீ எதுக்காகவும் யோசிக்கத் தேவை இல்லை. நம் கல் யாணம் நடக்கா விட்டாலும், பாலா - மேகா கல்யாணம்

நாளை நடக்கும். ஆனால் நம் கல்யாணம் நடக்க வேண்டும் என்றால்..."

"அதுக்கு புதுசா நான் என்ன செய்ய வேண்டும்?"

"புதுசா ஒன்றும் தேவை இல்லை. தேனு வாழ்க் கையில் ஒரே ஒரு முறை நடக்கப் போகும் முக்கியமான நிகழ்வு. இதை நாம் இருவரும் காலம் முழுக்க நினைத்துப் பார்த்து மகிழ வேண்டும் தேன்மொழி. அதனால்..."

"அதனால்...?"

"அதனால், நாளைக்கு உன் முகத்தில் மலர்ச்சி இருக்க வேண்டும். நாளை ஒரு நாள். உன் கோப தாபங்களை எல்லாம் மூட்டை கட்டி வைத்து விட்டு, சந்தோஷமாக இருக்க வேண்டும். என்னோடு இயல்பாகச் சிரித்துப் பேச வேண்டும்..."

"ம்ம்ம். பே..சு...வே...ன்.."

"பேசுவேன் போதாது தேன்மொழி. சந்தோஷமாகச் சிரித்துப் புது மணப்பெண் போலப் பேச வேண்டும்..." என்று இடையிட்டவன் குரலில் அதீத எதிர்பார்ப்பு இருந்தது.

"முயற்சி செய்கிறேன்... ஆனால்... த..னி..யா..க இ..ரு..க்..கு..ம்.. போது..." அவள் தகுந்த வார்த்தை களுக்கு தேடிக் கொண்டு இருக்க, அவன் சந்தோஷ மாகச் சிரித்தான்.

"அதைப் பற்றி நாளை இரவு நாம் தனியாகப் பேசிக் கொள்ளலாம் தேன்மொழி. இப்ப வேண்டாம். குட் நைட்" என்று சிரிப்புக்கிடையே சொல்லி விட்டுப் போனை வைத்தான்.

ரொம்ப மிரட்டுகிறான் என்று தோன்றினாலும், கோபம் வந்தாலும், 'எல்லா பிரச்னையையும், மேலோட்டமாகப் பார்க்காமல அலசி ஆராய்கிறான். அதற்கு ஒரு தீர்வும் வைத்து இருக்கிறான் என்ற எண்ணமும் தோன்றியது. அவனின் அட்வைஸ் பிடிக்கவில்லை. ஆனாலும் அதில் இருந்த உண்மை சுட்டது. அதனால் திருமண நாள் நிகழ்ச்சிகளில் சந்தோஷமாகவே கலந்து கொண்டாள் தேன்மொழி.

தன் மன மாற்றத்தை அவனுக்கு தெரிவிக்கும் முதல் படியாக, காலை ஐந்து மணிக்கு அம்மா எழுப்பி விட்ட உடனே, 'குட்மார்னிங்' என்ற குறும் செய்தியை அவனுக்கு அனுப்ப அந்த நன்னாள் இனிதே புலர்ந்தது. செய்தி அவனைச் சேர்ந்த அடுத்த வினாடி, அவனின் தொலைபேசி அழைப்பு வந்தது.

''ஹேய்... ஐ ஆம் சோ ஹேப்பி. தேங்க்ஸ் ஹனி...'' என்று சொன்னவனின் குரல் உணர்ச்சி பெருக்கில் கரகரத்தது. அதனால் அவன் சொன்ன கடைசி வார்த்தை அவள் காதுகளில் விழாமலே போனது.

''ம்ம்ம்... நானும் தான்...''

''எப்ப கிளம்பப் போகிறாய்? கல்யாணப் புடவை கட்டியாச்சா?''

''ப்ச்! இப்பதான் எழுந்தேன்...''

''தேனு, சகஜமா பேசட்டும் என்பதற்காக தானே கேட்கிறேன். பதில் சொல்லு ப்ளீஸ்...''

''இன்னும் குளிக்கலை...''

''மெரூன் பிடிக்கும் என்று அந்தப் புடவையை எடுக்கச் சொன்னேன். உனக்குப் பிடிக்குமா?''

''எவ்வளவு சீக்கிரம் கேட்டுட்டீங்க?''

''நானாவது இப்ப உனக்கு என்ன கலர் பிடிக்கும் என்று கேட்கிறேன். பிடிக்கும் பிடிக்காததை விடு. எனக்கு ட்ரெஸ் எடுத்தாச்சா என்று கூட நீ கேட்கவில்லையே?''

''எடுத்தாச்சு என்று பாலா சொன்னான். உங்களிடம் கேட்கவில்லை என்றால் எனக்கு தகவலே தெரியாது என்று நீங்களா நினைத்துக் கொண்டால் நான் என்ன பண்றது? அது சரி எனக்கு மெரூன் பிடிக்கும் என்று உங்களுக்கு யார் சொன்னது?''

''நான் ஊகித்தேன். நானும் அம்மாவும் உங்க வீட்டுக்கு முதன் முதலில் வந்தபோது, உன்னை அந்த சேலையில் பார்த்தது என் கண்ணைக் கவர்ந்தது...'' என்று அவன் ஆரம்பிக்க, அன்று தன் அப்பாவிடம் வேறு ஒரு பெண்ணை விரும்புகிறேன்'' என்று சொன்னது அவளின் நினைவில் வர அவளின் முகம் சட்டென்று வாடியது.

''அம்மா கூப்பிடுறாங்க. நான் அப்புறம் பேசறேன்...'' என்று போனை வைத்து விட, அவன் புன்னகை செய்தான். திருமணத்திற்கு முன்னால் தன் மனதில் அவள் இருக்கிறாள் என்பதைச் சொல்ல விக்ரமாதித்தன் மாதிரி மீண்டும் மீண்டும் முயன்றும், முடியாமல் போனது துரதிர்ஷ்டம்தான்.

தங்கைக்குக் கல்யாணம் செய்து விட்டு தான் பிறகு கல்யாணம் செய்து கொள்வேன் என்று பாலாஜி பிடித்த பிடிவாதத்தாலும், முதலில் திருமணம் சில நிமிடங்கள்

முன்பு, தமிழ்வேந்தன் - தேன்மொழி திருமணம் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

"இப்பவும் ஏன்டா இவ்வளவு பிடிவாதம் பிடிக்கிறாய்? இதுக்கு மேலே கல்யாண மேடையில் இருந்து நான் எழுந்து ஓடி விடவா போகிறேன்? அப்படியே போனாலும் உங்க ஹீரோ குதிரை மேல் பாய்ந்து வந்து திருப்பித் தூக்கி வந்துவிட மாட்டாரா?" என்று கேலியாகக் கேட்ட தேன்மொழி, மட்டுமில்லாமல், அந்தக் கல்யாணத்திற்கு அழைக்கப்பட்டு இருந்த விருந்தினர்கள் அனைவருமே அவன் சொன்ன பதிலில் நெகிழ்ந்தார்கள்.

"உனக்கு முதலில் கல்யாணம் முடிக்கணும் என்று விரும்பியதற்குக் காரணமே. நீங்க இரண்டு பேரும் மேகா பக்கம் நின்று அவளை எனக்குத் திருமணம் செய்து கொடுக்க வேண்டும் என்ற ஆசைதான். அதுவும் தமிழ் மாதிரி ஒரு கணவனோடு சேர்ந்து நின்று. நீ மேகாவை அம்மா அப்பாவிடம் தாரை வார்த்துக் கொடுக்க வேண்டும் என்பதற்காக தான், உனக்கு முதலில் கல்யாணம் முடிக்க வேண்டும் என்று சொல்கிறேன் தவிர, நீ சொல்ற மாதிரி நீ கல்யாண மேடையில் இருந்து ஓடி விடுவாய் என்பதற்காக அல்ல. கல்யாணம் முடித்து தம்பதி சமேதராய் வாங்க" என்று அவள் தோளில் தட்டிச் சொல்ல, அவள் வியப்புடன் பார்த்தாள்.

எப்பேர்பட்ட கௌரவத்தை அண்ணன் தனக்கு அளித்து இருக்கிறான்? மனைவியாக வரப் போகிறவளின் கௌரவம் காக்க வேண்டும் என்ற அவன் ஆசை அவளைக் கவர, முன் எப்போதையும் விட, தமிழைக் கல்யாணம் செய்து கொள்வதில் ஆவல் தோன்றியது.

இறைவன் சந்நிதியில், பெற்றோர்களின் ஆசியுடன், தமிழ்வேந்தனின் தாலியை ஏற்ற வினாடியில் அவளின் மனதில் இருந்த நிறைவு அவள் முகத்திலும் ஜொலிக்க, அரசல் புரசலாக சந்தேகம் கொண்ட பெற்றோர்களின் மனம் சந்தோஷத்தில் நிறைந்தது.



வடபழனி கோவிலில் இரண்டு திருமணங்களை முடித்து அன்று மாலையில் தாஜ் கோரமண்டலில் மூன்று வீட்டினரும் சேர்ந்து செல வினைப் பகிர்ந்து கொண்ட பிரம் மாண்ட இரவு விருந்துக்கு, இரண்டாயிரத்திற்கும் அதிகமானோர் திரண்டு இருந்தனர்.

மீடியாவில் இருப்பதால் தமிழுக்கு என்று சேர்ந்த பத்திரிகையாளர், தொலைக்காட்சி நண்பர்கள் கூட்டம், மருத்துவர் என்றதால் பாலாஜிக்கென வந்த கூட்டம், மேகாவின் கல்லூரித் தோழிகள், மேகாவின் பாட்டியின் சமூக அமைப்பு ஆர்வலர்கள், விஜயகுமாரின் வங்கி தோழர்கள், பூங்கோதை, பானுமதியின் உறவு நட்பு, என்று மூன்று தலைமுறையை சேர்ந்த விருந்தினர்களால் அந்த ஹோட்டலின் பரந்து விரிந்த தோட்டம் விருந்தினர் கூட்டத்தின் சுமையைத் தாங்க முடியாமல் திணறியது.

தேன்மொழிக்கென்று தமிழ்வேந்தன் பிரத்யேகமாக தேர்ந்தெடுத்த மெரூன் வண்ணப் புடவையில் ஜரிகைக் கோடுகள் பூக்களையும் கனிகளைத் தாங்கிய கொடி களையும் நினைவூட்டியது. காலையில் கோவிலுக்கு

வரும்போது வீட்டில் செய்து கொண்ட அலங்காரத்தி லேயே அவள் கருத்தைக் கவர்ந்தாள்.

அந்தி மாலைப் பொழுதிலே, விருந்துக்கென சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட அந்த பிரம்மாண்ட மின் விளக்குகளின் வெளிச்சத்தில், சந்தன நிற மேனியில் பாந்தமாகப் பொருந்திய பட்டுப் புடவையும், பார்லரில் இருந்து வந்த பெண் செய்து விட்ட நேர்த்தியான தலை அலங்காரமும், அதில் அழகு சேர்க்கத் தொங்கிய முத்துச் சரங்களும், மிதமான ஒப்பனையும், பொருத்த மான நகைகளும் கூடவே நண்பர்களின் கேலியில் சிவந்த கன்னங்களுடனும், அழகு தேவதையாக ஒளிர்ந்த தேன்மொழியிடம் இருந்து கண்களை விலக்க தமிழ் வேந்தனால் முடியவில்லை.

''இந்தக் கூட்டம் இப்போதைக்கு ஓயாது. ஆறு மணிக்கே சாப்பிடு என்று சொன்னேன். பசிக்கலை என்று சொல்லி விட்டாய். சீக்கிரம் எழுந்தது. தூக்கம் வருது என்று மதிய சாப்பாட்டை கொரித்தாய். இந்த ஜூஸைக் குடி. ஒரு மணி நேரம் தாங்கும். டிஷ்யூ இல்லையா? புடவையில் துடைச்சுக்கோ...'' என்று மருமகளை வாஞ்சையோடு கவனித்த அம்மாவை கனி வோடு பார்த்தவன் பக்கவாட்டில் ''லிப்ஸ்டிக் போட்ட தால் இவளின் உதடு இவ்வளவு சிவப்பா இருக்கா? இல்லை போடா விட்டாலும் இப்படி இருக்குமா?'' என்ற ஆராய்ச்சியோடு, மனைவியை சைட் அடிக்கவும் தவற வில்லை.

''ஹேய் ஜொள்ளு பார்ட்டி, உன் ஆளை ரசிச்சது போதும். கொஞ்சம் இந்தப் பக்கம் திரும்பி எங்களையும் பாரு...'' என்ற உற்சாகக் கூச்சலுடன் இள வயது

ஆண்களும் பெண்களுமாக நவநாகரீக ஆடை அணிந்த ஒரு கும்பல், அருகில் வந்தது.

''ஹாய்! வாங்க. இவ்வளவு நேரம் ஆளைக் காணோமே என்று நினைத்தேன். என் ஆளை நான் பார்க்க நீங்க என்ன பெர்மிஷன் கொடுப்பது?'' என்று சிரிப்புடன் வரவேற்றவன், மனைவியிடம் அறிமுகப் படுத்தினான்.

''ஹாய் தேன்மொழி. நாலு வருடமா எங்க யூனிட்ல இருக்கும் பெண்களுக்கு எல்லாம் டிமிக்கி அடிச்சவன் இன்று உங்களிடம் மாட்டிக் கொண்டான். கங்க்ராட்ஸ். ஒரு அட்வைஸ் ஆள் சிரித்துக் கொண்டே இருக்கிறான் என்றுவிட முடியாது. சட்டுன்னு ஆளைக் கவிழ்த்து விடு வான். கொஞ்சம் ஜாக்கிரதையா இருங்க. நினைச்சதை சாதித்து விடுவான். பயங்கரமான ஆள்...'' என்று ஆண்கள் ஒரு பக்கம் தேன்மொழியை உசுப்பேற்றிக் கொண்டு இருக்க இந்த பக்கம் பெண்கள் அவனைக் கலாய்த்துக் கொண்டு இருந்தனர்.

''மஞ்சு மேம் ஆஸ்ட்ரேலியா போன நேரம் பார்த்து அவசரமா அவசரமா கல்யாணம் வச்சுட்ட மேடம் வந்து உன் முதுகுல டின் கட்டப் போறாங்க'' என்று சீண்டியது தேன்மொழியின் காதிலும் விழுந்தது.

''யார் அந்த மஞ்சு மேம்?'' என்று வண்டு ஒன்று மண்டைக்குள் குடைய ஆரம்பித்து அவளின் முகம் வாடியதை தமிழ்வேந்தன் கவனிக்க வெகு நேரம் ஆகி இருந்தது.

வரவேற்பு நிகழ்ச்சி முடிய பத்து மணியைத் தாண்டி விடும் என்பதை கணித்த பூங்கோதை - விஜயகுமார்

தம்பதியினர். இரண்டு ஜோடிகளும் தங்க இங்கேயே இரண்டு அறைகளும் பதிவு செய்து இருந்ததால், அலைச்சல் இன்றி உணவு முடிந்து அறைக்கு வந்த தேன்மொழியின் முகம் குழப்பத்தில் இருந்ததை கவனித்தான் தமிழ்.

சிவப்பு ரோஜா இதழ்கள் தூவப்பட்ட வெண்ணிற படுக்கை விரிப்பும், மங்கிய மஞ்சள் வெளிச்சமும், மெலிதான லாவண்டர் மணக்கும் ரூம் ஸ்ப்ரேயும், குழலை ரம்மியமாக மாற்ற. நான்கு மணி நேரமாக அருகில், அலங்கார பூஷிதையாக நின்றவளின் அருகாமை போதையேற்றி இருந்ததாலும், காலை நீட்டி படுத்தவன் ''இப்படி வந்து உட்கார்...'' என்று கட்டிலின் அருகில் தட்டி காட்டினான்.

பொம்மையாக அருகில் வந்து அமர்ந்தவளின் உச்சந் தலையில் கை வைத்து அளைந்தவன், ''இவ்வளவு அலங்காரத்தோடு எப்படி படுப்பாய்? நான் எடுத்து விடட்டுமா?'' என்று மென்மையாக கேட்டான்.

''இல்லை நானே...''

''நீயாக எடுப்பது சிரமம். நான் வேறே எந்த நோக்கத்திலும் கேட்கவில்லை. ஒரு பிரெண்டா உதவி செய்கிறேன்'' என்று சொன்னபடி அவன் அலங்காரத்தில் இருந்த குட்டி குட்டி கிளிப்புகளை முத்து சரங்களை, எடுத்தவன், கூந்தலில் சூடப்பட்டு இருந்த கெட்டியான மல்லிகை சரத்தினை முகர்ந்து பார்த்தான். அவளின் பின்னங் கழுத்தில் பதிந்தது. அங்கிருந்து கன்னம், காது என்று நகர்ந்தவனுக்கு அவளின் மனநிலை பிடிபடவில்லை.

''ப்ச! விடுங்க...'' என்று அவனை தள்ளி விட்டவள் கட்டிலில் இருந்து இறங்கினாள்.

அதற்கு பிறகே அவளின் மனநிலையை கணித்தவன், ''சாரி தேனு காலையிலும் சீக்கிரம் எழுந்ததனால் ரொம்ப டயர்டா இருப்பாய். உடை மாற்றி விட்டு நீ தூங்கு. காலையில் பேசிக்கலாம் குட்நைட்'' என்று தன் உணர்வுகளை கட்டுபடுத்த முயன்றபடி சொன்னான் தமிழ்வேந்தன்.

ஆனால் அவன் சொன்ன வாக்கியத்தின் பொருளை உணர்ந்தது மாதிரியே இல்லாமல், ''மஞ்சு யார்?'' என்று மொட்டையாக விசாரித்த தேன்மொழியின் குரல் அவளுக்கே புதிது.

''சாரி, என்ன கேட்ட?'' என்றவன் அவள் முகத்தில் இந்த பாவனை எதிர்பார்க்கவில்லை. உற்சாகத்தில் துள்ளி குதிப்பாள் என்று சொல்ல முடியாவிட்டாலும் முக வாட்டம் மறையும் என்று எதிர்பார்த்தான். ஆனால் இந்த விசாரணை, இந்த பாவனை அவனுக்கு புரியவில்லை. பிடிக்கவும் இல்லை.

''.....''

''தேன்மொழி, நான் என்னை பற்றி, உன்னை எவ்வளவு பிடிக்கும் என்ற என் லவ் பற்றி எல்லாம் விளக்கமா உன்னிடம் பேசணும்....''

''எத்தனையாவது லவ்?''

''வாட்டு யு மீன்?''

''ஓ! மஞ்சு என்ற பேர் கூட மறந்து விட்டதா?''

''தேன்மொழி என்ன உளறல் இது? மஞ்சு என்னோட பாஸ். சேனலின் எம்.டி. டோன்ட் பீ ஸ்டுப்பிட்'' என்றவன் குரலில் அதட்டலும் அதிகாரமும் இருந்தது.

''அது எனக்கு எப்படித் தெரியும்?''

"மஞ்சு பேர் மட்டும் உனக்கு எப்படி தெரிந்தது?"

"அந்த ஆஸ்ட்ரேலிய பாஸ் உங்க முதுகில் டின் கட்டுவது சம்பந்தமா உங்க கிரேட் கேர்ள் பிரெண்ட்ஸ் உங்களிடம் விலாவாரியா பேசியது என் காதிலும் விழுந்தது...."

"அதெப்படி தேனு? தேவை இல்லாத விஷயம் மட்டும் உன் காதில் விழுது. கண்ணில் படுது. இப்ப எதற்கு இப்போ மஞ்சு நமக்கு இடையே இழுக்கிறாய்?"

"நான் பாட்டுக்கு நிம்மதியா காலேஜ் வீடு அண்ணா வோடு வம்பு. அம்மாவோடு கொஞ்சல் என்று சந் தோஷமா இருந்தேன். என்னிக்கு உங்களை பார்த்தேனோ அன்றில் இருந்தே பிரச்னை தான். நீங்க யாரோடு என்ன பண்ணினால் எனக்கென்ன? என்னை ஆளை விட்டால் சரி...." என்று சொன்னவள் உடை மாற்றாமல் அப்படியே கட்டிலில் சரிந்தாள்.

உறவு கொள்வது ஒன்றிரண்டு நாட்கள் தள்ளி போனாலும் கூட அவளை மனசளவில் நெருங்க வேண் டும். அதற்கு முன்னோடியாக, ஒரு மணி நேரமாவது பேச வேண்டும் என்று பல எதிர்பார்ப்புகளுடன் வந்த தமிழ் வேந்தன் அவளின் செய்கையில் அடிபட்டான்.

"தேன்மொழி பாதி பேச்சில் இப்படி செல்வது எனக்கு பிடிக்காது...."

"மாத்தி மாத்தி பேசாதீங்க. இப்ப அஞ்சு நிமிஷம் முன்னாடி 'டயர்டா இருப்பாய் தூங்கு, காலையில் பேசிக் கொள்ளலாம்' என்று சொன்னதாக எனக்கு ஞாபகம். இப்ப என்ன ஆச்சு? மிருகசீரிஸ நட்சத்திரத்தில் பிறந்த வங்க கொடுத்த வாக்கை காப்பாற்றுவார்கள் என்று ஒரு

புராணக் கதை வேற..." என்று வேகமாக சொல்ல அவனுக்கும் சுறுசுறுவென்று ஏறியது. எதற்கும் எதற்கும் சம்பந்த படுத்துகிறாள்?

"முதல் இரவு அறையில் புது மணப்பெண் என்ன செய்ய வேண்டும் என்று உனக்கு தெரியவில்லை. உங்க அம்மா உன்னிடம் ரொம்ப நேரம் பேசினாங்களே? அவங்களும் சொல்லி தரவில்லையா?"

"எதுக்கு எங்க அம்மாவை இழுக்கிறீங்க? எங்கே எப்படி நடந்துக்கணும் என்று எனக்கே தெரியும். என் மனசளவில் நான் உங்களை கணவனாக இன்னும் ஏற்கவில்லை..."

"காலையில் அக்னி சாட்சியாக நடந்த சடங்கு களுக்கும், சொன்ன மந்திரங்களுக்கும், என்ன அர்த்தம்?"

"அதைக் கல்யாணம் இல்லை என்று நான் மறுக்கப் போவதும் இல்லை. நான் எங்கேயும் ஓடப் போவதும் இல்லை. கொஞ்சம் டைம் கொடுங்க. அப்புறம் நீங்களோ அம்மாவோ யாரும் சொல்லாமலேயே நானே எல்லா வேலையும் செய்வேன். அது வரைக்கும்...."

"சாரி தேன்மொழி. அதுவரைக்கும் 'மன்றம் வந்த தென்றலுக்கு மஞ்சம் வர நெஞ்சம் இல்லை' என்று என்னால் வானத்தை பார்த்து கொண்டு காத்திருக்க முடியாது" என்று கேட்டபடி கட்டிலுக்கு வந்தான்.

"தமிழ்..." என்ற தேன்மொழியின் குரலில் லேசான அச்சம் இருந்தது.

"நமக்கு கல்யாணம் நிச்சயிக்கப்பட்ட பிறகு, இந்த பதின்மூன்று நாட்களில் முதல் முறையாக என் பெயர்

உச்சரிக்கப் படுகிறது. நீ சொல்லும் போது என் பேர் ரொம்ப அழகா இருக்கு. இதை செலிபரேட் பண்ண ஐஸ்க்ரீம் சொல்லட்டுமா?'' என்றவன் இண்டர்காமில் ஐஸ்க்ரீம் ஆர்டர் செய்ய அவள் அவசரமாக மறுத்தாள்.

''இல்லை.... வேண்டாம்.... எனக்கு தூக்கம் வருகிறது.... அதோடு.... நீங்க உங்க அம்மாவிடம் இன்று காலை என்ன சொன்னீங்க என்று மறந்து விடாதீர்கள்...''

''என்ன சொன்னேன்?''

''என்னை கண் கலங்காமல் பார்த்து கொள்வதாக.... என் இஷ்டங்களை அறிந்து நிறைவேற்றி வைப்பதாக....''

''அப்படி என் அம்மாவிடம் வாக்களித்தேன் இல்லையா? அதற்கு நான் மட்டும் முயற்சி செய்தால் போதாது. நீயும் உன் கடமைகளையும் பொறுப்புகளையும் உணர்ந்து நடக்க வேண்டுமே?''

''த....மி...ழ்....!''

''ஐஸ்க்ரீம் வரட்டும். வெயிட் பண்ணு'' என்று சொல்லி விட்டு வசதியாக சோபாவில் அமர்ந்து கால்களை கட்டிலில் போட்டு கண் மூடி அமர்ந்து இருந்தவனை பார்க்கையில் அச்ச உணர்வு தோன்றியது.

சில மணி நேரம் முன்பு அவன் நண்பர்கள் 'அவன் நினைத்ததை சாதித்து விடுவான்' என்று சொன்னது நினைவில் வந்தது. அவனே படு, காலையில் பேசிக் கொள்ளலாம் என்று சொன்னான். ஒழுங்காக வாயை வைத்து கொண்டு சும்மா இல்லாமல், வம்பை விலை கொடுத்து வாங்கி விட்டோமா என்று திகைத்து நின்ற வளின் பார்வை அவன் முகத்தில் இருந்து அந்த பக்கம் இந்த பக்கம் நகரவில்லை.



சோபாவில் கண்களை மூடி சரிந்த தமிழ்வேந்தனுக்கு தன் மேலேயே கோபம் வந்தது. நல்ல வேளை! அவள் பேச்சு வாக்கில் அம்மாவை நினைவு படுத்தியதனால் அவனின் கோபம் பட்டென்று குறைந்தது. இன்று ஏடாகூடமாக ஏதாவது நடந்து இருந்தால்.... அதை அவள் அம்மாவிடம் சொல்லி இருந்தால்... சொல்லாவிட்டாலும் அம்மாவை நாளைக்கு எப்படி பார்ப்பான்? ஏன் அப்படி பேசினான்?

எடுத்த எடுப்பில், தலையும் இல்லாமல் வாலும் இல்லாமல் மொட்டையாய் 'மஞ்சு யார்?' என்று தேன் மொழி கேட்ட வினாடியில் அவனுக்கு சுறுசுறுவென்று கோபம் ஏறியது.

சந்தேகமா? தன் மீதா? இது வாழ்க்கைக்கு சரி வராதே! அதுவும் அவனோ மீடியாவில் இருப்பவன். நேரம் காலம் இல்லாமல் வேலை வரும். ஆண் பெண் பேதம் இல்லாமல் நண்பர்கள் உண்டு, மனைவியாக இருப்பவளுக்கு தன் மீது முழு நம்பிக்கை இல்லா விட்டால் வாழ்க்கை நரகமாகி விடுமே என்ற பயம் தோன்றியது. அதனாலேயே வழக்கமாக இருக்கும் நிதானம் குறைந்து வார்த்தைகள் தடித்து இருக்க வேண்டும்.

மேலே சிந்தனை நீளும் முன்பே இண்டர்காம் அழைக்கும் ஓசை கேட்டு கண் விழித்தான். அவனுக்கும் போனுக்கும் இடையே அவள் இருந்தாள். போனை எடுக்க அவளை தாண்டிக் கொண்டு போக வேண்டுமா?

"அந்த போனை எடுத்து யார் என்று பார் தேனு...." என்று சாதாரணமாக சொன்ன உடனே தேன்மொழி என்ற சிலைக்கு உயிர் வந்தது.

"ஹலோ...!"

"மேடம், ஐஸ்க்ரீம் ஆர்டர் பண்ணி இருந்தீங்க. பேர் எடுத்து வந்து இருக்கிறார். கதவில் சிவப்பு விளக்கு எரிகிறது. அங்கே நிற்கிறார். நீங்க வாங்கிக்கறீங்களா?"

"ம்ம்ம்.... தேங்க்ஸ்" என்று வைத்தவளை பார்த்து புன்னகை செய்தான் தமிழ்.

"ரிசப்ஷனா? வெளியே சிவப்பு விளக்கு எரிகிறது. அது ஞாபகம் இல்லாமல் ஐஸ்க்ரீம் ஆர்டர் பண்ணிட்டேன்...." என்று தன் நெற்றியில் தட்டியபடி எழுந்து கதவுக்கு போனவனை வியப்பாக பார்த்தாள் தேன்மொழி.

இவனை பாம்பென்று கொல்லவும் முடியவில்லை. பழுதென்று தள்ளவும் முடியவில்லை. இருந்தாலும் வாய் கொடுக்காமல் இருப்பது தான் நல்லது. அவனுக்கு கோபமூட்டியது தன்னுடைய எந்த வார்த்தை என்பது புரியா விட்டாலும் பொதுவாக ஒரு சாரி சொல்லி விட்டு, அஞ்சு நிமிஷம் ஐஸ்க்ரீம் சாப்பிட்டபடி பேசி விட்டு மரியாதையாக படுத்து விடலாம் என்று அவசர மாக முடிவெடுத்தாள்.

"என்ன அங்கே நிற்கிறாய்? இனிமேல் போன் வராது. இங்கே வந்து உட்கார். உன்னுடன் ஐஸ்க்ரீம் சாப்பிடுவது இரண்டாவது முறை...."

"ஆறாவது முறை...." என்று திருத்தியவள் நாக்கை கடித்து கொண்டாள்.

"நான் நாம் இருவர் மட்டும் தனியாக சாப்பிடுவதை சொன்னேன்..." என்று மீண்டும் அழுத்தமாக சொல்ல அவள் அமைதியாக வந்து சோபாவில் அமர்ந்தாள். இப்போ எதுக்கு இதை ஞாபகப்படுத்துகிறான்?

மேஜையில் இருந்த ஒரு ஐஸ்க்ரீம் கப்பை எடுத்து நீட்டி, "ஐஸ்க்ரீம் தவிர பழங்களில் என்ன பிடிக்கும் தேன்மொழி?" என்று பேச்சை துவக்கினான்.

"பழங்கள் சாப்பிட சோம்பேறித்தனம். அதனால ஜூஸ் குடிப்பேன். எதுவும் தள்ளுபடி இல்லை. உங்களுக்கு...."

"எல்லா சீசனிலும் கிடைக்கும் வாழைப்பழம் முதல் சாய்ஸ். ஷூட்டிங் இருக்கும் நேரத்தில் பகலில் நாலு பழம். ஏதாவது மில்க் ஷேக் குடிச்சே ஓட்டி விடுவேன்...." என்று சொன்னவன் கண்கள் ஐஸ்க்ரீமை சுவைத்து கொண்டு இருந்த இதழ்களில் பதிய, அந்த பார்வை அவளுக்கு எச்சரிக்கை மணியடித்தது.

"தமிழ்... நான் உங்களிடம் ஒன்று சொல்லணும்...."

"சொல்லு..."

"கொஞ்சம் முன்னாடி திடீர்னு கோபப்பட்டது மாதிரி இருந்தது. நான் ஏதாவது தப்பா பேசிட்டேனா புரியலை. ஆனாலும் சாரி சொல்லிடறேன். நீங்க சொன்ன வார்த்தையை காப்பாற்றவில்லை என்பது மாதிரி நான் சொன்னது உங்களை..... நான் வேண்டும் என்றே உங்களை காயப்படுத்தணும் என்று நினைத்து எதுவும் பேச வில்லை. அப்படி எனக்குப் பேசவும் தெரியாது...." என்று அவள் தயக்கத்துடன் பேச, அவன் அவசரமாக நிமிர்ந்தான்.

"இல்லை தேன்மொழி. இன்று முதலில் தனிமையில் நாம் சந்தித்து இருக்கிறோம். என்னைப் பற்றி உனக்கு

என்ன தெரியும்? நாம் பார்த்தே ஒரு மாசம் கூட இருக்காது. நான் அவசரப்பட்டுட்டேன். நான் தான் சாரி சொல்லணும். இனிமேல் பார்த்துக்கறேன். ஓகே?'' என்று சமாதானக் கொடியை மேலும் உயர பறக்க விட்டவன் மனம் இலகுவாகி இருந்தது. சண்டை போடுவதாக இருந்ததாலும், அது முடிந்த உடனேயே பேச்சு வார்த்தைக்கு இறங்கும் இவளின் இந்த குணம் ரொம்ப பிடித்து இருந்தது.

''இன்னும் ஒன்று...'' என்று இழுத்தாள்.

''யே தில் மாங்கே மோர் பெப்சி விளம்பரம் மாதிரி கேளு'' என்று சிரித்தான் தமிழ்வேந்தன்.

''அது.... வந்து... நீங்க...'' என்று இழுத்தவள் இன்னும் தயங்கினாள்.

''என்ன இன்னொரு கப் ஐஸ்க்ரீம் வேண்டுமா?''

''ப்ச்! அதில்லை...''

''பின்னே சொல்லு தேனு. இப்ப நீ எது கேட்டாலும் இல்லை என்று சொல்ல எனக்கு மனசு வராது. போதுமா?''

''நான் அப்போதே சொன்ன மாதிரி... எனக்கு கொஞ்சம் டைம் வேண்டும்.... அதுவரை... இரவில்.... நாம்....'' அவள் முடிக்க தினற, அவள் சொல்ல வருவது என்ன என்பது புரிந்ததனால் அவன் முகம் லேசாக வாடியது. அவசரமாக சீர் படுத்தியவன், தன் வலது காத்தை அவளின் புறம் நீட்டினான்.

சில கணங்கள் அதை வெறித்து பார்த்தவள், தன் வலது காத்தை அதன் மேல் வைத்தாள். அந்த கையை தன் கன்னத்தில் வைத்து அழுத்தியவன் அமர்ந்து இருந்த

எதிர் சோபாவை விட்டு அவள் அமர்ந்து இருந்த சோபாவின் கைப்பிடியில் வந்து அமர்ந்து இடது காத்தை அவளின் தோளை சுற்றி படரவிட்டான்.

''தேன்மொழி, நீ என்ன கேட்கப் போகிறாய் என்பது தெரியாமலேயே கொடுத்த வாக்கைத் திரும்பப் பெற எனக்கு இஷ்டம் இல்லை. அது அப்படியே இருக்கட்டும். உன் விருப்பம் இல்லாமல்.... எ....து...வு...ம் நடக்காது'' என்று சொன்னவன் குனிந்து அவள் நெற்றியில் மென்மையாக முத்தமிட்டான்.

அவனின் அணைப்பு மிக மென்மையாகவே இருந்ததால், அவள் விரும்பி இருந்தால் விலகி இருக்கலாம். ஆனால் 'உன் விருப்பம் இல்லாமல்... எ...து...வு...ம் நடக்காது' என்றவன் குரலில் இருந்த ஏதோ ஒன்று அவளை கட்டி போட்டு வைத்து இருக்க, 'தமிழ்... இது...' என்று அவனையே விலக வைக்க முயன்றாள்.

''தேனு.... நீ கேட்பதை அப்படியே கொடுக்க ஆசை தான். ஆனால் உன் மனசு உனக்கே தெரியாமல் போய் விடக்கூடாது பாரு. அதனால்.... அது புரியும் வரைக்கும்... நான் என் அன்பை... இப்படி.... சின்னச் சின்ன செயல்களில் வெளிப்படுத்திக் கொண்டே இருப்பேன். என் முயற்சி நிற்காது. ஓகே?''

''இப்ப படுத்துக்கட்டுமா?'' என்றவளின் குரல் அவளுக்கே கேட்டு இருக்குமோ என்னவோ? அவளின் கன்னத்தை வருடி, ''ஓகே, குட் நைட்'' என்று சொல்லி விட்டு எழுந்தான்.

வரவேற்பிற்கென்று தான் அணிந்து இருந்த ஜரிகை வேலைப்பாடுகள் மிகுந்த மெரூன் வண்ண ஷெர்

வானியை கழட்டியவன், 'கொஞ்ச நேரம் டி.வி பார்க்கிறேன் தேனு. சத்தம் கம்மியா வச்சுக்கறேன் ஓகே?'' என்று கேட்டபடி கட்டிலின் ஒரு பக்கம் காலை நீட்டிப் படுத்து கொண்டான். ஆனால் 'படுக்கட்டுமா' என்று அனுமதி கேட்டவள் சில நிமிடங்கள் ஆகியும் சோபாவில் அமர்ந்து இருப்பதைக் கண்டு திரும்பினான்.

''என்ன படுக்கலையா?''

''ம்ம்ம். ட்ரெஸ் மாற்றணும்'' என்றவளின் குரலில் சங்கடம் இருக்க, ''மாற்று துணி இல்லையா?'' என்று அவன் கேலியாக கேட்டான்.

''ப்ச்! இருக்கு...''

''அப்ப மாற்றிக்கொள்....''

''பாத்ரூம் ஈரமா இருக்கு...''

''அதுக்கு நான் என்ன செய்ய? இப்ப வெளியே போக முடியாது. அம்மா மாமா அத்தை யார் கண்ணிலாவது பட்டால் நல்லா இருக்காது. ஏதாவது உதவி வேண்டுமா?'' என்று கேட்டவன் குரலில் குறும்பு இருந்தது. திருப்பி கேட்டால் பேச்சை அவன் மாற்றவும் வழி இருக்கு. அவன் வேண்டும் என்றே வம்பு இழுக்கிறான் என்பது புரிந்தது. ஆனாலும் அவன் முன்னிலையில் உடை மாற்றவும் மனம் வரவில்லை. விலை உயர்ந்த பட்டுப் புடவையை ஈரத்தில் போடவும் மனம் வரவில்லை.

''தமிழ்.... ப்ளீஸ்...''

''என்ன உதவி வேண்டும் என்றே சொல்லாமல் ப்ளீஸ் போடுகிறாய் நீ...''

''கொஞ்ச நேரம் நீங்க பாத்ரூமில் இருந்தால், நான் இரண்டே நிமிடத்தில் உடை மாற்றி விடுவேன் ப்ளீஸ்''

என்று சொன்னதும் புன்னகையோடு எழுந்தவன் பாத்ரூமின் வாசலில் நின்று ''பாதியில் நான் திரும்பி வர மாட்டேன் என்று அவ்வளவு நம்பிக்கையா?'' என்று கேலியாக கேட்டான்.

''ம்ம்ம்....''

''தேங்க்ஸ்....'' என்று நெற்றியில் கை வைத்து சலாமிட்டவன் குளியல் அறைக்குள் நுழைந்த அடுத்த வினாடி, கதவை வெளிப்புறம் தாழ் போட்டாள்.

''ஹேய்! என்ன பண்ற....?'' என்று கேட்டவன் முகத்தில் மெச்சுதல் இருந்தது. காரியம் சாதிக்க கற்று கொண்டாள். கெட்டிக்காரி.

''இரண்டே நிமிஷம்! ப்ளீஸ் உள்ளேயே இருங்க....'' என்று சொன்னவள் உடை மாற்றி, கதவின் தாழை அகற்றி பல நிமிடங்கள் வரை அவன் வெளியே வரவில்லை. தொலைக்காட்சியில் சானலை மாற்றி மாற்றி போட்டு கொண்டு இருந்தவளின் கவனம் குளியலறையிலேயே இருந்தது. இவ்வளவு நேரமாக என்ன செய்கிறான்?

''தமிழ்... கதவு திறந்தாச்சு... இன்னும் என்ன பண்றீங்க?'' என்று குரல் கொடுக்க, வெளியே வந்தவன் இடுப்பில் ஹோட்டலில் கொடுத்த அந்த வெண்ணிற பூத்துவாலை மட்டும்.

தேன்மொழியின் கண்கள் அவன் மேல் பதிந்து உடனே விலகினாலும், அவனின் தலையில் இருந்து சொட்டிய நீர், காலையில் அப்பா அணிவித்த, அவன் கழுத்தில் இருந்த அந்த மெல்லிய தங்க சங்கிலி, அகன்ற தோள்கள், திடமான புஜம், வலது கையில் பாலா

கொடுத்த ப்ரேஸ்லெட், எல்லாமே ஒரே வினாடியில் பதிந்து இருந்தது.

''நீ உள்ளே அனுப்பியது நல்லதா போச்சு. குளிச்சால் நல்லா தூக்கம் வரும் என்று ஒரு குளியல் போட்டேன். நீ நைட் குளிப்பதுண்டா? டாக்டர் ஆச்சே? கிளினிக் போயிட்டு வந்தால் குளிக்கணும் என்று சொல்லியா தரனும்? உன்னிடம் போய் கேட்கிறேன் பார்....'' என்று சரளமாக பேசியவன் அலமாரியை திறந்து, ஒரு கருப்பு ஷார்ட்சும், இளமஞ்சள் வண்ணத்தில் ஒரு கை இல்லாத டிஷர்ட்டும் அணிந்தான்.

கழற்றிய துவாலையால் தலையை துவட்டியவன், தான் கேட்டதற்கெல்லாம் அவளிடம் பதிலே இல்லை என்பதை உணர்ந்து அப்போது தான் திரும்பி பார்த்தான். அவள் பார்வையில் ஏதோ ஒரு மாற்றத்தை உணர்ந்தவன் கண்கள் விரிந்தது. அருகில் வந்து ஒற்றை விரலால் அவளின் முகவாயை பற்றி நிமிர்த்தி, ''என்ன பாஸ்மார்க் வாங்கிட்டேனா?'' என்று கேலியாக கேட்டான்.

''உங்களை யார் பார்த்தா?'' என்று கேட்டவளின் கண்கள் அவனின் கண்களை சந்திக்கவில்லை. மாறாக அவன் டீ ஷர்ட்டில் பதிந்து இருந்தது. ''டச் அன்ட் பீல்....'' என்று அதில் கருப்பு எழுத்துக்கள் இருக்க, 'பீல் வாட்?' என்ற கேள்விக்கு பதில் பின்னால் இருக்கு என்ற தகவலும் கடைசி வரியில் இருந்தது. அவசரமாக அவனைப் பற்றி திருப்பியவள் கண்களில் பெரிதாக இருந்த 'இதயம்' பட புன்னகை விரிந்தது.

''முன்னால் பார்த்தது போதாது என்று இப்போ பின்னால் பார்க்கிறாயா? இப்போ பாசா?''

'திருடன்...' என்று செல்லமாக முணுமுணுத்தாள்.

''என்ன திருடினேன்?''

''தூக்கம் வருது. குட்நைட்....'' என்று படுக்கைக்கு நகர்ந்தவளை கை பற்றி இழுத்தான்.

''தமிழ்... வற்புறுத்த மாட்டேன் என்று சொன்னீங்களே?'' என்றவளின் குரலில் அரை மணி நேரம் முன்னால் இருந்த மறுப்பு இல்லை.

''முயற்சி செய்வேன் என்று சொன்னேனே?'' என்றவன் அவளின் முகத்தை பற்றி நிமிர்த்தி கன்னத்தில் முத்தமிட்ட வினாடியில் அவள் இறுக்கமாவதை உணர்ந்தவன், அவளை விடுவித்தான்.

''படுத்துக்கோ, குட்நைட்...'' என்று சொன்னவன் விளக்கணைத்து விட்டு, வந்து அவனும் ஒரு பக்கத்தில் படுத்தான்.

குளித்தால் தூக்கம் வரும் என்று சற்று முன்பு சொன்னவனின் தூக்கம் அந்த ஒரு முத்தத்தில் காணாமல் போய் இருந்தது. மங்கிய விளக்கொளியில், ஒருக்களித்து படுத்து சில நிமிடங்களில் நிச்சலனமாகத் தூங்கியவளைப் பார்க்க பொறாமையாக இருந்தது.

அவள் படுத்து இருந்த பக்கம் இருந்த சுவற்றில் இருந்து வந்த குளிர்ந்த காற்றினால் அவள் கால்களை குறுக்கி படுக்க, ரிமோட்டை கையில் எடுத்தவன் வெப்ப நிலையை அதிகரிப்பதற்கு பதிலாக, கவனிக்காமல் குறைத்து வைத்து விட்டான்.

அடுத்த சில நிமிடங்களில் அவன் தவறை உணர்ந்து திருத்துவதற்கு முன், அந்த குளிர் காற்றின் தன்மையால் கொஞ்சம் கொஞ்சமாக நகர்ந்து வந்தவள், அவனை

நெருங்கி மார்பில் தலை வைத்து, கைகளை அவன் கழுத்தை சுற்றிலும் போட்டுக் கொள்ள, அவன் கையில் இருந்த ரிமோட் நழுவி விழுந்தது.

ஆவலுடன் அவளை சேர்த்து அணைத்து, அவளின் நெற்றியில் இதழ் பதித்து கம்பளியை இருவருக்குமாக சேர்த்து போர்த்தியவனுக்கு ஏசி குளிரை குறைக்கும் எண்ணமே வரவில்லை.



முன்தினம் திருமணம் என்று அதிகாலையில் எழும்பி விட்ட தாலும், தொடர்ந்து வந்த விருந் தினர்களின் வருகை, வாழ்த்துக்கள், சடங்குகள், கூடவே மாலையில் நான்கு மணி நேரம் வரவேற்பு விருந்தில் நின்று இருந்தது. என்று உடல் களைத்து இருந்ததாலும். இரவு தூங்க நேரம் ஆகி விட்டதாலும், தமிழ்வேந்தன் தேன் மொழி இருவருமே காலை எட்டரை மணி வரை கண் விழிக்கவே இல்லை.

தூரத்தில் ஒலிப்பது போல அலைபேசி மணி அழைத் தது. இரண்டு ரிங் போவதற்குள் நின்று விட்டதால், தூக்கம் இன்னும் கலையாமல், கண்களை திறவாம லேயே, கைகளை நீட்டி சோம்பல் முறித்த தேன்மொழி. அவளின் கரம் அரை அடி தூரம் நீள்வதற்கு முன்பே அவன் மார்பில் மோதி நிற்க திடுக்கிட்டு கண் விழித் தாள்.

இதென்ன கூத்து? இப்படி அவனை ஒட்டி கொண்டா இரவு முழுவதும் படுத்து இருந்தாள்? அவள் தூக்கத்தில்

நெருங்கினாளா? இல்லை அவன் நெருங்கி வந்தானா?'' இதை யாரிடம் எப்படிக் கேட்பது? அவசரமாக அவனிடம் இருந்து விலகி கட்டிலில் இருந்து இறங்கிய உடனேயே, கம்பளிக்குள் அவன் அணைப்பில் சுகமாக தூங்கிய போது இருந்த கதகதப்பு நீங்கி, ஜில்லென்ற குளிர் காற்று சாட்டின் நைட்டியை தாண்டி உடம்பில் ஊடுருவ, அவசரமாக ரிமோட்டை தேடி எடுத்து அதை நிறுத்தி னாள்.

போன் மணி அடித்த மாதிரி இருந்ததே என்று யோசித்தபடி, அலைபேசியை எடுத்து பார்த்தாள். மூன்று மிஸ்ட் கால். பாலாஜி.

தமிழ் இன்னும் தூங்கிக் கொண்டு இருக்க, கதவை திறந்து கொண்டு பால்கனிக்கு வந்தாள். அங்கே ஒரு டீபாயும் இரண்டு சோபாவும் இருக்க, முன்தினம் இரவு அவனை குளியலறைக்கு அனுப்பி இருக்க வேண்டாம். இங்கே இருக்கலாம் என்று தாமதமாகத் தோன்றியது. ஒரு சின்ன தலை சிலுப்பலுடன், பாலாஜியை அழைத்தாள்.

''என்ன பாலா போன் பண்ணி இருக்க?'' என்று தூக்கம் அகலாத குரலில் அவள் விசாரிக்க அவன் சிரித் தான்.

''நீ தான் கும்பகர்ணி என்றால், தமிழ் உனக்கு மேலே இருக்கிறான். மூன்று வாட்டி அழைத்தேன். போனே எடுக்கலையே? எழுந்தாச்சா?''

''உனக்குத் தூக்கமே வராது. நாங்க எல்லாம் புண் ணியம் பண்ணினவங்க. படுத்த அஞ்சாவது நிமிஷம் தூங்கிடுவோம். ஒரு நாள் கொஞ்சம் லேட்டா எழுந்தால் என்னவாம்?'' என்றவளின் குரல் உயர, அவன் மேலும் சிரித்தான்.

என்ன பேசிக் கொண்டார்கள் என்று காதில் விழாத போதும், 'அம்மாவை கொஞ்சும் மனைவி' என்ற ஜாடையே அவன் மனதை நிறைக்க போதுமானதாக இருந்தது. ''தமிழ்'' என்று குரல் உயர்த்தி தோளில் தட்டிய பாலாஜியை பார்த்துப் புன்னகை செய்தான்.

''சாரி. என்ன சொன்னாய் என்று கவனிக்கவில்லை....''

''பூவோடு சேர்ந்து நாரும் மணக்கும் என்று சொல் வாங்க. இங்கே கொஞ்சம் உல்டாவா மாறிடுச்சு என்று நினைக்கிறேன். உன்னைப் பார்த்து அவள் சீக்கிரம் எழுந்திரிப்பதற்கு பதில், நீ அவளைப் பார்த்து லேட்டா எழுந்து இருக்கிறாய். இட் இஸ் ஓகே தமிழ்....'' என்று சிரித்த பாலாஜியை முறைத்தாள் தேன்மொழி.

பேச்சும் சிரிப்புமாக காலை உணவை முடித்து விட்டு எழும் வேளையில், அவசரமாக தேன்மொழி ஓடி வந்து, ''தமிழ்.... ஒரு நிமிஷம்....'' என்று கை பற்றி அழைத்து சென்று, ''நாம் இப்ப எம் ஆர் சி நகர் போய்டுவோம் இல்லையா? மதியம் அவங்க எல்லாரையும் வீட்டுக்கு சாப்பிட கூப்பிடலாமா?'' என்று கேட்டவளை வியப்பாக பார்த்தான்.

''அது உன் வீடு. இவங்க நம் உறவு. தாராளமா வர சொல்லலாம்....'' அவன் முடிக்கும் முன்பே. ''தாங்க்யூ...'' என்று வேகமாக நகர்ந்தவளை கை பற்றி நிறுத்தினான்.

''எங்கே ஓடுற? முழுசா கேட்டுட்டு போ. அவங்களை வர சொல்லலாம். ஆனால் மணி இப்ப பத்தாகிறது. இனி போய் சமைக்க முடியாது. கஷ்டம்'' என்று சொல்ல அவள் விழி விரித்தாள்.

''நோ்யோ! ஆமாமில்ல...''

''ஆமாம் மட்டும்தான். அதனால், அவங்களுக்கு நைட் வேறே ப்ரோக்ராம் இல்லாவிட்டால் டின்னருக்கு வர சொல்லலாம் ஓகே?''

''தேங்க்ஸ் தமிழ். பிரச்னைக்கு உடனே தீர்வு சொல் லிடறீங்க. ஐ லைக் இட்....'' என்று சொல்லி சிட்டாக பறந்து போனாள் தேன்மொழி.

''இன்னிக்கே விருந்துக்கு வரணும் என்று என்ன கட்டாயம் தமிழ்?'' என்று பூங்கோதை. ''அம்மா ரெண்டு மூணு வாரமா அலைஞ்சு திரிஞ்சு சிரமப்பட்டாங்களே! இன்னொரு நாள் வச்சுக்கலாமே?'' என்று விஜயகுமார், ''நீ ஹனிமூன் கூடப் போகலை. கிடைச்ச ரெண்டு நாளை தனியா செலிபரேட் பண்ணுங்க'' என்று பாலாஜி, என ஆளுக்கு ஒரு காரணம் சொன்னாலும், தமிழ் கொடுத்த வாக்கில் இருந்து பின் வாங்கவில்லை.

''உங்களுக்கு சிரமமில்லையேம்மா?'' என்ற ஒற்றை கேள்விக்குப் பிறகு, அனைவருக்கும் ஒரு புன்னகையை மட்டும் பதிலாக கொடுத்தான். மாலை ஆறு மணிக்கு விஜயகுமார். பூங்கொதை. பாலாஜி மேகா. நான்கு பேரும் வந்து சேர வீடு விழாக் கோலம் பூண்டது.

''அம்மா! இன்றைக்கு வெஜிடபிள் புலாவ் பண்ணி இருக்கேன். நீங்க சாப்பிட்டு பார்த்துட்டு எப்படி இருக்கு என்று சொல்லணும். இது தேன்மொழி ஸ்பெஷல்....'' என்று அவர் உள்ளே வந்ததும் மகள் ஒப்பிக்க, ''நிஜ மாவா தமிழ்?'' என்று அவர் நம்பாமல் தமிழைப் பார்த் தார்.

''தேனு இரண்டு மணி நேரம் கிச்சனில் இருந்தாள். தெரியும். அவள் சமைத்தாளா என்று எனக்குத் தெரியாது அத்தை. அம்மாவிடம் கேளுங்க...''

"அம்மாவிடம் கேட்காமலே அவர் என்ன சொல்வார் என்று நான் சொல்கிறேன். என்ன அண்ணி இப்படி கேட்டுட்டீங்க? தேனு இன்றைய சமையல் முழுகமே. தேங்காய் துருவி, வெங்காயம் நறுக்கி, பால் காய்ச்சி.... என்று லிஸ்ட் பெரிசா போடுவாங்க. கரெக்டா அண்ணி....?" என்று சிரித்த பூங்கோதையைப் பார்த்து புன்னகை செய்தார்.

"சப்பாத்திக்கு மாவு பிசைஞ்சது சொல்ல மறந்துட்டீங்க அண்ணி...." என்று பானும்மா எடுத்துக் கொடுக்க, பாலாஜி இடைமிட்டான்.

"அத்தை நிஜமா சொல்லுங்க. மாவு பிசைந்தாளா? மாவு பாக்கெட் எடுத்து உங்க கையில் கொடுத்தாளா?" என்று பாலாஜி கிண்டலடிக்க, 'இன்னிக்கு எங்க அத்தை பண்ணின ஸ்பெஷல் ஸ்வீட் உனக்கு கட்' என்று பல்லை கடித்த தேன்மொழியைப் பார்க்க என்று தமிழுக்கு அன்றைய மாலை பொழுது சுவாரஸ்யமாகக் கழிந்தது.

"தேனு, புலாவ் நீதான் செய்தது என்று சொன்னது நிஜமோ பொய்யோ தெரியலை. ஆனால் புலாவ் சூப்பரா இருக்கு. அதுல சரவணபவன் எபெக்ட் கிடைக்குது" என்று சாப்பிடும்போது பாலாஜி பெருமையாகச் சொன்னான்.

"அதென்ன சரவண பவன் எபெக்ட்? நான் செய்ததை எது கூடவும் கம்பேர் பண்ண முடியாது. தெரிஞ்சுக்கோ" என்று அதட்டி அவன் தலையில் செல்லமாக ஒரு கொட்டும் வைத்தாள்.

"சரவண பவன்ல வாங்கி இருந்தால் அந்த எபெக்ட் தான் கிடைக்கும். அதுல என்ன சந்தேகம் பாலா?" என்று

சிரிக்காமல் தமிழ் திரியை கொளுத்தி போட அங்கே ஒரு சிரிப்பலை எழுந்தது.

"அடி பாவி! இதுக்கா இந்த பில்ட் அப் கொடுத்த?" என்று பூங்கோதை கேட்க. "அம்மா, மற்றவங்களுக்கு வேண்டுமானா தேனைப் பற்றித் தெரியாமல் இருக்கலாம். ஆனால் உங்களுக்கு உங்க பொண்ணோட சமையல் திறமை பற்றித் தெரிய வேண்டாமா?" என்று பாலாஜி சொல்ல அடுத்தடுத்து சிரிப்பலை தொடர்ந்தது.

"ஹலோ போகிற போக்கில் தமிழ் ஏதாவது கேலியா சொல்லி. நீங்க சத்தமா சிரித்து விட்டால், நான் சமைத்தது இல்லை என்று ஆகி விடுமா?" என்று அம்மாவையும் அண்ணனையும் அதட்டியவள். தமிழின் புறம் திரும்பி, "இது தான் நீங்க எனக்கு ஹெல்ப் பண்ணும் அழகா? இதுக்கு நீங்களும் அவங்களோடு உட்கார்ந்து சாப்பிட்டே இருக்கலாம்" என்று சொல்லி அவனின் விலாவில் தன் முழுங்கையால் இடித்தாள் தேன்மொழி.

"இப்படி இடித்தால் நான் சொல்றது நிஜமில்லை என்று ஆகிடுமா? இவங்க எல்லாம் நம்ம ஆளுங்க தானே? உண்மையைச் சொல்றதுல என்ன தப்பு தேனு?" என்று கேலியாக விடாமல் வம்பு வளர்க்க அவள் அழகு காட்டினாள்.

"ஆஹா! உங்க ஷோ கேஸ்ல எப்படி இதனை கப் வந்து உட்கார்ந்து இருக்கு என்று இப்போ தானே எனக்குப் புரியுது" என்று மடக்க அவன் சிரித்தான்.

"அதெல்லாம் தான் தேசிய, மாநில, மாவட்ட அளவில் நீச்சல் போட்டியில் ஜெயித்து வாங்கிய கப் மேடம். ஒவ்வொண்ணுக்கும், போட்டோ, சர்ட்டிபிகேட்

என்று ஏகப்பட்ட சாட்சி இருக்கு'' என்று தமிழ் பெருமை கூற, பாலாஜி இருவருக்கும் இடையில் சமாதானம் செய்தான்.

''ஓகே தேனு. நீ செய்த குப்பர் புலவுக்கு நறுக்குன்னு கடிச்சக்க. ரெண்டு அப்பளம் பொரிச்சு எடுத்து வா பார்ப்போம்''

''ம்கூம்! நீ பார்ப்பதற்காக எல்லாம் என்னால் அப்பளம் பொரிக்க முடியாது. இங்கே இதனை டிஷ் இருக்கையில் அப்பளம் இல்லாதது தான் உனக்கு குறையாப் போச்சா?'' என்று தேன்மொழி திருப்ப தமிழ் இடையிட்டான்.

''ஷ்! என்ன தேனு இது? வாயை திறந்து கேட்டுட்டான். ரெண்டு அப்பளம் பொரிப்பதுல என்ன கஷ்டம்? வா'' என்று அதட்டி அடுக்களைக்கு அழைத்துச் சென்றான்.

''தேனு. ரீபைண்ட் ஆயிலுக்கும் நல்லெண்ணெய்க்கும் வித்தியாசம் தெரியுமா?'' என்று மேகா கேட்க மீண்டும் ஒரு சிரிப்பலை எழுந்தது.

''யு டூ ப்ரூட்டஸ்? ரீபைண்ட் ஆயில் க்ளியரா இருக்கும். நல்லெண்ணெய் கொஞ்சம் மஞ்சளா இருக்கும். அது கூடத் தெரியாதா?'' என்று மேகாவிற்கு பதில் சொல்லியபடி உள்ளே வந்தவளை பார்த்த உடன் பொங்கிய சிரிப்பை அடக்கினான் தமிழ்.

''என்ன சிரிப்பு?'' என்று தேன்மொழி அதட்ட, ''ரெண்டு எண்ணெய்க்கும் குறைந்த பட்சம் இருபது ரூபாய் வித்தியாசம் இருக்கும். பேசாமல் ரீபைண்ட் ஆயில் வாங்கி துளி மஞ்சள் பொடி கலந்தால் என்ன

என்று நினைத்தேன்....'' என்று கண் சிமிட்ட அவள் கையில் இருந்த கரண்டியால் அவன் முதுகில் செல்லமாக அடித்துச் சிரித்தாள்.

''பெரிய ஐன்ஸ்டீன். ஆராய்ச்சி எல்லாம் பண்ணி புதுசா கண்டு பிடிக்கிறார்....'' என்று சிரித்து விட்டு அவன் அவசரமாக, ''ஹேய்! ஒரு தட்டில வச்சு எடுத்துட்டு போ'' என்று சொல்வதற்கு முன்பே அவள் கரண்டியிலே அப்பளத்தை எடுத்து சென்று இருந்தாள்.

அவன் பயந்த மாதிரியே, ஜல்லி கரண்டியில் அவள் எடுத்து சென்ற அப்பளத்தில் இருந்து சில துளிகள் எண்ணெய் சிந்தி, அவள் பாலாஜிக்கு போட்டுவிட்டு, அவசரமாக அடுக்களைக்கு திரும்பி வரும்போது, சிந்திய எண்ணெயில் கால் வைத்ததால் கால் சறுக்க, அடுத்த வினாடி, பாய்ந்து சென்று மனைவியை இடையோடு சேர்த்து அணைத்துத் தாங்கிப் பிடித்து இருந்தான் தமிழ்.



''நீ கேட்ட அப்பளத்தை இரண்டே நிமிஷத்தில் ரெடி பண்ணி விட்டேன்'' என்று தன் அதி வேகமான செயல்பாட்டை பாலாஜிக்கு காண்பிக்கும் எண்ணத்தில், சென்ற தேன்மொழி 'தட்டில் வச்சு எடுத்துட்டு போ' என்ற தமிழின் வார்த்தைகளை காதில் வாங்கவில்லை.

அடுப்பை குறைக்கவோ அணைக்கவோ இல்லை என்ற எண்ணம் இருந்ததால், போன வேகத்தில் திரும்பி வந்தவள் தன் கால் சறுக்கியதை உணர்ந்த அடுத்த நொடி, தன்னை அணைத்து தாங்கி பிடித்து இருந்த தமிழைப் பார்க்க அவளுக்கு வியப்பு வந்தது.

''என்ன ஆச்சு? ஈரம் கூட இல்லையே! எப்படி ஸ்லிப் ஆச்சு?''

''நான் தான், கொஞ்சம் எண்ணெய் கொட்டி வைத்து நீ வழுக்கி விழுந்தால் பிடிக்கலாம் என்று ரெடியா காத்து இருந்தேன்'' என்று கேலியாக சொன்ன தமிழ்வேந்தன். அவளின் அருகாமையும் ஸ்பரிசமும் கிறக்கத்தை உண்டு பண்ணினாலும் அதை காட்டாமல் இருக்க முயன்று வெற்றி பெற்றான்.

''விளையாடாதீங்க. கால் தடுமாற அங்கே ஈரம் இல்லை. மிதியடி மாதிரி தடுக்கி விழக் கூடிய எந்த பொருளும் இல்லை. பின்னே எப்படி?'' என்று துருவிய தேன்மொழிக்கு தன் கால் சறுக்கியதன் காரணம் இன்னும் விளங்கவில்லை.

தேன்மொழியின் கால்கள் சறுக்கிய வேகத்தில் தோன்றிய அந்த ஆரம்ப நிமிட பதட்டம் சரியான பின்னும் அவளின் இடையைச் சேர்த்து அணைத்து இருந்த கைகளை விலக்கிக் கொள்ள அவனுக்கு மனம் வரவில்லை.

''தமிழ்! எக்சாஸ்ட் ஃபேன் போடு. நிறைய புகை வருது பாரு....'' என்று பானுமதியின் குரல் கேட்டதும் இருவரும் விலகினர். தேன்மொழியின் முகம் அப்போது தான் நிலைமையை உணர்ந்து லேசாக சிவக்க, வேக மாக அடுப்புக்கு சென்று அப்பளம் பொரிக்க ஆரம்பித்தாள்.

எக்சாஸ்ட் ஃபேனை போட்டு விட்டு ஒரு தட்டில் டிஷ்யு பேப்பர் பரப்பி எடுத்து வந்த தமிழ், இதுல போட்டு அப் பளத்தை எடுத்துட்டு போ, இன்னொரு வாட்டி கால் ஸ்லிப் ஆனால் என்னால பிடிக்க முடியாது'' என்று சிரிக்க, ''எப்படி தன் நிலை மறந்து அவனின் அணைப்பில் அவ்வளவு நேரம் இருந்தோம் என்று நினைவு குறுகுறுப்பை ஏற்படுத்தி இருந்ததால், அவள் முறைத்தாள்.

''நான் ஏன் இன்னொரு வாட்டி விழணும்?''

''நீ டாக்டர் தானே? பொரிச்ச ஐட்டம் தவிர்க்க முடியாமல் சாப்பிட நேர்ந்தாலும், எண்ணையை வடித்து ட்ரையா சாப்பிடணும். அதை எடுத்துட்டு போறவங் களும் எண்ணெயை வடித்து, தட்டில் எடுத்து போக வேண்டும் என்பது கூடத் தெரியாமல் குடுகுடுவென்று அப்பளத்தை பொரித்து கரண்டியில் எடுத்து போனால் என்ன அர்த்தம்?''

''பாலா சாப்பிட்டு முடிக்க போறானே என்று எடுத் துட்டு போனேன். அது ஒரு தப்பா?'' என்று கேட்ட வளுக்கு அப்போதுதான் கால் சறுக்கியதன் காரணம் புரிந்தது.

''கரண்டியில் இருந்து எண்ணெய் சொட்டி நீ பல்டி அடிச்சு விழுந்து நீ உன் காலை உடைச்சுக்காமல் இருக் கணுமே என்று காப்பாற்ற நான் கிருஷ்ண பரமாத்மா மாதிரி அந்தரத்துல பறந்து வந்து....''

''ஹலோ போதும்! ரொம்ப பீற்றிக் கொள்ள வேண் டாம். நானே சமாளிச்சு நின்னு இருப்பேன். ஹூம்!'' என்று தலையை சிலுப்பி கொண்டாலும் அவன் சொன்ன படி அடுத்த அப்பளத்தை தட்டில் வைத்து எடுத்து போக மறக்கவில்லை தேன்மொழி.

''அடேங்கப்பா! எப்படி தேனு இவ்வளவு வேகமா அப்பளம் எடுத்துட்டு வர? கின்னஸ் ரெகார்ட் தோற்றது போ. நான் சாப்பிட்டே முடித்தாகி விட்டது'' என்று கேலி யாக சிரித்தான் பாலாஜி. அதோடு பத்து மணியாகப் போவதாலும், பேச்சை வளர்க்காமல், அவர்களும் கிளம்ப முயன்றனர்.

"தேனு, அண்ணிக்கு குங்குமம் கொடும்மா...." என்று பானுமதி சொல்ல. "அண்ணியா? ஓ! மேகாவை சொல்றீங்களா? அவளை நீ வா போ என்று பேசி பழகி விட்டது அத்தை. அவ்வளவு சீக்கிரம் மாற்ற முடியாது" என்று சிரித்தபடியே அவளை உள் அறைக்கு அழைத்து சென்றாள் தேன்மொழி.

"தமிழ், தேன்மொழிக்கு கொஞ்சம் விளையாட்டு தனம் இருக்கும். ஆனால் வீட்டிலும் சரி, வெளியிலும் சரி. அவளின் வேலையை ஒரு ஆள் குற்றம் சொல்லி விடக் கூடாது என்பதில் கவனமாக இருப்பாள். ஒரே பெண் என்பதால் அப்பாவிடம் கொஞ்சம் செல்லம். அதனால்..." என்று பொறுப்புள்ள தமையனாக அவனும் மாப்பிள்ளை கோலத்தில் நின்று இருந்ததால், சொல்ல முடியாத விஷயங்களை எல்லாம் விடை பெறும் வேளையில் தாழ்ந்த குரலில் பாலாஜி சொல்ல தமிழ் புன்னகையோடு பார்த்து இருந்தான்.

"எ...ன்...ன அ..ப்..ப.டி பார்க்கிறாய்? நான் ஏதாவது தப்பா சொல்லிட்டேனா?"

"அப்படி இல்லை பாலா ஒரு அண்ணா உன் கவலையை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. அவள் என் மனைவி பாலா. அவளை முடிந்த வரை சந்தோஷமாக வைத்துக் கொள்ள முயற்சி செய்கிறேன். ஓகே?" என்று தமிழ் வாக்களித்த அதே நேரம். அதே கோரிக்கையை, பூங்கோதையும் விஜயகுமாரும், தம்பதி சமேதராக நின்று பானுமதி அம்மாவிடம் வைத்து கொண்டு இருந்தார்கள்.

"இதெல்லாம் எனக்குச் சொல்லணுமா என்ன? அவளை என் பொண்ணு மாதிரி பார்த்துக்குவேன்" என்று

பானுமதி வாக்களித்த வேளையில், மேகா தேன்மொழிக்கு சில விஷயங்கள் சொல்லி கொண்டு இருந்தாள்.

"தேனு, உன்கிட்டே ஒன்று சொல்ல வேண்டும். அதை நீ எப்படி எடுத்து கொள்வாய் என்று தெரியலை."

"ரொம்ப ரகசியமா? பாலாவை வீட்டுக்கு போக சொல்லிட்டு நீ இங்கேயே ஸ்டே பண்ணிடேன். நாம் இருவரும் நிதானமா பேசலாம்...." என்று கண் சிமிட்டி கேலியாக கேட்டவளை வியப்புடன் பார்த்தாள்.

"இதுக்கு பாலா ஒத்து கொள்வது இருக்கட்டும். இந்த மாதிரி நாம் இருவரும் தனியா உட்கார்ந்து பேச தமிழ் ஒத்துகொள்வாரா?"

"இதுல தமிழ் ஒத்து கொள்ளவோ மறுக்கவோ என்ன இருக்கு?" என்று வெகு இயல்பாக சொல்லி விட்டு, தன் தவற்றை உணர்ந்து நாக்கை கடிப்பதற்குள் 'சம்திங் ராங்' என்று கணித்து இருந்தாள் மேகா.

"தேனு. உன்னை எனக்கு நாலு வருஷமா தெரியும். உன்னோட நல வாழக்கைக்காக. அம்மா அப்பா, பாலா எல்லோருமே ரொம்ப மெனக்கெட்டு தமிழை செலக்ட் பண்ணி இருக்காங்க. ஆனால் உனக்கென்னவோ, உங்க அப்பா அவசரப்பட்டு தமிழை கல்யாணம் பண்ணி வச்சுட்டாரோ என்று பீலிங் இருக்க மாதிரித் தோணுது..."

"என்ன பாட்டி என்னென்னவோ பேசறீங்க?"

"பா...ட்..டி..யா? சரி என்னவோ சொல்லிட்டுப் போ இப்ப எல்லோரும் கிளம்பி வாசலில் ரெடியா இருக்காங்க. விபரமா பேச இப்போ நேரம் இல்லை. ஆனால் சுருக்கமா சொல்லிடறேன். தமிழை உங்க அப்பா தான்

முதலில் செலக்ட் பண்ணினாங்க என்பது உண்மை தான். இந்த கல்யாணம் நடப்பதற்கு முன்னால் எத்தனை பேர் எத்தனை விதமா பில்டர் பண்ணினாங்க என்று எனக்குத் தான் தெரியும்...''

''என்ன மேகா பேசற? பில்டரில் காபி தான் கிடைக்கும் மாப்பிள்ளை கூடக் கிடைக்குமா?''

''எல்லாத்திலும் கேலிதானா உனக்கு? உங்க அம்மாவுக்கு ஜாதகம் பொருத்தமா இருக்கு என்று தெரிந்த பிறகு நிம்மதி. பாலாக்கு டிடெக்டிவ் ஏஜென்சியில தமிழோட குணாதிசயம் பற்றி விசாரிச்ச பின்பு திருப்தி. ஆனால் தமிழ் என்ன செய்தார் தெரியுமா?''

''தமிழ் கல்யாணத்திற்கு என்ன பெரிசா செய்தார்? அவங்க அம்மா என்னை பிடிச்சு இருக்கா என்று கேட்ட போது ஆமா என்று சொன்னார். அவ்ளோதானே?''

''இல்லை...'' என்று அழுத்தம் திருத்தமாகச் சொன்ன மேகாவைத் திகைப்புடன் பார்த்த தேன்மொழியின் குரல். ''வேறென்ன செய்தார்?'' என்று மெலிதாகவே வந்தது.

''அன்று எங்க நாலு பேரையும் ஐஸ்க்ரீம் பார்லரில் பார்த்தாயே? அங்கே தமிழ் எப்படி வந்தார் என்று தெரியுமா?''

''ம்ஹூம்...''

''அன்று பாலாஜியிடம் வந்து தன்னை ஃபுல் மெடிக்கல் செக் அப் பண்ண சொல்லி இருக்கார். ஒரு மருத்துவ அறிக்கை நானே வேறு மருத்துவமனையில் வாங்கித் தர முடியும். ஆனால் நான் இங்கே நீங்க செக் அப் பண்ணனும் என்று வந்தேன். உங்க தங்கை மேலே உங்களை விட அக்கறை யார் வச்சு இருக்க முடியும்?

நான் திருமண வாழ்க்கை வாழ தகுதியான முழு ஆரோக்கியமுள்ள ஆண்மகன் தானா என்பதை அறிந்து கொள்ள வந்து இருந்தார். அது முடிச்சுட்டு தான் வெளியே போனோம். என்னை அதிகம் பேசி விட்டதாக பாலா வருத்தப்பட, அவர் கிளினிக்கில் இருக்கும் போதே எங்க வீட்டுக்கு வந்து பாட்டியையும் சமாதானப்படுத்தி எங்க ரெண்டு பேரையும் கூட்டிட்டு வந்தார்....''

''இதெல்லாம் பாலா என்னிடம் சொல்லவே இல்லையே?'' என்று கேட்கும் போதே. வீட்டில் தமிழ் பற்றிய பேச்சை எடுத்தாலே காத தூரம் ஓடியதும் நினைவு வந்தது.

''அண்ணியும் நாத்தனாரும் இன்னும் பேசி முடிக்கலையா? நேரமாகுதுடா...'' என்ற பூங்கோதையின் குரல் ஒலிக்க. ''இதோ வந்துட்டேன்மா....'' என்று அவசரமாக அவருக்கு பதில் சொன்னவள் தேன்மொழியின் கை பற்றி அழுத்தினாள்.

''உனக்கு தமிழை அவ்வளவோ பிடிக்கலையோ என்ற சந்தேகம் முன்னாடி இருந்தது. இன்னிக்கு அது கொஞ்சம் கூடி விட்டது. என் நினைப்பு தப்பு என்று அழுத்தமாக நீ சொல்ல வேண்டும் என்று ஆசைப் படுகிறேன். தமிழ்நாட்டில் இருக்கும் மெஜாரிட்டி ஆண் பிள்ளைகளை விட தமிழ் நல்லவர். அவரோடு நீ சந்தோஷமா இருக்கணும். நாளைக்கு போனில் பேசுறேன்'' என்று அவளின் கன்னத்தை வருடி, விடை பெற்றாள் மேகா.

''இவ்வளவு நேரம் நிறைய வேலை செய்தீங்க. சாப்பாடு வைக்கிறேன். ரெண்டு பேரும் சாப்பிட வாங்க'' என்று அழைத்தார் பானுமதி.

"அம்மா! மணி பத்தாச்சு. போய் சுகர் மாத்திரை போட்டுட்டு சமத்தா படுங்க. நானும் என் பெண்டாட்டியும், தனியா சாப்பிட்டுக்குறோம்...." என்று தமிழ் அவரை அனுப்ப முயல அவர் இரண்டு மனதுடன் தேன்மொழியைப் பார்த்தார்.

அவனுடன் பேசணும். மேகா சொன்ன தகவல் மாதிரி இன்னும் அவனைப் பற்றித் தெரியாத எத்தனை தகவல்கள் இருக்கோ தெரியலையே? அவனுடைய உறவு நட்பு, பிடிக்கும் பிடிக்காதவை, திறமைகள் இதை எல்லாம் இன்று பேசித் தெரிந்து கொள்ள வேண்டும் என்று தோன்றியதால் தேன்மொழியும், "படுத்துகோங்க அத்தை" என்று தலை அசைத்தாள்.

தட்டில் இருவருக்கும் பரிமாறியபடி, "நாம் சந்தித்த இத்தனை நாளில் நீ என் கருத்துக்கு ஒத்து போவது இதுதான் முதல் முறை என்று நினைக்கிறேன். சரியா?" என்று சிரிப்போடு விசாரித்தான் தமிழ்.

"உங்களிடம் இது முதல் முறை. ஆனால் அத்தை மிடம் இதற்கு முன்னால் உங்களின் கருத்தை பாராட்டிப் பேசி இருக்கிறேன்."

"ஆஹா! எங்க அம்மா இதை சொல்லவே இல்லையே? எப்போ? எதுக்கு?" என்று ஆவலாக விசாரித்தான்.

"பிரைட் ரைஸ் போட்டுக்கலையா தமிழ்? நான் சமைத்ததை சாப்பிட பயமா இருக்கா?" என்று அவன் தட்டில் வைத்தவாறே கேட்டாள்.

"சாப்பாடு முன்னே பின்னே இருந்தாலும் அட்ஜஸ்ட் பண்ணி கொள்ளலாம். ஆனால் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லாமல் இருப்பது.... அதுவும் என்னை பாராட்டி சொன்னதை சொல்லாமல் நழுவுவது கொஞ்சம் கூட சரி இல்லை."

"ஹய்யோ! ரொம்ப அலையாதீங்க. நீங்க கார் வாங்காததற்கான காரணம் உங்க அம்மா சொன்ன போது கரெக்ட் தானே என்று உங்களுக்கு ஆதரவா பேசினேன். போதுமா?"

"ஓ! அவ்வளவு தானா? வேறென்ன எனக்குத் தெரியாமல் என்னைப் பற்றிப் பேசினீங்க?"

"ஒண்ணும் பேசலை.... உங்களைப் பற்றி யாராவது பேசினாலே... நான் கேட்கலை... இப்ப சொல்லுங்க.... கேட்கறேன்...." என்று சொன்னவள் கண்கள் தட்டில் பதிந்து இருக்க அவளின் கைகள் உணவை அளைந்து கொண்டு இருந்தது. அவளின் பார்வையில் நடத்தையில் ஒரு வித்தியாசம். ஒரு இனக்கமான மாற்றத்தை தமிழால் உணர முடிந்தது.

"என்ன சொல்லணும் தேன்மொழி....?" என்றவன் குரலில் நெருக்கம் இருந்தது.

"உங்களைப் பற்றி.... உங்களுக்கு என்ன பிடிக்கும் என்பதைப் பற்றி... உங்க எதிர்காலத் திட்டம் பற்றி எல்லாம் சொல்லுங்க...." என்று அவள் மெல்லிய குரலில் விசாரிக்க அவன் விழிகள் வியப்பால் மேலும் விரிந்தது. எதிரே அமர்ந்து இருந்த இருக்கையை விட்டு எழுந்து போய் கை கழுவி விட்டு வந்து அருகில் அமர்ந்தான்.

"ஹேய்! என்ன அதுக்குள்ளே கை கழுவிட்டீங்க? சாப்பிடலையா?"

"ம்ம்.. சாப்பாடா முக்கியம்? நீ எவ்வளவு பெரிய விஷயம் கேட்டு இருக்கிறாய். அதுக்கு பதில் சொல்ல வேண்டாமா?" என்று அருகில் இன்னும் நெருங்கி அமர்ந்து, குரலை மேலும் தணித்து, "மனிதர்களை சந்தோஷப்படுத்தி பார்ப்பது தான் ரொம்ப பிடிக்கும். அந்த பட்டியலில்... முதலில் அம்மா இருக்காங்க.... அடுத்தது நீ இருக்கிறாய்.... அதன் பிறகு தான் மற்றது எல்லாமே... உணவு, உடை, வேலை, சமூகம்..... எல்லாமே.... அப்புறம் தான்..." என்று தீர்மானமாகச் சொன்னவனை திகைப்புடன் பார்த்தாள் தேன்மொழி.

"இப்படி கண்ணை விரித்துப் பார்த்தால் நேற்று கொடுத்த வாக்கை நான் எப்படி காப்பாற்றுவேன்...? கொஞ்சம் அந்த பக்கம் திரும்பு..." என்று கிறக்கமாக சொன்ன தமிழை மேலும் ஆர்வமாக பார்த்தாள்.

"அதென்ன வேறே பக்கம் திரும்பு என்று என்னை ஆர்டர் போடறது? உங்களுக்குப் பார்க்கப் பிடிக்கலை என்றால் நீங்க தான் திரும்பிக்கணும் சார்...." என்று சொன்னவளை தவிர்க்க, முடியாமல், அவசரமாக அவள் புறம் குனிந்து கன்னத்தில் அழுத்தமாக முத்தமிட்டான்.

"தமிழ் என்ன பண்ணுறீங்க?" என்றவளின் குரலும் குழைந்து கிசுகிசுப்பாகி இருந்தது.

"இது கூடத் தெரியாமல் என்ன டாக்டர் நீ...?" என்றவன் கன்னம் அவளின் கன்னத்தில் உரசி இழைந்தது.

"ம்கூம்.... இதான் எம்.பி.பி.எஸ் பாடத்துல சொல்லி தாங்களாக்கும்?"

"இல்லையா? அப்ப நான் சொல்லி தரட்டுமா?" என்றவன் அவளை மேலும் நெருங்க, "தமிழ்.... ப்ளீஸ்..."

என்ற அவளின் மறுப்பு முனகலாக வெளி வந்த வேளையில் அவனின் அலைபேசி அழைத்தது.

"ப்ச்.... பத்து மணிக்கு யாரு?" என்று முனகலுடன் போனை எடுத்தவன், "எஸ் மேம்... எஸ் மேம்..." என்பதை பல தடவை சொல்லி விட்டு, "அரை மணி நேரத்துல ஏர்போர்ட்டில் பார்க்கிறேன் மேம்" என்று கடைசியாகச் சொல்லி போன் இணைப்பை துண்டித்தான்.

"யார் தமிழ் போனில?" என்று ஆர்வமாகக் கேட்ட வளை ஒரு வினாடி தீர்க்கமாக பார்த்தான்.

"வந்து எல்லா விஷயமும் சொல்றேனே.... ப்ளீஸ்.... ஏர்போர்ட் வரை போயிட்டு. இரண்டு மணி நேரத்தில் வந்து விடுவேன். ஓகே?" என்று சொல்லி விட்டு பைக் சாவியுடன் வெளியேறியவனை நம்ப முடியாமல் பார்த்தாள் தேன்மொழி.

"சாப்பாடா முக்கியம்? நீ எவ்வளவு பெரிய விஷயம் கேட்டு இருக்கிறாய். அதுக்கு பதில் சொல்ல வேண்டாமா?" என்று சற்று முன்பு சொன்னது இவன் தானா? இவன் இப்போது அவசரமாகப் பார்க்கப் போவது அந்த 'மஞ்சுவையா?' மனதுக்குள் ஏதோ உடைந்து, கண்கள் கரித்தது.



"இரண்டு மணி நேரத்தில் வந்து விபரம் சொல்கிறேனே ப்ளீஸ். இப்ப அவசரமா ஏர்போர்ட் வரை போகணும். நீ தனியா படுத்துக்க வேண்டாம். அம்மா ரூமில் படுத்துக்கோ. நான் கதவைப் பூட்டிச் சாவி எடுத்துட்டு

போறேன். தூங்கு. எனக்காகக் காத்திருக்க வேண்டாம்...'' என்று கிளம்பும் அவசரத்திலும் தமிழ் விடாமல் சொல்லிய ஒவ்வொரு வாக்கியமுமே அவனுக்கு அவள் மேல் அக்கறை இருந்தது என்பதை காட்டியது. என்றாலும் அதில் எதுவுமே தேன்மொழியின் காதுகளைத் தாண்டி மனதில் பதியவில்லை.

திருமணமான அடுத்த நாள் இரவு பத்து மணிக்கு. யாராவது அழைப்பார்களா? அவள் தான் படிப்பை முடிக்கப் போகும் நேரத்தில் அது தொந்தரவாக இருக்க வேண்டாம் என்று அதிக நாட்கள் விடுப்பு எடுக்கவில்லை. இவனுக்கு என்ன? விடுப்பு எடுத்து இருக்கிறேன் என்று சொன்னானே? அது உண்மை என்றால் இப்போது அழைத்தது யார்? இந்த நேரத்தில் ஏன் அழைத்தார்கள்? இவன் எதற்காக இந்த அர்த்த ராத்திரியில் ஏர்போர்ட் போகணும்? அவளுக்கு மண்டை வெடித்து விடும் போல வலித்தது.

வேகமாக குளியலறைக்குச் சென்றவள் குளிர் நீரில் ஒரு குளியல் போட்டு இரவு உடைக்கு மாறி, பானுமதியின் அருகே வந்து கட்டிலில் அவரை ஒட்டியபடி படுத்து கொண்டாள்.

அந்த சின்ன அசைவில் கண் விழித்தவர். ''தேனும்மா என்னடா இங்கே வந்து படுத்து இருக்க? தமிழ் இல்லை?'' என்று அவசரமாக எழுந்து விசாரித்தார்.

''இல்லத்தை ஏதோ போன் வந்தது என்று ஏர்போர்ட் வரை போய் இருக்கார். அதான் இங்கே வந்து படுத்தேன்...'' என்று தன் மனவாட்டத்தை மறைத்து இயல்பாக பதில் சொன்னாள்.

''இந்நேரத்துல எங்கே போனான்? அப்படி அவசரமாக போக வேண்டி வந்தால், உன்னையும் கூட்டிட்டு போக வேண்டியதுதானே? அந்த பைக்குல உன்னையும் கூட்டிட்டு போனால் பைக் தேஞ்சுடுமா? வரட்டும் கேட்கிறேன்....'' என்று அவர் புலம்பியது அவள் மேல் இருந்த அக்கறையில் என்றாலும் அதற்கு எந்த பதிலையும் அவளால் சொல்ல முடியவில்லை.

* * *

காலை ஏழு மணிக்கு ஹாலில் அம்மாவுக்கும் பையனுக்கும் இடையே சற்றே உயர்ந்து கேட்ட பேச்சுக் குரலில் கண் விழித்த தேன்மொழிக்கு தான் எங்கே இருக்கிறோம் என்பதை உணரவே சில வினாடிகள் பிடித்தது. அதன் பிறகே முன் தினம் இரவு நடந்தது நினைவுக்கு வந்து முகம் வாடியது.

சில நிமிடங்களில் முகம் கழுவி வெளியே வந்த போது, பானுமதி கிச்சனில் இருந்தார். ''தேனு காபி தரட்டுமா? ஹார்லிக்ஸ் குடிக்கிறாயா?'' என்று அக்கறையாக விசாரித்தார்.

''சாரி அத்தை. இனிமேல் நீங்க எழுந்திரிக்கும் போதே என்னையும் எழுப்பி விடுங்க. காபி டீ எதுவா இருந்தாலும், ஒரு மணி நேரம் கழித்து தான். முதலில் தண்ணி தான் குடிக்கணும். நான் ஏதாவது செய்யட்டுமா? காலை டிபனுக்கு என்ன பண்ண போறீங்க?''

''களைப்பா இருந்தால் ஒரு நாள் கூடுதலா தூங்கினால் தப்பு ஒண்ணும் இல்லை. உனக்கு என்ன பிடிக்கும் என்று சொல்லு. அதையே செய்துடலாம்.''

''நீங்க வழக்கமா என்ன பண்ணுவீங்களோ... அதையே...'' என்று சொல்லி கொண்டு இருக்கும் போதே.

''குட்மார்னிங் தேனு...'' என்று அடுக்களைக்குள் நுழைந்தான் தமிழ்.

அவனின் முகத்தை பார்க்கவோ பேசவோ அந்த வினாடி பிடிக்கவில்லை என்றாலும் 'குட்மார்னிங்...' என்று அவன் முகத்தை பார்க்காமலேயே சொன்னாள்.

அவளின் கோபத்தை உணர முடிந்ததால், ''அம்மா, காலை டிபனுக்கு பொங்கல் பண்ணி, மெதுவடை போடறீங்களா?'' என்று அம்மாவிடம் பேச்சு கொடுத்தான்.

''செய்யலாம் தமிழ். ஆனால் நேற்று நைட்டும் ஹெவியா விருந்து சாப்பாடு. இன்று மதியம் மீண்டும் பூங்கோதை அண்ணி அவங்க வீட்டுக்கு கூப்பிட்டு இருக்காங்க. அதான் யோசித்தேன்...''

''அத்தை நேற்று கூப்பிட்டாங்க. போகலாமா வேண்டாமா என்று எங்க வீட்டம்மா தானே முடிவு பண்ணனும். என்ன தேனு போகலாமா?'' என்று அவளையும் இயல்பாக பேச்சுக்குள் இழுக்க முயன்றான்.

''வேண்டாம் அத்தை. நான் மூன்று நாளா சரியாவே தூங்கலை. நாளைக்கு காலேஜ் வேறு கிளம்பி ஆகணும். நான் அம்மாவிடம் பேசுகிறேன். அடுத்த வாரம் போய்க்கலாம். எனக்கு ரெஸ்ட் எடுக்கணும்....'' என்று அவனைத் தவிர்த்து பதிலை பானுமதியிடம் சொன்னாள்.

தமிழோடு அங்கே போக இஷ்டம் இல்லை. மேகாவோ, அம்மாவோ, அவர்களுக்குள் எதோ சரி இல்லை என்பதைப் போகிற போக்கில் கண்டு பிடித்து விடுவார்கள். போகாமல் இருப்பது தான் பெட்டர் என்ற அவளின் எண்ணத்தை தமிழால் ஊகிக்க முடிந்தது. அது சந்தோஷத்தையும் கொடுத்தது.

''சரிம்மா, அப்ப நான் மாமாக்கு போன் பண்ணி அடுத்த வாரம் வருகிறோம் என்று சொல்லிடுறேன். நீங்க பொங்கலே பண்ணிடுங்க...'' என்று வெளியேறினான்.

சில நிமிடங்கள் உதவி செய்கிறேன் என்று அவளின் பின்னால் சுற்றியவளை, ''கொஞ்ச நேரம் காத்தாட போய் ஹாலில் உட்கார்ந்து பேசிட்டு இரு. கொஞ்சம் நாள் போகட்டும். அப்புறமா நீ தனியாவே சமைக்கலாம்'' என்று அனுப்பி வைக்க, அவன் ஹாலில் இருந்ததால் அவள் அறைக்கு சென்றாள்.

அப்போதுதான் அந்த வீட்டில் இரண்டு படுக்கை அறைகள் மட்டுமே இருப்பது உறைத்தது. இந்த அறைக்குள் அவன் எந்த நிமிடமும் வரலாம். அவள் வசதி குறைவை பெரிதாக நினைப்பவள் இல்லை. ஆனாலும்... பெருமூச்சோடு வெளியே சிட்டவுட்டில் இருந்த ஒரு பிரம்பு நாற்காலியில் அமர்ந்து கண்களை மூட, கூடான கண்ணீர் வெளியே வந்தது.

''ஹேய் தேனு! என்ன இங்கே வந்து உட்கார்ந்துட்ட? நான் நீ கிச்சனில் இருக்கிறாய் என்று தானே ஹிந்து பேப்பரில் வந்த அட்வர்டைஸ்மென்ட்டை எல்லாம் பேப்பரை மனப்பாடம் பண்ணிட்டு இருந்தேன். இங்கே எப்ப வந்தாய்? சிட் அவுட்ல சாயங்காலம் நல்ல காற்று வீசும். காலையில் சரியா இருக்காதே? ஹாலுக்கு வர வேண்டியது தானே?'' என்று அறையில் இருந்த ஒரு மோடாவை கையோடு கொண்டு வந்து போட்டு அவளுக்கு எதிரே அமர, அவள் அந்த இடத்தை விட்டு வெளியேற முயன்றாள்.

"ஷ்! தேனு.... ப்ளீஸ்.... நான் உன்னிடம் பேசணும். நைட்டே பாதி பேச்சில் போக வேண்டியதாகிவிட்டது. இப்ப பேசலாம். உட்காரேன்..." என்று மென்மையான குரலில் சொல்லி அவளின் கை பற்றி நிறுத்தினான்.

"எனக்கு பசிக்குது. நான் குளிக்கப் போகிறேன். கையை விடுங்க..."

அவள் சொன்ன பசி என்ற வார்த்தை அவனை உலுக்க, அதற்கு மேல் அவளை நிறுத்தி வைக்க மனமில்லை. "சரி சாப்பிட்ட பிறகு பேசலாம்" என்று விடுவித்தான்.

மீண்டும் காலை உணவுக்குப் பிறகு, அவன் பேச முயன்ற போது. அவளுக்கு தூக்கம் வந்தது. "சரி எப்ப பேசலாம்?" என்று நிதானமான குரலில் கேட்க அவள் அமைதியாக இருந்தாள்.

"நான் நேற்று ஒரு அவசரமான வேலையாக வெளியே போக வந்தது. போவதற்கு முன்பு. என் எதிர்கால திட்டம் பற்றி எல்லாம் விசாரித்தாய். அதை பற்றித்தான் இப்போது பேச அழைக்கிறேன். உனக்கு எப்ப வசதிப்படும் நீயே சொல்லு" என்று அவன் மீண்டும் கேட்டதற்கும் மௌனமே பதிலாக இருந்தது.

"தேன்மொழி. ஒரு விஷயம் சொல்லிக்கறேன். என் வேலை உன்னுடையது மாதிரியே நேரம் காலம் இல்லாத வேலை. பாஸ் சொல்ற வேலைகளை தவிர்க்க முடியாது..."

"பாஸ் சொல்ற வேலையை செய்ய வேண்டாம் என்று நான் எப்போ சொன்னேன்? ராத்திரி பகல் வித்தியாசம் இல்லாமல் நல்லா பாருங்க. யார் வேண்டாம் என்று சொல்றா?"

"ப்ச்! நான் என்ன சொன்னால்... சரி விடு. நான் விஷயத்திற்கு வருகிறேன். நாமளே தனியா நிகழ்ச்சிகளை தயாரிக்க ஆரம்பித்து விட்டால் அவங்க சொல்வதை கேட்க வேண்டாம். ஆனால் நம் நிகழ்ச்சிக்கு ஸ்பான்சர் கிடைக்கணும். உனக்கே தெரியும். இப்ப விளையாட்டு போட்டிகளுக்கும். சினிமா நிகழ்ச்சிகளுக்கும் தான் ஸ்பான்சர்ஷிப் கிடைக்கும். இந்த ஃபீல்டில் காலூன்றும் வரையில் சில அசௌகரியங்களைத் தாங்கி கொண்டால்..."

"ப்ச்! இப்ப உங்களுக்கு என்ன வேண்டும்?"

"எப்போதும் அருகில் இருக்கும். அன்பான மனைவி. ஆறுதலான வார்த்தைகள், அன்னியோன்யமான குடும்பம் அவ்ளோதான். வேறென்ன வேண்டும்?"

"அதையே உங்க மனைவி உங்களிடம் எதிர்பார்த்தால் தப்பா?"

"என்ன சொல்ற?"

"நீங்க என்ன சொல்லணுமோ அதை சொல்லி முடிங்க. நான் தூங்க போகணும்..."

"மனசுல இருப்பதை வெளிப்படையாகப் பேசு தேன்மொழி ப்ளீஸ். நான் ஏற்கனவே சொன்ன மாதிரி மஞ்சு மேடம் என்னுடைய பாஸ். அவங்க ஆஸ்திரேலியாவில் இருந்து போன் பண்ணி இருந்தாங்க. ஒரு முக்கியமான அவசரமான வேலை. அதுவும் என்னுடைய 'வனம் காப்போம், தமிழகத்தின் ஐந்து வகை நிலங்கள்' என்ற இரண்டு தொடர்களுக்கும் ஸ்பான்சர் பிடிக்கும் வேலை...."

"ஸ்பான்சர்ஷிப் பிடிப்பது எனக்குத் தெரிஞ்ச வரைக்கும், மார்க்கெட்டிங் மேனேஜர் வேலை. நீங்க

மார்க்கெட்டிங் மேனேஜரா? அப்படி எனக்கு யாரும் சொல்லலையே?'' என்றவளின் குரல் அடக்கப்பட்ட கோபம் இருந்தது.

''மார்க்கெட்டிங் மேனேஜர் வேலை தான் தேனு. இதனால் அவங்க டிவி கம்பெனிக்கு லாபம் கிடைக்கும் என்பது உண்மை தான். ஆனால் அவங்களுக்கு இந்த ப்ரோக்ராம் இல்லா விட்டாலும் வேறே லாபம் கிடைக்கும். அவங்க என்னோட வெல்விஷர். என்னுடைய ப்ரோக்ராமுக்காக தான் அவங்க சொன்ன ஆளை ஏர்போர்ட்டில் பார்த்தேன்....''

''அர்த்த ராத்திரியில், ஏர்போர்ட்டில் மட்டும் தான் அவரை பார்க்கணும் என்பது தான் உங்க பாஸ் கட்டளையா?''

''நீ கிண்டல் அடிக்கணும் என்று முடிவு பண்ணி விட்டால் எப்படி வேண்டுமானாலும் பேசலாம். ஆனால் உண்மை என்ன என்றால், அவர் சிங்கப்பூருக்கு மூன்று வார பிசினஸ் ட்ரிட் நேற்று இரவு கிளம்பி விட்டார். நேற்று பார்க்கவில்லை என்றால், இன்னும் குறைந்தது ஒரு மாதத்துக்கு ஒரு வேலையும் நடக்காது. அதனால் அர்ஜெண்டா பார்க்க, சொன்னாங்க. எனக்கு இந்த ப்ரோக்ராம் அவசரமா ரிலே ஆகணும். ஆனால் தான்.... ப்ச்! சரி விடு. இன்னும் ஏதாவது விளக்கம் வேண்டும் என்றால் கேளு. சொல்றேன். இல்லை என்றால் நீ போய் தூங்கு. வழக்கமா நான் பகலில் தூங்குவதில்லை. நீ தூங்கப் போகிறாய் என்றால் நான் குழந்தைகளோடு கீழே ஸ்விம்மிங் பூலில் இருப்பேன்...''

''ஸ்விம்மிங் பூவில் குழந்தைகளோடு விளையாட மஞ்சு மேடத்திடம் பெர்மிஷன் வாங்கியாச்சா?'' என்று

எரிச்சலோடு கேட்டவளை நின்று ஒரு கணம் தீர்க்கமாக பார்த்து விட்டு, ''இல்லை. அது அவசியமும் இல்லை. இது என் வாழ்க்கை. என் விருப்பப்படி வாழ யார் அனுமதியும் எனக்குத் தேவை இல்லை'' என்று முடித்து விட்டு வெளியேறினான்.

''என் வாழ்க்கையாமே? அப்புறம் எதுக்குக் கல்யாணம் பண்ணிக்கணும்? யார் அனுமதியும் தேவை இல்லை என்று அந்த மஞ்சுவை மட்டும் சொன்னானா? இல்லை தன்னையும் சேர்த்து சொன்னானா? சை! கல்யாணத்துக்கு அவங்க அம்மா கேட்டதற்காக மனமின்றி சம்மதம் சொல்லி விட்டு இப்போது பிடிக்காமல் தன்னைத் தவிர்க்கிறானா? அப்படியும் தோன்றவில்லையே? அந்த போன் கால் வரும்வரை தன்னுடன் நன்றாக நெருங்கி நின்று சந்தோஷமாக, தானே பேசிக்கொண்டு இருந்தான்?

போன் வந்ததும் தலை கீழாக மாறி போவதென்றால்... அவன் அப்பாவிடம் சொன்ன அந்த முதல் காதல்... இவள் தானோ? பணக்காரி என்பதால் அவர்கள் வீட்டில் ஒத்து கொள்ளாமல்.... பேருக்கு தன்னைக் கல்யாணம் செய்து கொண்டு.... அவளுடன்... கடவுளே!

அவனை முதல் முறை கிளினிக்கில் பார்த்த போது அவன் செய்து கொண்டு இருந்த வேலை நினைவில் ஆடியது. அவனுடைய அந்த விலை உயர்ந்த காமராவில் பதிவாகி இருந்த படங்களை... ஆணும் பெண்ணுமாக சேர்ந்து இருந்த சில படங்கள், இளம் பெண்கள் மட்டும் தனியாக இருந்த படங்களை ஏதோ செய்து கொண்டு இருந்தான். அது அவளுக்குப் பிடிக்கவில்லை. தன்னைப் பார்த்ததும் சிரித்தானே? குற்ற உணர்வு வராதா? அவன் மேல் தப்பில்லை என்று வைத்துக்

கொள்ளலாம். இது வரை 'எனக்கு உன்னைப் பிடித்து இருக்கு' என்று சொல்லவே இல்லையே? அதற்கு என்ன காரணம்?

வேலை இல்லாமல் தனிமையில் இருந்த தேன் மொழியின் கற்பனை குதிரை கண்டபடி பறக்க, அவளின் நிம்மதி முழுசாய் பறந்து போனது.



தமிழ் கீழே ஸ்விம்மிங் பூலில் குழந்தைகளோடு இருப்பேன் என்று சொல்லி விட்டு வெளியேறிய பிறகு பல நிமிடங்கள் அந்த ஜன்னலின் கம்பியை ஒரு கையால் பற்றியபடி அதே இடத்தில் நின்று இருந்தாள் தேன் மொழி.

"தேனு, ஒரு நிமிஷம் வரியா?" என்ற பானுமதியின் குரல் கேட்டு தன் நிலைக்கு வந்தவள் அவசரமாக கண்களை துடைத்து கொண்டாள்.

"என்னம்மா..." என்று அடுக்களைக்குள் வந்த தேன்மொழியை, "உனக்கு என்ன பாயாசம் பிடிக்கும் என்று சொன்னால் அதையே வச்சுடலாம்...."

"நேற்று பாயாசம் வைத்தோமே? இன்று வேண்டாம்..."

"என்ன தேனு இப்படி சொல்லிட்ட? இங்கே சென்னையில தான் இப்படி கல்யாணம் மூணு வேளை சாப்பாட்டுடன் முடிச்சுட்டாங்க. இதுவே மதுரையில கல்யாணம் வச்சு இருந்தால் வந்த சொந்தம் எல்லாம் ஊருக்கு திரும்பிப் போகவே ஒரு வாரம் ஆகும். அது வரைக்கும் கட்டாயம் பாயாசம் வச்சே ஆகணும். ப்ச்!

இதை எல்லாம் புலம்பாதீங்கம்மா என்று இன்று தமிழ் காலையில் கூடச் சொன்னான். ஆனாலும் மனசு கேட்குதா பார்? நீ உனக்கு என்ன பாயாசம் வேண்டும் என்று சொல்லும்மா..." என்று நெற்றியில் தட்டி கொண்டார்.

அவரின் ஆதங்கத்தை தமிழ் அடக்கி இருக்கிறான் என்பதே அனுதாபத்தை உருவாக்க, "உங்க சொந்தக் காரங்க இன்னும் கல்யாணத்திற்கு வர வேண்டியவங்க நிறையப் பேர் இருக்காங்களா? உங்களுக்கு அங்கே ரிசப்ஷன் வைக்கணும் என்று ஆசையா இருக்கா அத்தை?" என்று கனிவோடு விசாரித்தாள்.

"அதெல்லாம் இல்லை தேன்மொழி. நீ என்ன பாயாசம் வேண்டும் என்று சொல்லு?"

"நீங்க நான் கேட்ட கேள்விக்கு முதலில் உண்மையான பதிலைச் சொல்லுங்க. உங்க சத்தம் கேட்டுத்தான் இன்று காலையில் நான் கண் விழித்ததே!"

"ஹய்யோ! உனக்கு தெரியாமல் இந்த வீட்டில் என்ன ரகசியம்? கல்யாணத்திற்கு முன்னால் கார் வாங்கு வேன் என்று சொன்னாயே? நீ நாளையில் இருந்து காலேஜிற்கு போகணுமே? கார் ஏன் இன்னும் வாங்கலை என்று விசாரித்தேன்..."

"இப்போதைக்கு என் காரையே பயன்படுத்திக்கலாம். அப்புறமா..."

"இதைத்தான் நானும் சொன்னேன். அவளுக்கு என்ன வேண்டுமோ அதை வாங்கி கொடுப்பது நம்ம கடமை இல்லையா? அதை அவங்க வீட்டில் கேட்கலாமா என்று எனக்கு அர்ச்சனை. மதுரை வீடு கடனில் இருக்கு. அதை

மீட்கணும் என்று முயற்சி செய்கிறான். அந்த சமயத்தில் புதுசா செலவு வேண்டாம் என்று சொன்னது தப்பா? நீயே சொல்லு...'' என்று அவர் மனதில் தோன்றியதைப் பேச அவளின் மனம் வேகமாக யோசித்தது.

வீடு திருப்பும் முயற்சிக்கு பணம் தேவையா? அதை தன்னிடமோ தன் வீட்டிலோ கேட்க கௌரவம் இடம் கொடுக்கவில்லை. அது தான் நல்ல ஆண்மகனுக்கு அழகு. ஆனால் தன்னிடம் இதை ஏன் பகிர்ந்து கொள்ள வில்லை?

''அத்தை நம்ம ப்ளாட்ல ஸ்விம்மிங் பூல் எந்த பக்கம் இருக்கு?'' என்று திடீர் என்று கேட்டவளை விசித்திர மாக பார்த்தார்.

''சி.பிளாக் பின்னாடி இருக்கு. அந்த பக்கம் போனாலே குட்டி பசங்க தண்ணீரில் தொப் தொப் என்று குதிக்கும் சத்தமும், சந்தோஷ கூச்சலுமே குளம் எங்கே இருக்கு என்று காட்டிக் கொடுத்து விடும்...'' என்று சிரிப்புடன் சொன்னார்.

''இங்கே ஏதாவது வேலை இருக்கா அத்தை?''

''அதெல்லாம் நானே பார்த்துக்குவேன். நீ போயிட்டு வா. அங்கே அந்த குழந்தைகளோட சத்தமும், மேலே தெளிக்கும் சில்லென்ற நீருமே மனசை அப்படியே குளிர வச்சுடும். ஞாயிற்றுக் கிழமை, தமிழ் மரம் நட போயிட் டால் எனக்கு ஜாகை அங்கே தான்...'' என்று அவர் சொன்னது உண்மை மனதார உணர்ந்தாள்.

ஐம்பதடி நீளமும் இருபதடி அகலமும் கொண்ட பெரிய நீச்சல் குளத்தில், நாலில் இருந்து பத்து வயதுக் குள் ஆன ஆணும் பெண்ணுமாய் சுமார் இருபது

குழந்தைகள், பதினைந்து வயதுக்கு மேற்பட்ட தானே நீச்சலடிக்கும் மூன்று பெரிய பையன்கள், இவர்களுடன் தமிழும் இருந்தான்.

''அவங்க உங்களையே பார்க்கிறாங்க அங்கிள்...'' என்று தேன்மொழி வந்து அமர்ந்த மூன்றாவது நிமிடம் ஒரு வாண்டு சொல்ல அவளை பார்த்தவன் முகம் மலர்ந்தான்.

''ஹேய்! நீ எப்ப வந்தாய். ஸ்விம் பண்ண வரியா?'' என்று அழைக்க, அவள் மறுத்தாள்.

''ஸ்மிம்மிங் தெரியாதா?'' என்று கேட்டதற்கும் மறுப் பாகத் தலை அசைக்க அவன் புன்னகை மேலும் விரிந்தது.

''இங்கே வந்து சும்மா தண்ணில கால் வைத்து உட்காரேன்.''

''ட்ரெஸ் ஈரமாகி விடும். வேண்டாம்'', அவனிடம் புன்னகையோடு சொன்னவள், நீச்சல் குளத்தின் பக்க வாட்டில் இருந்த சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்தபடி வேடிக்கை பார்த்தாள்.

அவனின் டீ ஷர்ட்டை இரு கரங்களாலும் அவன் கழுத்தை சுற்றி இறுக்கிப் பிடித்து கொண்டு தண் ணீருக்குள் இறங்க மாட்டேன் என்று அடம் பிடிக்கும். சிறிய குழந்தைகளை கொஞ்சலாக பேசி தண்ணீருக்குள் விடுவதை. பயம் விலகிய குழந்தைகளுக்கு தன் கைகளில் தாங்கி, நீச்சல் கற்று கொடுப்பதை, கற்று கொண்ட குழந்தைகள் தண்ணீருக்குள் செய்யும் சாகசங் களைப் பாராட்டி ஊக்கப் படுத்துவதை, பார்த்தவள் மனம் லேசாகியது.

'குழந்தைகளிடம் அப்புறம் பார்க்கலாம்', என்று விடை பெற்று தண்ணீர் சொட்ட சொட்ட அவள் அருகே வந்து பெஞ்சில் அமர்ந்தான் தமிழ்.

"என்ன ஸ்விம்மிங் பூலுக்குத் திடீர் விஜயம்? என்னை பார்க்கவா?" என்று கேட்டபடி பெஞ்சின் பின்னால் இருந்த அலமாரியில் அவன் வைத்து இருந்த டவலை, அமர்ந்த வாக்கிலேயே எக்கி எடுத்த போது அவனின் டீ ஷர்ட்டில் இருந்த ஈரம் அவளின் சுடிதார் டாப்பில் பட்டதோடு, தலையில் இருந்து சில துளி நீர் சொட்டி சிலிர்ப்பை உண்டாக்கியது.

"நினைப்புதான் பொழைப்பை கெடுக்குமாம்..." என்று கேலியாக சொன்னவள் எழுந்து வீட்டை நோக்கி நகர அவனும் தலையை துவட்டியவாறே வேகமாக பின் தொடர்ந்தான்.

"யார் நினைப்பு யார் பொழைப்பை கெடுக்கும்?" என்று சீண்டியவனை, இடுப்பில் கை வைத்துத் திரும்பி நின்று செல்லமாக முறைத்தாள்.

"பழமொழி சொன்னால் அனுபவிக்கணும். ஆராயக் கூடாது..."

"நீ கமல் ஃபேனா...?"

"என் இருக்கக் கூடாதா?"

"கேள்வி சொன்னால் பதில் சொல்லணும். இன்னொரு கேள்வி கேட்கக் கூடாது" என்று அவளை மாதிரி பாவனையோடு சொன்னவன், அவளின் தோளில் தன் கையை போட்டு அணைத்தவாறே நடந்தபடி, "ஆனால் நீ கேள்வி கேட்டாலும் எனக்குப் பிடிச்சு இருக்கு" என்று ஆழ்ந்த குரலில் சொல்ல அவளுக்குள் ஏதோ ரசாயன மாற்றம் நிகழ்ந்தது.

"அம்மா உங்களைத் தேடினாங்க..." என்று சொல்ல அவன் புன்னகைத்தான்.

"நீ தேடலையா தேனு..."

"ப்ச்! பாலா போன் பண்ணினான். சாயங்காலம் வரட்டுமா எங்கேயாவது வெளியே போறீங்களா என்று கேட்டான். அதுக்கு தான் கூப்பிட வந்தேன்."

"நீ சொல்லு. எங்கேயாவது போகணுமா?"

"நீங்க சொல்லுங்க..."

"நீயே சொல்லு...."

"நீங்க ஒரு முடிவும் எடுக்க மாட்டீங்களா?"

"ம்ம். நீ என்ன சொல்றியோ அதை ஒட்டி என் முடிவு இருக்கும்."

"இந்த வாய் சவடாலுக்கு ஒண்ணும் குறைச்சல் இல்லை. போட்டோ ஆல்பம் வந்து இருக்கு எடுத்துட்டு வரேன் என்று சொன்னான். வா என்று சொல்லி விட்டேன். அதனால் எங்கேயும் போக வேண்டாம். போதுமா?" என்று சொல்ல அவன் வாய்விட்டுச் சிரித்தாள்.

"இதுதான் தேன்மொழி. இவ்வளவு நேரம் இந்த மேடம் எங்கேயோ காணாமல் போய் இருந்தவங்க திரும்பி வந்துட்டாங்க. ஐ லைக் திஸ் பப்ளி கேர்ள்..." என்றவன் கண் இமைக்கும் நேரத்தில் அவளின் கன்னத்தில் ஒரு முத்தம் பதித்து விலகி இருந்தான்.

அடுத்த அரை மணி நேரம், பானுமதி அம்மா இருவரையும் அமர வைத்து பரிமாற "தேனுக்கு பொரியல் போடுங்கம்மா...', தமிழும், "தமிழுக்கு அப்பளம் போடுங்கம்மா" என்று தேன்மொழியும், தன் தட்டை பார்த்து உண்பதை விட அடுத்தவர் தட்டில் என்ன இருக்கும் என்பதை கவனித்துச் சொல்ல, அவர் மனம் நிறைந்தது.

"பாலாஜிக்கு பஜ்ஜி போண்டா வடை இதுல எது பிடிக்கும் தேனு?" என்று பானுமதி விசாரிக்க அவள் அலறினாள்.

"ஹெய்யோ! இல்லத்தை. நீங்க சாப்பிட சொல்வீங்க என்றால் வீட்டுக்கே வர மாட்டேன். செக்கியூரிட்டி மிடமே ஆல்பம் கொடுத்துட்டு அப்படியே போய் விடுவேன் என்று மிரட்டி இருக்கான். அதனால் காபி மட்டும் போதும். வேறு எதுவும் வேண்டாம். இன்னொரு நாள் பார்த்துக்கலாம். சாதாரணமா பாலாஜி நல்லா சாப் பிடுவான். இப்ப ஒரு வாரமா கிராண்ட் சமையல் பார்த்து ஒரு மாதிரி ஆகிட்டான்...."

"ஆமாம்மா! தேன்மொழி சொல்வது கரெக்ட். இன் னும் ரெண்டு நாளைக்கு ரசம் சாதம், இட்லி இடியாப்பம், மாதிரி கொஞ்சம் லேசான ஆவியில் வச்ச சாப்பாடே போதும். தயிர் போட்டாச்சு இல்லையா? இன்னும் என்ன வேலை? நீங்களும் உட்கார்ந்து சாப்பிடுங்க. இன்னிக்கு நைட் நான் டிபன் செய்கிறேன். நீங்க ரெஸ்ட் எடுங்க."

"தமிழ் நீங்க சமைப்பீங்களா? சொல்லவே இல்லை..."

"நீ கேட்கவே இல்லையே?"

"ப்ச்! அதான் இப்ப கேட்டேனே. சொல்லுங்க. உங் களுக்குச் சமைக்கத் தெரியுமா?"

"மாவு இருந்தால் தோசை ஊற்றத் தெரியும். சாதம் வைக்கத் தெரியும். உருளைக் கிழங்கு கறி பண்ணத் தெரியும். ஒரு வருஷம் தனியா இருந்தேனே. சில சமயம் லேட்டா வரும்போது ஹோட்டல் ஒன்றும் திறந்து இருக்காது. அப்ப கற்று கொண்டது. உன் அளவுக்கு பிரைட் ரைஸ். வெஜிடபிள் குருமா. அப்படி எல்லாம் தெரியாது..."

"எனக்கு அது மட்டும் தான் தெரியும்... கவலை படாதீங்க... ரெண்டு பேரும் சேர்ந்து உங்க அம்மாவிடம் சமையல் கற்றுக் கொள்ளலாம்."

"ரெண்டு பேரும் சேர்ந்து சமையல் தான் கற்று கொள்ளணுமா?"

"வேறென்ன கற்று கொள்ளணும்?" என்று திருப்பிக் கேட்டவளின் கண்களில் இருந்த குறும்பு. அவனுக்குள் தோன்றிய இனிய உணர்வு மாறாமல், "பாலாவை எப்ப வர சொல்லி இருக்க தேனு?" என்று விசாரித்தான்.

"நாலு மணிக்கு மேல் தானே வருவான். கொஞ்ச நேரம் படுங்க..."

"நீ?"

"நானும் தான்..." என்று இயல்பாகச் சொன்னவள் கட்டிலின் ஒரு புறம் படுத்துக் கொள்ள அவனுக்கு ஏசி போடாமலேயே ஜில்லென்று இருந்தது.

கட்டிலில் படுத்தவன். அருகே நெருங்கி, அவளின் கன்னத்தை வருடி, "பெருமைக்காகச் சொல்லவில்லை தேனு. எந்த விஷயம் ஆனாலும், உடனே உடனே முகத் திற்கு எதிரே கேட்டு விடுகிறாய் அதோடு கோபத்தை மணிக்கணக்கா இழுப்பதும் இல்லை. இந்த இரண்டு குணங்களும் எனக்கு ரொம்பப் பிடிச்சு இருக்கு..." என்று சொன்னான்.

இலகுவான பாவனையில் இருக்கும் போதே பேசி விட வேண்டும். "தமிழ்... ஒரு விஷயம் உங்களிடம் கேட்கணுமே..." என்று ஆரம்பித்தாள்.

"கேளு..."

"நான் சொல்லப் போவதைக் கேட்டு நீங்க கோபப் படக்கூடாது..."

"எதுக்கு இவ்வளவு பீடிகை? விஷயத்துக்கு வா..."

"நமக்கு ஏதாவது பைனான்சியல் ப்ராப்ளம் இருக்கா?" என்ற அவளின் கேள்வியில் சட்டென்று எழுந்து அமர்ந்தான்.

"என் அப்படிக் கேட்கிறாய்?"

"சும்மா தெரிஞ்சுக்கத்தான். தப்பில்லையே?"

"கல்யாணமாகி இரண்டே நாளில்... இப்படிக் கேட்டால்... நான் என்ன சொல்லட்டும்...?"

"இப்போதானே தமிழ் நாம் பேசுறோம்? கோர்ஸ் முடிக்க ப்ராக்டீஸ் ஆரம்பிக்க இன்னும் ஒரு மாசம் ஆகும். மேலே என்ன செய்யணும் என்று யோசிக்கணும் இல்லையா?"

"தனியா கிளினிக் வைக்கலாமா? படிக்கப் போறியா? நீ என்ன நினைக்கிற என்று சொல்?"

"இப்போதைக்கு கிளினிக் வைக்கும் யோசனையைத் தள்ளி வைக்கலாம். பாலாஜி கிளினிக் பக்கத்தில் தானே இருக்கு. அங்கேயே போகலாம். நீங்க ஸ்பான்சர்ஷிப் பற்றி ரொம்பக் கவலைப் பட்ட மாதிரி தெரிந்தது. அதனால் கேட்டேன். தப்பில்லையே...?"

"தப்பில்லை தேனு. உன்னிடம் சொல்லக் கூடாது என்பதில்லை. ஆனால் பெண் எடுத்த வீட்டில், பெண்ணை தவிர எதுவும் எதிர்பார்ப்பது என் குணத்திற்கு ஒத்து வராது. அதனால் தான் யோசிக்கிறேன்..."

"இந்த மாதிரி பதில் சொன்னால் நீங்க என்னைத் தள்ளி வைப்பது மாதிரி ஆகாதா தமிழ்...?" என்றவளின் குரலில் சின்ன கோபம் எட்டிப் பார்த்தது.

"ப்ச்! இப்படி கேட்டால் நான் என்ன சொல்வது? நான் படிக்க, மதுரையில் இருந்த எங்க வீட்டை விற்று விட்டோம். அது இப்ப மீண்டும் விலைக்கு வருது. அதை வாங்கணும் என்று எனக்கும் எங்க அம்மாக்கும் ஆசை. கொஞ்சம் பணம் பற்றாக் குறையா இருக்கு. ஆனால் இதை யார் எந்த விதத்தில் உதவி செய்வதாக சொன்னாலும், வாங்கிக் கொள்ள எனக்கு இஷ்டம் இல்லை. என் உணர்வுகளைப் புரிந்து கொள் தேனு..."

"எவ்வளவு பற்றாக்குறை என்று சொன்னால்... நான்..." என்று அவள் ஆரம்பிக்கும் முன்பே வேகமாக கை காட்டி மறுத்தான் தமிழ்.

"இதுக்கு தான் நான் சொல்ல யோசித்ததே! இதை தவிர வேறு ஏதாவது பேசலாமே தேன்மொழி ப்ளீஸ்..."

"ஓகே. நாளைக்கு நான் காலேஜுக்கு போகணும் இல்லையா? அதுக்கு..."

"அதுக்கு..." என்று இழுத்தவனுக்கு என்ன சொல்ல வருகிறாள் என்பது புரிந்தது.

"தினமும்... நீங்க என்னை கொண்டு வந்து விடுவதோ... ஆட்டோவில் போவதோ... சரி வராதே... அதனால்.." என்று இழுத்தாள் தேன்மொழி. 'கௌரவம் பாதிக்கிறது' என்று அவன் நினைக்காமல் காரை வாங்கிக்கலாம் என்று எப்படிச் சொல்வது என்று வார்த்தைகளுக்கு தேடி கொண்டு இருக்க, அவனே ஆரம்பித்தான்.

"நீ என்ன சொல்லப் போகிறாய் என்று எனக்குத் தெரியும். ஏற்கனவே காலையில் அம்மாவும் சொல்லியாச்சு. அதனால் நான் பாலாவிடம் சாயங்காலம் உன் காரை இங்கே கொண்டு வந்து விட சொல்லிட்டேன். போதுமா?" என்று அவன் முடித்த வினாடியில், "தாங்க்யூ டியர்" என்று அவனின் கன்னத்தில் அழுத்தமாக இதழ் பதித்து இருந்தாள் தேன்மொழி.



தேன்மொழி தன் காரை உபயோகப்படுத்த பாலாஜியிடம் சொல்லி ஏற்பாடு செய்தது அவளை சந்தோஷப்படுத்தும் என்பதை தமிழ்வேந்தன் எதிர்பார்த்தான்.

அதற்கான நன்றி அறிவிப்பாக தேன்மொழி கன்னத்தில் பதித்த முத்தம் அவன் எதிர்பாராதது.

'இந்த மாதிரி வரவேற்பு கிடைக்கும் என்றால் உங்க வீட்டுல நிறையக் கார் வாங்கி வைக்கச் சொல்லி தினமும் ஒரு காரை வாங்கிக்கலாமா?'' என்று கேலியாக கேட்டான்.

''என்னது...!'' என்று அதிர்ச்சியுடன் ஒரு கணம் விழித்தவள் அதன் பிறகே, அவனின் கேலி புரிந்து ஒற்றை விரலை காட்டி மிரட்டினாள்.

''இப்பதான் பொண்ணு வீட்டுல இருந்து ஒன்றும் எதிர்பார்க்காத கௌரவமான ஆண்பிள்ளை என்று நினைத்தேன். அந்த சந்தோஷத்தை கெடுத்து விடாமல், ஒழுங்கா படுத்து தூங்குங்க. நாலு மணிக்கு பாலா வந்து விடுவான்'' என்று சொல்லி விட்டு கண்களை மூடிக் கொண்டாள். இருவரும் படுத்து இருந்தாலும், தூங்க வில்லை. தத்தமது சிந்தனையில் மூழ்கி இருந்தனர்.

நான்கு ஆண்டுகளாக பயன்படுத்திக் கொண்டு இருந்த பழைய காரை வாங்கிக் கொள்ளவே இவ்வளவு யோசிக்கும். பெற்ற தாயிடமே வாக்குவாதம் பண்ணும் தமிழின் மனம் நோகாமல் அவன் ஆசைப்படும் அந்த மதுரை வீட்டினை வாங்குவதில் ஏற்பட்டுள்ள, அந்த பணப் பற்றாக் குறையை எப்படிச் சரி கட்டுவது? அப்பாவிடம் எப்படி இவனின் பெயரை இழுக்காமல் பேசுவது? அங்கே பேசி ஏற்பாடு செய்து விட்டாலும் இவன் ஏற்றுக் கொள்ள வேண்டுமே என்ற சிந்தனையில் மூழ்கி இருந்தாள் தேன்மொழி.

''நேற்று இரவு பேசப் போன இடத்தில் பிரமாதமான வரவேற்பு என்று சொல்ல முடியாது. மஞ்சு மேடம்

சொன்னதனால் தன்னை சந்திக்க ஒத்துகொண்டாலும், சந்திப்பு நிகழ்ந்த நேரமும் இடமும் அந்த மாதிரி. இன்னும் ஒரு மாதத்திற்குள்... அதை வாங்கா விட்டால், பேங்கில் இருந்து ஏலத்திற்கு வந்து விடும். தேன் மொழிக்கு ப்ராக்டீஸ் பண்ண வேண்டும் என்றால் ஒரு இடம் பார்க்க வேண்டும். இப்போது மதுரை வீட்டை வாங்கினாலும் அங்கே போக வாய்ப்பில்லை. அங்கே கஷ்டப்பட்டு முப்பது லட்சம் செலவு பண்ணி வீடு வாங்குவதை விட, இங்கேயே ஒரு இடம் பார்த்தால் நன்றாக இருக்காதா? என்று சிந்தனையில் ஆழ்ந்து இருந்தான் தமிழ் வேந்தன்.

அழைப்பு மணி ஓசை கேட்டு இருவரும் வேகமாக எழுந்து, ''வா வா பாலா, என்ன நீ மட்டும் வந்து இருக்கிறாய்? மேகா எங்கே?'' என்று வாசலுக்கு வந்து வரவேற்றனர்.

''மேகா வீட்டில் ஸ்வீட் செய்றேன் என்று கிச்சனை ரணகளப்படுத்திக் கொண்டு இருக்கிறாள். நீ தமிழை வைத்து பரிசோதனை செய்யலையா தேனு...'' என்று கேலியாகக் கேட்டபடி உள்ளே வந்தான்.

''உனக்கு கொழுப்புடா! காபி சாப்பிடுறியா?'' என்று விசாரித்த தேன்மொழியை பார்த்து கை எடுத்து கும்பிட்டான்.

''நீ போடும் காபி நிச்சயம் வேண்டாம் தேனு. அத்தை இருந்தால் கொடுக்கட்டும். இல்லை என்றால் ஒரு கிளாஸ் ஜஸ் வாட்டர் கொடு. குடிச்சுட்டு சந்தோஷமா வீட்டுல போய் அம்மா கையால காபி சாப்பிட்டுக்கறேன்...''

''இருந்தாலும் தேன்மொழியோட சமையல் திறமையை பார்த்து இந்த பயம் பயப்படக்கூடாது பாலா...'' என்று

தமிழ் சிரிக்க, ''அஞ்சுவது அஞ்சாமை பேதைமை என்று வள்ளுவரே சொல்லி இருக்கார். தெரியாதா?'' என்று திருப்பிக் கேட்டான்.

''ஓஹோ! அப்ப நேற்று ப்ரைட் ரைஸ் சாப்பிடும் போது குப்பரா இருக்கு என்று சொன்னது...'' என்று விடாமல் விசாரித்த தமிழை, தோளில் தட்டி, ''என்னை இன்று தேனிடம் அடி வாங்க வைக்க வேண்டும் என்று திட்டம் போட்டுக் கேள்வி கேட்பது மாதிரி இருக்கு. ஆனாலும் புறமுதுகு காட்டிப் போகும் பரம்பரையில் வந்தவன் இல்லை இந்த பாலா. அதுக்குக் காரணம்... இனிய உளவா இன்னா கூறாமை. எப்படி...?'' என்று தெனாவட்டாக கேட்டவன் ''டேய்!... உன்னை...'' என்று அவள் அடிக்க வருவதை பார்த்த உடன் வேகமாக எழுந்தான்.

''ஸ்டாப் ஸ்டாப் தேன்மொழி. உனக்கு நான் மூணு கிப்ட் கொண்டு வந்து இருக்கேன். பொறுமையா என்ன என்று பார்த்துட்டு அப்புறம் கோபம் குறையலை என்றால் அடி. ஓகே?'' என்று கைகளை நீட்டி சமாதானம் பேச அவள் முறைத்தபடி நின்றாள்.

''என்ன கிப்ட் சொல்லு...''

''ஒண்ணு உங்க கல்யாணம் ஆல்பம்...'' என்று தான் கொண்டு வந்து இருந்த கட்டை பையில் இருந்து இரண்டு பெரிய ஆல்பங்களை எடுத்து வைத்தான்.

''இது ஒண்ணும் கிப்ட் கணக்கில் சேர்த்தி இல்லை. இது நீ உன் தங்கை கல்யாணத்திற்கு செய்ய வேண்டிய வேலை. செய்றேன் என்று காலையில் எனக்கு வாக்

''அடுத்து மேடத்திற்கு பிடிக்குமே என்று வெனிலா ஐஸ்க்ரீம் பேமிலி பேக். ஒண்ணு வாங்கினால் ஒண்ணு ப்ரீ என்றான். இரண்டையுமே உங்களுக்கே கொண்டு வந்துட்டேன்'' என்று எடுத்து மேஜையின் மேல் வைக்க அவள் லேசாக புன்னகைத்தாள்.

''இது பெரிய கிப்டாக்கும்?'' என்று சலித்து கொண்டாலும் அண்ணனின் அன்பில் மனம் கரையத் தான் செய்தது.

''தமிழ், இந்த மாதிரி எல்லாம் பேசுறா என்று நீ இவளுக்கு ஐஸ்க்ரீம் பிடிக்காதோ என்று நினைத்து விடாதே! கல்யாணத்துக்கு முன்னாடி நீ நான் மேகா. எல்லாரும் ஒரு நாள் இவள் இல்லாமல் ஐஸ்க்ரீம் சாப்பிட்டோமே ஞாபகம் இருக்கா? ஒவ்வொரு நாள் ஷாப்பிங் போகும் போதும் ஆறு முறை அதைச் சொல்லி காண்பித்து இரண்டு ஐஸ்க்ரீம் வாங்கி கொள்வாள்...''

''அது ஆறு இல்லை... நாலு...'' என்று அவசரமாக தமிழ் திருத்தம் சொல்ல, தேன்மொழி பாலா இருவருமே அவனை ஆச்சரியமாகத் திரும்பி பார்த்தனர்.

''அது எப்படி தெரியும்?'' என்று இருவரும் ஒரே குரலில் கேட்க அவன் புன்னகைத்தான்.

''தட் இஸ் தமிழ். அடுத்த கிப்ட் என்ன என்று சொல்லப் போவதில்லையா?'' என்று பேச்சை மாற்ற. 'டோட்டட்டைங்...'' என்று வாயில் பின்னணி இசை கொடுத்து பையில் இருந்து இன்னொரு ஆல்பத்தை எடுத்தான் பாலா.

''என்ன இன்னொரு ஆல்பமா? இதுக்கா இவ்வளவு பில்ட் அப்?'' என்று தேன்மொழி உதட்டை பிதுக்க

அதை அவன் இரண்டு கைகளிலும் மரியாதையாக வந்து வந்து தமிழின் கையில் கொடுத்தான்.

''இது ஆல்பம் இல்லை. எங்க தேன்மொழியின் வாழ்க்கை வரலாறு. அவள் கடந்த இருபத்தி இரண்டு ஆண்டுகளில் எங்க வீட்டில் அடித்த லூட்டிகளையும் சண்டை காட்சிகளையும் படம் பிடித்து வைத்து இந்த அழியாத வரலாற்று காவியத்தை உங்களுக்கு திருமணப் பரிசாக அளிக்கிறேன். ரெண்டு பேரும் தனியா இருக்கும் போது பார்த்து ரசிக்கலாம்'' என்று கொடுக்க அவர்களும் சிரிப்போடு வாங்கிக் கொண்டனர்.

முதல் பக்கத்தில், தவழும் ஆறு மாத குழந்தையாக காட்சி அளித்த தேன்மொழி, கடைசிப் பக்கத்தில் தமிழுடன் திருமணக் கோலத்தில் நின்று இருந்தாள். ''நைஸ் பாலா... இந்த ஐடியா எப்படித் தோணுச்சு...?'' என்று கேட்ட தேன்மொழியின் குரல் நெகிழ்ந்து இருந்தது.

''தமிழ் பேசிட்டு இருக்கும் போது அவங்க அப்பா இருந்த வரைக்கும் ஒவ்வொரு வருஷமும் ஒரு ஆல்பம் போடுவார். என்று சொன்னான். நம்மால் இனி ஒவ்வொரு வருஷமும் போட முடியாது. இப்போதைக்கு, ஒரே ஆல்பமா மொத்த வளர்ச்சியையும் கொடுக்கலாம் என்று தேடித் தேடி போட்டோ எடுத்தேன். ரொம்ப சுவாரஸ்யமா இருக்கு. மேகாவை பீச்சுக்கு அழைத்து போகிறேன் என்று சொல்லி இருக்கேன். கிளம்பட்டுமா?'' என்று எழுந்தான் பாலாஜி.

''ஒண்ணும் சாப்பிடாமல் போனால் எங்க அம்மா என்னை உண்டு இல்லை என்று பண்ணிடுவாங்க. இரு அம்மாவை எழுப்புறேன்...'' என்று எழுந்த தமிழின் தோளை அழுத்தி அமர வைத்தான்.

''அவங்களைத் தொந்தரவு பண்ணாதே. இருபது நாளா அவங்களுக்கு சரியான அலைச்சல். இதுல ஒரு ஐஸ்க்ரீம் சாப்பிட்டுக்கறேன். இந்தா கார் சாவி, டேங்க் ஃபில் பண்ணிட்டேன் தேனு. ஒரு வாரம் தாங்கும் பை...'' என்று அடுத்த வினாடி பறந்து போய் விட்டான்.

''பாலாவிடம் உங்க அப்பாவைப் பற்றி எல்லாம் என்னென்னவோ பேசி இருக்கீங்க போல? எனக்கு தான் ஒண்ணுமே தெரியலை...'' என்று மனக்குறையுடன் இழுத்தவளை தோளில் தட்டி சமாதானப்படுத்தினான்.

''தப்பா நினைச்சுக்காதே தேனு. முதலில் எனக்குக் கல்யாணம் நல்ல படியா முடியணுமே என்ற கவலை மட்டும் தான் இருந்தது. நான் பேச ஆரம்பித்தாலும் நீ பிடி கொடுக்கலையே? நான் என்ன பண்ணட்டும்?''

''நான் ஏன் பேசலை என்று கொஞ்சமாவது யோசித்தீங்களா? நீங்க தானே அப்பாவிடம்...''

''இந்த கியூட் குட்டி, ரெண்டு வயசுல, இரட்டை ஜடை போட்டுட்டு... குட்டியூண்டு கவுனில, மூக்கு ஒழுகிட்டு எப்படி இருக்கு என்று பார்ப்பதை விட்டுட்டு, முடிஞ்சு போன விஷயத்தை போஸ்ட் மார்ட்டம் பண்ணனுமா?'' என்றவன் அவளின் கன்னத்தை லேசாக கிள்ளி கொஞ்ச அவளின் கவனம் திசை திரும்பியது.

''நான் எப்பவுமே மூக்கு ஒழுகினதே இல்லை. எங்க அம்மாகிட்டே கேளுங்க. நான் ஆரோக்கியமான குழந்தை தெரியுமா?'' என்று மறுத்தவளுக்கு, சண்டை போட நினைத்ததற்கான காரணம் பின்னால் போய்விட்டது.

ஒவ்வொரு கால கட்டத்திலும் எடுத்த புகைப்படங்கள் மலரும் நினைவுகளைத் தூண்டி விட. ''இது ஒன்றாம் வகுப்பில் படிக்கும் போது எடுத்தது என்று நினைக்கிறேன். எங்கே போனாலும் இந்த ஆரஞ்ச் ப்ராக் தான் போடணும் என்று அடம் பிடிப்பேன் என்று அம்மா நிறைய வாட்டி சொல்லி இருக்கங்க. இப்பவும் ஆரஞ்ச் கலர் என்றால் ஆசை உண்டு...''

''இது மூன்றாம் வகுப்பில் கோகுலாஷ்டமிக்கு பாட்டி வந்து எனக்கு சவுரி முடி வச்சு தலை பின்னி பூ தைத்து விட்டார்கள். ராதை மாதிரி அலங்காரம் பண்ணி, அவங்களோட வைர அட்டிகை போட்டு இருந்தாலும், எனக்கு பாலாஜிக்கு போட்ட மாதிரி கிருஷ்ணன் வேஷம் தான் வேண்டும். அதிலும் அந்த பைசா பெறாத மயிலிறகு வேண்டும் என்று அடம் பிடித்தேன் என்று பாட்டி சாகும் வரை சொல்லிச் சிரிப்பாங்க. இந்த மாதிரி இப்ப கல்யாணத்திற்கு கூட யாரும் அலங்காரம் பண்ணுவ தில்லை. தெரியுமா?''

''இது ஏழாவது முடிந்து ஆனுவல் லீவு. ஸ்கூல் ஆண்டு விழாவில் ஒரு பொண்ணு பாலே டான்ஸ் என னுடைய பரதத்தை விட நல்லா இருக்கு தெரியும் என்று சொல்லிட்டாங்க என்று அம்மாவிடம் அடம் பிடித்து, லீவு முழுவதும் பாலே டான்ஸ் கிளாஸ் போனேன். அடுத்த வருஷம் அந்த பெண்ணே எங்க ஸ்கூலில் இல்லை. அப்புறம் அதைப் பற்றி நான் நினைக்கவும் இல்லை...'' என்று ஒவ்வொரு புகைப் படத்திற்கும் ஒவ்வொரு கதை சொன்னாலும், அவள் எனக்குப் பிடிக் கும் என்று சொன்ன அந்த ஆரஞ்ச் கலர் பிராக்கில் இருந்த குட்டி தேன்மொழி அப்படியே அவன் மனதில் அழுத்தமாக பதிந்து போனாள்.

அவள் பாவனையுடன் சொன்ன கதைகளை ரசனை யுடன் கேட்டவன், அவ்வப்போது சின்னச் சின்ன சீண்டல் வார்த்தைகளைச் சொன்னாலும் அவளின் அழகிலும் இனிமையான சுபாவத்திலும், கலகலப்பான பேச்சிலும், தன் மனதை பறிகொடுக்கவும் செய்தான்.

''எங்க அண்ணன் பண்ணின இந்த ஆல்பத்தின் அழகுக்கு உங்க அப்பா போட்டு வச்சு இருக்கும் ஆல்பம் வருமா? உங்க அப்பாவோட போட்டோ எடுக்கும் திறமையை நான் ஒன்றும் குறையா சொல்லலை. எடுக்கப் படும் பொருளின் அழகு இருந்தால் தானே... போட் டோவில் வரும்...'' என்று கேலியாக ஆல்பத்தை மூடி வைத்தவள் இழுத்தாள்.

''பாரத கதையில அஸ்தினாபுரம் என்ற ஊரில், வசிக்கும் அத்தனை மக்களில், ஒரு கெட்டவனை கூட தருமரால் கண்டு பிடிக்க முடியலை. அதே ஊரில் ஒரு நல்லவனை கூட துரியோதனனால் கண்டு பிடிக்க முடி யலை. அழகு பொருளில் இல்லை. அதை காண்பவரின் கண்ணில் இருக்கு'' என்று அவளை நெருங்கி உரசி யவன், கேலியாகச் சொல்ல அவள் அழகு காட்டினாள்.

''இந்தக் கதை எல்லாம் இங்கே வேண்டாம். உங்க ஆல்பம் எங்கே இருக்கு? கொண்டு வாங்க. பார்த்து முடிவு பண்ணலாம்...''

''நாளைக்கு நீ காலேஜுக்கு போனதும் தேடி எடுத்து வைக்கிறேன். இன்னொரு விஷயம் சொல்லட்டுமா? இந்த உலகத்தில் எத்தனை கோடி ஜீவராசிகள் இருக்கு. அத்தனையிலுமே ஆண் பெண் பாகுபாடு இருக்கும் உயிரினங்களிலும், ஆண் தான் அழகா இருக்கும்.''

''இதென்ன புதுக் கதை..''

''கதை இல்லை தேனு. நிஜம். ஆண் மயிலுக்கு தோகை சேவலுக்கு கொண்டை, ஆண் யானைக்கு தந்தம், ஆண் சிங்கத்திற்கு பிடரி, இப்படி ஆண் இனம் தான் கண்ணை கவரும் வகையில் இருக்கும்.''

''ஓகே. எல்லா ஆண் உயிர் இனங்களும் அழகா இருக்கும். மனித இனம் அதற்கு விதி விலக்கு என்று வைத்து கொள்ளலாமா?'' என்று கண் சிமிட்டியவளை கட்டி அணைத்து கொள்ளத்தான் தோன்றியது. அடுத்த ஒரு வாரமும், சின்ன கேலி பேச்சுக்கள், ரகசிய ஜாடை கள், கள்ள சிரிப்புகள், இரவு நேர ஏ.சி குளிரில் கிடைத்த அணைப்புகள், எதிர்பாராத சமயங்களில் கிடைத்த முத்தங்கள், என்று மிக மிக இனிமையாக கழிந்தது.

''அட பாவி! உனக்குக் கல்யாணம் முடிந்ததை கூட எனக்குச் சொல்லாமல் விட்டு விட்டாயே? கல்யாணம் முடிந்த அடுத்த நாளே நடு ராத்திரியில் உன்னை ஏர் போர்ட்டிற்கு அனுப்பிய போது உன் மனைவி என்னைப் பற்றி என்ன நினைத்து இருப்பாள்? வர சன்டே அவ ளையும் கூட்டிட்டு வீட்டுக்கு வா. அவளிடம் **நானே சாரி** கேட்கிறேன்'' என்று புலம்பித் தள்ளிய மஞ்சு மேடம். விருந்துக்கு அழைப்பு விடுத்து இருக்க அந்த அழைப்பை அவளிடம் எப்படிச் சொல்வது என்ற யோசனையுடன் தேன்மொழியின் வரவிற்காக வெள்ளி மாலை காத்து இருந்தான் தமிழ்வேந்தன்.

'அப்பாவிடம் தமிழின் மதுரை வீடு வாங்குவது பற்றிப் பேச வேண்டும். தமிழின் சின்ன வயசு போட்டோக்களை எடுத்து போய், பாலாஜியுடன் சேர்ந்து அவனைக் கலாய்க்க வேண்டும் வரும் ஞாயிறு அன்று அப்பா அம்மாவைப் பார்க்க வீட்டுக்குப் போகலாமா என்று

தமிழ்வேந்தனிடம் கேட்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டு காலேஜில் இருந்து வந்து சேர்ந்தாள் தேன்மொழி.



அந்த ஒரு வாரத்தில், கல்லூரி யில் இருந்து தேன்மொழி வரும் போது ஒரு நாள் கூட தமிழ் வீட்டில் இருந்ததில்லை. ஆனால் அன்று நுழையும் போதே அவன் வீட்டில் இருப்பதைக் கண்டவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

''ஹாய்! இந்த ஒரு வாரத்துல நான் வரும்போது நீங்க வீட்டில் இருப்பது இதுதான் முதல் முறை. இன்று எங்கே யாவது வெளியே போகலாமா? நாளைக்கு காலேஜ் கூட இல்லை'' என்று ஆர்வமாக அவன் அருகே சோபாவில் அமர்ந்து விசாரித்தாள்.

''அம்மா கோவிலுக்கு போகணும் என்று சொன் னாங்க. அவங்களையும் கூட்டிட்டு போகலாமா?''

''ப்ச்! இதென்ன கேள்வி? அம்மா உங்க பிள்ளை உங்களை கழட்டி விட பார்க்கறாங்க. வந்து என்ன என்று கேளுங்க?'' என்று அடுக்களையில் இருவருக்கும் காபி கலந்து கொண்டு இருந்த பானுமதியை அழைத்தாள் தேன்மொழி.

''இதோ வரேன்...'' என்ற குரல் உள்ளே இருந்து வர, ''அதென்ன திடீர் என்று அத்தை என்று சொல்கிறாய். அப்புறம் ஒரு மூட் வந்தால் அம்மா என்று சொல்கிறாய்? ஏதாவது ஒரு அழைப்பில் இருக்க மாட்டாயா?'' என்று சிரிப்போடு விசாரித்தான்.

''அது என் இஷ்டம்.... எப்படி வேண்டுமானாலும் கூப்பிடுவேன். நீங்க என்ன கேட்பது?''

"என்ன வேண்டுமானாலும் கூப்பிடு. ஆனால் ஒரே மாதிரியா கூப்பிடு..."

"ஹூம்! அம்மா வந்துட்டாங்க. அவங்களையே கேட்கலாம். உங்களை நான் அம்மா என்று கூப்பிடுவது பிடிச்சு இருக்கா? அத்தை என்று கூப்பிடுவது பிடிச்சு இருக்கா? சொல்லுங்க..."

"அம்மாவே சொல்லு. அதுதான் இன்னும் மனசுக்கு நிறைவா நெருக்கமா இருக்கும். அது சரி காபி கலக்கும் போது எதுக்கு கூப்பிட்டாய்? தமிழ் என்ன பண்ணினான்?" என்று விசாரித்தபடி இருவருக்கும் காபி டம்ளரை கொடுத்தார்.

"நீங்க கோவிலுக்கு போகணும் என்று சொன்னீங்களாம். நான் பீச்சுக்கு போகலாமா என்று கேட்டேன். அதான் உங்களை கழட்டி விட ஐயா ப்ளான் பண்ணுறார்..."

"நீங்க ரெண்டு பேரும் போயிட்டு வாங்க. நான் நாளை காலையில் போய்க்கறேன்..."

"ஹைய்யோ அம்மா அம்மா! நீங்க இப்படி இருந்தால் நான் எப்படி உங்களோடு சண்டை போடுறது? அம்மாவை நான் ரொம்ப மிஸ் பண்றேன். அவங்க தான் வார்த்தைக்கு வார்த்தை மல்லுகட்டி சண்டை போடுவாங்க. எனக்கும் பொழுது போகும். இப்ப நான் தமிழை வெளியே கூப்பிட்டால் நீங்க என்ன சொல்லணும் தெரியுமா? "டேய்! ஒவ்வொரு வாரமும் என்னை அஷ்டலக்ஷ்மி கோவில் கூட்டிட்டு போனதை மறந்து விட்டாயா? கல்யாணம் ஆன உடனே நேற்று வந்த உன் பொண்டாட்டி முக்கியமா போயிட்டாளா?" என்று சண்டை போடணும். போங்கம்மா நீங்க சுத்த வேஸ்ட்..." என்று சலித்துக் கொண்ட தேன்மொழியைப் பார்த்து பானுமதியும் தமிழும் புன்னகைத்தனர்.

"முதன் முதலில் கேட்டு இருக்கா. நீங்க ரெண்டு பேரும் போயிட்டு வாங்க" என்று மனதார சொன்ன அம்மாவை கன்னத்தில் தட்டி "சோ ஸ்வீட்மா. நீங்க ரெஸ்ட் எடுங்க. சாப்பாடு வெளியே பார்த்துக்கறோம்" என்று சொல்லி விட்டு அடுத்த பதினைந்து நிமிடங்களில் முகம் கழுவி உடை மாற்றி கிளம்பினார்கள்.

பைக் சாவியை எடுத்தவனிடம். அம்மா வீட்டில் இருந்து வந்த பொருள் என்ற எண்ணத்தில் அதில் ஏற தயங்குகிறானோ என்ற எண்ணம் இருந்ததால். "கார் வேண்டாமா?" என்று தயக்கத்துடன் கேட்டாள்.

"உன் கார் என்று என்னை ஓட்ட விட மாட்டியே. அதான் பைக் சாவி எடுத்தேன்...." என்று சொன்னதும் அவளின் முகம் மலர்ந்தது.

"அப்ப காரில் போக ஆட்சேபணை இல்லையா?"

"இரண்டுக்கு மேற்பட்டவர் போக கார் தேவைப்பட்டால் தாராளமா போகலாம். இப்ப அந்த தேவை இல்லை. பைக் போதும். இன்னொரு முக்கியமான காரணம் இருக்கு..." என்று சொன்னவன் கண்களில் குறும்பு சிரிப்பு இருந்தது.

"என்ன காரணம்?"

"நீயே கண்டு பிடி. திரும்பி வீட்டுக்கு வரும் வரை கண்டு பிடிக்க முடியலை என்றால், நைட் நம்ம ரூமில் வைத்துச் சொல்றேன்" என்று சிரித்து விட்டு பைக்கை கிளப்பினான்.

அடுத்த அரை மணி நேரத்தில் கோவிலில் சாமி கும்பிட்டு விட்டு, பெசன்ட் நகர் பீச்சுக்கு வந்து சேர்ந்தவர்களுக்கு மனம் நிறைவாக இருந்தது. முதல் சந்திப்பில் அமர்ந்த சிமிண்ட் பெஞ்சை நோக்கி

நடந்தவளின் கை பற்றி, ''பெஞ்சுக்கு என் போற? அலைக்கு போகலாம். வா...'' என்று இழுக்க, அவள் தயங்கினாள்.

''எனக்கு அவ்வளவா தண்ணியில் நிற்பது பிடிக்காது தமிழ். இங்கேயே உட்காரலாமே?''

''தண்ணி என்றால் பயமா? ஒரு நேஷனல் ஸ்விம்மிங் சாம்பியனை பக்கத்துல வச்சுட்டு பேசற பேச்சா இது?'' என்றவன் குரலில் கேலி இருக்க அவளுக்கு சுறு சுறுவென்று ஏறியது.

''எனக்கு தண்ணீர் என்றால் பயம் என்று நான் உங்களிடம் சொன்னேனா?''

''அலைக்கு வர மாட்டேன் என்று சொன்னதற்கு வேறென்ன அர்த்தம்?''

''வரவில்லை என்று சொன்னால் பயம் என்பதில்லை. பிடிக்காமல் கூட இருக்கலாம்...''

''தேனு, பொதுவா உனக்கும் எனக்கும் ரசனைகள் ரொம்ப வேறுபட்ட மாதிரி தெரியலை. இந்த ஒரு விஷயத்தில் பிடிக்காது என்று சொல்வது நம்புற மாதிரி இல்லையே?''

''போதும். கொஞ்ச நேரம் சந்தோஷமா பேசிக் கொண்டு இருக்கத் தான் இங்கே வந்தேன். இப்படி ஆர்கியூ பண்ண இல்லை...'' என்றவள் குரலில் இருந்த கோபம் அவனுக்கு ஆச்சரியத்தை விளைவித்தது.

''சரி விடு. ரெண்டு நாளும் காலேஜ் இல்லை. என்ன ப்ரோக்ராம் வச்சு இருக்க? சொல்லு...''

''ப்ரோக்ராம் ஒன்றும் பெரிசா இல்லை. அம்மா அப்பாவைப் பார்க்கப் போகலாம் என்று நினைத்தேன்.

அப்பாவை பார்த்து வாரம் ஆச்சு...'' என்று பெருமூச்சோடு சொன்னவளை புன்னகையோடு பார்த்தான்.

''அப்பாவை ரொம்ப மிஸ் பண்ணுகிறாயா? நாளைக்கு போகலாமா தேனு?''

''நாளைக்கு பாலாஜி இருக்க மாட்டானே? ஞாயிற்றுக் கிழமை போகலாமா? நாலு பேரும் இருப்பாங்க. அம்மாவையும் கூட்டிட்டு போனால் நைட் வரலாமே?''

''தேனு! ஞாயிற்றுக் கிழமை வேறே வேலை இருக்குமே...''

''இந்த மாசம் நாலு ஞாயிற்றுக் கிழமையும், மரம் நடும் ப்ரோக்ராமுக்கு லீவு என்று சொன்னீங்க? வேறே என்ன வேலை?'' என்றவளின் குரலில் வேகம் இருந்தது.

''நாளைக்கு நைட் அங்கே தங்கி பாலாவை பார்த்துட்டு ஞாயிறு காலையில் சாப்பிட்டுட்டு நம் வீட்டுக்கு போகலாம் தேனு'' என்று மாற்று திட்டம் சொல்ல அவள் அதையும் மறுத்தாள்.

''பாலா கிளினிக்கில் இருந்து தினமுமே வர லேட் ஆகிடும். அவன் மதியம் கொஞ்ச நேரம் மேகாவுடன் இருக்க வேண்டாமா? சண்டே உங்களுக்கு என்ன அப்படி முக்கியமான வேலை சொல்லுங்க. அதன் பிறகு இதைப் பற்றி பேசலாம்'' என்று அவள் சொன்ன தோரணையிலேயே மஞ்சு மேடத்தின் பெயரை இப்போது சொன்னால் வேலைக்கு ஆகாது என்பது அவனுக்குப் புரிந்தது.

''அடுத்த வாரம் போகலாமா?''

''முடியாது. அதுக்கு ரெண்டு காரணம் இருக்கு. ஒண்ணு எனக்கு எங்க அப்பாவை உடனே பார்க்கணும்.

அடுத்த வாரம், பானும்மாவை மதுரைக்கு கூட்டிட்டு போகிறேன் என்று சொல்லி இருக்கேன். அதுக்கு கொஞ்சம் ஏற்பாடு பண்ணனும்.''

''மதுரைல என்ன விசேஷம்?''

''அதெல்லாம் உங்களுக்குச் சொல்ல முடியாது. அது அம்மா பொண்ணுக்கு இடையில் நடக்கும் ரகசியம்...'' என்றவளைப் பார்க்க யோசனையில் முகம் ஆழ்ந்தது.

''அந்த மதுரை விஜயத்தில் நான் இருக்கேனா? நீங்க மட்டும் தானா?''

''அது உங்க இஷ்டம். யாருக்கு எல்லாம் வர முடியுதோ எல்லோரும் சேர்ந்து போகலாம். பாலாக்கு கஷ்டம். அவனுக்கு துணைக்கு மேகாவை விட்டுட்டு போகணும். அம்மா அப்பா வருவாங்க. அதை முடிவு பண்ணத்தான் சண்டே போகலாம் என்று சொல்கிறேன். புரியுதா?''

''எனக்கும் அங்கே வேலை இருக்கு தேனு. எல்லோரும் போகலாம் மதுரைக்கு போவதற்கு முன்னால் இங்கே நான் ஏற்கனவே சொன்ன ஸ்பான்சர் பிடிக்கும் வேலை இன்னும் செட் ஆகவில்லை. அதுக்கு மேடம் பார்க்க இந்த ஞாயிற்றுக் கிழமை...'' என்று பாதியில் நிறுத்திய தமிழை திரும்பிப் பார்த்தாள்.

''மறுபடியும் மஞ்சு மேடமா?'' என்றவளின் குரலில் பொறாமை எட்டி பார்த்தது.

''ஏன் தேனு மஞ்சு மேடம் பெயரை எடுத்தாலே கோபப்படுகிறாய்? நீ ஒரு தடவை அவங்களை பார்த்து விட்டால் அவங்க மனசு உனக்கே நல்லா புரியும். தெரியுமா?''

''அதான் உங்க முதுகில் டின் கட்டப் போற பாஸ் என்று உங்க பிரெண்ட்ஸ் எல்லாம் பேசினாங்களே?'' அந்த நல்ல மனசு தானே?''

''அவங்க ஏதோ சும்மா ஜோக்கா சொன்னதை சீரியஸா எடுத்துட்டு...''

''சரி அவங்க சொன்னது ஜோக். அதை விடுங்க. கல்யாணம் ஆன மறுநாள் ராத்திரி பத்து மணிக்கு போன் பண்ணி ஆபீஸ் வேலை கொடுத்த அதி புத்திசாலி தானே உங்க மேடம்...''

''தேனு... அதான் சொன்னேனே... அதுவும் எனக்காக தான்...''

''ம்ம்ம்... உங்களுக்காக அவங்க ஆஸ்ட்ரேலியாவில் இருந்து அர்த்த ராத்திரியில் பேசி, ஏற்பாடு பண்ணிய அந்த அதி முக்கியமான வேலை இன்னும் முடியலையா?''

''இல்லை. அதுமட்டுமில்லை. அந்த மாதிரி நடு ராத்திரியில் உன்னை கூப்பிட்டுட்டேனே என்று ரொம்ப பீல் பண்ணி என்னிடம் சாரி கேட்டாங்க. உன்னிடமும் கேட்பாங்க. உண்மையைச் சொன்னால் அவங்களுக்கு நம் கல்யாணம் நடந்ததே தெரியாது...''

''உங்க வெல்விஷர் என்று அவ்வளவு பெருமையா சொன்னீங்க. அவங்களுக்குச் சொல்லணும் என்று தோன்றவில்லையா?''

''தேனு... போதும் கேலி...'' என்று அதட்டலாகச் சொன்ன தமிழை திகைப்புடன் பார்த்தாள் தேன்மொழி. இவனுக்கு ஏன் அவளை சொன்னால் இவ்வளவு கோபம் வருது?

''அவங்க பொண்ணுக்கு என்னை கல்யாணம் பண்ண ஆசை. அவங்க ஸ்டேட்டசுக்கும் அம்மாவுக்கும் சரிப்படாது என்று நான் ஆரம்பத்திலேயே முடியாது என்று சொல்லி விட்டேன். அவங்க பொண்ணுக்கு என் மேல் கோபம். ஆபீசில் அவங்க ஏதாவது குளறுபடி பண்ணுவாங்க. இப்ப கடைசியா இந்த ஸ்பான்சர்ஷிப் பிரச்னை. மஞ்சு

மேடமுக்கு பொதுவா பணம் என்றால் பிணம் கூட வாயை பிளக்கும் இந்த காலத்தல. அவங்க பெண்ணே வலிய ப்ரொபோஸ் பண்ணியும் அம்மாவுக்காக அவங்களை வேண்டாம் என்று சொன்ன என் குணம் அவங்க மனதை தொட்டது. அவங்களை ஏதாவது குறையாகச் சொல்லாதே...'' என்று அழுத்தமான குரலில் சொல்ல அவளுக்கு கோபம் வந்தது.

அன்று அப்பாவிடம் 'நான் வேறு ஒரு பெண்ணை காதலிக்கிறேன்' என்று கதை விட்டது இவளை எண்ணித் தானா? அதான் வேகமாக என்னை பிடிக்கலை என்று எங்க அப்பாவிடம் சொல்ல சந்தோஷமாக ஒத்து கொண்டானா? அவள் இவனை வேண்டாம் என்று சொன்னாளா? இவன் அவளை வேண்டாம் என்று சொன்னானா என்று யாருக்குத் தெரியும்?

இப்போது தன்னைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு கடனே என்று குடும்பம் நடத்துவது பானுமதி அம்மாவிற்காகவா? இப்படி இஷ்டம் இல்லாமல் கல்யாணம் பண்ணிக் கொண்டவனுக்கு அவளுக்கு ஒரு வாழ்க்கையா? கடவுளே!

அழுகையும் ஆத்திரமும் போட்டிப் போட்டுக் கொண்டு வர, அவள் எழுந்து விடுவிடென்று நடந்து பைக் நிறுத்தும் இடத்தை நோக்கி நடக்க, ''தேனு... நில்லு...'' என்று அழைத்தபடி வேகமாக அவளைப் பின் தொடர்ந்தான் தமிழ்.



தேன்மொழி அப்படி வேகமாக எழுந்து போவாள் என்பதை எதிர் பார்க்காமல் ஒரு கணம் விழித்த

தமிழ் உடனே எழுந்து அவளைப் பின் தொடர்ந்தான். அவனுக்காக காத்திராமல் 'ஆட்டோ...' என்று அழைத்தவள் கை பற்றி நிறுத்தினான்.

''தேனு. இப்படி கோபித்துக் கொண்டுப் போனால் என்ன அர்த்தம்? நாம் இருவரும் சண்டை போடுவது அம்மாவுக்குத் தெரிந்தால் எவ்வளவு கஷ்டப்படுவாங்க தெரியுமா? எதுவா இருந்தாலும் நம்ம வீட்டுல வச்சு பேசி தீர்த்து கொள்ளலாம். பைக்கிலேயே போகலாம்...'' என்று அவன் சொன்னது பிடிக்கா விட்டாலும் அதில் இருந்த உண்மை உரைத்தது.

நடுவில் ஒருவர் உட்காரக் கூடிய அளவுக்கு இடம் விட்டு அமர்ந்த தேன்மொழியின் கோபத்தை உணர முடிந்தாலும், ஒத்து கொள்ள முடியவில்லை. எதையும் முழுசா பேச விடாமல் பாதியிலேயே கட் பண்ணி போவதால் தான் பிரச்னை தொடர்கிறது.

''இந்த மாதிரி ஒரு மைல் தள்ளி உட்கார்வதற்கா நான் பைக்கை எடுத்துட்டு வந்தேன்? இதுக்கு ஆளுக்கு ஒரு வண்டியில போகலாமே?'' என்று முணுமுணுத்தது அவள் காதில் விழுந்தாலும் அவள் பதில் சொல்லவில்லை.

''தேனு. உங்க வீட்டுக்கு எடுத்துட்டு போக பழைய ஆல்பம் கேட்டாயே? இன்று அதை ஒரு வழியா தூசி தட்டி எடுத்து வச்சுட்டேன். வீட்டுக்கு போனதும் அதைப் பார்க்கலாமா?''

''நீங்க ரோட்டைப் பார்த்து வண்டி ஓட்டுங்க...''

''பீச்சில் இருந்து வீட்டுக்கு போகும்போது மட்டும் தான் ரோட்டை பார்த்து ஓட்டணுமா? பீச்சுக்கு போகும் போது தேவை இல்லையா தேனு?''

''ப்ச்! வண்டி ஓட்டும் போது சும்மா தொணதொணன்னு பேசிட்டு இருக்காமல் கொஞ்ச நேரம்

கம்மா வரீங்களா?'' என்று எரிச்சலோடு சொன்னவளுக்கு ஒரு மணி நேரம் முன்பு வீட்டில் இருந்து பீச்சுக்கு வரும் வழியில் அவனை ஒட்டி உட்கார்ந்து பேசிக்கொண்டே வந்ததை சொல்லி காண்பிக்கின்றான் என்று தோன்றி அது வேறு எரிச்சலை மூட்டியது.

''உன்னிடம் ஒரு முக்கியமான போட்டோ காட்டி சுவாரஸ்யமான விஷயம் சொல்லணும் என்று நினைத்தேன். இப்ப மேடம் இருக்க மூடில் அதைச் சொல்ல வேண்டாம் என்று தோணுது...'', என்று இடைவெளி விட்டு பார்த்தான். ம்ஹூம். அசைவதாக இல்லை.

சாதாரணமாக இருந்தால், 'சொல்லுங்க... சொல்லுங்க' என்று உலுக்கி எடுத்து விடுவாள். ப்ச்! பெருமூச்சுடன் அடுத்த பதினைந்து நிமிடங்களும் அமைதியாக இருவரும் ஒன்றும் பேசிக் கொள்ளாமலேயே வீடு வந்து சேர்ந்தனர்.

''தேனு. தமிழ் எங்கே? இவ்வளவு நேரம் நீங்க போனை எடுக்கலையே என்று பதறிட்டு இருந்தேன். கீழ் வீட்டுல இருக்கும் அங்கிளுக்கு, ஸ்ட்ரோக் வந்துடுச்சு..'', என்று வாசலிலேயே நின்று பதறிய பானுமதியை பார்த்ததும் கோபத்தை எல்லாம் தூர தூக்கி போட்டு விட்டு மருத்துவராக உடனடியாக மாறினாள் தேன்மொழி.

''ஆம்புலன்ஸ் போன் பண்ணினீங்களா? எப்ப என்ன சாப்பிட்டாங்க?'', என்று கேட்டபடி நாடித் துடிப்பை பரிசோதித்தாள் தேன்மொழி.

''மதியம் சாதாரணமா சாப்பிட்டதுதான். அசைவம் இல்லை. மாலையில் ஸ்நாக்ஸ் கூட கிடையாது. வெறும் காபிதான். போனுல பொண்ணு கூட பேசிட்டு

இருக்காரே என்று நான் கிச்சனில் வேலையா இருந்தேன்...''

''இதுக்கு முன்னாடி ஸ்ட்ரோக் வந்து இருக்கா? பி.பி. சுகர் இருக்கா? மாத்திரை ஏதாவது எடுத்துக்கறாங்களா?''

''போன வருஷம் ஒரு தடவை ஸ்ட்ரோக் வந்தது. அதுல இருந்து மாத்திரை சாப்பிடறார். போன வாரம் கூட செக் அப் பண்ணிட்டு தான் வந்தோம்... இப்படி திடீர் என்று...'', என்று புலம்பிய லஷ்மி அம்மாவை அணைத்து தேற்றினார் பானுமதி.

''என்னம்மா இது? தைரியமா இருங்க. தமிழும் தேனும் கூடவே இருப்பாங்க. ரெண்டே நாளில் உங்களோட வாக்கிங் கிளம்பிடுவார். அழக்கூடாது. தைரியமா இருக்கணும்...''

''அங்கிள். நான் பேசுவது கேக்குதா? இங்கே பாருங்க...?'', என்று பேச்சு கொடுத்தபடி மூச்சு விடும் ஒலியையும் இதய துடிப்பையும் கணிக்க முயன்றவளுக்கு ஏமாற்றமே!

''என்ன ஆச்சும்மா? என்ன இங்கே இருக்கீங்க?'', என்று ஓடி வந்த தமிழை பார்த்ததும் நிம்மதி பெருமூச்சை வெளியேற்றினாள்.

''தமிழ்! சீக்கிரம் காரை எடுங்க. அங்கிளுக்கு அட்டாக் வந்து இருக்கு. கூட யாரையாவது கூப்பிட்டுக்கோங்க. ஒருத்தர் டிரைவ் பண்ணுங்க. இன்னொருத்தர் பாலாஜிக்கு தகவல் சொல்லுங்க. எமர்ஜென்சி ட்ரீட்மென்ட் ரெடி பண்ணட்டும். வெங்கட்ராமன் கார்டியாலஜிஸ்ட் அட் கால் வருவார். அவரோட நம்பர் வாங்கி போன் பண்ணுங்க'', என்று உத்தரவுகளை பிறப்பித்தவள், அவன் அவரை தூக்க முயலும்போது, ''அசைக்காதீங்க.

முதலில் பாலாக்கு போன் பண்ணுங்க...'', என்று அதட்டினாள்.

இதுவரை புத்தகங்களில் படித்ததும், அரசு மருத்துவ மனையில் கும்பலோடு ஒன்றாக நின்று பார்த்ததுமான சிகிச்சையை தானே ஒருவருக்கு தனியாக செய்கிறோம் இன்னும் டிகிரி கூட வாங்கவில்லை. நாளைக்கு ஏதாவது தவறாகப் போய் விட்டால் என்ற உணர்வில் ஒரே ஒரு வினாடி அவளுக்குத் தயக்கம் வந்தது.

அடுத்த வினாடி, எல்லாம் அவன் செயல். தன் தயக்கத்தினால் ஒரு உயிர் போனது என்ற சொல் வரக்கூடாது என்ற தைரியம் தலை தூக்க, அவருக்கு 'சி பீ ஆர்', என்று சொல்லப்படும் அவசரகால சிகிச்சையை ஆரம்பித்தாள்.

அவரின் நெஞ்சு பகுதியில் இரண்டு கைகளையும் சேர்த்து வைத்து அழுத்தி, இதயத்தை இயங்க வைக்க முயன்றாள். தீவிரமான பிரார்த்தனையுடனும், விடா முயற்சியுடனும் அவள் கொடுத்த இருபதாவது அழுத்தத்தில் அவர் இரும, அவளின் முகம் மலர்ந்தது.

''தாங்க் காட்'', என்று நிம்மதி பெருமூச்சை வெளியேற்றியவள், ''இப்ப இவரை காருக்கு தூக்கிட்டு போகலாம் தமிழ். சீக்கிரம்'', என்று வேகமாக ஓடி வந்து பின் சீட்டில் அவருக்கு அருமே அமர்ந்து, இதய துடிப்பை பரிசோதிப்பது, பேச்சு கொடுப்பது, அவர் சுய நினைவில் இருக்கும்படி பார்த்து கொள்வது என்று வீட்டில் இருந்து பாலாஜியின் கிளினிக்கிற்கு அவசர கால சிகிச்சைக்காக அனுமதிக்க ஆன முதல் இருபது நிமிடங்கள் அவரை கண்ணும் கருத்துமாக பார்த்து கொண்டாள்.

அடுத்த நான்கு மணி நேரங்கள் தியாகராஜனை உயிர் பிழைக்க வைக்கும் முயற்சியில் ஒரு மருத்துவர் குழு

ஈடுபட்டு இருக்க, தேன்மொழியின் கை பற்றி அருகில் அமர்ந்து இருந்த தமிழுக்கு பெருமையாக இருந்தது.

என் காரை யாருக்கும் கொடுக்க மாட்டேன் என்று தன்னிடம் சட்டம் பேசியவள். இந்த நிகழ்ச்சி நடப்பதற்கு அரை மணி நேரம் முன்னால் தன்னோடு சண்டை போட்டு தன்னுடன் பேசாமல் இருந்தவள். ஒரு தேவை என்று வந்த உடனே எப்படி துரிதமாக செயல்பட்டு எவ்வளவு பெரிய காரியம் செய்து இருக்கிறாள்? முன் எப்போதையும் விட அவளை அவனுக்கு ரொம்ப ரொம்ப பிடித்தது.

''விபத்து நேரத்துல உயிர் காக்கும் கோல்டன் ஹவர் என்று சொல்வாங்க. ஆனால் ஹார்ட் அட்டாக்ல, ஏதோ ஒரு அதிர்ச்சியில் தன் செயல்பாட்டை இழந்து விட்ட இதயத்தை மீண்டும் செயல்பட வைக்க, அந்த முதல் நான்கு ஐந்து நிமிடங்கள்தான் முக்கியம். அந்த நேரத்தில் சரியான வேலை செய்து விட்டாய் தேன்மொழி. குட் ஜாப். நீ எம்.எஸ் கார்டியாலஜி படிக்கலாமா என்று தீவிரமா யோசிக்கலாம். நிச்சயமா. சி.பீ.ஆர் சிகிச்சையும் செயற்கை சுவாசமும் நீ கொடுக்கவில்லை என்றால் நிச்சயமா பேஷண்ட் உயிர் பிழைத்தே இருக்க முடியாது என்பதை தீர்மானமாக சொன்ன கார்டியாலஜிஸ்ட்...

''கிரேட் தேன்மொழி. நான் கூட உன்னை விளையாட்டு தனமா இருக்கும் அவசரக் குடுக்கை என்று கேலியா சொல்லி இருக்கேன். ரொம்ப பொறுப்பான காரியம் பண்ணி இருக்கிறாய்'', என்று சொன்ன பாலாஜி,

''போன என் வீட்டுக்காரர் உசுரை திருப்பி கொடுத்து இருக்கிறாய் கண்ணு. உனக்கு நான் என்ன செய்யப்

போகிறேன்", என்று கண் கலங்கிய மகாலஷ்மி அம்மாள் என ஒவ்வொருவர் பேசிய வார்த்தைகளும் மீண்டும் மீண்டும் அவன் காதில் ஒலித்து அவனைப் பெருமிதத்தில் பூரிக்க வைத்தது.

"ரொம்ப சந்தோஷமா இருக்கு தேன்மொழி. இந்த மாதிரி தானா முன் வந்து ஹெல்ப் பண்றதுக்கு இந்த காலத்துல யாரும் முன் வர மாட்டாங்க...", என்று பெருமையா அவள் கை பற்றி அழுத்தி சொல்ல அவன் தோளில் சாய்ந்து கொண்டாள்.

"ஏய்! என்ன ஆச்சும்மா? ஏன் கண்ணு கலங்குது? ஹனி...", என்று அவன் பதறி தவிக்க அவள் நிமிர்ந்து கண்களை துடைத்து கொண்டாள்.

"இப்ப டாக்டர் சொல்லும் போது தான் நான் செய்த வேலையின் தீவிரம் எனக்கு உறைக்குது தமிழ். தப்பித் தவறி ஏதாவது மாறி நடந்து இருந்தால்... மை காட்! நினைச்சுப் பார்க்கவே பயமா இருக்கு. என் மேல் கிரிமினல் கேஸ் கூட அவங்க ஃபைல் பண்ணலாம் தெரியுமா?", என்று சொல்ல அவளைத் தோளோடு அணைத்து ஆறுதல் சொன்னான்.

"சை! பைத்தியம். ஏன் அப்படி எல்லாம் யோசிக்கிறாய்? நாம் யாருக்காவது உதவி செய்யணும் என்று நினைக்கும்போது நல்லதுதான் நடக்கும்?"

"ம்ம்ம். கரெக்ட் தான். ஆனாலும் சட்டத்தின் பார்வையில்..."

"தார்மீக ரீதியில் நீ செய்தது கரெக்ட். அதை விடு. அங்கிளுக்கு இனிமேல் ஆபத்தில்லையே? டாக்டர் என்ன சொன்னார்?"

"ஆஞ்சியோ பண்ணியாச்சு. ப்ளாக் இருப்பதால் உடனே பைபாஸ் செய்யணும் என்று சொல்றாங்க..."

"ஓ! நிறைய செலவாகுமே! ஆறு ஏழு லட்சம் ஆகுமே?", என்று விசாரித்த தமிழை ஆச்சரியமாக பார்த்தாள் தேன்மொழி.

"ஏன் பணத்தை பற்றி கவலைப் படுறீங்க? இந்த ஏரியால சொந்த வீடு வச்சு இருக்கவங்களுக்கு பண தட்டுப்பாடு இருக்குமா என்ன? அவங்க பையன் அமெரிக்காவில் இருப்பதா சொன்னாங்களே..."

"ம்ம்... இருக்கான்... அம்மாவிடம் சொல்லி ஆண்ட்டியிடம் விசாரிக்கணும்...", என்று கவலையோடு சொன்னவன் முகம் தெளியவே இல்லை. "தேனு. உன்னிடம் ஒன்று சொல்லணுமே?", என்று அடுத்த நாள் காலை பேச்சை ஆரம்பித்தான்.

"என்ன தமிழ்?"

"அந்த மதுரை வீடு வாங்க இருபது லட்சம் சேமித்து வைத்து இருக்கிறேன். இன்னும் அஞ்சு லட்சம் தேவைப் படுது என்று யோசித்து கொண்டு இருந்தேன். அது இப்போதைக்கு கிடைக்கிற மாதிரி தெரியலை. அதனால்..." என்று இழுத்து நிறுத்தினான்.

அன்று எவ்வளவு பற்றாக்குறை என்பதை தான் கேட்ட போது சொல்ல அழுத்தம் திருத்தமாக மறுத்தவன் இப்போது தானாகச் சொல்கிறானே என்று ஆச்சரியமாகப் பார்த்தாள். அந்தப் பணத்தை அப்பாவிடம் வாங்கித் தரலாமா? அவன் ஒத்து கொள்வானா?

"எப்படியும் மதுரை வீடு கை விட்டுப் போய் விடும் என்று தெரிந்த பிறகு, இந்தப் பணத்தில் பாதியை இப்போதைக்கு லஷ்மி ஆண்ட்டிக்கு கொடுக்கலாம்

என்று நினைக்கிறேன். நீ என்ன சொல்கிறாய்?'', என்று தன் பதிலுக்காக காத்திருந்த தமிழை வியப்பாகப் பார்த்தாள்.

அவள் சாதாரணமாக எதையோ நினைத்தால் இவன் அசாதாரணமான ஒன்றை இவ்வளவு சுலபமாக சொல்கிறானே? பத்து லட்சம் ரூபாயை போகிற போக்கில் யாராவது அருகில் வசிப்பவர்களுக்கு எடுத்து கொடுப்பார்களா? அந்தப் பணத்தை வேறு ஒரு வேலைக்காக வைத்து இருப்பவன். அது அவனோட அம்மாவின் ஆசை என்று சொல்லியவன். அதைக் கைவிட முடிவெடுத்து விட்டானா?

''இது அம்மாவுக்குத் தெரியுமா?'', என்று தயக்கத்துடன் கேட்டாள் தேன்மொழி.

''மனுஷங்க நல்லா இருப்பது முக்கியமா? வீடு வாங்குவது முக்கியமா? அப்படியே வாங்கினாலும் உங்க ரெண்டு பேருக்கும் பொழைப்பு இங்கே இருக்கும் போது அங்கே குடி மாறப் போவதும் இல்லை. சும்மா ஒரு சொத்து என்று வாங்கிப் போடுவதை விட இப்போ தேவையில் இருக்கும் ஒரு நல்ல மனிதனுக்கு உதவுவது அவசியம். வீடு அப்புறம் பார்த்துக்கலாம் தமிழ் என்று இந்த யோசனையைச் சொன்னதே அம்மாதான்'', என்று அவன் முடிக்க அவள் வாய் அடைத்து போனாள்.

''நீங்க ரெண்டு பேரும் முடிவு பண்ணிய பிறகு எனக்கு என்ன ஆட்சேபணை இருக்க முடியும் தமிழ்...? செய்ங்க'', என்று முடித்தாள் தேன்மொழி.

''கண்டதைப் பற்றி யோசிச்சு மனசைக் குழப்பிக்காதீங்க ஆன்ட்டி...'', என்று தனது வங்கிக் கணக்கில் இருந்து

எடுத்து வந்த பத்து லட்சம் ரூபாயை நீட்டி, ஆறுதல் சொன்ன தமிழை பார்த்து லஷ்மி அம்மா கண்ணீர் பெருக்கினார்.

''பெத்தது எங்கேயோ யாருக்கு வந்த விருந்தோ என்று இருக்கு. ஆனால் நீ... உனக்கு நான் எப்படி...'', என்று தினறியவரை அணைத்து ஆறுதல் சொன்னான் தமிழ்.

''வருத்தப்படாதீங்க ஆன்ட்டி. அவருக்கு அங்கே என்ன சூழ்நிலையோ? அமெரிக்காவில் இருக்கறதுதான் உங்க பையன் என்று இல்லை. அக்கம் பக்கத்துல இருக்கவங்களும் உங்க பசங்க மாதிரி தான். இதை வச்சு ட்ரீட்மெண்டை நல்லபடியா முடிச்சுட்டு வாங்க ஆன்ட்டி. அங்கிள் வீட்டுக்கு வந்த பிறகு மற்றதெல்லாம் பேசிக்கலாம்'', என்று ஆறுதல் சொல்லி தமிழ் மகாலஷ்மியிடம் ரொக்கமாக பணத்தை வற்புறுத்திக் கொடுத்தான்.

''தமிழ்... நீ செய்யும் இந்த உதவிக்கு நான் என்ன கைம்மாறு எப்படி செய்யப் போகிறேன் என்று தெரியலைப்பா...'', என்று தழுதழுத்த மகாலஷ்மியை அணைத்து கொண்டான்.

''ஆன்ட்டி ப்ளீஸ், நீங்க இப்படி கண்ணீர் பெருக்கும் அளவுக்கு இது பெரிய உதவி இல்லை. இவ்வளவு பணத்தை சும்மா கொடுக்கும் அளவுக்கு பணம் படைத்தவனும் இல்லை. யார் கஷ்டப்பட்டாலும் கண்ணை மூடிக்கொண்டு போகும் அளவுக்கு கல் மனம் படைத்தவனும் இல்லை. நம்மைச் சுற்றி இருப்பவர்களுக்கு நம்மால் முடிந்த நல்லதை செய்யணும் என்று நினைக்கும் ஒரு சாதாரண மனுஷன். அவ்வளவுதான்'', என்று

சொன்ன தமிழ்வேந்தனை கண் இமைக்காமல் பார்த்தாள் தேன்மொழி.

இவனைப் பற்றி அப்பா ஏற்கனவே சொல்லி இருக்கிறார் தான். ஆனால் அது சாதாரண ரயில் பயணத்திற்கான டிக்கெட் என்று எளிதாக நினைத்து விட்டாள். இது பத்து லட்சம் ரூபாய்! தானமாக கொடுக்கலாம் போனால் போகிறது என்று விடுவதற்கு இவன் கோடீஸ்வரனும் இல்லை. இது கடனாகவே இருக்கலாம். நாளையே அவர்கள் வட்டியும் முதலுமாக திருப்பியும் கொடுத்து விடலாம். ஆனாலும்..

தமிழ் அவளின் மனதில் மலை அளவு உயர்ந்து நின்றான். அந்த வினாடியில், எப்பாடு பட்டாலும், அந்த மதுரை வீட்டை பானுமதி அம்மாவுக்கு வாங்கி தருவது, என்று அவள் தீர்மானமாக முடிவு செய்தாள்.



தமிழோடு பைக்கில் ஆஸ்பத்திரியில் இருந்து திரும்பி வரும் வழி எல்லாம் அவளுக்கு மலைப்பாக இருந்தது. இப்படியும் கூட சில நல்லவர்கள் இருப்பதனால்தான் இன்னும் மழை பெய்கிறதோ? இவன் என்னுடையவன் என்ற பெருமிதம் பொங்கி வழிய, ''ஐ லவ் யு'', என்ற வார்த்தை முனகலாக அவளின் கட்டுப்பாட்டை மீறி வெளிவர, அவனை நெருங்கி முதுகில் சாய்ந்து கொண்டாள் தேன்மொழி.

லேசாக பின்னால் சரிந்து, ''ஏதாவது சொன்னாயா தேனு?'', என்று விசாரித்தான்.

''நத்திங்...'', என்று சமாளித்தவளுக்கு தன் அன்பை இப்படி போகிற போக்கில் வாகனத்தில் சொல்ல இஷ்டம் இல்லை. அவனை அசத்தும் விதத்தில், அந்த வீட்டை கொடுத்து... ப்ச்! அப்பாவிடம் பேசி அந்த வீட்டை விலைக்கு வாங்குவது பெரிய விஷயமில்லை. ஆனால் அதை தமிழின் ஈகோ காயப்படாமல், அதை அவன் தவறாக எடுத்துக் கொள்ளாமல்... யோசனை நீள அவனே தொடர்ந்து பேசினான்.

''தூக்கம் வருதா தேனு? நைட் ரொம்ப நேரம் ஆகிடுச்சு இல்லை. அதான் டயர்டா இருப்பாய். கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடு. சாயங்காலமா அம்மா அப்பாவை பார்க்க உங்க வீட்டுக்கு போயிட்டு நாளைக்கு வரலாம்'', என்று சொல்ல அவளுக்கு மூட் மாறியது.

''மேடமோட...'', என்று ஆரம்பித்தவள் நாக்கை கடித்து பேச்சை நிறுத்தினாள்.

''மேடமிடம் போன் பண்ணி வரலை என்று சொல்லிட்டேன். நாம் இங்கேயே போகலாம். இதுவும் ஏற்கனவே போன வாரம் தள்ளி போட்டது வேறே...'', என்றவன் குரலில் வருத்தம் இருந்ததோ?

''கஷ்டமா இருக்கா தமிழ்?'', என்று ஆதரவாக அவன் தோளில் முகத்தை பதித்து கேட்டவளிடம் மறுப்பாக தலை அசைத்தான்.

''இல்லை தேனு. ஒரு காரியம் செய்வதற்கு முன்னால் யோசிக்கலாம். முடிவெடுத்த பின் யோசிக்கக் கூடாது. அப்புறம் அவங்க அதை சொன்னாங்க. இவங்க இதை சொல்றாங்க என்று கவலைப்படக் கூடாது'', என்று தீர்மானமாகச் சொன்ன தமிழின் வார்த்தைகளே. அப்பாவிடம் பேசலாமா வேண்டாமா என்ற வாதத்தில் குழம்பித்

கொண்டு இருந்த தேன்மொழியை ஒரு முடிவெடுக்க வைத்தது.

''தேனு லஞ்சுக்கு வரேன் என்று அம்மாவிடம் சொன்னாயே? டைம் ஆகுதும்மா'', என்று குரல் கொடுத்தான் தமிழ்.

''வந்துட்டேன். பானும்மா ஹாஸ்பிடலில் இருந்து வந்தால் சாவி இருக்கா?''

''அவங்க நைட் அங்கேயே லஷ்மியம்மா கூட இருக்கேன் என்று சொல்லி இருக்காங்க. அவங்களிடம் ஒரு சாவி இருக்கு'', என்றவன் கிளம்பி வந்தவளை பார்த்து திகைத்தான்.

அவளுடைய பேவரைட் ஆரஞ்சு வண்ணத்தில் காட்டன் சுடிதார். தூய வெள்ளையில் ஆரஞ்சு பூக்கள்... விதம் விதமான அளவுகளில்... கண்ணைப் பறிக்க அவன் பார்வையை உணர்ந்தவள் முதன் முறையாக நாணத்தில் லேசாக சிவந்தாள்.

''தமிழ்... ஆல்பம் எடுத்துட்டீங்களா?''

''ம்ம்ம்... எடுத்துட்டேன்...'', என்றவன் கண்கள் அவளிடம் இருந்து விலகவில்லை.

''பிரைடே... என்னவோ... அதுல காட்டணும் என்று சொன்னீங்களே! பார்க்கலாமா?''

''அதைப் பார்ப்பது என்றால் இப்ப உடனடியா உங்க வீட்டுக்கு போக முடியாது... சம்மதமா?'', என்றவன் குரலில் இருந்த நெருக்கம் அவர்களுக்கு இடையே இருந்த தூரத்திலும் வந்தது.

''நோ தமிழ்... போட்டோ அப்புறமா பார்த்துக்கலாம்... நான் அப்பாவை உடனே பார்க்கணும்...'', என்று ஒரு

கரத்தால் அவனை லேசாக தள்ளி விட்டவள் வேகமாக வெளியே அவன் முகம் வாடியது.

நேற்று இரவு ரொம்ப நெருங்கி வந்த மாதிரி தோன்றியது தன் கற்பனையா? இன்று காலையில் மருத்துவமனையில் இருந்து வரும்போது கூட சந்தோஷமா இருந்த மாதிரி தோன்றியது பொய்யா? மனம் வாட, மனைவியுடன் கிளம்பினான்.

''ஹேய் பாலாஜி, நீ இந்த நேரத்தில் இருப்பாய் என்று நான் எதிர்பார்க்கவே இல்ல. கிளினிக் போகலையா?'', என்று சந்தோஷமாக விசாரித்தவள் பாலாஜியை கட்டிக் கொள்ள மேகா புன்னகையோடு ''வாங்கண்ணா! அம்மாவையும் அழைச்சுட்டு வந்து இருக்கலாம் இல்லையா? இங்கே இருந்து பாலா கூட ஹாஸ்பிடல் போய் இருக்கலாம்'', என்று வீட்டு பெண்ணாக வரவேற்றாள்.

''தமிழ், சந்தோஷமா இருக்கியா?'', என்று கை பற்றி விஜயகுமார் விசாரிக்க, பூங்கோதை, தேன்மொழியிடம் கண்களாலும் வார்த்தைகளாலும் அவளின் மனநிலை அறிய துருவிக் கொண்டு இருந்தார்.

''லெமன் ஜூஸ் உப்பு போட்டு ஒரு கப் கொடேன் மேகா. தமிழ் சாப்பாட்டுக்கு முன்னால் குடிப்பார்'', என்று அம்மாவுக்கு பதில் சொல்லும் போதே மேகாவிடம் வேண்டுகோள் விடுக்க, அங்கே நான்கு ஜோடி கண்கள் அவளை ஆச்சரியத்துடன் ஆராய்ந்தது.

''பார்த்தீங்களாம்மா! தேன்மொழி ரொம்ப மெச்சூர்டா பீகேவ் பண்ண ஆரம்பித்து விட்டாள். இன்னும் உங்க விசாரணை எல்லாம் தேவை இல்லை...'', என்று மேகா,

''ஆமாம்மா! நேற்று கார்டியாலஜிஸ்ட் டாக்டர் வெங்கட்ராமன் சார், தேனுக்கு ஒரே புகழாரம் தெரியுமா?'', என்று பாலாஜி,

''கல்யாணம் ஆனால் தானா இந்த பொண்ணுங்களுக்கு பொறுப்பு வந்துடும் போல...'', என்று விஜயகுமார் சொல்ல பூங்கோதையின் கண்கள் மகளையும் மருமகனையும் ஆராய்ந்தது. சந்தோஷமா இருக்க மாதிரி தெரியுது.

''ஹேய் பாலா! அன்னிக்கு என் வாழ்க்கை வரலாறு ஆல்பம் கொண்டு வந்து கொடுத்தாய் இல்லையா? இன்று நான் தமிழோட வாழ்க்கை வரலாறு எடுத்துட்டு வந்து இருக்கேன்...''

''ஓ! நீ பார்த்தாயா?''

''ம்ஹூம்! என்னமோ அது பொக்கிஷம் மாதிரி மூடி மூடி வச்சுக்கிறார். நம்ம சேர்ந்து கேலி பண்ணுவோம் என்று பயந்து போய் ஒளிச்சு வச்சுக்கிறார் என்று நினைக்கிறேன்...''

''எனக்கென்ன பயம்? தாராளமா கொடுக்கிறேன். ஆல்பம் பாருங்க. முடிஞ்ச அளவுக்கு ஓட்டுங்க. சிங்கம் சிங்கிளா எல்லாத்தையுமே சமாளிக்கும். என்ன அத்தை சொல்றீங்க?'', என்று அவரின் ஆராய்ச்சி பார்வையை உணர்ந்து அவரை பேச்சுக்குள் இழுத்தான் தமிழ்.

''தனி என்று பீல் பண்ண வேண்டாம் தமிழ். உனக்கு சப்போர்ட்டுக்கு நான் இருக்கேன்'', என்று உறுதி அளித்தார் பூங்கோதை.

''கரெக்ட் அத்தை. உன்னை முதன் முதலா பார்ப்பது மாதிரியே இல்லை. ரொம்ப பழகிய முகமா இருக்கு என்று கல்யாணத்திற்கு முன்பே நீங்க அடிக்கடி சொல்லி இருக்கீங்க தெரியுமா? அது நிஜம் என்று இப்ப நானும் ஒத்து கொள்கிறேன் அத்தை'', என்று பூடகமாக

சொன்னவன் பார்வை தேன்மொழியிடம் பதிந்து இருந்தது.

''எனக்கு கூட இவரைப் பார்த்த ஞாபகம் இருக்கு. போன ஜென்மத்தில் நானும் இவரும் பார்ட்னர்ஸ்...'', என்று சொன்னவளின் பார்வைப் பரிமாற்றத்தில் நெருக்கம் இருந்ததை பூங்கோதையால் உணர முடிந்தது.

''மூணு ஆல்பம் இருந்தது. முதல் ஆல்பம் ரொம்ப சின்ன குழந்தையில் எடுத்ததனால் வீட்டுக்கு வரும் போது பாருங்க. அடுத்த ரெண்டும் எடுத்துட்டு வந்து இருக்கேன். ஹை ஸ்கூல் வரைக்கும் ஒண்ணு. அப்புறம் ஒண்ணு. என் கலெக்ஷன் எல்லாம் சீடியா இருக்கு'', என்று சொல்லி ஒன்றை பூங்கோதையிடமும் ஒன்றை பாலாஜியிடமும் கொடுத்தான்.

''சாப்பிட்டுட்டு பார்க்கலாம். அதுல உட்கார்ந்தால் சாப்பாடே மறந்துடும். எல்லோரும் எழுந்து வாங்க'', என்று ஆல்பத்தை ஓரமாக வைத்து விட்டு அழைத்தார் பூங்கோதை.

''என்ன இருந்தாலும் பானும்மா சமையலுக்கு முன்னாடி பூங்கோதை சமையல் அவ்வளவா சோபிக்கலை...'', என்று தேன்மொழி கிண்டலடிக்க, ''உனக்கென்னம்மா தட்டில் போட்டு சாப்பாடு கொடுக்க ஆள் இருக்கு. அம்மா மேகா எங்களை பரிசோதனை கூடமா பயன்படுத்தி சமையல் கற்று கொண்டு இருக்கிறாள்...'', என்று பாலாஜி புலம்ப, ''இன்னிக்கு சாயங்காலம் காபி கட்...'', என்று மேகா மிரட்ட, கலகலப்பான பேச்சுக்கு இடையே மதிய உணவு முடிந்தது.

''அப்பா உங்களிடம் பேசணும்'', என்று உணவு மேஜையிலேயே தேன்மொழி சொல்லி இருந்ததால்,

அவர் அறைக்கு போக, ''தமிழ் கொஞ்ச நேரம் தூங் குங்க. நான் அப்பாவோட பேசிட்டு இருக்கேன்'', என்று கணவனிடம் அனுமதி பெற்று அவரை பின் தொடர்ந் தாள்.

''பாலா நீ...'', என்று தமிழ் அவனை அழைக்க அவன் மறுத்தான்.

''நாலு மணிக்கு கிளினிக் போகணும். கொஞ்ச நேரம் இப்படியே அம்மாவோடு போட்டோ பார்த்து மேகாவை வம்பிழுத்தால் சரியா போய்டும்'', என்று கண் சிமிட்டி அவனை அறைக்கு அனுப்பி வைத்தான்.

தமிழ் ஓய்வெடுக்க செல்ல மேகா பாலாஜி, பூங் கோதை கூட்டணி போட்டோ பார்க்க, தேன்மொழி அப்பா வுடன் கட்டிலில் அமர்ந்து பேச்சை எப்படி ஆரம்பிப்பது என்று மனதுக்குள் ஒத்திகை பார்த்து கொண்டு இருந் தாள்.

''என்னவோ முக்கியமான விஷயம் பேசணும் என்று வெளியே கூட்டி வந்து ஒரு மணி நேரமாச்சு. இன்னும் அந்த முக்கியமான விஷயம் என்ன என்று வெளியே வரலையே? ஏதாவது பிரச்னையா?'', என்று அக்கறை யாக விசாரித்தார் விஜயகுமார்.

''விளையாடாதீங்கப்பா. நாங்க வீட்டுக்கு வந்தே ஒரு மணி நேரம் ஆகலை. இங்க வந்து இரண்டு நிமிஷம் தான் இருக்கும்...''

''சரி என்ன விஷயம் சொல்லு. அங்கே தமிழ் அவங்க அப்பாவோட ஆல்பம் எடுத்து வந்து இருக்கானே? அதுல கடைசியா அவங்க அப்பா எங்களோடு மதுரை ரயில் நிலையத்தில் எடுத்துக் கொண்ட போட்டோ கூட

இருக்கு என்று சொன்னான். அதை பார்க்கணும். நல்ல மனுஷன்...'', என்று நன்றியுடன் நினைவு கூர்ந்தார் விஜயகுமார்.

''ஆமாப்பா. பானும்மாவும் சரி, தமிழும் சரி, அவங்க அப்பா காட்டிய வழியில் அடுத்தவங்களுக்கு உதவி செய்யத் தயாரா எப்போதுமே முன்னால் நிற்கிறாங்க...''

''அதெல்லாம் தெரிஞ்சது தானேடா! நீ என்ன பேச ணும் சொல்லு...?''

''அப்பா. நான் இப்ப முப்பது லட்சம் ரூபாய் பணம் எனக்கு வேண்டும் என்று கேட்டால் நீங்க என்ன செய் வீங்கப்பா?'', என்று தேன்மொழி கேட்க அவர் திகைத் தார்.

''திடீர் என்று இப்படி கேட்டால் என்னம்மா சொல்றது? பத்து நாளில் பணம் புரட்டிடலாம். அது பிரச்னை இல்லை. ஆனால் நீ தமிழிடம் கேட்காமல்... கல்யாணம் முடிந்த பிறகு... என்னிடம் கேட்பது அவனுக்குத் தெரிந் தால் சங்கடப்பட மாட்டானாம்மா?''

''அவரா முன் வந்து உங்களிடம் எனக்கு பணம் வேண்டும் என்று கேட்க அவரின் சுய கௌரவம் இடம் கொடுக்குமா? அதை நீங்க யோசித்துப் பார்க்க வேண் டாமா?''

''இல்லை தேனு. முதலில் இந்த பணம் எதுக்கு என்று தெரியணும்? இவ்வளவு பெரிய விஷயம் நாம் இரு வரும் பேசி முடிவெடுக்க முடியாது. முதலில் கோதைக்கு சொல்லணும். முக்கியமா தமிழின் சம்மதம் எனக்கு வேண்டும்...''

''நல்ல மனுஷன் பாவம் இப்ப இல்லை என்று கொஞ்சம் முன்னாடி நீங்க சொன்னீங்களே! அந்த நல்ல

மனுஷனுக்கு நாம் செலுத்தும் நன்றி கடன் என்று வைத்து கொள்ளுங்க...''

''இந்தக் கல்யாணமே நன்றி கடனா வேண்டாம் என்று சொன்னவன் தமிழ். இப்ப போய் பணத்தை நன்றி கடனா கொடுத்தால் அவன் வாங்கி கொள்வான் என்று நினைக்கிறாயா? உளறாதே தேனு...''

''இந்தக் கல்யாணம் வேண்டாம் என்று தமிழ் எப்போ சொன்னார்...?'', என்று கேட்டவளின் குரலில் கோபம் இருந்தது.

''அதென்ன நான் சொல்றதுல பாதியை முழுங்கிட்டு கேட்கறது? நன்றிக் கடனா இந்தக் கல்யாணம் நடப்பதில் எனக்கு இஷ்டம் இல்லை அங்கிள் என்று எல்லாரையும் வச்சுட்டு தானே சொன்னான்...''

''ஆமா! நீங்க மட்டும் எல்லாத்தையும் முழுசா கேட்கிற ஒரு பெண்ணை நான் லவ் பண்றேன் என்று கூடச் சொன்னார். அதை மட்டும் கேட்கலையா?'', என்று முணுமுணுத்தது அவருக்குக் கேட்கவில்லை.

''என்னம்மா சொல்ற? நல்ல தெளிவா பேசேண்டா...''

''ஒண்ணும் இல்லை. நான் கேட்டதுக்கு முதலில் நீங்க பதில் சொல்லுங்க. எனக்கு முப்பது லட்சம் வேண்டும்.''

''அம்மாகிட்டே பேசிப் பார்க்கிறேன். முதலில் நீ எதுக்குன்னு சொல்லு...''

''பானும்மா தமிழ் படிப்பதற்காக அவங்க பூர்வீக வீட்டை விற்று விட்டாங்க. அது திரும்ப விலைக்கு வருது. அதை வாங்கணும் என்று தமிழும் பானும்மாவும் ஆசைப் பட்டாங்க. ஆனால் கொஞ்சம் பைனான்சியல்

ப்ராப்ளம் இருக்கு. அவங்க அந்த ஐடியாவை இப்ப ட்ராப் பண்ணிட்டாங்க. ஆனால் எனக்கு மனசு கேட்கலை. அதை அது அவங்க அப்பா அவங்களுக்கு கொடுத்த சீர். எப்படியாவது வாங்கி பானும்மாவுக்கு கொடுக்கணும் என்று ஆசையா இருக்குப்பா. நீங்க கடனா கொடுங்க. போதும். நான் ப்ராக்டீஸ் ஆரம்பிச்ச பிறகு நான் சம்பாதிக்கிற பணத்தை எல்லாம் சேர்த்து வச்சு மாசம் மாசமாகவோ, வருஷத்துக்கு ஒரு முறையோ கடனை வட்டியோடு திருப்பி கொடுத்து விடுகிறேன். பயப் படாதீங்க...'', என்று தீவிரமான குரலில் கெஞ்சியவளைப் பார்க்கப் பெருமையாக இருந்தது.

''எனக்கேண்டா பயம்? ஆனால் கடன், மாசா மாசம் திருப்பி கொடுப்பது இதெல்லாம் என்ன தேனு பேச்சு? தமிழ் ஒத்து கொண்டால் போதும். உடனே செய்து விடுவேன். பூங்கோதையிடம் பேசிட்டு தமிழிடம் சேர்ந்து சம்மதம் வாங்குறோம். போதுமா?''

''நோப்பா! அம்மாவிடம் பேசுவது ஓகே. ஆனால் தமிழிடம் நோ...! இது அவருக்கு சர்ப்ரைஸ் கிப்ட்... ப்ளீஸ்ப்பா...''

''தேனு... இது பெரிய விஷயம்டா செல்லம்...''

''தெரியும்பா... அப்பா ப்ளீஸ்... தமிழை நான் சமாளித்துக் கொள்வேன்...'', என்று அழுத்தம் திருத்தமாக சொன்ன சமயத்தில் ''சரிம்மா...'', என்று அரை மனதாக விஜயகுமார் சம்மதம் சொன்ன நேரம், ''தாங்க்யுப்பா'', என்று கட்டி அணைத்து அவரின் கன்னத்தில் முத்த மிட்டாள் தேன்மொழி.

அதே நேரத்தில், படுக்கை அறைக்குள், மஞ்சு மேடம் தமிழிடம், ''நீ வராமலேயே உன் இரண்டு ப்ரோக்ராமுக்

கும் ஸ்பான்சர்ஷிப் அக்ரீமென்ட் சைன் பண்ணியாச்சு. சித்திரை முதல் நாள் உன் ப்ரோக்ராம் ஒளிபரப்பு துவங்கும். இதுக்காக டிவி சார்பில் உனக்கு இருபத்தி ஆறு வார நிகழ்ச்சிக்கு, தலா ஏழு லட்சம் ரூபாய் உனக்கு கொடுக்கப்படும். உடனே மதுரைக்கு போய், நீ சொன்ன அந்த வீட்டை வாங்கிடலாம். சந்தோஷம் தானே?'' என்று போனில் தகவல் சொல்ல, அதை மனைவியிடம் பகிர்ந்து கொள்ள, துள்ளி குதித்து ஓடி வந்தான்.

ஒரு பக்கம் விஜயகுமாரின் தோளில் தொங்கியபடி தேன்மொழி ஹாலில் நுழைய மறுபுறம் படுக்கை அறையில் இருந்து தமிழ் உற்சாகத்துடன் தேன்மொழியை தேடி ஓடி வர, ஹாலில் ஆல்பத்தை பார்த்து கொண்டு இருந்த பூங்கோதை, மற்றும் பாலாஜியின் விழிகள் பழவேற்காட்டில் பூங்கோதையின் இருபக்கத்திலும் பாலாஜி மற்றும் தமிழ் இருந்த அந்த புகைப்படத்தில் பதிந்து விரிந்தது.



இந்த போட்டோவில் இருப்பது தமிழ் தானா? இவனை எங்கேயோ பார்த்து இருக்கிறோம் என்று அடிக்கடி தனக்குத் தோன்றியது இதை வைத்து தானா? இதை எப்படி அவர் மறந்தார்? என்னதான் பத்து ஆண்டுகளுக்கு மேல் ஆகி இருந்தாலும், அவன் உருவத்தில் மாற்றங்கள் இருந்தாலும், தன் உயிரை மட்டும் இல்லாமல் தன் மகனின் உயிரையும் சேர்த்து காப்பாற்றிய ஒருவனின் முகம் எப்படித் தனக்கு மறந்து போகும் என்ற குற்ற உணர்வில் பூங்கோதை தத்தளிக்க பாலாஜி தான் உற்சாகமாக கூவினான்.

''ஹேய் தமிழ்! உன்னை நான் முதன் முதலில் பார்த்த போது எங்கே பார்த்து இருக்கிறேன் என்று சொன்னேனே ஞாபகம் இருக்கா? அது இதுதான். நீ டி.வி. பெர்சனாலிட்டியாக இல்லாமல் இருந்து இருந்தால் எங்கேயோ பார்த்து இருக்கிறோம் என்று யோசித்துக் கண்டு பிடித்து இருப்போம். ஏற்கனவே பாப்புலராக இருந்ததனால் அதைப் பற்றி யோசிக்க வேண்டிய தேவை இல்லாமல் போய் விட்டது...''

''என்ன பாலா! ஏதோ சந்தோஷமான விஷயம் சொல்கிறாய் என்பது மட்டும் புரிகிறது. மற்றபடி தலையும் புரியலை. வாலும் புரியல'', என்று அருகில் வந்த தமிழுக்கு தான் சொல்ல வந்த விஷயம் மறந்தே போனது.

''தமிழ். இதை நான் எதிர்பார்க்கவே இல்லை. உனக்கும் இந்த வீட்டுக்கும் ஏதோ பூர்வ ஜென்ம பந்தம் இருக்குடா'', என்று சொல்லி அவனை இறுக அணைத்து கொள்ள அப்போதும் பாலாஜி என்ன சொல்ல வருகிறான் என்பது தமிழுக்கு புரியவில்லை.

''பாலா ஏன் இவ்வளவு எமோஷனலா இருக்கான் மேகா?'', என்று கேட்டபடி அருகே வந்த தேன்மொழிக்கு, 'தெரியலையே?', என்று உதட்டை பிதுக்கி பதில் சொன்னாள் மேகா.

கையில் இருந்த ஆல்பத்தை கண்ணில் நீர் துளிர்க்க அமைதியாக வெறித்து பார்த்த பூங்கோதையை நெருங்கினார் விஜயகுமார். அவரின் கையில் இருந்த போட்டோவை பார்த்ததும் அவருக்கு விஷயம் விளங்கி விட்டது. தமிழுக்கு இந்த குடும்பம் பட்டு இருக்கும் நன்றி கடன் கொஞ்ச நஞ்சம் இல்லை. ஆனால் கோதை

ஏன் இப்படி அதிர்ச்சியில் இருக்கிறாள்? ஏன் சந்தோஷம் இல்லை?

''என்ன கோதை...'', என்று அவர் மெல்ல ஆரம்பித்த வினாடியில் அவர் தோளில் சாய்ந்த பூங்கோதை விம்மி அழ ஆரம்பிக்க அனைவரும் ஒரு கணம் திகைத்தனர்.

''எதுக்கு அத்தை அழறாங்க?'', என்று பாலாஜியை விலக்கி விட்டு வந்து ஆல்பத்தை பார்த்தான். இது பழவேற்காடு ஏரி அல்லவா? இதில் இருப்பது அத்தையா? டென்த் லீவில் அங்கே இருவரின் உயிரை காப்பாற்றியதற்காக மாநில அரசின் விருது இரண்டு வருடம் கழித்து அப்பா இறந்த பிறகு வந்து சேர்ந்ததே! அது அத்தையும் பாலாஜியுமா? அத்தை முகம் இந்த காலகட்டத்தில் மாறவில்லையே? எப்படிக் கவனிக்காமல் போனான்? தேன்மொழிக்கு அதனால் தான் தண்ணீர் என்றால் அலர்ஜியா? அன்று கடல் அலைக்கு போக லாம் என்று அழைத்த போது வர மறுத்தாளே? இப்படி ஒரு சம்பவம் மனதில் பதிந்து இருந்தால் எப்படி தண் ணீரில் விளையாட மனசு வரும்?

''ஷ்! கோதை என்ன இது சின்னக் குழந்தை மாதிரி? தமிழ் யார் என்று தெரியாமல் எத்தனை நாள் புலம்பி இருப்பாய்? இப்ப கண் முன்னால் நிக்கிறான். அவனுக்கு ஒரு தேங்க்ஸ் சொல்லாமல் இப்படி கண்ணை கசக்கு கிறாயே? எல்லோரும் நீ எதுக்கு அழுகிறாய் என்பது புரி யாமல் முழிக்கிறாங்க பாரு'', என்று தேற்றிய விஜய குமாருக்கு பூங்கோதையின் குற்ற உணர்வு புரிந்தது.

''நான் தமிழை... பார்த்த பிறகு... அடையாளம் கண்டு பிடிக்கக் கூடத் தெரியாமல்...'', என்று விம்மலுடன், பொங்கிப் பெருகிய கண்ணீருடன் திக்கித் திணறிய

பூங்கோதையை விஜயகுமாரின் கை பிடியில் இருந்து விலக்கி தன் புறம் திருப்பினான் தமிழ்வேந்தன்.

இடது கையால் அவரின் முகவாயை பற்றி நிமிர்த்தி, வலது கையால் அவரின் கண்களை துடைத்து விட்ட தமிழ், ''அத்தை முதலில் அழுகையை நிறுத்துங்க...'', என்று கனிவாக சொன்னான்.

''தமிழ்... சாரி தமிழ்... என்னால் முடியலை... கிட்டத்தட்ட ஒரு மாசம்... உன்னை பார்த்து இருக்கேன். பேசி இருக்கேன். ஆனாலும் உன்னை... அடையாளம் கண்டு பிடிக்கலை... என்னை நினைத்தால்... எனக்கே...''

''ஷ்! அத்தை. ஒரு நிமிஷம் என் முகத்தை நல்லா பாருங்க. அந்த போட்டோவையும் பாருங்க. அந்த போட் டோல இருக்கற தமிழுக்கும் எனக்கும் ரெண்டு ஒற்றுமை கண்டு பிடிச்சு சொல்லிட்டீங்க என்றால் அப்புறம் நீங்க எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் அழலாம். உங் களுக்கு நானே பெர்மிஷன் தரேன். ம்ம்... பாருங்க...'', என்று அவரின் முன்னால் ஆல்பத்தை நீட்ட அவர் கண்களை துடைத்துக் கொண்டு பார்த்தார். மீண்டும் மீண்டும் கண்களை நிறைத்த நீரை தாண்டி அவரால் எதுவுமே பார்க்க இயலவில்லை.

''அத்தை. நீங்க இவ்வளவு கில்டியா பீல் பண்ற அளவுக்கு ஒண்ணுமே இல்லை. உங்களால் ஒரு ஒற் றுமை கூடச் சொல்ல முடியாது. நானும் தேனும் சேர்ந்து இது இரண்டுக்கும் இடையில் இப்போ ஆறு வித்தியாசம் கண்டு பிடிச்சு சொல்லட்டுமா?'', என்று கேலியாகச் சொன் னவன் கண்கள் அப்போது தான் மனைவியைத் தேடியது. எங்கே போய் விட்டாள்? மாமா. பாலா மேகா எல்லோரும் இங்கே இருக்க அவள் மட்டும் எங்கே காணோம்?

''நான் சொல்றேன்... நான் சொல்றேன்'', என்று பாலாஜி மேகா இருவருமே சிரிப்புடன் கை தூக்கினார்கள். தமிழ் பூங்கோதையை தேற்றும் சமயத்தில் பாலாஜி இரத்தின சுருக்கமாக விஷயத்தை மேகாவிற்கு விளக்கி இருந்தான்.

''நீங்க ரெண்டு பேரும் சின்ன பசங்க. அதனால் முதல் சான்ஸ் எனக்கு'', என்று ஆரம்பித்தார் விஜயகுமார்.

''கோதை, போட்டோல, பள்ளி பருவத்தில் இருக்கும் மாணவர்களுக்கு என்று கட்டையாக வெட்டிய முடி. இப்ப தமிழை பாரு. காலரை தாண்டி பின்னாலும், நெற்றியை முன்னாலும் நிறைத்த அடர்ந்த கருகருவென்ற முடி கொஞ்ச நாளில் அந்த முடியில பாதியை தேனு பிச்சுடுவாள் என்று வச்சுக்கோ. கேப் விட்டு பார்த்தால் மீண்டும் அடையாளம் தெரியாமல் போக வாய்ப்பு இருக்கு. அப்ப இதே மாதிரி அழ முடியுமா சொல்லு'', என்று சிரித்த விஜயகுமாருடன் மற்றவர்களும் இணைந்து கொண்டனர்.

''அப்பா, தேனு மட்டும் இங்கே இருந்தால் கொஞ்ச நாளில் இல்ல, கொஞ்ச நேரத்தில் உங்க முடி காணாமல் போய் இருக்கும்'', என்று அப்பாவை கேலி செய்து விட்டு தமிழின் புறம் திரும்பி, ''டீன் ஏஜ்-ல நிறைய சைட் அடிச்சியா தமிழ்? இவ்வளவு பரு இருக்கு? குண்டும் குழியுமா இருக்கும் அந்த கன்னத்துக்கும் ட்ரிம்மர் போட்டு ஜம்முன்னு இரண்டு நாள் தாடி கம்பீரமான மீசை இப்படி இருக்க முகத்துக்கும் ஏதாவது லிங்க் சொல்ல முடியுமாம்மா?'', என்று சிரித்தான் பாலாஜி.

''அதை விடுங்க. மடக்கி ஒடிச்சுடலாம் போல இருக்கும் அந்த உருவத்திற்கும் இப்போதைய

உருவத்திற்கும் சம்பந்தம் இருக்கா?'', என்று மேகா பூங்கோதையின் கன்னம் பற்றி விசாரித்ததும், எனாளுக்கு ஒரு வித்தியாசம் தேடி கண்டு பிடித்து அவரவருக்கு பிடித்த வகையில் கேலியாக பூங்கோதைக்கு மெல்லச் சிரிப்பு வந்தது.

இவனை யார் என்று கண்டு பிடிக்க வேண்டும். அவனுக்கு நன்றி சொல்ல வேண்டும். வார்த்தையால் மட்டுமில்லாமல், பொருளாலும் நன்றி செலுத்த வேண்டும் என்று முன்பு அவர் மூன்று லட்சம் ரூபாய் போட்டு வைத்து இருந்தார். அது இப்போது மூன்று மடங்காகி இருக்கும். இவன் பணத்திற்கு ஆசைப் படாதவனாக இருக்கலாம். ஆனால் ஏதாவது செய்ய வேண்டும். கண்களை துடைத்து கொண்டு பேசினார்.

''தமிழ், நீ சரியான சமயத்தில் அங்கே வந்திருக்கா விட்டால், நானும் பாலாஜியும் இன்று இல்லை. தேங்க்ஸ் என்ற வார்த்தை போதாது. ஆனால் அதை சொல்லாமலும் என்னால் இருக்க முடியலை...''

''தேங்க்ஸ் எல்லாம் சொல்லி என்னை தள்ளி வைக்காதீங்க அத்தை. பாலாஜி மாதிரி என்னையும் ஒரு பையன் என்று நினைச்சு பாருங்க. இந்த பார்மலான வார்த்தைகள் தேவைப்படாது...''

''நீ பேசுவது உன் பெருந்தன்மையை காட்டுது தமிழ். இந்த உதவிக்கு நான் என்ன கைம்மாறு செய்வேன் என்று எனக்கே தெரியலை...''

''ஏன் அத்தை என்ன செய்வேனோ என்று எதிர்கால வாக்கியமா சொல்றீங்க? அதான் ஏற்கனவே என் எதிர் காலம் முழுசும் கூட இருந்து என் வாழ்க்கையில் இனிமை சேர்க்க, தேன்மொழி என்று ஒரு ஸ்வீட் பொண்டாட்

டியை கொடுத்து இருக்கீங்களே? அதுக்கு உங்களுக்கு என்ன கைம்மாறு செய்ய என்று நான் யோசிக்கணும்...", என்று அவளின் கன்னத்தை தட்டி கொடுத்தான் தமிழ்.

"ஐயோ தமிழ்! மறந்தே போயிட்டேனே! தேனு ரொம்ப அப்செட் ஆகி இருப்பா. அவளுக்கு இந்த இன்சிடென்ட் பற்றிப் பேசினாலே பிடிக்காது. அவளைப் போய் பாரு. சீக்கிரம்..." என்று பரபரத்தார் பூங்கோதை.

"என் அத்தை என்ன விஷயம்?", என்ற தமிழுக்கு விஜயகுமார் பதில் சொன்னார்.

"நான் அவளை பிறந்ததில் இருந்து திட்டியது கூட கிடையாது. அந்த ஒரே ஒரு நாள் தான் அதுவும் அவள் பாலாஜியை உசுப்பேற்றி பந்தயத்தில் கலந்து கொள்ள தூண்டியதால் தான் இப்படி ஒரு அசம்பாவிதம் ஆகி விட்டது என்று பதட்டத்துல ஒரு அடி அடிச்சேன். அதுல அவளுக்கு தாங்க முடியாத ஏமாற்றம். பயம். வருத்தம். அதை இப்ப நினைச்சாலும் அவள் அப்செட்", என்று சொன்ன விஜயகுமாரை ஆச்சரியமாக பார்த்தான்.

அம்மாவை விட அப்பா மேல் உயிரையே வைத்து இருக்கிறேன் என்று சொல்லும், அப்பாவின் மேலும் அவளுக்கு வருத்தமா?

"சரி அங்கிள். நான் போய் அவளைப் பார்க்கிறேன். அத்தை அழுகையை நிறுத்திட்டு சூப்பர் ஸ்வீட் செய்து வைங்க. நானும் தேனும் சாப்பிட வரோம்...", என்று புன்னகைத்து விட்டு மாடியை நோக்கி போனான். அறையில் இல்லை. இந்த மத்தியானம் மூன்று மணி வெயிலில் மொட்டை மாடியில் என்ன செய்கிறாள்?

மேல்நிலை தண்ணீர் தொட்டியின் அடியில் இருந்த சின்ன சதுரமான நிழலில் முழங்கால் கட்டி அதில்

முகத்தை பதித்து அமர்ந்தவளை பார்த்த உடனே அவனின் மனம் உருகிப் போனது. "தேன்மொழி...", என்று மென்மையாக அழைத்தபடி அருகில் வந்து அமர்ந்து அவளின் முதுகை வருடினான். நிமிரவே இல்லை. ம்ஹூம்... குழைவாக பேசினால் அவள் உடைய வாய்ப்பு அதிகம்.

"என்ன தேனு. இந்த மத்தியான வெயிலில் இங்கே உட்கார்ந்து என்ன ஆராய்ச்சி பண்ணுகிறாய்? ஒரு வேளை சன் பாத் எடுக்கிறாயா? அப்படின்னாலும் பீச்சுக்கு போகணும்... அதோடு இந்த புல்கவர் ட்ரெஸ் தேவைப் படாதே...", என்று கேலியாகச் சொன்னபடி அவளின் முகத்தை முழங்காலில் இருந்து நிமிர்த்த முயன்றான் தமிழ்.

"ப்ச்! விடுங்க...", என்று அவனின் கரத்தை தட்டி விட்டு விட்டு மீண்டும் முழங்காலில் முகத்தைப் பதிந்து கொண்டாள்.

"தேனு... இப்ப யார் மேலே உனக்கு என்ன வருத்தம்?"

"யார் மேலயும் எந்த வருத்தமும் இல்லை..."

"கீழே எல்லாரும் சந்தோஷமா சேர்ந்து பேசிட்டு இருக்காங்க. நீ மட்டும் ஏன் இங்கே வந்து தனியா உட்கார்ந்து இருக்கிறாய்?"

"இந்த வீட்டில் என் இஷ்டத்திற்கு அரை மணி நேரம் தனியா இருக்கக் கூடாதா?"

"தாராளமா இருக்கலாம் தேனு. ஆனால் கல்யாணம் ஆன ஒரு பொண்ணு தனியா இருக்க ஆசைப் படும்போது அவளுடைய ஹஸ்பண்டுக்கு முதலில் ஹின்ட் கொடுக்

கணும். அப்பதானே அவன் ரெடியாக முடியும்?'', என்று கேலியாகச் சொன்ன தமிழை முறைத்தாள்.

''நான் சொன்னது... அந்த தனிமை இல்லை...''

''அப்படியா! நான் சொன்னதுக்கும் நீ சொன்னதுக்கும் என்ன வித்தியாசம் தேனு'', என்று அப்பாவியாக கேட்டவன் கண்களை தோண்டி விட வேண்டும் போல ஆத்திரமாக வந்தது. அவன் என்ன தப்பு செய்தான் என்ற நியாய புத்தி இடித்து உரைத்ததால் முகத்தை வேறு புறம் திருப்பி கொண்டாள்.

''தேன்மொழி, உனக்கு என்னைப் பிடிக்குதோ பிடிக்கலையோ, நமக்குக் கல்யாணம் ஆகி விட்டது. இனி நம் காலம் முடியும் வரை சேர்த்து இருக்கப் போகிறோம். அதனால் நாம் என்ன நினைக்கிறோம் என்பதை வெளிப்படையா ஒருத்தருக்கு ஒருத்தர் பகிர்ந்து கொண்டால் தான் நம் உறவில் சிக்கல் இல்லாமல் நீடிக்க முடியும். உணர்வுகளை மறைப்பது என்று முடிவு பண்ணி விட்டால், இயல்பா இருக்க முடியாது தேனு. என்னைப் பொறுத்த வரை என் நல்லது கெட்டது ரெண்டையுமே உன்னிடம் பகிர்ந்து கொள்ளத் தயாரா இருக்கேன். நீயும் அதே மாதிரி இருக்கணும் என்று எதிர்பார்க்கிறேன். அது தப்பா சொல்லு?''

''இப்ப உங்களுக்கு என்ன தெரியணும்?''

''இந்த நிமிஷம் உன் மனசுல என்ன போட்டு அழுத்திக்கிட்டு இருக்கு என்று தெரியணும். இதே மாதிரி எப்போதும் வெளிப்படையா உன் உணர்வுகளை பகிர்ந்துக்கணும். சொல்லு தேன்மொழி. ஏன் அப்செட்டா இருக்க? எதுவா இருந்தாலும் ஷேர் பண்ணிக்கோடா...'', என்று அவளின் முகம் நிமிர்த்தி கண்களை பார்த்து கனிவாகக் கேட்டான் தமிழ்வேந்தன்.

கண்களுக்குள் ஊடுருவிய அந்த பார்வை அவளை ஏதோ செய்ய, ''நீங்க என்னைக் கல்யாணம் பண்ணிக் கொண்டதை பற்றி என்ன நினைக்கிறீங்க தமிழ்?'', என்று விசாரித்தாள்.

''நீ எந்த அர்த்தத்தில் கேட்கிறாய் என்று புரிய வில்லை. பொதுவா முதல் பார்வையில் காண்பவரை ஈர்க்கும் அழகான பெண். கேலி பேச்சிலும் குறும்பு சிரிப்பிலும், சுற்றுப்புறத்தை கலகலப்பாக மாற்றக் கூடிய பெண். பெற்றோரின் மேலும் உடன் பிறந்தவர்கள் மீதும் பாசம் வைத்த குடும்ப அமைப்பில் நம்பிக்கை இருக்கும் பண்பான பெண் என்பது பழகி பார்க்கும் போது புரியும். அருகில் வசிக்கும் மனிதருக்கு ஆபத்து காலத்தில் உதவி செய்ய நினைக்கும் நல்ல பெண். மொத்தத்தில் நீ எனக்கு கிடைத்த ஒரு பொக்கிஷம் என்று நினைக் கிறேன்...'', என்று அவன் முடித்த வினாடி பாய்ந்து அணைத்துக் கொண்டாள்.

''ஹேய்! என்னடா... என்ன ஆச்சு?'', என்று மென்மை யாக விசாரித்தபடி அவளை அணைத்துக் கொண்டவன் தோள்பட்டையில் ஈரம் உணர்ந்து அவளை விலக்க முயன்றாலும் முடியவில்லை.



''என்னைத் திருமணம் செய்து கொண்டது பற்றி என்ன நினைக் கிறாய்?'', என்ற கேள்வியை திரு மணம் முடிந்து பத்து நாட்கள் கழித்து இன்று ஏன் தன்னைப் பார்த்துக் கேட்கிறாள் என்பது புரியாவிட்டலும், தான் மனதில் அவளைப் பற்றி உணர்ந்ததை எடுத்து உரைத்த

தமிழுக்கு அவள் அப்படி விம்மலுடன் தாவி அணைத்துக் கொண்டது வியப்பை ஏற்படுத்தியது.

"தேனு உனக்கு எப்படியோ? உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொண்டதுல எனக்கு மட்டுமில்ல, எங்க அம்மாவுக்கும் ரொம்ப சந்தோஷம் தான். உன் கண்ணுல கண்ணீர் வரக் கூடாது என்பதுல நான் ரொம்ப தீவிரமா இருக்கேன். நீ இப்படி அடிச்ச குழந்தை மாதிரி விம்மி விம்மி அழுகிறாய்? நான் உன்னிடம் ஒரு நல்ல நியூஸ் சொல்லணும் என்று ஆசையா வந்தேன். இப்படி கண்ணை கசக்கிக் கொண்டு இருந்தால் என்ன அர்த்தம்...", என்று முதுகை வருடி ஆறுதலான குரலில் வெகு நேரம் பேசிய பின்பே அவன் மார்பில் இருந்து விலகியவளின் கண்ணில் இன்னும் கண்ணீர் இருந்தது.

"ஷ்! போதும் கண்ணு அழுகையை முதலில் நிறுத்து", என்று கண்டிப்பான குரலில் சொன்னபடி அவளின் முகத்தை கைக்குட்டையால் துடைத்து விட, அந்த அதட்டலுக்கு கொஞ்சம் கண்ணீர் கட்டுப்பட்டது.

"உங்க அம்மா உனக்கு மூட அவுட் என்று சொன்னாங்க. என்ன ஆச்சு தேனு? ஏன் இங்கே வந்து விட்டாய்? உங்க அப்பா ஏதாவது சொன்னாங்களா?"

"அப்பாவா? இல்லை தமிழ். அவர் எப்போதுமே என்னை மூட் அவுட் ஆக்கியதே இல்லை. அந்த ஒரே ஒரு நாளைத் தவிர..."

"எந்த நாள் தேனு...?"

"ப்ச்! வெறுப்பேற்றாதீங்க தமிழ். உங்களுக்கு தெரியாதா?"

"உனக்கு வெறுப்பேற்றினால் எனக்கு என்ன பிரயோஜனம் தேனு? நமக்குள் எந்த ஒளிவு மறைவும்

இருக்கக் கூடாது என்ற எண்ணத்தில் கேட்கிறேன். அம்மாவும் பாலாஜியும் பழவேற்காடு ஏரியில் தண்ணீரில் விழுந்த நாளை சொல்றாயா?"

"ம்ம். நான் எதை வேண்டாம் என்று சொல்றேனே அதையே நோண்டுங்க..."

"ஏதோ ஒரு கோபத்தில் எப்போதோ உங்க அப்பா சொன்ன ஒரு வார்த்தைக்காக இன்னும் அப்படியே மனசுல வச்சுக்கிட்டு, எப்போ யார் அதைப் பற்றிப் பேசினாலும் மூட் அவுட் ஆவாயா தேனு?"

"அப்பா அப்போது சொன்னதுக்காகவா தமிழ் நான் இப்போ இவ்வளவு உணர்ச்சி வசப்பட்டு அழுகிறேன்? இல்லை தமிழ்... நான் அழுததுக்கு காரணமே வேறு..."

"எதுவா இருந்தாலும் மனசு விட்டு பேசினால் தானே லேசாகும். பிரச்சனை தீரும். சொல்லு தேனு. என்ன உன் கவலை?"

"நான் உங்களை கல்யாணம் பண்ணிக்கொள்ள சொல்லி முதன் முதலில் அப்பா என்னிடம் கேட்ட போது, உங்களை வேண்டாம் என்று சொல்ல எத்தனை காரணம் தேடினேன் தெரியுமா தமிழ்? ஆனால் நான் யார் என்று தெரிவதற்கு பத்து வருஷம் முன்பே. என் அம்மாவுக்கும் அண்ணனுக்கும் எவ்வளவு பெரிய உதவி செஞ்சு இருக்கீங்க? அப்பாவுக்கு கொடுத்த டிக்கெட்டுக்கு மாற்றா கல்யாணமா என்று உங்களைப் பற்றி நினைச்சு இருக்கேன் தமிழ் இப்போ. நான் என்ன சொல்லி, என்ன செய்து என் நன்றிக் கடனைத் தீர்ப்பேன்...?"

"என்னால் தான் இந்த காரியம் நடந்தது என்று எதுவுமே இந்த உலகத்தில் கிடையாது. இது நம் கல்யாணம் போன்ற நல்ல காரியங்களுக்கும் பொருந்தும். எங்க

அப்பாவின் மரணம் போன்ற கெட்டதுக்கும் பொருந்தும். அதனால் எந்த காரியமும் நம்மால் நடக்குது என்று பீல் பண்ணத் தேவை இல்லை புரிஞ்சுதா?''

''பேசுறது எல்லாருக்கும் ஈசி தமிழ். ஆனால் இது பத்து வருஷமா இருக்கும் குற்ற உணர்வு. அவ்வளவு சீக்கிரம் போகாது.''

''குற்ற உணர்வு எதுக்கு தேனு? நான் அவங்களை அங்கே வந்து காப்பாற்றியதற்கா?''

''காப்பாற்றியதற்கு குற்ற உணர்வு வருமா? நன்றி உணர்வு தான் வரும்...''

''தேனு, நாம் எங்கே யாருக்கு எப்போ பிறப்போம்? நமக்கு யார் பிறப்பார்கள்? நம் வாழ்க்கை எங்கே எப்படி முடியும்? இதுல எந்த கேள்விக்குமே நமக்கு விடை தெரியாது. ஏன் அடுத்த நிமிஷம் நாம் உயிரோடு இருப் போமா என்று தெரியாது. அதனால் நடப்பது எல்லாமே நன்மைக்கே என்று நினைத்துக் கொள்ள வேண்டும் தேனு.''

''எந்த நேரத்தில் என்ன பேச்சு இது? இந்த உளறலை நிறுத்துங்க. என்னவோ குட் நியூஸ் வச்சு இருக்கேன் என்று சொன்னீங்களே. அதை சொல்லுங்க...'', என்று அவள் அதட்டியதில் தெரிந்த உரிமையும் பதட்டமும் தமிழுக்கு ரொம்பப் பிடித்து இருந்தது.

''நீ அப்பாவோடு பேசப் போன போது மஞ்சு மேடம் போன் பண்ணி இருந்தாங்க. அந்த அக்ரீமென்ட் கையெழுத்தாகி விட்டது என்று சொன்னாங்க. அதோடு இரண்டு ப்ரோக்ராம் ஒளிபரப்பாகும் தேதி பிக்ஸ் பண்ணி பதினான்கு லட்சம் ரூபாய் பணமும் கிடைக்கும்...''

''வாவ்! தியாகராஜன் அங்கிளுக்கு நீங்க பத்து லட்சம் ரூபாய் கொடுத்தால் அடுத்த நாளே உங்களுக்கு பதினாலு லட்சம் ரூபாய் வரவா? சூப்பர் தமிழ்...'', என்று சந்தோஷமாக சொன்னவள் அவன் தோளில் சாய்ந்து கழுத்தை கட்டி, கன்னத்தில் அழுத்தமாக ஒரு முத்தமும் வைக்க அவன் புன்னகை செய்தான்.

''ஆஹா! அந்த நியூசை விட அதுக்கு நீ கொடுக்கும் ரியாக்ஷன் பிரமாதமா இருக்கு. இதுக்காகவே உன்னிடம் இன்னொரு நல்ல நியூஸ் சொல்லலாமா என்று தோணுது. உன்னிடம் சொல்ல வார்த்தைகள் இங்கே இருக்கு என்று தன் நெஞ்சை சுட்டி காட்டியவன், இங்கே வர மாட் டேங்குது...'', என்று இதழ்களை காட்டினான்.

''அன்பா இருந்தாலும் அடக்குமுறையா இருந்தாலும் எதையுமே ஒண்ணுக்கு மூணா திருப்பிக் கொடுப்பது தான் பழக்கம். நான் என்ன சொல்லணும் என்று நினைக் கறீங்களோ, அதை நீங்களே சொல்லலாமே?''

''இந்த ஒரு விஷயத்துல மட்டும் என் பெண் டாட்டிக்கு நான் ஸ்பெஷல் ரைட்ஸ் கொடுத்து இருக் கேன். அவள் ஒரு தடவை சொன்னால் போதும். நான் மூணு இல்லை, முன்னூறு வாட்டி சொல்வேன். ஆனால் அந்த முதல் முறை அவள் தான் சொல்லணும்...'', என்று விடாமல் பிடிவாதம் பிடித்த தமிழுக்கு, தேனிடம் இருந்த அந்த வார்த்தைகளை பெற்று விட்டால் நல்லா இருக்குமே என்ற எண்ணம் இருந்தது.

''அடுத்த வாரம் மதுரை போகணும் என்று சொன் னாயே! ஒரு பத்து நாள் லீவு போட முடியுமா? அப்ப டியே...'', என்று நிறுத்தியவன் கண்கள் அவளை ஆர்வ

மகத் தனைக்க, கைகள் பின்னந்தலையையும் காது மடலையும் வருடிக் கொண்டு இருந்தது.

"கல்யாணத்திற்கு லீவு வேண்டாம் என்று தானே கீ என்று பார்த்து வச்சது. மறந்துட்டீங்களா?", என்று கேலியாகக் கேட்டவளின் குரலில் சீண்டல் இருந்தது.

"கல்யாணத்திற்கு பிறகு த..னி..யா ஹ..னி..மூ..ன் போக லீவு தேவை படுது", என்று அவளின் சீண்டல் கொடுத்த எதிரியத்தில் ஆழம் பார்த்தான் தமிழ்.

"நீங்க மட்டும் தனியா ஹனிமூன் போறீங்களா? போயிட்டு வாங்க. அதுக்கு என் என்னை லீவு போட முடியுமா என்று கேட்கறீங்க?"

"ஹைய்யோ! என் பொண்டாட்டி இவ்வளவு புத்திசாலி என்று யாருமே எனக்கு சொல்லவே இல்லை பாரேன்...", என்று சொல்லி, அவளின் உச்சியில் லேசாக கொட்டினான்.

"ஆஹ்! நான் பிறந்ததுல இருந்து இத்தனை வருஷத்துல என்னை யாருமே எங்க வீட்டுல திட்டினது கூட இல்லை. என்னை போய் கொட்டுறீங்க... இருங்க... உங்களை அப்பாவிடம் சொல்லி...", என்று அவள் மிரட்ட, "சொல்லி...", என்று ஆச்சரியமாகக் கேட்டான்.

"என் நம்பலையா? எங்க அப்பாவையே கேட்டுப் பாருங்க...", என்று பெருமையாக அவள் அறிவிக்க அவனின் சிரிப்பு மேலும் விரிந்தது.

"பதினைந்து நிமிஷத்துக்கு முன்னாடி உங்க அப்பா நான் என் வாழ்க்கையிலேயே ஒரே ஒரு முறை செஞ்ச சின்ன தப்பு என் பெண்ணை கை நீட்டி அடிச்சதுதான். அதை இப்ப நினைச்சாலும் என் மனசே ஆற மாட்டேங்குது என்று புலம்பினார்", என்று நிறுத்தி

சிரிப்புடன் ஆராய. அவள் பாய்ந்து அவன் முதுகிலும் தோளிலும் அடிக்க ஆரம்பித்தாள்.

"தேனு. எனக்கு ஒரே ஒரு சின்ன ஹெல்ப் பண்ணு. அப்புறமா உன் ஆசை தீரும் வரை அடிக்கலாம். ஒரு நிமிஷம் கேப் விடு...", என்று வலி தாங்காதது போல நடிக்க, அவள் கேள்வியாய் பார்த்தாள்.

"என்ன ஹெல்ப்?"

"இந்த மாதிரி சின்ன கேலி பேச்சுக்கு எல்லாம் கட்டிய மனைவி கணவனை அடிக்க முயன்றால், அது குறித்து, டொமஸ்டிக் வயலன்ஸ் என்று கேஸ் போட முடியுமா என்று சாந்தோம் இன்ஸ்பெக்டரிடம் கேட்டு சொல்றியா?", என்று விசாரித்து அதற்கும் சேர்த்து நான்கு அடிகள் பெற்றுக் கொண்டான்.

"ஒண்ணு சாந்தோம் இன்ஸ்பெக்டரா தெரியாது என்று சொல்லு. இல்லை இது டொமஸ்டிக் வயலன்ஸ் வராது என்று சொல்லு. அதுக்கும் ரெண்டு அடி அடித்தால் எனக்காக தட்டி கேட்க ஆள் இல்லை என்று தானே அர்த்தம்?", என்று தொடர்ந்த அவன் கேலி ஓயவில்லை.

* * *

மாலை நான்கு மணிக்கு கிளினிக் கிளம்பிப் போன பாலாஜி, திரும்பி வரும்போது, பானுமதி அம்மாவிடம் தகவல் சொல்லி அழைத்து வர, வீட்டில் கலகலப்பு கூடியது.

"தேனு, என்னதான் அவன் வேண்டாம் என்று சொன்னாலும், நீ வேண்டாம் என்று சொன்னாலும், இன்னாருக்கு இன்னார் என்று எழுதி வைத்ததை யாராலும் மாற்றவே முடியாது. கடைசியில எவ்வளவு விஷயம் நமக்குத் தெரியாமலே நடந்து இருக்கு பார்த்தாயா?",

எல்லாம் அவன் செயல் என்று விட்டு விட்டால் எல்லாமே நல்லாதான் முடியும்'' என்று இறைவனுக்கு சந்தோஷமாக நன்றி சொன்னார் பானுமதி.

''உங்களுக்கு அடுத்த வாரம் இங்கே ஏதாவது முகியமான வேலை இருக்கா அண்ணி?'', என்று விசாரித்தார் பூங்கோதை.

''பக்கத்துல தியாகு அண்ணனுக்கு நாளைக்கு சர்ஜரி இருக்கு. ரெண்டு மூணு நாளைக்கு அவங்களுக்கு ஒத்தாசை தேவைப் படலாம். புதன் கிழமைக்கு மேலே முக்கியமா ஒண்ணும் இல்லை அண்ணி. ஏன் கேட்கறீங்க?''

''மதுரையில் உங்க உறவினர்களை அழைத்து உங்க வீட்டில் வச்சு ஒரு விருந்து கொடுக்க ஆசைப்பட்டீங்க என்று தேனு சொன்னாள். அடுத்த வாரம் நம்ம மூணு பேரும் போய் ஒரு விருந்துக்கு ஏற்பாடு பண்ணுவோம். வார இறுதியில் இவர்கள் நான்கு பேரும் வந்து கலந்து கொள்ளட்டும். அதான் உங்களுக்கு வர வசதிப்படுமா என்று கேட்க நினைத்தேன்.''

''தேனு படிப்பை முடிக்கப் போறாளே? அவள் கூட இருக்கறதை தவிர இப்போதைக்கு வேறே முக்கியமான வேலை இல்லை. ரெண்டு வாரம் கழித்து அவள் படிப்பை முடித்த பிறகு போகலாமா?'', என்று பானுமதி சொல்ல கணவரை பார்த்தார் பூங்கோதை.

''அத்தை சொல்றது கரெக்ட்டுப்பா. தேனுவோட படிப்பு முடிப்பதும் ஒரு கொண்டாட வேண்டிய விசேஷம் தானே? கொண்டாட்டத்துக்கு இன்னொரு காரணம் நான் சொல்றேன் தமிழோட ப்ரோக்ராம் டெலிகாஸ்ட் அப்ப தான் ஆரம்பிக்குது...'', என்று பாலாஜியும்,

''நானும் ஒரு காரணம் சொல்றேன்பா. பாலா கார் வாங்க ஒத்துகிட்டார்...'', என்று மேகா சொல்ல.

''ஆளாளுக்கு ஒரு காரணம் சொல்றாங்க. உனக்கு ஒன்றும் காரணம் இல்லையா தேன்மொழி?'', என்று தமிழ் தன் பங்கிற்கு விசாரித்தான்.

''ஏன் இல்லை. பெரிய ரீசன் இருக்கே...'', என்று உற்சாகமாக ஆரம்பித்தவள், அவன் ஆர்வமுடன் தன்னை விழுங்குவதை உணர்ந்தாலும் ஒதுக்கி, ''எங்க வீட்டுக் காரர், கை விட்டுப் போன அவங்க பழைய பரம்பரை சொத்து ஒன்றைத் திரும்ப வாங்கப் போகிறார். அதை கொண்டாடலாமே?'', என்று கேட்க, தமிழ் பெருமிதத் தோடு புன்னகை செய்தான்.

வெகு இயல்பாக கேலி பேசிச் சிரித்தாலும், நெஞ்சம் முழுக்க நிறைந்து இருந்த காதலை வெளிப்படையாக அடுத்தவரிடம் சொல்ல கண்ணுக்குத் தெரியாத ஒரு தடை இருந்தது.

'ஏற்கனவே ஒரு பெண்ணை காதலிக்கிறேன் என்று சொன்னானே? அது பொய் என்றோ இல்லை அது நீதான் என்றோ வெளிப்படையாகச் சொல்லவில்லையே?', என்ற எண்ணம் தேன்மொழிக்கு இருந்ததனால் அவள் தன் மனதை திறந்து காட்ட முன் வரவில்லை.

''ஏற்கனவே நன்றிக் கடனாக கல்யாணம் செய்துக் கொள்ள எனக்கு இஷ்டம் இல்லை என்று சொல்லி இருக்கிறாள். அவளின் இன்றைய நெருக்கம், அம்மாவையும் அண்ணனையும் காப்பாற்றியதற்கான நன்றி உணர்வுக்காக மட்டும் இல்லை. உன்னை உனக்காக எனக்குப் பிடித்து இருக்கிறது'', என்ற வாக்கியத்தை தேன்மொழியின் வாயில் இருந்து எதிர்பார்த்துக் காத்திருந்த தமிழுக்கு அந்த எதிர்பார்ப்பு அந்த நாள் முழுவதும் நிறைவேறவில்லை.



ரயில் நிலையத்தில் பானுமதியை, விஜயகுமார் - பூங்கோதையுடன் சேர்த்து நேற்று இரவு மதுரைக்கு வழி அனுப்பியதில் இருந்த அவனோடு ஒட்டி உறவாடி, கேலி பேசி, சிரித்து, இணக்கமாக பழகினாள் தேன்மொழி.

''காலையில் என்ன சாப்பிடுறீங்க?'', என்று கேட்ட வளிடம் ''அம்மா மாவு வச்சு இருக்கேன். சாம்பார் இருக்கு என்று சொன்னாங்களே? தோசை போதும் தேனு...'', என்று பதில் சொல்ல அவள் விழுந்து விழுந்து சிரித்தாள்.

''அம்மா வரும் வரைக்கும் தினமும் தோசையா சாப்பிட முடியும்?'', என்று ஆரம்பித்து அவள் அடித்த லூட்டி புன்னகையை மலர வைத்தது.

''அரிசி, உளுந்து இந்த இரண்டையும் அரைத்து கலந்து வைத்த ஒரே மாவில் எத்தனை டிஷ் செய்யலாம் தெரியுமா? முதல் நாள் இட்லி. அடுத்த நாள் அதே மாவில் தண்ணீர் கலந்து லேசாக ஊற்றி, மொறு மொறுவென்று நெய் ரோஸ்ட். மூன்றாவது நாள் அதே மாவு கல் தோசையா மாறும். நான்காவது நாள் வெங்காய ஊத்தப்பம். ஐந்தாவது நாள் வெங்காயம், தக்காளி, காரட் சேர்ந்து கலர்புல் வெஜிடபிள் ஊத்தப்பம். இப்ப சொல்லுங்க, உங்களுக்கு என்ன வேண்டும்?''

''இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும்? பயங்கரமான கண்டுபிடிப்பா இருக்கே? நீ இத்தனை வெரைட்டி செய்வியா?''

''ம்ஹூம்! எங்க அம்மா செய்றதுதான். நான் சும்மா சாப்பிட்டு விட்டு கலாய்க்க வேண்டிய ஆள். அவங்க

டிஷ் பற்றி எவ்வளவு பில்ட் அப் கொடுக்கிறாங்களோ, ஐட்டம் அவ்வளவு பழசு என்று கணக்கு போடலாம்...'', என்று சிரித்தாள்.

''நமக்கு எல்லாம் சாப்பாடே முக்கியம் இல்லை. அதை சர்வ் பண்ற ஆள், அவங்க மனபாவனை தான் முக்கியம். இப்ப தேன்மொழி கையில் ஒரு க்ளாஸ் பால் கொடுத்து இதுதான் உங்க ப்ரேக்பாஸ்ட் என்றால் சந்தோஷமா சாப்பிட்டுட்டு கிளம்பிடுவேன்.''

''ஹச்சு..! இந்த ஏப்ரல் மாசத்துல கூட சளி பிடிக்க வைக்காதீங்க தமிழ்'', என்று கேலி பண்ணி விட்டு நகர்ந்தாள்.

குளித்து முடித்து விட்டு ரகளை செய்தபடி காலை உணவை உண்டவள், ''ரொம்ப அர்ஜெண்டான வேலை இருக்கா?'', என்று விசாரிக்க அவன் மறுப்பாக தலை அசைத்தான்.

''நேரம் எப்போதுமே என் கையில் தான். எனக்கு ரொம்ப முக்கியமான வேலை என்றால் சொல்லிடுவேன். இன்னிக்கு அப்படி எதுவும் இல்லை. என்ன விஷயம் சொல்லு.''

''இன்னிக்கு எனக்கு மதியம் ஃபேர்வெல் பார்ட்டி இருக்கு. நீங்களும் என்னுடன் வரீங்களா?''

''நானா? காலேஜுக்கா?'', என்று கேட்டவன் கண்களில் வியப்பு இருந்தது. அவள் தன் கல்யாணத்திற்கு கூட உடன் படிப்பவர்களை அழைக்கவில்லை. இப்போது அவளாகவே அழைக்கிறாளே?

''காலேஜுக்கு வா இவ்வளவு யோசிக்கிறீங்க? உங்களை யாரும் அங்கே கடித்துத் தின்று விடாமல் நான்

பார்த்துக் கொள்கிறேன்...", என்று கேலியாகச் சொல்ல அவன் சிரித்தான்.

"உனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் எனக்கு என்ன? நாளைக்கு தியாகு அங்கிள் டிஸ்சார்ஜ் என்று சொன்னாங்க. அவங்களைப் பார்த்து ஏதாவது உதவி தேவையா என்று விசாரித்து விட்டு ஒரு மணி நேரத்தில் வந்து விடுகிறேன்", என்று கிளம்பினான் தமிழ்.

"அங்கிள். உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் தெரியுது. நாளைக்கு டிஸ்சார்ஜ் என்று சொன்னாங்க. அலைச்சல் இல்லாமல் பார்த்துக்கணும். ஆண்ட்டி, உங்க பொண்ணு வந்தாங்களே, கிளம்பிட்டாங்களா?", என்று இருவரிடமும் நலம் விசாரித்தான்.

"அம்மா இல்லையே? தேன்மொழி எப்படி சமாளிக்கிறான்? காலேஜுக்கும் போயிட்டு வீட்டுலயும் பார்ப்பது சிரமமாச்சே?", என்று விசாரித்தார் மகாலஷ்மி.

"தேனு படிப்பை முடிச்சாச்சே. இன்னிக்கு ஃபேர்வெல். இனிமேல் மேடம் முழுமையான டாக்டர். அவளோட முதல் பேஷண்ட் நீங்க தான். உங்களை அவள் மறக்கவே மாட்டாள்...", என்று பெருமையாகச் சொல்ல அவர்களும் அதை சந்தோஷமாக ஒத்து கொண்டனர்.

"என் தமிழ், தேன்மொழி, அண்ணனோட கிளினிக்கிற்கு வருவாளா? இல்லை தனியா கிளினிக் வச்சு கொடுக்க போறியா? கை ராசிக்கார பொண்ணுப்பா. தனியாகவே வச்சு கொடு. சீக்கிரமே பெரிய ஆளா வருவாள்."

"எனக்கும் ஆசைதான் ஆண்ட்டி. வீட்டுக்கு பக்கத்துல ஒரு இடம் பார்க்கணும். ஆனால் ரேட் தான் பய முறுத்துது...", என்று சொன்ன தமிழின் வார்த்தைகளைக்

கேட்டதும், தியாகராஜனும், லஷ்மியும் ஒருவரை ஒருவர் பார்த்தனர்.

"ரேட்டை விடு தமிழ். சிட்டிக்குள்ளே காலி மனை எங்கே இருக்குப்பா?"

"இப்போதைக்கு பிளாட் கிடைத்தால் கூட போதும். பக்கமா இருந்தால் தேவலை..."

"நீ இருக்கும் பிளாட்டுக்கு கீழ் பிளாட் விலைக்கு கிடைத்தால் உனக்கு ஓகே யா?"

"கீழே பிளாட்..? உங்க வீடாச்சே! அதை விற்க போறீங்களா? நீங்க என்ன பண்ணுவீங்க?"

"பொண்ணுக்கும் பையனுக்கும் பெரிய வாக்குவாதம் நடந்து. இப்ப பையன் எங்களை அங்கேயே வர சொல்லி விட்டான். கிளம்ப போகிறோம்..."

"சந்தோஷம் அங்கிள். ஆனால், அங்கே உங்களுக்கு ஒத்துக்கொள்ளவில்லை என்றால்..."

"தெரியும்பா. இப்போதைக்கு இந்த பணத்தை நாங்க எங்க கையில் தான் வைத்துக் கொள்ளப் போகிறோம். பிடிக்கவில்லை என்றால் திரும்பி விடுவோம் என்ற நிபந்தனையோடு அங்கே மூன்று மாத டூரிஸ்ட் விசாவில் தான் போகப் போகிறோம்..."

"உங்க நல்ல மனசுக்கு ஒரு குறையும் வராது ஆண்ட்டி. ஆனால், அந்த வீட்டை உடனடியா விலைக்கு வாங்கும் அளவுக்கு என்னிடம் இப்போ பணம் இல்லையே?"

"இந்த வீட்டை யாரோ ஒருத்தருக்கு கொடுப்பதை விட உங்களுக்கு கொடுத்தால், அதுவும் கிளினிக் வைக்க கொடுத்தால் எனக்கு சந்தோஷமா இருக்கும். உன்னிடம் எவ்வளவு இருக்கும் சொல்லு?"

"பாதிப் பணம் இருக்கலாம். அது வேற வேலைக்கு வைத்து இருந்தது..."

"அப்புறம் என்ன? மிச்சத்துக்கு லோன் போடு. உன் மனைவிக்கு கிளினிக் வைக்கப் போகிறாய். இன்னும் ரெண்டு மூணு வருஷத்துல ஒஹோன்னு வந்துடுவீங்க. துணிஞ்சு வாங்கிப் போடு. நிச்சயம் உனக்கு பிரயோஜனமா இருக்கும்..."

"நான் தேன்மொழியிடம் பேசிட்டு நாளைக்கு முடிவு சொல்லட்டுமா?"

"சாவி எடுத்துட்டு போ. சுத்தி பாரு. மனசு விட்டு பேசுங்க. உனக்கு கொடுப்பதில் எனக்கு சந்தோஷம். நீ வேண்டாம் என்று சொன்ன பிறகு நான் வெளியே சொல்வேன் போதுமா?"

"உங்க மூலமா எங்களுக்கு ஒரு நல்லது நடக்கட்டும். தேங்க்ஸ் ஆன்ட்டி", என்றவனுக்கு மதுரை வீடு கை நழுவி போன ஏமாற்றம் சந்தோஷம் எட்டி பார்த்தது.

அந்த சந்தோஷ செய்தியை அவளிடம் சொல்லி, அவளுடைய அபிப்ராயத்தை கேட்கலாம் என்று இந்த ஆறு மணி நேரத்தில் எத்தனை தடவை பேச்சை ஆரம்பித்து விட்டான்? பிடியே இல்லையே?

கல்லூரிக்கு வந்த உடனே அவளை சூழ்ந்து கொண்ட இளைஞர் பட்டாளம் என்ன சொன்னார்களோ? அடுத்த வினாடியில் முகத்தில் கடுகடுப்பை பூசிக் கொண்டாள். அங்கே இருந்த அடுத்த மூன்று மணி நேரமும் அவனுக்கு முள் மேல் அமர்ந்தது போல இருந்தது.

"எப்படி எங்களுக்கு சொல்லாமல் நீங்க தேன்மொழியை கல்யாணம் பண்ணிக் கொள்ளலாம்?", என்ற ஒரே

கேள்வியை விதம் விதமாக கேட்ட கேலிக்கு சிரித்த முகத்துடன் பதில் சொல்லி அவன் பொறுமை எல்லை மீறும் நேரம், "போகலாமா?", என்று வந்து சேர்ந்த தேன் மொழியை பார்த்து நிம்மதி பெருமூச்சு விட்டு உடனே யாக எழுந்தான். எள்ளும் கொள்ளும் சேர்ந்து வெடித்த முகத்தை பார்த்து குழம்பினான்.

"தேனு என்ன கோபம் உனக்கு?", என்று அவன் கேட்டது கூட காதில் விழாதது போல அவள் விடு விடென்று நடக்க அவனும் பின் தொடர்ந்தான்.

"ஹேய்! நான் பைக் எடுத்துட்டு வரலை. உன்னை நம்பி காரில் வந்ததற்கு நடுவழியில் விட்டுட்டு போய்டாதே. நில்லு", என்று அவன் சொன்னது காதில் விழ, நின்று ஒரு முறைப்பை பதிலாக கொடுத்து விட்டு மீண்டும் வேகமாக நடக்க ஆரம்பித்தாள்.

"வர வர, நீ எந்த நேரம் என்ன மூடில் இருக்கிறாய் என்று ஒண்ணுமே தெரிய மாட்டேங்குது. மத்தியானம் வரைக்கும் நல்லாத்தானே பேசிட்டு இருந்த?", என்று வேகமாக வந்து காரில் ஏறி, தனக்குள் முனகியவனை திரும்பி முறைத்தாள்.

"உன் கோபத்திற்கு என்ன காரணம் என்று நீ தான் சொல்லணும். நீ கிணற்றில் போட்ட கல்லு மாதிரி அசையாமல் உட்கார்ந்து இருக்கிறாய்..."

"ஆமா! கல்லுதான்... இல்லை என்றால் ஃபேர்வெல் பார்ட்டில மேலே விழாத குறையா கொஞ்சி கொஞ்சி நீங்க பேசுன போதே என் கோபத்தை காட்டி இருக்கணும். அவங்க முன்னாடி என் கோபத்தை நான் கண்ட்ரோல் பண்ணி வச்சா... நீங்க இதுவும் பேசுவீங்க... இன்னமும் பேசுவீங்க..."

''ஹேய்! நில்லு... என்ன பேசற நீ? நான் யார் மேலே விழாத குறையா... லிசன் தேன்மொழி. நீ வர சொன்னதால் தான் நான் அங்கே வந்தேன். அங்கே எனக்கு யாரையும் தெரியாது...''

''உங்களுக்கு யாரையும் தெரியாது. ஆனால் உங்களை எல்லாருக்கும் தெரிஞ்சு இருக்கே. ப்ரோபசர்ல இருந்து ஸ்டூடண்ட்ஸ் வரை ஆண் பெண் வித்தியாசம் இல்லாமல் எல்லாருக்கும் தெரிஞ்சு இருக்கே...''

''அதுக்கு நான் என்ன செய்ய முடியும்? டி.வி.ல பார்த்து இருக்கலாம் தேனு. வலிய வந்து பேசுபவர்களை விலக்கியா வைக்க முடியும்?''

''விலக்கி வைக்கணும். ஏன் நான் விலக்கி வைக்கலை?''

''வாட்?'', என்று திகைத்தவனின் முகத்தில் அதிர்ச்சி தெரிந்தது.

''நான் எதுக்கு உங்களை இங்கே கூட்டிட்டு வந்தேன் என்று நினைச்சீங்க? நம் கல்யாணம் இங்கே நிறைய பேருக்குத் தெரியாது. அதனால் படிப்பு முடியப் போகுது என்று சுற்றிச் சுற்றி வந்து தொந்தரவு பண்ணும் பலரை விலக்க, உங்களை, ''என் கணவர் என்று எல்லோருக்கும் அறிமுகம் செய்து வைக்கவில்லையா? அது மாதிரி உங்களுக்கு விலகத் தெரியாதா? வந்து நிற்கும் எல்லாரிடமும், ஒரு ஆள் பாக்கி விடாமல்...''

''நான் உன்னை என் கேடயமாக பயன்படுத்தினேன். நீ ஏன் பயன்படுத்தவில்லை?'', என்ற வாதத்தில் அவனின் எரிச்சல் உச்சத்திற்குச் சென்றது. இதென்ன பைத்தியக்காரத்தனம்? கணவன் மனைவி என்றால் பரஸ்பரம் நம்பிக்கை வேண்டாமா?

''தேன்மொழி, போதும். இதுக்கு மேலே நாம் வீட்டில் போய் பேசலாம்.''

''இன்னிக்கு மட்டுமில்லை... கல்யாணம் அன்னிக்கும் அப்படித்தான். ஏன் உங்களை முதன் முதலில் பார்த்த நாளில் இருந்தே... அப்படித்தான்... என்னிக்காவது நான் என்ன நினைக்கிறேன்? எனக்கு என்ன பிடிச்சு இருக்கு என்று ஏதாவது...''

''ஷட் அப்...! வீட்டுல போய் பேசலாம் என்று சொன்னது உன் காதில் விழுந்ததா?'', என்று அதட்டியவனின் உயர்ந்த குரலில் திகைத்து திரும்பியவள் வாய் தானாக மூட, அவளின் அந்த திகைத்த பாவனை அவன் கோபத்தை கொஞ்சம் குறைத்தது.

''உன்னை பார்த்த முதல் நாளில் இருந்தே உனக்கு பிடிச்சதை மட்டும் செய்யணும் என்று நான் நினைத்ததால்தான் இத்தனை பிரச்னையும். இனிமேல் என் மனசுக்கு எது சரி என்று படுதோ, அதை செய்ய வேண்டும் என்று நினைக்கிறேன்...'', என்று சொன்னவனின் கோபம் இன்னும் முழுமையாக குறையாததால், மேற் கொண்டு பேச்சைத் தொடராமல், அவளுக்கும் இடம் கொடுக்காமல் கண்களை மூடி இருக்கையில் சாய்ந்து கொண்டான்.



கல்லூரியில் இருந்து வந்து சேர்ந்து ஒரு மணி நேரம் ஆகியும் இன்னமும் ஒரு வார்த்தை கூடத் தேன்மொழி பேசவே இல்லை. தன் கோபத்தை ஒத்தி வைத்து, ஹார்லிக்ஸ் கலந்து எடுத்து வந்து குடிக்கச் சொல்லி பார்த்தாள்.

ஹாலில் டி.வி. பார்க்கிறேன் என்று பேர் பண்ணி கொண்டு இருந்தவள் அறைக்கு சென்று கதவை சாத்தி பூட்டியதுதான் மிச்சம்.

அவள் இந்த வீட்டிற்கு வந்து இருபது நாளைக்கு மேல் ஆகி விட்டது. பானுமதி அம்மா இருந்த போதும் சரி. முந்தைய இரவு அவர்கள் தனிமையில் இருந்த போதும் சரி. அன்று வரை அவர்கள் இருவருக்குமான அந்த அறையை சாத்தியதே இல்லை.

தியாகராஜன் வீட்டை விற்பதாகச் சொன்னதைப் பேச வேண்டும். குறைந்த செலவில், அதை க்ளினிக்காக மாற்ற முடியுமா என்று வீட்டை மீண்டும் ஒரு முறை வாங்கும் நோக்கத்தில் சுற்றிப் பார்க்க வேண்டும். அதற்கும் மேலே அம்மா எட்டு மணிக்கு போன் பண்ணும் போது இவள் சாதாரணமாகப் பேச வேண்டும். எழுந்து சென்று கதவை தட்டினான் தமிழ்.

''தேன்மொழி, நான் காரில் பேச வேண்டாம் என்று சொன்னது உண்மைதான். பேச்சையே நிறுத்திக்கோ என்று நான் சொல்லலை. எதுவா இருந்தாலும் இப்ப பேசலாம் வா.''

''எனக்கு தூக்கம் வருது. காலையில் பேசிக்கலாம்...''

''தேனு, காலையில் ஏனக்கு வேறே வேலை இருக்கு. இன்னிக்கு டிவி ஸ்டேஷன் போகலை. நாளை மதுரை கிளம்பணும். அங்கே மூன்று நாட்கள் ஆகி விடும். அதனால் இப்போதே பேசலாம்...''

''...''

''ப்ச்! தேனு, நைட் முழுக்க கோபத்தை பிடித்து வைத்துக் கொண்டு இருக்கக் கூடாது. என்ன சொன்னாலும்

கேட்க மாட்டாயா? காலைக்குள் நாம் முடிவெடுக்க வேண்டிய ஒரு முக்கியமான விஷயம் இருக்கு. வா. உன்னுடைய நல்லதுக்காகத்தான் சொல்றேன்...'', என்று முடித்த வினாடியில் கதவு வேகமாக திறந்தது.

''இந்த மாதிரி பொய் சொல்லி ஏமாற்றுவதை எப்போ நிறுத்துவீங்க தமிழ்? உங்களுக்கு மனசாட்சியே கிடையாதா?''

''பொய்யா!? நான் எப்போ, யாரிடம் என்ன பொய் சொன்னேன்? மனசாட்சி இல்லாமல் அப்படி என்ன காரியம் செய்து விட்டேன்?''

''என்னுடைய நல்லதுக்காக மட்டும் யோசித்து செயல்படுவதாக கொஞ்சம் முன்னாடி சொன்னீங்களே, அது பொய் இல்லையா?''

''இந்த மாதிரி அர்த்தமே இல்லாமல் குற்றம் சாட்டுவதை முதலில் நிறுத்து தேன்மொழி. அது உண்மை. நம்புவதும் நம்பாததும் உன் இஷ்டம்...''

''எப்படிதான் இப்படி எல்லாம் நடிக்க முடியுமோ?''

''முதலில் பொய் சொன்னேன் என்றாய். இப்போது நடிக்கிறேன் என்கிறாய். வாட் இஸ் ராங் வித் யு தேன் மொழி?''

''எனக்கு பிடிக்காத காரியத்தை நீங்க செய்ததே இல்லையா? டாமிட். இப்ப இந்த வீட்டில் நான் இருப்பதற்கு காரணமே நீங்க தான்...''

''இல்லை தேன்மொழி. நீ இந்த வீட்டில் இப்ப இருப்பதற்கு காரணம் நான் இல்லை. நீதான். எனக்கு பிடிக்குதோ பிடிக்கலையோ, உங்க அப்பா நம் திருமணத்திற்கு கேட்ட போது என் மறுப்பைத் தெளிவாகச் சொல்லி

விட்டேன். அதன் பிறகு நம் கல்யாணம் நடந்ததற்கு, அது முடிவானதற்கு நீதான்... நீ மட்டும் தான் காரணம்...''

''மேகா மாதிரி ஒரு பெண் தற்கொலைக்கு முயற்சி செய்யும் போது... தங்கைக்கு கல்யாணம் பண்ணிட்டு தான் நான் கல்யாணம் பண்ணிக்குவேன் என்று ஒருத்தர் அடம் பிடிக்கும்போது... என்னை வேறு என்ன பண்ணச் சொல்றீங்க? அதுவும் உங்க அம்மா மாதிரி ஒரு இன்னசென்ட்டான நல்ல மனிதர், கேட்கும்போது...ப்ச்... ஐ வாஸ் ஹெல்ப்லெஸ்...''

''ஓ! இந்த திருமணம் நடந்ததில் உனக்கு சம்மதம் இல்லையா?''

''எவ்வளவு சீக்கிரம் என் சம்மதம் கேட்டுட்டீங்க தமிழ்?''

''சாரி. உனக்கும் என்னைப் பிடித்து இருக்கு என்ற நம்பிக்கைமிலேயே இத்தனை நாள் இருந்து விட்டேன். இப்பச் சொல்லு. உ..ன..க்..கு எ..ன்..னை பி..டி..க்..க..லை..யா?''

''பி..டி..க்..க..லை...''

''தேன்மொழி...!'', என்று அதட்டியவன் குரலில் அதிர்ச்சி இருந்தது.

''தேன்மொழி. என்னைப் பார்த்துச் சொல்லு. என்னிடம் என்ன பிடிக்கலை?''

''...''

''பேசாமல் இருந்தால் என்ன அர்த்தம்? இவ்வளவு தூரம் வந்தாச்சு. முழுசும் தெரிஞ்சுக்கறேன். சொல்லு என்னிடம் என்ன பிடிக்கலை...''

''நீங்க உங்க அம்மா, உங்க வேலை, உங்க பொழுது போக்கு. உங்க ஆசைகள், என்று எல்லாமே உங்க

இஷ்டத்துக்கு நடக்கணும் என்று எதிர்பார்ப்பது எனக்குப் பிடிக்கலை...''

''உன் விருப்பத்துக்கு மதிப்பு கொடுத்து, என் இஷ்டத்தை தள்ளி வச்சு, 'நான் வேறு ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன். அதனால் உன்னைக் கல்யாணம் பண்ணிக்க முடியாது என்று உங்க அப்பாவிடம் பொய் சொன்ன என்னைப் பார்த்து இந்த வார்த்தை சொல்றது கொஞ்சம் கூட நல்லா இல்லை...''

''நீங்க அப்பாவிடம் பொய் சொன்னீங்களா?''

''உங்க வீட்டுக்கு நானும் அம்மாவும் வந்து இருந்த போது, உன்னைக் கல்யாணம் பண்ணிக்க இஷ்டமா என்று உங்க அப்பா கேட்ட போது, நான் வேறு ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன் என்று சொன்னது வேறு என்ன என்று நீ நினைக்கிறாய்?''

'அங்கிளிடம் சொன்னது பொய் இல்லை' என்று உங்க அம்மாவிடம் அன்று மாலையே சொல்லி இருக்கீங்க. பானும்மா ஏற்கனவே சொல்லிட்டாங்க. இப்ப அப்பாவிடம் பொய் சொன்னதா சொல்றீங்க. நீங்க பானும்மாவிடம் சொன்னதற்கு பெயர் என்ன?''

''நான் உங்க அப்பாவிடம் சொன்னது... என் அம்மாவிடம் சொன்னது ரெண்டுமே அந்தந்த சூழ்நிலையை பொறுத்து உண்மை தான்...''

''தமிழ்... போதும்... ஏன் இப்படி குழப்புறீங்க? நீங்க அப்பாவிடம் பொய் சொல்லலை. உங்க அம்மாவிடம் ஏற்கனவே பொய் சொல்லி இருக்கீங்க. இப்ப என்னிடம் சொல்றீங்க...''

''அதுக்கு என்ன அவசியம் தேனு?''

''வேறே வழி இல்லாமல் என்னுடன் வாழத்தான்...''

''என்னை கையை காலை கட்டி மணமேடைக்கு யாரும் அழைத்து வரவில்லை தேன்மொழி 'வேறே வழி இல்லாமல் வாழ...', என்ற குற்றச் சாட்டை சொல்வது என்றால் நான்தான் உன்னைப் பார்த்துச் சொல்ல வேண்டி இருக்கும்...''

''நீங்க என்ன சொல்றது? நானே சொல்றேன். எனக்கு இஷ்டம் இல்லாத கல்யாணம் தான் இது. அதுல என்ன சந்தேகம்?''

''தேன்மொழி, கோபத்தில் வார்த்தைகளை கொட்டாதே. இப்ப எதுக்கு இப்படி எல்லாம் பேசுகிறாய்? என்ன கோபம் உனக்கு?''

''நீ காதலிப்பவனை அடைந்தால் அதிர்ஷ்டசாலி. உன்னை காதலிப்பவனை கை பிடித்தால் புத்திசாலி. நீ புத்திசாலி என்று நினைத்தேன். இப்படி சொதப்பிட்டியே என்று அந்த ராஜேஷ் இன்று என்னை பார்த்து கேட்கிறான்...''

''ராஜேஷ்... அது யாரு?''

''அது கூடத் தெரியாதா? இன்று காலேஜில் உங்களுக்கு அறிமுகப்படுத்தி வைக்கவில்லை? ஹும்! அவன் ஏற்கனவே சொன்னான். நான் சொல்லும், என்னுடன் சம்பந்தப்பட்ட எந்த விஷயமுமே உங்களுக்கு ஒரு பொருட்டில்லை. அது உங்கள் நினைவில் இருக்காது. என்னை பிடித்தால் தானே, நீ சொல்லும் விஷயங்கள் மனசில் நிற்கும் என்று அவன் சொன்னது சரியாத் தான் இருக்கு...'', என்று வெடித்தவளின் கண்ணில் நீர் நிற்கவா? வெளியே வரவா என்று தத்தளித்தது.

''என்ன சொன்ன?'', என்று ஆத்திரமாகக் கேட்ட தமிழின் குரல் ஒரு கணம் அவளை தயங்க வைத்தது.

''அந்த கன்றாவியை ஒரு தரம் சொன்னால் புரியாதா? உங்களுக்கு காது கேட்காதா?'', என்று சொல்ல அவன் ஒரு ஆத்திர பெருமூச்சுடன் தன் தலையை கோதி கொண்டான்.

''நான் உன்னை விரும்பியும் கூட உனக்காக உங்க அப்பாவிடம் வேறு ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன் என்று பொய் சொன்னேன் என்று நான் சொன்னதை நீ நம்பத் தயாரில்லை.

''உனக்கு என்னை விட, என் வார்த்தையை விட, அந்த ராஜேஷ் சொன்ன வார்த்தை பெரிதாக போய் விட்டதா?''

''ஷட் அப் தமிழ்! என் பொறுமையை ரொம்ப சோதிக்கிறீங்க. எனக்கு மட்டும் உங்க வார்த்தையை நம்பக் கூடாது என்று வேண்டுதலா? நீங்க தான் முக்கியம். உங்க சொல் தான் வேதம் என்று ஒரு நாளைக்கு எத்தனை தடவை எனக்கு நானே சொல்லிக் கொண்டேன் தெரியுமா? அது எல்லாத்தையும் தாண்டி, கல்யாணம் நிச்சயம் ஆன நாளில் இருந்து இன்று வரை...'', என்று ஆரம்பித்தவள், பேச்சை நிறுத்தினாள்.

''ஒரே ஒரு வார்த்தை... உன்னை எனக்குப் பிடிச்சு இருக்கு என்று சொல்லி இருப்பீங்களா? அதை எதிர் பார்த்து எத்தனை நாள் ஏமாந்தேன்'', என்று சொல்ல வாய் எடுத்தவள், பேச்சை நிறுத்தினாள். அவன் இன்னும் வாய் திறந்து தன் மனதை சொல்லாத போது, அதுவும் என் மனதில் தான் இருக்கிறோமா என்பதே சந்தேகமாக இருக்கும் போது, அந்த வாக்கியத்தை சொல்லி, தன்னை

தானே தாழ்த்திக் கொள்ள விரும்பாததால், முகத்தை வேறு புறம் திருப்பி தன்னை தானே நிதானப்படுத்திக் கொள்ள முயன்றாள்.

''எனக்கு உன்னைப் பிடிக்கும் என்பதை நீ நம்பத் தயாரில்லை அப்படித்தானே?''

''எதை வச்சு நம்பச் சொல்றீங்க? உங்களை கல்யாணம் பண்ணிக்கக் கேட்டது உங்க அம்மா நம் கல்யாணம் முடிவான தினத்தில், என்னை விட்டுட்டு, எங்க அண்ணன், அவன் கல்யாணம் பண்ணிக்கப் போகும் பெண், அவளோட பாட்டி, என்று ஒரு பட்டாளத்தையே கூட்டிட்டு போய் ஐஸ்க்ரீம் வாங்கி தரீங்க...''

''அது எந்த குழ்நிலையில் எப்படி போனோம் என்பதை நான் உன்னிடம் ஏற்கனவே சொல்லி இருக்கேன்...'', என்று அவன் இடைமிட்டது அவள் காதுகளை எட்டவே இல்லை.

''... கல்யாணம் நடந்த அன்று, என்னை தவிர வேறே பெண்களுடன் உங்க முதலாளி அம்மாவை பற்றி ஜோக் அடித்து சிரித்ததும் இல்லாமல், அவங்களுக்காக, நம் கல்யாண நாள் இரவன்று என்னுடன் சண்டை போட்டீங்க. அதுக்கு அடுத்த நாள், அவங்க சொன்னாங்க என்று அந்த ராத்திரியில், ஏர்போர்ட் போனீங்க...''

''கடவுளே! பேசி முடிந்து போன விஷயத்தை மறுபடி ஏன் தேன்மொழி இப்போது தூசி தட்டுகிறாய்?'', என்று அவன் சலித்தது அவளை சென்றடையவில்லை.

''... எங்க வீட்டுக்கு விருந்துக்கு கூப்பிடுறாங்க என்று நான் சொன்ன பிறகும், அவங்க வீட்டுக்கு விருந்துக்கு போகலாம் என்று என்னுடன் சண்டை பிடித்தீங்க.

மற்றவர்களை விட நான் உங்களுக்கு ஸ்பெஷல் என்று குறிப்பிட்டு சொல்ற மாதிரி... இந்த மூன்று வாரத்தில்... ஒரே ஒரு இன்சிடென்ட் உங்களால் சொல்லிக் காட்ட முடியுமா?'', என்று தன் போக்கில் பேசிக்கொண்டே போனவளை பார்க்கப் பார்க்க பொறுமை பறந்துப் போனது.

''இந்த மூன்று வாரத்தில் நான் உனக்காக ஒன்றுமே செய்ததில்லை என்றே வைத்து கொள்வோம். அதனால் இப்போது என்ன சொல்ல வருகிறாய்?''

''என் கேள்விக்கு பதில் சொல்லாமல் எதிர் கேள்வி கேட்கறீங்க. ஒரு பதில் சொல்ல முடியவில்லை. நான் மட்டும் முட்டாள் மாதிரி... உங்களை நினைத்து... இன்றைக்கு கூட...'', என்றவளின் கட்டுப்பாட்டை மீறி குரல் கலங்க அவன் அவளை நெருங்கினான்.

''ஷ்! தேன்மொழி... நீயா கண்டதையும் கற்பனை பண்ணிக்கொண்டு, உன் மனசையும் நோகடித்து என்னையும் தவிக்க விடுகிறாய். நான் சொல்றதை கொஞ்சம் கேளேன்...'', என்று அவளின் கண்ணீரை துடைக்க முயன்றவன் கைகளை தட்டி விட்டாள்.

''டோன்ட் டச் மீ. உங்களை நான் காலேஜிற்கு எதற்கு அழைத்து போனேன் தெரியுமா? எனக்கு கல்யாணம் ஆகி விட்டது என்பதையே நம்ப மறுத்து அந்த ஸ்டுப்பிட் ராஜேஷ் மண்டையில உரைக்கிற மாதிரி சொல்லனும் என்று அவனிடம் நாம் லவ் மேரேஜ் செய்து கொண்டோம்...'', என்று சொல்லும் போதே குரல் திக்கியது. தொண்டையை செருமி சுதாரித்து தொடர்ந்து பேசிய அந்த சின்ன இடைவெளியில், அவள் கண்ணீரோடு சொன்ன லவ் என்ற வார்த்தை காணாமல் போய் விட்டது.

''என்னைக் கல்யாணம் செய்து கொண்டதை வெளியில் சொல்ல இவ்வளவு துக்கமா? அதுவும் அவன் சொன்ன ஒரு வார்த்தைக்காக, தன்னை இரண்டு மணி நேரமாக இப்படி வாட்டி வதைக்கிறாளே?''

''... உங்களுக்கு தெரிந்ததெல்லாம்... உங்க வேலை... உங்க அம்மா... அவங்க சந்தோஷம்... இது மட்டும் தான்...''

''நான் எங்க அம்மா சந்தோஷத்திற்காக பாடுபடுகிறேன் என்பது உண்மை. ஆனால் அதற்காக உன் சந்தோஷத்தை விலக்கி வைக்க ஒரு போதும் நினைத்ததில்லை.''

''என்னைப் பற்றி... என் சந்தோஷத்தைப் பற்றி என்ன நினைத்தீர்கள்?'', என்ற அவளின் பொறுமை இழந்த கேள்வியில் என்று விளக்கம் கொடுக்க ஆரம்பித்தவன் பொறுமை எல்லையை தொட, பேச்சு முறையை மாற்றினான்.

''அதுல என்ன தப்பு? நீ உங்க அப்பாவோட சந்தோஷத்தை கெடுக்கக் கூடாது என்பதற்காக தானே, அவரிடம் முகத்திற்கு நேரே என்னை மறுக்க முடியவில்லை என்று என்னிடம் வந்தாய்? உனக்கு ஒரு நியாயம் எனக்கு ஒரு நியாயமா? ஆல்ரைட். நடந்தது நடந்து முடிந்து விட்டது. இனி என்ன செய்வதாக உத்தேசம்?''

''என்ன செய்ய முடியும்? இத்தனை நாளும் நான் எங்க அப்பா அம்மா அவங்க சந்தோஷம்... குடும்ப கௌரவம் என்ற பல தளைகளால் கட்டப்பட்டு இருந்தேன். இன்னும் எத்தனை காலமோ... தொடரும் வரைக்கும் தொடரட்டும்...''

''அவ்வளவு சிரமப்பட்டு நீ இந்த பந்தத்தை தொடர தேவை இல்லை. எனக்கு எப்போதுமே அதிர்ஷ்டம் குறைவுதான் தேன்மொழி. இன்னும் ஒரு வருஷம் போகட்டும். பரஸ்பர சம்மதத்தின் பேரில் உனக்கு விவாகரத்து வாங்கித் தர ஏற்பாடு செய்கிறேன். அதுவரை பொறுத்துக் கொள். நான் ஸ்விம்மிங் பூல் போகிறேன். ரெண்டு மணி நேரம் கழித்து வருகிறேன்...'', என்று வெளியேறிய தமிழை பார்த்தபடி திகைத்து நின்றாள் தேன்மொழி.



''கதவை சாத்திக்கோ! நான் நீச்சல் குளத்திற்கு போய் விட்டு இரண்டு மணி நேரம் கழித்து வருகிறேன்'', என்று தமிழ் சொன்ன வாக்கியம் தேன்மொழியின் மூளையில் பதியவே இல்லை. அதற்கு முன் அவன் சொன்ன, 'ஒரு வருடம் கழியட்டும். பரஸ்பர சம்மதத்தின் பேரில் உனக்கு விவாகரத்து வாங்கித் தருகிறேன்', என்ற வாக்கியத்தையே மனம் சுத்திச் சுத்தி வந்தது.

'என்னையா விவாகரத்து செய்கிறேன் என்று சொன்னான்? அவ்வளவு தூரம் என்னைப் பிடிக்கவில்லையா? அப்படி நான் என்ன தவறு செய்து விட்டேன்? தப்பு செய்தது எல்லாம் இவன்! பார்த்த முதல் நாளிலேயே, காமராவில், விதம் விதமான இளம் ஜோடிகளின் புகைப்படத்தை வைத்து பார்த்து ரசித்துக் கொண்டு இருந்தது இவன்! அப்பாவிடம் இன்னொரு பெண்ணை காதலிக்கிறேன் என்று சொன்னவன் இவன்!

யார் அந்த பெண் என்று கேட்ட போது தன்னிடம் மழுப்பியவன், அம்மாவிடம் தான் உண்மையை

சொன்னதாகச் சொல்லி இருக்கிறான். இப்போ ரெண்டு பேரிடமும் சொன்னது நிஜம் என்று கதை அளக்கிறான். இவன் சொல்வதில் எது நிஜம்? எது பொய்? அந்த ராஜேஷை நோல்கட் பண்ண இவனை அழைத்து போனாள். இன்று என் வாழ்க்கையை கேள்விக் குறி யாக்கி விட்டானே?

இவனைபோ லவ் பண்ணிக் கல்யாணம் பண்ணிக் கொண்டாய்? உனக்கும் அவனுக்கும் லவ் என்றால் என்ன அர்த்தம் என்று தெரியுமா என்று அவள் கேட்ட கேள்விகளில் ஒன்றுக்கு கூட அவனின் மூக்கை உடைக் கிற மாதிரி ஒரு பதில் சொல்ல முடியவில்லையே? அவன் தன் ஆசை நிறைவேறாத ஆத்திரத்தில் பேசு கிறான் என்று எவத்துக் கொண்டாலுமே, இவன் தனக் காக என்ன செய்து இருக்கிறான்.

அம்மாவுக்கு... அப்பாவுக்கு... பாலாவுக்கு... மேகா வுக்கு... என் அருகில் வசிக்கும் தியாகராஜனுக்கு என்று யார் யாருக்கோ... என்ன என்னவோ உதவிகள் எல்லாம் செய்பவன் தனக்காக இன்று வரை ஒரு துரும்பை கூட கிள்ளிப் போட்டதே இல்லை என்ற உணர்வு வந்து அவளின் தொண்டையை அடைத்தது. கண்களில் கண்ணீர் நீர் பெருக்கெடுத்தது.

கன்னத்தை மறைத்த கண்ணீரிலும், தொண்டையை அடைத்த துக்கத்திலும், படுக்கை அறையில் குப்புறப் படுத்து விம்மிக் கொண்டு இருந்த தேன்மொழியின் காதுகளில் பக்கத்து அறையில் இருந்தும் விடாமல் விஜயகுமார், பூங்கோதை, பானுமதி என்று மாறி மாறி வீட்டு லேண்ட் லைனிலும், தமிழ், தேன்மொழி இருவரின் மொபை லிலும் மாறி மாறி அழைத்த அழைப்புகள் விழவே இல்லை.

அரை மணி நேரமோ... ஒரு மணி நேரமோ... கழித்து, "வாங்க வாங்க...", என்ற தமிழின் உற்சாகமான குரல் ஒலிக்க வேகமாக எழுந்தாள் தேன்மொழி. வீடு தாழ் போட்டு இருந்ததே? இவன் எப்போ எப்படி உள்ளே வந்தான் என்று யோசித்தவளுக்கு சில கணங்கள் கழித்து மீண்டும் அதே குரல் ஒலிக்கும் போது தான், அது அழைப்பு மணி ஓசை என்பது உறைத்தது.

'அவனாக இருக்கலாம். தன்னை வேண்டாம் என்று சொன்னவனிடம் தான் அழுததை காண்பிக்கத் தேவை இல்லை', என்று வேகமாக முகத்தை அழுந்தத் துடைத்து விட்டு, கதவை திறந்தவள் அங்கே நின்று இருந்த லக்ஷ்மி அம்மாவை கண்டு திகைத்தாள்.

"ஹலோ... ஆன்ட்டி... நீங்க... அங்கிள் டிஸ்சார்ஜ் ஆகி விட்டாரா?", என்று திணறலுடன் விசாரித்தவளுக்கு அவர் கொடுத்த பதில் அவளை ஆச்சரிய கடலில் மூழ் கடித்தது.

* * *

வீட்டில் இருந்து வேகமாக வெளியே வந்தவன், அப் படியே தண்ணீரில் குதித்தான். வேறு எதையும் நினைக்கக் கூடாது என்ற முடிவோடு, கையும் காலும் அசந்து போகும் வரை அரை மணி நேரம் நீந்தியவன் களைப்பை உணர்ந்த பின்னரே, ஆழம் குறைவான குழந்தைகள் பகுதிக்கு வந்து சம்மணமிட்டு அமர்ந்தான். தலையை சாய்த்து கண்களை மூடியவன் மனதில் மாலை நேர வாக்குவாதம் படமாக ஓடியது.

என்னை பார்த்து பொய் சொல்கிறேன் என்று சொல்லி விட்டாளே? என் வார்த்தையை நம்ப முடியாதா? அவன் சொன்னது ஒரே ஒரு பொய் தான். அது கூட அவளுக் காகத் தானே சொன்னான்? இருந்தாலும் கடைசியில்

அவளை விவாகரத்து செய்கிறேன் என்று சொல்லி இருக்கக் கூடாது என்று மூளை இடித்தாலும் அவனுக்கு எரிச்சலும் வந்தது.

சின்னக் குழந்தை மாதிரி மற்றவர்களுக்கு ஐஸ் க்ரீம் வாங்கி கொடுத்ததை எல்லாம் சொல்லிக் காட்டு கிறாளே? இப்படி இருந்தால் எப்படி தன்னால் வேலை பார்க்க முடியும்? யார் அந்த ராஜேஷ்? அந்த முட்டாளின் முகத்தை கூட நினைவு கூர முடியவில்லை. அவன் தன்னை நேருக்கு நேர் சந்தித்தானா என்பதே அவனுக்கு சந்தேகமாக இருந்தது. யாரையும் கடிந்து பேசக்கூடாது என்று நினைப்பவனாச்சே? தன்னை பிடிக்காதவர் கூட இருக்க முடியுமா?

அவளை விட்டுத் தள்ளு. அவன் மனைவிக்கே அவனைப் பிடிக்கவில்லை. தான் சொல்வதை ஏன் நம்ப மாட்டேன் என்கிறாள்? அந்த லூசு என்ன அவளிடம் உளறி வைத்தானோ? என்னவோ சொன்னாளே! உன்னை காதலிப்பவன்... நீ காதலிப்பவன்... அதிர்ஷ்ட சாலி... புத்திசாலி... என்று நினைத்தேன் சொதப்பி விட்டாய்... என்று என்னென்னவோ உளறினானே? என்று ஓடிய சிந்தனை அங்கே ப்ரேக் அடித்து நின்றது.

"நீ காதலித்தவனை கல்யாணம் செய்து கொண்டால் அதிர்ஷ்டசாலி. உன்னை காதலிப்பவனை கல்யாணம் செய்து கொண்டால் புத்திசாலி. இது பழமொழி. உன்னை புத்திசாலி என்று நினைத்தேன். சொதப்பி விட்டாயே என்று சொன்னால், என்ன அர்த்தம்?

அவனை ஒதுக்கியது தனக்காக என்றால், அவள் தன்னை விரும்புகிறாள் என்று அர்த்தம் வருகிறதே? அவன் யோசிப்பது சரிதானா? ஆசை கொண்ட நெஞ்சம்

கண்டதையும் கற்பனை செய்து கொள்கிறதா? இன்று அவளின் கோபம் முழுவதுமே பொறாமையால், ஆற்றாமையால் வந்தது தான். நீ என்னைக் கவனிக்கவில்லை. உனக்கு நான் முக்கியம் இல்லை என்ற குற்றம் சாட்டும் படலம் தான்.

அப்படி என்றால் அவள் தனக்காக, தன் கவனிப்பிற்காக, அருகாமைக்காக ஏங்குகிறாள் என்று தானே அர்த்தம்? கட்டிய மனைவி என்ன எதிர்பார்க்கிறாள் என்ற இந்த சின்ன விஷயம் கூடப் புரிந்து கொள்ள முடியாமல் நீ என்ன மீடியாவில் கிழிக்கப் போகிறாய்? ஓகே... என்று தன்னைத் தானே திட்டிக் கொண்டு நீச்சல் குளத்தில் இருந்து எழுந்தவன் வேகமாக உடை கூட மாற்றாமல் வேகமாக வீடு நோக்கி நடந்தான்.

வீட்டை அடைய ஆன அந்த மூன்று நிமிடங்களுக்குள் கடந்த மூன்று வாரத்தில் பல்வேறு சூழ்நிலைகளில், அவள் கொஞ்சலாக, கேலியாக, சண்டையாக பேசிய பல வாக்கியங்கள் அவன் நினைவலையில் வந்து முட்டி மோதியது.

"எனக்கு மட்டும் உங்க வார்த்தையை நம்பக் கூடாது என்று என்ன வேண்டுதலா?"

"படிப்பு முடியப் போகுது என்று சுற்றிச் சுற்றி வந்து தொந்தரவு பண்ணும் பலரை விலக்க, உங்களை என் கணவர் என்று எல்லோருக்கும் அறிமுகம் செய்து வைக்க வில்லையா?", என்று தன்னிடம் வாக்குவாதம் செய்தது

"எங்க வீட்டுக்காரர், கை விட்டு போன அவங்க பழைய பரம்பரை சொத்து ஒன்றை வாங்கப் போகிறார் அதைக் கொண்டாடலாமே?", என்று உற்சாகமாக விஜய் அங்கிளிடம் சொன்னது.

''காலேஜுக்கு வர இவ்வளவு யோசிக்கிறீங்க? உங்களை யாரும் அங்கே கடித்து தின்று விடாமல் நான் பார்த்து கொள்கிறேன்...''

''நீங்க மட்டும் தனியா ஹனிமூன் போறீங்களா? போயிட்டு வாங்க. அதுக்கு ஏன் என்னை லீவு போட முடியுமா என்று கேட்கறீங்க?'', என்று கேலியாக தன்னிடமே சொன்னது.

''அன்பா இருந்தாலும் அடக்குமுறையா இருந்தாலும் எதையுமே ஒண்ணுக்கு மூணா திருப்பிக் கொடுப்பது தான் என் பழக்கம். நான் என்ன சொல்லணும் என்று நினைக்கிறீங்களோ, அதை நீங்க சொல்லலாமே?'', என்று தன்னிடம் சவால் விட்டது.

இது எதிலுமே அவள் தன்னை விலக்கி வைத்ததாகத் தோன்றவில்லை. ஹனிமூன் தனியா போங்க என்று தன்னைக் கேலி செய்த போது அந்த முகம் சிவந்தது. இன்னும் கண்களில் நிற்கவில்லையா? அவளுக்குத் தன்னை பிடிக்கவில்லை என்று முட்டாள் மாதிரி என்னென்னவோ கற்பனை செய்து...

ச்டுப்பிட்... என்று தன்னைத் தானே திட்டிக் கொண்டவன் ஈர உடையை கூட மாற்றாமல் படிகளை இரண்டிரண்டாக தாவி ஏறி, வீட்டின் முன்னால் வந்து நின்று மூச்சு வாங்கியவனை பூட்டிய வீடு வரவேற்றது.

வீடு பூட்டி இருக்கிறதே? கோபித்துக் கொண்டு பாலாஜியை பார்க்கப் போய் இருப்பாளோ? ச்சே ச்சே... அந்த மாதிரி எல்லாம் இருக்காது. போன் பண்ணலாமா? அவனுடைய மொபைல் உள்ளே இருக்கு. செக்கியூரிட்டியிடம் கேட்டால், வெளியே போனாளா என்பது தெரியும்.

''நான் ஸ்விம்மிங் பூலில் இருந்தேன். வீடு பூட்டி இருக்கு. தேன்மொழி பார்த்தீங்களா மகாலிங்கம்?''.

என்று பதட்டத்தை மறைத்தபடி காவலாளியிடம் விசாரித்தான் தமிழ்.

''இப்பதான் அவங்க வந்து உங்களை பார்த்தேனா என்று கேட்கறாங்க. நீங்க பின்னாடியே வந்து அவங்களை பார்த்தீங்களா என்று கேட்கறீங்க? நீங்க நீச்சல் குளத்தில் இல்லை என்று சொன்னாங்களே? எங்கே இருந்தீங்க?'', என்று அவன் கேட்டதற்கு பதில் சொல்லாமலேயே குளத்தை நோக்கி ஓட்டமும் நடையுமாக செல்ல ஆரம்பித்தான்.

* * *

''எனக்காக இது வரை என்ன செய்தாய்?'', என்று அவனைப் போட்டுத் துளைத்து எடுத்து இருக்க வேண்டாம். அந்த மடையன் ஏதோ சொன்னால் தனக்கு புத்தி எங்கே போயிற்று? தமிழ் சொன்ன காரணம் நிஜமோ பொய்யோ, தான் சொன்னதற்காக திருமணத்தை மறுத்தது உண்மை தானே?

லஷ்மிம்மா வந்து அவன் தனக்காக ஒரு காரியம் செய்தான் என்று சொல்ல வேண்டியது அவசியமா? என் கணவனைப் பற்றி எனக்கே தெரிய வேண்டாமா? பானும்மா வளர்த்த பையன் எப்படி இருப்பான் என்ற எண்ணம் வேண்டாமா? அம்மாவை மதிக்கும் ஒருவன் மனைவியை மதிக்காமல் எப்படி இருப்பான்? அப்பாவிடம் பொய் சொன்னேன் என்று அவன் சொல்வதை ஏற்றுக் கொள்ள விடாமல் தடுப்பது எது? பொறாமையா?

''உன் கோபத்தை இழுத்து பிடித்து வைத்துக் கொள்ளாமல் உடனுக்குடன் சமாதானத்திற்கு வரும் உன்னுடைய இந்த குணம் எனக்கு ரொம்பப் பிடித்து இருக்கு என்று ஏற்கனவே சொல்லலையா? நிமிஷத்துக்கு ஒரு தரம் 'ஐ லவ் யு' என்று ஷோ பண்ண இது

என்ன கதையா சினிமாவா? ஸ்டுப்பிட் தேனு நீ", என்று தன்னைத் தானே கடிந்தபடி நீச்சல் குளத்தை வந்து அடைந்தவள் திகைத்தாள்.

இங்கேதானே வருகிறேன் என்று சொன்னான்? காணோமே? எங்கே போய் விட்டான்? வெளியே போவதற்கான உடை கூட அணியவில்லையே? ஷார்ட்ஸ் மட்டும் தானே போட்டு இருந்தான்? கடவுளே!

காவலாளியிடம் விசாரித்தால், 'இந்த வாசல் வழியாக போகலைம்மா? நீச்சல் குளத்தின் பின்னால் ஒரு கேட் இருக்கு. அது வழியா போனாரா என்று எனக்குத் தெரியாது. உங்களிடம் சொல்லலையாம்மா? அய்யாவுக்கு போன் பண்ணிப் பாருங்களேன்', என்று இலவசமாக அட்வைஸ் மழை பொழிய அவளுக்கு தொண்டைக்குள் பயப்பந்து உருண்டது.

ஏற்கனவே அப்பா நான்கு மிஸ்ட் கால் விட்டாச்சு. பானும்மா பேசியாச்சு. கீழே போய் இருக்கிறான் என்று கதை சொன்னதை பானும்மா நம்பத் தயாராக இல்லை. உன்னைத் தனியா விட்டுட்டு அவனுக்கு கீழே என்ன வேலை? குரல் என்மா ஒரு மாதிரி இருக்கு? சாப்பிட்டாச்சா? என்று ஆயிரம் விசாரணை ஏற்கனவே நடந்தாச்சு.

இன்னும் சில நிமிடங்களில் மீண்டும் அழைப்பு வரும். அவன் எங்கே என்று கேள்வி வருமே? எவ்வளவு நேரம் தவிர்க்க முடியும்? எங்கே போய் விட்டான்? இதுவரைக்கும் அவன் இவ்வளவு கோபமாக வெளியே போனதில்லையே? என்ற யோசனையில் மூழ்கியபடி நடந்தவள் கண்ணில், நீச்சல் குளத்தை ஒட்டிய அலமாரியில் அந்த அடர் நீல நிற டர்க்கி டவலும், ஒரு செட் ட்ரெசும் மடிப்பு கலையாமல் இருந்தது பட்டது.

ஏற்கனவே ஒரு நாள் இங்கே வந்த போது, நீச்சல் குளத்தில் இருந்து ஈரம் சொட்டச் சொட்ட அருகில் அமர்ந்து வம்பிழுத்தது நினைவில் வந்து கண்ணில் நீர் கோர்த்தது. கண்கள் தானாக நீச்சல் குளத்தை நோக்கி நகர்ந்தது. எதிர் முனையில் அவனுடைய காலணி இருந்தது. செருப்பு கூட போடாமல் அவன் வெளியே போய் இருக்க முடியாதே? இங்கே எங்கேயோதான் இருக்க வேண்டும்.

"தமிழ்... தமிழ்... தமிழ்...", என்று முதலில் மெதுவாக ஆரம்பித்த குரல் ஒவ்வொரு அழைப்பிற்கும் ஒலி சற்றே உயர்ந்தது. கண்கள் சுற்றுப்புறத்தை வேகமாக அலசியது. இது என்ன? நீச்சல் குளத்தின் ஒரு பக்க சுவற்றில்... சிவப்பாக... கொழ கொழப்பாக... ஏதோ வடிந்து கடவுளே! தண்ணீர் கூட கலங்கலாக...

"தமிழ்...", என்று உச்ச கட்ட அலறலுடன், தண்ணீரில் கால் நனைக்கக் கூட கடலுக்கு வர மாட்டேன் என்று பிடிவாதம் பிடித்த, பயம் என்று நான் சொன்னேனா என்று வாக்குவாதம் செய்த, நீச்சல் எனக்கு தெரியாது என்ற ஜாடையில் தமிழிடம் சொல்லி இருந்த தேன்மொழி, "தமிழுக்கு என்ன ஆயிற்றோ?", என்ற ஒரே ஒரு கேள்வி கொடுத்த பதட்டத்தில் பழசை எல்லாம் மறந்து, நீச்சல் குளத்தின் பத்தடி ஆழமுள்ள அந்த பகுதியில் அவசரமாக குதித்து இருந்தாள்.



தேன்மொழி பிளாட் வளாகத்தை விட்டு வெளியே போகவில்லை என்பதை உறுதி செய்து கொண்ட தமிழ் மீண்டும் ஓட்டமும் நடையுமாக நீச்சல் குளம்

இருக்கும் இடத்திற்கு சுமார் நூறடி தூரத்தில் வரும் வழியில், 'தமிழ்...', என்ற அலறலும், 'ப்ளக்...', என்ற சப்தத்துடன் யாரோ தண்ணீரில் குதிக்கும் ஓசை கேட்க நீச்சல் குளத்திற்கு ஓடி வந்தான்.

மங்கிய வெளிச்சத்தில் கூர்ந்து பார்த்தவனுக்கு, தேன்மொழி தெரிய மேலும் பதட்டம் கூடியது. இவள் ஆழம் கூடிய அந்த பகுதிக்கு ஏன் சென்றாள்? நீச்சலும் தெரியாதே!

''தேனு...'', என்ற அலறலுடன் நீருக்குள் பாய்ந்தவன், இருபது வினாடியில், அவளை எட்டி பிடித்து, தோளோடு சேர்த்து அணைத்து தூக்கி, நீச்சல் குளத்தின் பக்கவாட்டு தரையில் கிடத்தும் முன்பே, மூக்கு வழியாகவும், வாய் வழியாகவும் தேவைக்கும் அதிகமாகவே நீச்சல் குளத் தின் தண்ணீர் உள்ளே போய் இருந்தது.

''தேனு... தேனு... கண்ணை முழிச்சுக்கோ தேனு...'', என்று பதட்டத்துடன் மீண்டும் மீண்டும் அவளின் கன்னத்தில் தட்டியவனுக்கு, அவளிடம் அசைவில்லா தை உணர்ந்ததும், பதட்டம் மேலும் கூடியது. ஒரு நிமிடம் அவள் தண்ணீரில் இருந்து இருக்கலாமா? அதற்குள் எவ்வளவு தண்ணீரை குடித்து இருக்க முடி யும்? அவளை குப்புறப் படுக்க வைத்து முதுகில் அழுத்தி, உள்ளே சென்ற தண்ணீரை வெளியேற்ற முயன்றான். அவளிடம் அசைவு தெரிந்தது.

''தேனு... தேன்மொழி... கண்ணை திறந்து பாருடா...'', என்ற தமிழின் குரல் கேட்டதும், மெல்ல கண் விழித் தவளின் கண்களில் பிரகாசம்! அவசரமாக கையை உயர்த்தி, அவன் கன்னத்தை ஒரு கையால் வருடி, ''த..மி..ழ். உங்களுக்கு ஒன்றும் ஆகலையே?'', என்று விசாரித்தவள் குரல் காதலில் குழைந்து உருகியது.

''எனக்கென்ன! நான் நல்லாத்தானே இருக்கிறேன். நீ ஏன்டா தண்ணீரில் குதிச்ச?'', என்று அவளை தன் னோடு சேர்த்து அணைத்துக் கொண்டவன், அக்கறை யோடு விசாரித்தான்.

''அங்கே ஸ்விம்மிங் பூல் சுவற்றில் சிவப்பாய்...'', என்று அவன் மார்பில் இருந்து நிமிர்ந்தவளின் கண்கள் அவனை தலை முதல் கால் வரை இரண்டு முறை பயணம் செய்து காயம் எதையும் காணாமல் குழம்பியது.

''ஏன் தண்ணீரில் குதிச்ச என்று கேட்டேனே? பதிலே சொல்லாமல் அப்படி ஆச்சரியமா பார்க்கிறாய்?''

''தமிழ்... நீங்க... நான்... செருப்பு... சிவப்பா... ரத்தம் மாதிரி...'', என்று தொடர்ச்சி இல்லாமல் ஒவ்வொரு வார்த்தையாக திணறலாக பேசியவளின் கண்கள் நீச்சல் குளத்தை அலசியது.

தலையில் அடிபட்டு இருக்கா என்ன? இப்படி சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் பேசுகிறாளே? அவள் என்ன பேசுகிறாள் என்பது புரியாமல், ''தேனு... ஆர் யு ஓகே?'', என்று குழப்பத்துடன் கேட்டான் தமிழ்.

''ம்ம்ம்...'', என்று முனகலாக சொன்னவள் நீச்சல் குளத்தின் அருகே சென்று, முதலில் அவளை கலவரப் படுத்திய சிவப்பு நிறத்தில் கொழகொழப்பாக வடிந்து இருந்த இடத்தை சென்று பார்த்தாள். அவளை கண்ணாலேயே தொடர்ந்தவனுக்கு, அங்கே இருந்த சிவப்பு கறையை பார்த்ததும் என்ன நடந்து இருக்கும் என்பதை புரிந்து கொள்ள முடிந்தது.

டுமேட்டோ சாஸ். மாலை வேளையில் குழந்தைகள் சேண்ட்விச் சாப்பிட்டு இருக்கும் சாஸ் வழிந்த இடத்தை பார்த்து... ரத்த கறை என்று குழம்பி... முகத்தில் பெருமித

குனிந்து அந்த [illegible] கொண்டு இருந்தவளின் தோளைப் பற்றி, ''அந்த கறையை பார்த்து எனக்கு என்னவோ ஆகிடுச்சு என்று பயந்து விட்டாயா ஹனி?'', என்று கனிவான குரலில் கேட்டவன் கைகள் அவளின் இடுப்பை சுற்றி படர்ந்து அருகே இழுத்தது.

''நான் உங்களை தேடி வந்தேன். அங்கே செருப்பு தனியாக இருந்தது. இங்கே இந்த கறை பார்த்த உடனே... பயந்து போய்...'', என்று அவள் கண்களில் இன்னமும் அந்த பதட்டம் மிச்சம் இருக்க திணறலாக அவள் பேச பேச, அவனின் புன்னகை விரிந்தது.

''பயந்து போய்...'', என்று புன்னகையோடு தமிழ் ஊக்க, ''உங்களுக்கு அடிபட்டு விட்டதோ என்று...'', என்று மீண்டும் ஆரம்பித்தவள் அவள் கண்ணிலும் முகத்திலும் தெரிந்த பிரகாசத்தை கண்டு குழம்பி பேச்சை நிறுத்தினாள்.

''எனக்கு அடிபட்டு விட்டதோ என்று... மேலே சொல்லு...'', என்றவன் குரலிலும் சிரிப்பு இருக்க அவள் முகத்தில் சிந்தனை ரேகை ஓடிய சில கணங்களிலேயே அவன் சிரிப்பிற்கான காரணம் புரிந்து விட்டது. தண்ணீரில் அவனுக்கு அடிபட்டது என்ற எண்ணமே தவறு. அப்படியே அடிபட்டு இருந்தாலும், நீச்சலில் தேசிய சேம்பியன் பட்டம் வென்ற அவனை, நீச்சலே தெரியாத தான் எப்படிக் காப்பாற்ற முடியும்?

''சிரிக்காதீங்க தமிழ்... நான் எப்படி பயந்து போயிட்டேன் தெரியுமா?'', என்று கொஞ்சலாக சொன்னவளை மீண்டும் இழுத்து தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டான்.

''ஹய்யோ! இதென்ன இந்த இடத்தில்... இப்படி எல்லாம்... விடுங்க...'', என்று விலக முயன்றவளை

இடுப்போடு சேர்த்து அணைத்தபடி தண்ணீரில் மீண்டும் குதித்தான்.

''விடுங்க...'' என்று அவனின் அணைப்பில் இருந்து விடுபட முயன்றவளுக்கு தண்ணீரை தொடும் வரை வெற்றி கிடைக்கவில்லை. தொட்ட பின்போ, அவனை காக்க வேண்டும் என்று தானாக முன்வந்து தண்ணீரில் குதித்த போது வராத பயம், இப்போது தோன்றி, அவனோடு ஒன்ற செய்தது. விலக முயலவில்லை.

அவளை இடையோடு சேர்த்து அணைத்தபடி ஆழம் குறைவான பகுதிக்கு நீந்தியவன், குழந்தைகளுக்கு இரண்டடி ஆழம் இருக்கும் இடத்தில் அமர்ந்து அவளை இழுத்து அருகில் அமர்த்தினான்.

''ஷ்! சும்மா உட்காரு தேனு. வெளியில் இருக்கும் போது நீ தயங்கியது சரி. அதுக்கு தானே இங்கே வந்தேன். இங்கே நான் உனக்கு ஸ்விம்மிங் சொல்லி தரும் போது தொடுவது சர்வ சாதாரணம். யாரும் எதுவும் சொன்னாலும் அதைப் பற்றி கவலைப்பட வேண்டியதில்லை.''

''ஸ்விம்மிங் இப்போ படிக்கவா...? உங்களோட பேசணும் என்று அம்மா மூணு வாட்டி போன் பண்ணிட்டாங்க. அவங்க ஏதோ முக்கியமான விஷயம் சொல்ல வேண்டுமாம். அதுக்குதான் உங்களைக் கூப்பிட வந்தேன். ஹய்யோ! என் போன்...'', என்று பதறினாள்.

''போனா...! எங்கே வச்ச?''

''ஒரு வேளை நீங்க மேலே வரலை என்றால் இங்கேயே ரெண்டு வார்த்தை பேச சொல்லலாம் என்று கையோடு எடுத்து வந்தேன். இங்கே... ஸ்விம்மிங் பூலில்...'', என்று சொல்லும் போதே அவள் குரலில் இருந்து அசடு வழியும் பாவனை, போனோடு அவள்

தண்ணீரில் குதித்து இருக்க வேண்டும் என்பதையும், அது தண்ணீரில் மூழ்கி செயல் இழந்து இருக்கும் என்பதையும் சொல்ல, அவனுக்கு மேலும் சிரிப்பு பொங்கியது.

''குப்பர் தேனு... ஆக்ஷன் ஸ்பீக் லவுடர் தான் வேர்ட்ஸ் என்ற பழமொழியின் முழு அர்த்தத்தை இன்று, இந்த நீச்சல் குளத்தில் புரிந்து கொண்டேன்...'', என்று பெருமையாக சொன்னவள் அவள் எதிர்பாராத தருணத்தில், ''ம்ம்ம்... ஐ லவ் யு ஹனி...'', என்று அழுத்தமாக சொன்னவன், அவள் புறம் சரிந்து கன்னத்தில் முத்தமிட்டான்.

தமிழ் தன் காதலை சொல்லாலும் செயலாலும் வெளிப்படுத்திய அந்த ஒற்றை வாக்கியம் அவளின் கண்ணில் கோடி நிலவுகள் கூடிய பிரகாசத்தை தோற்றுவித்தது.

''ஹனி... ஹூ இஸ் ஹனி...?'', என்று கொஞ்சலாக கேட்டவளின் முகத்தில் தெரிந்த மலர்ச்சி அவனையும் குளிர்வித்தது.

''என்னுடைய ஸ்வீட் ஹார்ட் ஹனி. யார் என்று உனக்கே தெரியாதா?'', என்று கொஞ்சலாக சொன்னவன், அவளின் மூக்கை பிடித்து செல்லமாக ஆட்டினான்.

''ம்கூம்... ஸ்வீட் ஹார்ட்... ஹனி என்று... இப்ப கொஞ்சுங்க...'', என்று அவள் சலித்து கொள்ள அவளை சேர்த்து அணைத்து கொண்டான்.

''என்ன பண்ண? யார் யாருக்கோ எங்கே எங்கேயோ ஞானம் பிறந்து இருக்கலாம். எனக்கு இங்கே இந்த ஸ்விம்மிங் பூலில் பிறந்தது என்று வச்சுக்கலாம். அது சரி, ராத்திரி ஒன்பது மணிக்கு தனியா இருக்கும் போது

பொண்டாட்டியை கொஞ்சாமல் வேறே எப்போ கொஞ்சனும்?'', என்று கேட்டவனின் கைகள் எல்லை மீறுவதை உணர்ந்து, அவனை தள்ளி விட்டவள், எழுந்து மேலே ஏறி தண்ணீரில் கால்களை நனைத்த படி அமர்ந்தாள்.

''ஒழுங்கா பதில் சொல்லுங்க. எப்ப நம்ம லவ் உங்களுக்கு தெரிந்தது?''

இடது கையால் அவளின் இடையை வளைத்து, வலது கையால் தன் கன்னத்திற்கு முட்டு கொடுத்து, அவளின் மடியில் படுப்பது போல நின்றவன், ''ம்ம்.. நீ என்னை காதலிப்பதா? இல்லை நான் உன்னை காதலிப்பதா? எதை கேட்கிறாய்?'', என்று விளக்கம் கேட்டான்.

''நீங்க என்னை லவ் பண்றீங்க என்று எப்போ உங்களுக்கு தோணுச்சு?'', என்று ஒவ்வொரு வார்த்தையாக அழுத்தம் திருத்தமாக விசாரிக்க அவன் புன்னகை செய்தான்.

''என்னை மடக்கி மடக்கி கேட்கிறாயே? நீ சொல்ல மாட்டியா?''

''எனக்குத் தெரிந்த எல்லா விஷயத்தையும் உடனுக்குடனே சொல்லி விடுவேன் தமிழ். எதையுமே பூட்டி வைக்கும் பழக்கம் என்னிடம் கிடையாது. உங்களை நேசிப்பதையும் நான் உணர்ந்த உடனே உங்களிடமும் சொல்லி விட்டேன்...'', என்று அவள் அறிவிக்க அவன் வியப்புடன் பார்த்தான்.

''இதென்ன புது கதை? என்னிடம் எப்போ சொன்னாய்? ராத்திரி கனவிலா? கனவிலும் நனவிலும் நானேவா?'', என்று கண்சிமிட்டி புன்னகைக்க அவன் கன்னத்தை கிள்ளினாள்.

''ம்கூம்! நினைப்பு தான். தியாகு அங்கிள் ட்ரீட்மெண்டுக்கு நீங்க பணம் கொடுத்துட்டு திரும்பி வரும்போது.

பெருமை எனக்கு தாங்கலை. அப்போ பைக்குல வீட்டுக்கு வரும் போது சொன்னேன். உங்க காதுல விழலை'', என்று சொன்னவளுக்கு தன்னுடைய முதல் காதல் வார்த்தைகள் கணவனைச் சென்று சேராத வருத்தம் வெளிப்பட்டது.

''நான் மட்டும் தான் உன்னிடம் என் மனசை திறந்து காட்ட பல தடவை முயன்று தோற்று இருக்கிறேன் என்ற வருத்தம் இன்று வரை எனக்கு இருந்தது. இப்போ ரெண்டு பேரும் ஒரே மாதிரி தான் என்று தெரிந்த உடனே ஒரு அல்ப சந்தோஷம் வந்துடுச்சு. சேம் பின்ச் ஸ்வீட் தரியா?'', என்று அவள் மார்பில் சாய்ந்தான்.

''இந்த ஸ்வீட்... எல்லாம்... அப்புறம் வச்சுக்கலாம். முதலில் அம்மாவிடம் பேசுங்க'', என்று உறுதியான குரலில் சொல்லி மார்பில் சாய்ந்தவனின் முடியை பற்றி விலக்கி நிறுத்தியவள், தானும் எழுந்தாள்.

''அம்மாவிடம் பேசிட்டு திரும்ப வரலாமா?''

''ம்ஹூம்... இப்ப வேண்டாமே...''

''ஏன் வேறே ஏதாவது முக்கியமான வேலை இருக்கா தேனு?''

''முக்கியமான வேலை எதுவும் இல்லை. ஈர துணியுடன் ராத்திரி நேரத்தில் இருந்தால் சளி பிடிக்காதா? அதனால் பகல் வேலையில் வந்து ஸ்விம்மிங் கற்று கொள்ளலாம். நீங்க ப்ரீயா இருந்தால்...'', என்று ரகசிய குரலில் சொல்லி கண்ணை சிமிட்டினாள்.

''ப்ரீ தான் தேன்மொழி மேடம். உனக்கு ஸ்விம்மிங் கற்று கொடுப்பதை விட வேறே முக்கியமான வேலை எனக்கு என்ன தேனு இருக்கு?'', என்று அவன் சத்தமாக சிரித்தான்.

''கொஞ்ச நேரம் முன்னாடி என்னை கதவை தட்டி பேச வா என்று அழைத்த போது, ''நாளைக்கு டிவி ஸ்டேஷன் போகணும் என்று சொன்ன மாதிரி என் காதில் விழுந்ததே?'', என்று கேலியாக கேட்க, அவனை வேகமாக பின் தொடர்ந்தவனின் சிரிப்பு தொடர்ந்தது.

''சார்... ஒரு நிமிஷம்...'', என்ற காவலாளியின் குரல் கேட்க, இருவரும் நின்று திரும்பினர். ''என்ன மகாலிங்கம்! கையில் என்ன பார்சல்? யார் கொடுத்தா?'', என்று திரும்பிய தமிழ் விசாரித்தான்.

''உங்க வீட்டுக்கு கெஸ்ட் வந்தாங்க சார். ஸ்விம்மிங் பூலில் உங்களை காணோம். அதை கொடுத்துடுங்க என்று சொல்லி போனார்...'', என்று கையில் இருந்த கவரை நீட்ட இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். குழப்பத்தோடு கவரை வாங்கியவன் உள்ளே பார்த்தான்.

''அவசரமான முக்கிய செய்தி எதுவுமே இல்லை. அம்மா பார்க்க சொல்லி வந்தேன். உங்களின் தனிமையை வெனிலா ஐஸ்க்ரீமின் இனிப்புடன் குதூகலமாக கொண்டாடுங்க'', என்று ப்ரிஸ்க்ரிப்ஷன் பேட் பேப்பரில், ஆங்கிலத்தில் இருந்த சின்ன குறிப்பு சொன்னது.

இரண்டு மொபைல், ஒரு லேன்ட் லைன், மூன்று போனிற்கும் மாறி மாறி, மூவரும் முயன்று களைத்து போய், இல்லை... இல்லை... இருவருக்கும் இடையில் என்னவோ என்று பயந்து போய்... பாலாஜியை நேரில் பார்க்கச் சொல்லி இருக்க வேண்டும். வேலை நடுவில் வந்தவன், நீச்சல் குளத்தில் தாங்கள் இருந்த நிலையை பார்த்துத் தொந்தரவு செய்ய வேண்டாம் என்று திரும்பி போய் இருக்க வேண்டும்.

''உன் மேல் எவ்வளவு நம்பிக்கை வைத்து இருக்கிறாள்'', என்ற வார்த்தையிலேயே நெகிழ்ந்து உருகி நின்றவன், ''நம்ம ஆசைப்பட்ட மதுரை வீடு இன்று மீண்டும் நம் கைக்கே வந்துடுச்சு தமிழ். எல்லாம் தேன்மொழி ஏற்பாடு...'', என்ற பானுமதி அம்மா சொன்ன வாக்கியத்தில் கரைந்து போனான்.



பானுமதி அம்மா பேசிய வற்றிக்கு 'உம்', கொட்டிக் கொண்டு இருந்த தமிழ்வேந்தனுக்கு என்னம் தேன்மொழியின் மேல் இருந்தது. சின்ன பெண். பொறுப்பு போறாது என்று பாலாவும் பூங்கோதையும் சொல்லி இருந்ததை நம்பித் தவறாக நினைத்து விட்டோம்!

அவளுடைய எதிர்கால வளர்ச்சியை கணக்கில் எடுத்து தான் செயல்பட்டதற்கு எள் முனையளவு கூட குறையாமல், அவளும், அம்மாவின் ஆசை, லட்சியம் இதை நிறைவேற்ற வேண்டும் என்று திட்டமிட்டு காரியத்தை முடித்து விட்டாள்.

தன்னை விட தன் அம்மாவின் மேல் அன்பு அதிகம் என்பது அவனுக்குத் தெரியும். ஆனாலும்... என்று நீண்ட சிந்தனையை, தேன்மொழியின் வரவு கலைத்தது. உடை மாற்றி கையில் ஒரு துண்டுடன் வந்தவள், 'சட்டையை கழட்டிட்டு, முதலில் தலையை துடைங்க', என்று அவனிடம் நீட்டி, ரிசீவரை அவன் கையில் இருந்து பிடுங்கினாள்.

''பானும்மா, என்ன தமிழுக்கு ஒரே அட்வைஸ் மழையா? 'உம்... உம்' என்று சொல்லிட்டு இருக்காங்க?'' என்று சிரிப்புடன் கேட்டாள்.

''பாலா இஸ் ஸ்வீட் தமிழ்...''

''அவங்க தங்கை அளவுக்கு ஸ்வீட் இல்லை என்றாலும் பரவாயில்லை. அம்மா பேச்சை தட்டக்கூடாது என்று உடனே கிளம்பி வந்தாலும், சூழ்நிலை புரிந்து கிளம்பி, அவனும் பாஸ் மார்க் வாங்கிட்டான்'', என்று கேலியாக சொன்ன அவனின் முதுகை பிடித்து லிப்டுக்குள் தள்ளினாள்.

''முதலில் அம்மாவிடம் என்ன விஷயம், என்று கேளுங்க. நான் ட்ரெஸ் மாற்றி விட்டு ரெண்டே நிமிஷத்துல நானும் வந்து பேசுறேன்'', என்று கதவை திறந்து உள்ளே நுழைந்தவள் அவனை போன் பக்கம் தள்ளி விட்டு, அறைக்குள் சென்றாள்.

''மாமா, நான் தமிழ் பேசறேன்...'', என்று ஆரம்பிக்கும் முன்பே விஜயகுமாரின் உற்சாகமான குரல் இடை விட்டது.

''தெரியும் தமிழ். உன்னுடைய அழைப்பிற்காக எவ்வளவு நேரமா காத்திருக்கிறோம்? என்ன தமிழ், ஸ்விம்மிங் கிளாஸ் எல்லாம் முடிந்ததா? பத்து வருஷமா தண்ணி பக்கமே போகாதவள், இன்று உன்னோடு ஸ்விம்மிங் பூல் வந்து நீச்சல் பழகுகிறாள் என்று பாலா போன் பண்ணினான். எங்களுக்கு அது உண்மையிலேயே நம்ப முடியாத பெரிய சர்ப்ரைஸ். அவளுடைய மனமாற்றம் உன்னால்தான் வந்து இருக்கு தமிழ். உன் மேலே அவள் எவ்வளவு நம்பிக்கை வைத்து இருக்கிறாள் என்று இதில் இருந்தே புரிந்து கொள்ளலாம். இரு அம்மாவிடம் கொடுக்கிறேன் பேசு'', என்று சந்தோஷமாகச் சொல்லி விட்டு பானுமதியிடம் போனை கொடுத்தார் விஜயகுமார்.

''தேனு! அதென்ன ராத்திரியில ஸ்விம்மிங் படிக்கிற? பகல் நேரத்துல படிச்சால் தானே தேவலாம்? ஈர தலை சரியா காய வைக்காமல் அப்படியே படுத்து விட்டால் தலையில் நீர் கோர்த்து சளி பிடிக்காதா? ஏசி இப்போ போட்டுக்க வேண்டாம். இரண்டு மணி நேரம் ஆகட்டும். முதலில் தலையை நல்லா துடை...'', என்று அவர் சொன்ன அன்பான வார்த்தைகளில் திக்கு முக்காடிப் போனாள் தேன்மொழி.

இங்கே தான் அவருடைய மகனை கேள்விகள் என்ற பெயரில் துவைத்து எடுத்தது தெரியாமல் அன்பை பொழிகிறார்? இதே குணம் தான் இவனுக்கும். இவனை திருமணம் செய்து கொள்ள மாட்டேன் என்று அப்பா விடமும், இவனிடமும் ஏன் விவாதம் செய்தோம் என்று இப்போது தோன்றியது.

''அம்மா! மாற்றி மாற்றி யாருக்காவது அட்வைஸ் பண்ணிட்டே இருக்கணுமா? நான் பார்த்துக்கறேன். சாப்பிட்டு தூங்குங்க. நாங்க நாளைக்கு இரவு கிளம்பி வரோம். குட்நைட்'', என்று அவள் கண்ணில் தெரிந்த நெகிழ்ச்சியை உணர்ந்த தமிழ் ரிசீவரை வாங்கி அம்மாவிடம் பேசி, போனை வைத்ததும் அவள் அவனை அணைத்து கொண்டாள்.

''ஹேய் தேனு! இப்பதான் காஞ்ச ட்ரெஸ் போட்டு இருக்க? மறுபடியும் என் மேலே சாய்ந்து ஏன் ஈரமாக்கு கிறாய்? ரெண்டே நிமிஷம் ட்ரெஸ் சேன்ஜ் பண்ணிட்டு வரேன்'', என்று விலக அவள் மேலும் இறுக்கமாக சாய்ந்து கொண்டாள்.

''ஹ...னி...! சொல்றது கேட்குதா? ட்ரெஸ் சேன்ஜ் பண்ண வேண்டாமா?''

''ம்ஹூம்...!''

''ப்ச்! இதென்ன சின்னக் குழந்தை மாதிரி...? பசிக் கலையா? சாப்பிட வேண்டாமா?''

''அப்புறம் சாப்பிடலாம்...''

''இப்படி ஒட்டிகிட்டா என்ன அர்த்தம்?''

''இது கூடத் தெரியாதா?''

''தெ..ரி..யு..ம்! ஈர ட்ரெஸ், இப்படி கட்டி அணைத்து கொஞ்சி கரையும் பொண்டாட்டி, இது எல்லாம் போதாது. தனிமையை ஐஸ்க்ரீமோடு கொண்டாடு என்று கிரீட் பண்ணும் மச்சினர். எனக்கு சளி பிடிச்சு காய்ச்சல் வரப் போகுது...''

''ஹய்யோ! ஐஸ்க்ரீம் ப்ரிட்ஜுல வைக்கலை. உருகப் போகுது...'', என்று நகர்ந்தவள் கை பற்றி இழுத்து நிறுத் தினான் தமிழ்.

''அடி பாவி! இங்கே நான் எனக்கு காய்ச்சல் வரப் போகுது என்று சொல்றேன். அதை கண்டுக்காம ஐஸ்க்ரீம் உருகும் என்று சொல்ற? இது உனக்கே ஓவரா தெரியலை...'', என்று சிரிப்போடு கேட்க அவள் கண் சிமிட்டினாள்.

''ஹலோ... நான் டாக்டராக்கும்...''

''யார் இல்லை என்று சொன்னா? ஆனால் கொஞ்ச நேரம் முன்னாடி... நீச்சல் குளத்தில்... நான் டாக்டர் வேலை பார்க்க, நீ ஸ்விம்மிங் சேம்பியன் வேலை பார்த்த போல...''

''விடிய விடிய பொண்டாட்டியை கிண்டல் பண் ணியே பொழுதை கழிப்பீங்களே?'', என்று அவன் முது கில் கை வைத்து படுக்கை அறைக்குள் தள்ளி விட்டவள் ஞாபகமாக ஐஸ்க்ரீம் பேக்கை எடுத்து ப்ரீசரில் வைத் தாள்.

ப்ரெட் டோஸ்டரில் ஆளுக்கு நாலு ஸ்லைஸ் ப்ரெட் வாட்டி விட்டு, சாதத்தில் நிறைய தயிர் விட்டு குழை

வாக பிசைந்து ஸ்பூன் போட்டு எடுத்து வைத்த பின்னும் உடை மாற்றி தமிழ் வராததால், அறைக்கு மீண்டும் வந்தாள். ''இன்னும் இங்கே என்ன தமிழ் பண்றீங்க? சாப்பாடு ரெடி...'', என்று கேட்க, ''ஒண்ணும் இல்லை...'', என்றவன் கையில் அகப்பட்ட டீ ஷர்ட்டை மாட்டி ஹாலுக்கு வந்தான்.

''என்னமோ தேடிட்டு இருந்தீங்க? என்ன என்று சொன்னால் நான் எடுத்து தருவேன் இல்லையா...'', என்று விசாரித்தவளின் கன்னத்தை வருடி, ''நத்திங்... வா சாப்பிடலாம்'', என்று அவளைக் கையைப் பற்றி ஹாலுக்கு அழைத்து வந்தான்.

''அம்மா என்ன சொன்னாங்க என்று சொல்லவே இல்ல'', என்று ப்ரெட்டில் ஜாமை தடவி அவனிடம் நீட்டி விசாரிக்க, அவன் முகம் இறுகியது போல தேன் மொழிக்குத் தோன்றியது.

''அம்மா என்னிடம் என்ன சொன்னாங்க என்பதை நான் அப்புறம் சொல்றேன். நீ அம்மாவிடம் என்ன சொன்னாய் என்பதை முதலில் சொல்லு...'', என்று தமிழ் திரும்பி கேட்டதும் கவலை தோன்றியது.

ஏற்கனவே தமிழ் மதுரை வீட்டை வாங்குவதை பற்றி பேசிய போது அப்பாவிடம் உதவி கேட்பதை விரும்பவில்லை. இப்போ தவறாக எடுத்து கொள்வானோ என்ற கவலை தோன்றியது. ''நான் ஒண்ணும் சொல்லலையே...'', என்று மெல்லிய குரலில் மறுத்தாள்.

''சரி உங்க அப்பாவிடம் என்ன சொன்னாய்?''

''நான் சொல்றதை கொஞ்சம் கோபப்படாமல் கேட்கறீங்களா தமிழ்?''

''முடிஞ்சுப் போன செயலுக்கு கோபப்பட்டு பிரயோஜனம் இல்லையே? மாமாவிடம் என்ன சொன்னாய் என்று முதலில் சொல்லு.''

''சாரி தமிழ். உங்க ஆசையை நிறைவேற்றணும் என்ற எண்ணத்தில், அப்பாவிடம் சொல்லி, அந்த வீட்டை முடிக்கச் சொன்னது நான் தான். ஆனால் அது உங்களை குறைத்து மதிப்பிட இல்லை தமிழ். உங்க கையில் போதுமான பணம் இல்லை என்று அந்த ஆசை தட்டி போகக்கூடாதே என்ற பயத்தில்... உங்களுக்காக தான்... தமிழ்...''

''இந்த பேச்சு வார்த்தை எப்போ நடந்தது?''

''சனிக் கிழமை நாம் இருவரும் வீட்டிற்கு போனோமே! அப்போ...''

''என்னிடம் போதுமான பணம் இல்லாத போது நீ உன் அப்பாவிடம் பேசினாய் சரி. அதுக்கு அப்புறம் என்னிடமே பணம் வந்து விட்டது என்று நான் சொன்னேனே? அதன் பிறகு அதை வேண்டாம் என்று நீ என் மறுக்கவில்லை...''

''ஹய்யோ தமிழ்! நான் மறுக்காமல் இருப்பேனா? எங்க அம்மா அப்பா ரெண்டு பேருமே அதை காதிலேயே வாங்கிக்கலை. பையன்களுக்கு மட்டும் தான் சொத்தா? பொண்ணுக்கும் சொத்தில் சம உரிமை உண்டு. சட்டம் தெரியாதா உனக்கு? வாயை மூடிட்டு உன் வேலையை பாரு என்று சொல்லிட்டாங்க. நான் என்ன பண்ண?'', என்று அவள் அவசரமாக மறுத்த விதத்தில் அவளின் மனம் நிம்மதி அடைந்தது.

தேன்மொழி தன் ஆசையை நிறைவேற்ற வேண்டும் என்று நினைத்த அதே நேரத்தில், தன் உணர்வுகளையும் மதித்து இருக்கிறாள். தனக்காக தன் பெற்றோரிடம் வாதாடி இருக்கிறாள் என்ற எண்ணம் மலர்ச்சியை தோற்றுவித்தது.

''சாரி தமிழ்... கோபமா? அந்த பணத்தை வேண்டுமானால் நாளைக்கு இரவே அப்பாவிடம் திருப்பி

கொடுத்து விடலாம்''. என்று அவசரமாக மன்னிப்புக் கோர புன்னகை செய்தான்.

''பணம் இருந்தால் தானே கொடுக்க முடியும்?''

''ஏன் அக்ரீமென்ட் கையெழுத்தாக போகுது என்று சொன்னீங்களே... அந்த வேலை...'', முடியலையா என்று கேட்க மனம் வராமல் அப்படியே பாதியில் பேச்சை நிறுத்தினாள்.

''அக்ரீமென்ட் கையெழுத்தாகிடுச்சே...!''

''ஓ! பணம் வர கொஞ்சம் லேட் ஆகுமா?''

''நேற்றே செக் வந்துடுச்சே...''

''பின்னே... வேறே ஏதாவது முக்கியமான செலவு இருக்கா?''

''ரொம்ப முக்கியமான செலவு. என் கேர்ள் பிரெண்டுக்கு சொத்து வாங்கித் தர போறேன்...''

''கேர்ள் பிரெண்ட்...'', என்ற ஒரே ஒரு வினாடி இருண்ட அவளின் முகம் அடுத்த வினாடி இரட்டிப்பு பிரகாசத்துடன் ஒளிர்ந்தது. ''ராஸ்கல்... பார்த்த முதல் நாளில் இருந்து இன்று வரைக்கும் என்னை ஏத்தி விட்டு ஏத்தி விட்டு, பாயில் பண்ணி கோபமூட்டியே வேலை பண்ணிட்டு இருக்கே... உன்னை...''

''ஹேய் நில்லு... நில்லு...! எது கேலி... எது நிஜம் என்று கூடத் தெரியாமல் நீ இருந்துட்டு என்னைக் குறை சொல்றதில் நியாயம் இல்லை. நோ அடிதடி... எதுவா இருந்தாலும் பேச்சு வார்த்தையிலேயே முடிச்சுக்கலாம்...'', என்று அவன் சமாதானம் செய்தது அவள் காதுகளில் ஏறாத வேளையில் 'பச்சக்', என்று அவள் கன்னத்தில் அழுத்தமாக ஒரு முத்தம் வைக்க அவள் அடுத்த நொடி அவன் மார்பில் சாய்ந்து இருந்தாள்.

''உன்னிடம் ஒரு முக்கியமான விஷயம் பேசணும். நாளைக்கு காலைக்குள் முடிவெடுக்கணும் என்று சொன்னேனே? ஞாபகம் இருக்கா?''

''இருக்கு... சொல்லுங்க...'', என்றவள் மீண்டும் தோளிலேயே தஞ்சம் புகுந்தாள்.

''தேனு... உன் படிப்பும் முடிஞ்சுடுச்சே... அதனால் உனக்கு ஒரு கிளினிக் வைக்க பக்கத்துலேயே இடம் பார்க்கலாம் என்று...''

''இப்ப அது அவசியம் வேண்டுமா தமிழ்? நான் பாலாஜி கிளினிக் போவேனே! இப்ப இடம் வாங்கி ஹாஸ்பிடல் கட்ட எவ்வளவு செலவாகும் தெரியுமா...?''

''ஹாஸ்பிடல் கட்ட நிறைய செலவாகும் என்று எனக்குத் தெரியாதா தேனு. ஆனால் சின்னதா கன்சல்டிங் வைக்கலாமே? அதுவும் போக்குவரத்திற்கு இரண்டே நிமிஷம் போதும். நடந்தே போகலாம் என்று நிலையில் ஒரு இடம் கிடைத்தால் வாங்கக் கூடாதா?''

''லக்ஷ்மிம்மா சொன்னாங்க தமிழ். எனக்கு தான் ஒரு மாதிரி இருக்கு. அவங்க ஒரு இக்கட்டான சூழ்நிலையில் அவசரமா விற்க முடிவு செஞ்சதை நாம் பயன்படுத்தி கொண்டோம் என்று பின்னாடி அவங்க பீல் பண்ண கூடாது தமிழ்...''

''அப்படி எல்லாம் அவங்க நினைக்க மாட்டாங்க தேனு...''

''இல்லை தமிழ். நான் முடிச்சுடறேன். அப்புறம் நீங்க உங்க அபிப்ராயம் சொல்லுங்க. இப்போதைக்கு வாடகைக்கு அல்லது லீஸ் மாதிரி வாங்கிக்கலாம். மூணு நாலு வருஷம் கழித்து, அப்புறமும் அவங்க மனசு மாறாமல் இருந்தால் விலைக்கு வாங்கலாம் என்று எனக்கு தோன்றுது. அப்ப நம் கையிலும் பணம் இன்னும்

சொல்லும் தானாய இருக்கும்...", என்று அவள் சொல்ல அவன் விழிகள் விரிந்தது.

"என்ன அப்படி பாக்கறீங்க? நான் ஏதாவது தப்பா சொல்லிட்டேனா?"

"தே...னு...! உன்னை சின்ன விஷயத்துக்கு எல்லாம் சில்லியா சண்டை போடுகிறாய் என்று ஒரு மணி நேரம் முன்னாடி உன்னை ஸ்விம்மிங் பூலில் திட்டி தீர்த்தேன். ஆனால் இப்ப என்ன அழகா அடுத்தவங்க நிலையில் இருந்தும், யோசிக்கிறாய்?"

"நான் எப்போ எதுக்கு சில்லியா சண்டை போட்டேன்?", என்று சிலிர்க்க அவன் சிரித்தான்.

"ஒன்றா இரண்டா...? பார்த்த முதல் நாளே சண்டை தான். பாலாவிற்கு அடிபட்டதற்கு நான் காரணம் இல்லை என்று மேகா சொன்ன பிறகும் நீ சண்டை போடலை?"

"பார்த்த முதல் நாளே நீங்க ஏன் சிரிச்சீங்க என்று முதலில் காரணம் சொல்லுங்க. நான் அப்புறம் சொல்வேன்..."

"பாலா நீ வருவதற்கு கொஞ்சம் முன்னால், என்னை எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கு என்று சொல்லி விட்டு, எங்கே பார்த்தேன் என்று என்னால் நினைவுகூர முடியலை. நம்ம யானை வந்தால் டக்குன்னு சொல்லிடுவாள் என்று உன்னைப் பற்றி சொல்லி இருந்தானா? அதான் உன்னைப் பார்த்ததும் என்னால் சிரிப்பை அடக்க முடியவில்லை..."

"என்னை பார்த்தால் யானை மாதிரியா இருக்கு...? அவன் யானை என்று சொன்னது என் நினைவாற்றலை முன் நிறுத்தி..."

"அதையும் புரிந்து கொண்டேன் தேனு. சிரித்தது தப்பா? சரி மன்னிச்சுக்கோ. நான் உன்னிடம் முக்கிய

மான விஷயம் கண்டிக்க வேண்டும் என்று மனது சொல்லிட்டே இருக்கே. அதை... பாக்க உனக்கு ரெண்டு நிமிஷம் கிடைக்கலை...?"

"ரெண்டு நிமிஷம் என்ன தமிழ்...? இனிமேல் நானும் பாக்கிறேன். கேட்கிறேன் போதுமா? எனை கட்டணும்? இப்ப காட்டுங்க...", என்று கொஞ்சலாக சொன்னவளின் தோளில் கை போட்டு அணைத்தபடி படுக்கை அறைக்கு அழைத்து சென்றான்.

"இப்ப சொன்னதை எப்பவும் மறக்காமல் நான் சொல்லும் பேச்சுக்கு எதிர் பேச்சு பேசாமல் இருந்தால் சரிதான்...", என்று சிரித்தவனுக்கு தோளில் ஒரு அடி விழுந்தது.

"தமிழுக்கு தமிழ் புரியாதா? எதிர்பேச்சு பேசாமல் இருப்பேன் என்று நான் சொல்லவே இல்லை. அது சாத்தியமும் இல்லை. ஆனால் சண்டை போட்டு உடனே சமாதானம் ஆகலாம்", என்று சொல்ல அவன் சந்தோஷமாக தலை அசைத்தான்.

"அதை நீ செய்வாய் என்ற நம்பிக்கை எனக்கு நிறைய இருக்கு தேனு", என்று சொன்னவன் அலமாரியில் இருந்து ஆல்பத்தை எடுப்பதை பார்த்த உடனே "இந்த ஆல்பம் நான் பார்க்கவே இல்லையே? அங்கே எடுத்துட்டு வந்தீங்களா?", என்று ஆச்சரியமாக கேட்டாள்.

"இந்த போட்டோவை வெளியே யாரும் பார்ப்பதற்கு முன்னால் உன்னிடம் தனியா காட்ட வேண்டும் என்று ஆசைப் பட்டேன். அதனால் எடுத்து வரவில்லை. போட்டோவில் என்ன இருக்கக் கூடும் என்று ஏதாவது யூகம் பண்ண முடியுமா?"

'ஓ எஸ், பண்ணலாமே! ஏதாவது அவார்ட் வாங்கும் போட்டோவா...?"

"ம்ஹூம்! இது ஏழு வயசு இருக்கும்போது எடுத்தது..."

"அப்ப ஏதாவது குறும்பு பண்ணி அடி வாங்கி அழுததா?"

"என்னை எங்க அம்மாவோ அப்பாவே அடித்ததே இல்லை..."

"அப்ப பீச்சுல குளிக்கும் போது நியூட் போட்டோ..."

"ஓ மை காட்! உன்னோட யூகம் கன்னா பின்னாவென்று போகுது. ஆனால் நீ சொன்னதுல பாதி கரெக்ட்..."

"பாதி கரெக்ட் என்றால் பீச்சுக்கு பதில் நீர் வீழ்ச்சி?"

"நான் பாதி கரெக்ட் என்று சொன்னது, பீச்சில் என்ற அர்த்தத்தில்..."

"ஓஹோ! மதுரையில் இருந்து சென்னைக்கு வந்து மெரீனா பீச்சுல சுண்டல் வித்தீங்களா? அதை உங்க அப்பா ஞாபகம் போட்டோ...", என்று கேலியாக ஆரம்பிக்க வேகமாக பாய்ந்து அவளின் வாயை தன் கையால் மூடினான்.

"அம்மா தாயே! உன் கற்பனைக் குதிரை தறி கெட்டுப் பாய்ந்தது போதும். போட்டோவையே பார்த்துடு ப்ளீஸ்...", என்று அந்த பக்கத்தை எடுத்து நீட்ட, அவன் என்ன பெரிசா காட்டி விடப் போகிறான் என்று சின்ன அலட்சியத்துடனே அந்த போட்டோவில் கண்களை பதித்தவளின் விழிகள் தெறித்து வெளியே விழுந்து விடும் அளவுக்கு விரிந்தது.



தமிழ் தன் பெற்றோருடன் தனது ஏழாவது பிறந்த நாளை கொண்டாட சென்னை மெரீனா கடற்கரைக்கு வந்து இருந்த போது

எடுத்த அந்த புகைப்படத்தை பார்த்த தேன்மொழி வியப்பின் எல்லைக்கு சென்றாள். இது அவள் அல்லவா? அருகே நிற்பது பாலாஜி என்பதும் முதல் பார்வையிலேயே புரிந்தது. தன் முன் மண்டியிட்டு சின்ன பிளாஸ்டிக் பொருள் போல ஏதோ ஒன்றை கொடுப்பது தமிழா?

அவள் எப்படி இவனின் சின்ன வயது போட்டோ ஆல்பத்தில் வந்தாள்? ஏதாவது மார்ஃபிங்கா? ம்ஹூம்! வாய்ப்பே இல்லை. அவனுடைய சின்ன வயது போட்டோவும் அவளுடைய சின்ன வயது போட்டோவும் கிடைத்தது என்று வைத்துக் கொண்டாலுமே பாலாஜியின் போட்டோ இவனுக்குக் கிடைக்க வாய்ப்பு குறைவு.

அப்படி மார்பிங் பண்ண வேண்டிய அவசியம் தான் என்ன? அவன் இதை ஸ்பெஷலா தனக்கு காட்ட வேண்டும் என்று நினைத்ததிலேயே இதன் முக்கியத்துவம் கூடி தெரியவில்லையா? இதுதான் இறைவன் போட்ட முடிச்சு என்பதா? இருபது ஆண்டுகளுக்கு முன்பே அவன் தன்னை பார்த்து இருக்கிறான். தன் கண்ணீர் அவனை உலுக்கி இருக்கிறது. தன் கண்ணீரை துடைக்க முன் வந்து இருக்கிறான். இமைக்காமல் அந்தப் புகைப் படத்தைப் பார்க்கப் பார்க்கத் தெவிட்டவில்லை.

"என்ன தேனு... அப்படியே பிரீஸ் ஆகி விட்டாயா! நானும் அப்படித்தான் நின்றேன். போட்டோ அடையாளம் தெரிகிறதா? எப்படி இருக்கு?", என்று கொஞ்சலாக கேட்டவன் இதழ்கள் அவளின் காதருகில் ரகசியம் பேசியபடி மெல்ல கன்னத்தில் ஊர்வலம் சென்றது.

"தமிழ்... இது... என்னால் நம்பவே முடியலை... எப்போ எப்படி...?", என்று திகைப்போடு சொல்லியவள் கண்கள் இன்னும் போட்டோவிலேயே இருந்தது.

அவளுக்கு மிகவும் பிடித்த அந்த ஆரஞ்சு வண்ண ஃப்ராக்கில், உச்சியில் இரண்டு குடுமி முடிந்து, அதற்கு இடையில் மல்லிகை பூவால் பாலம் அமைத்து, கண்ணில் நீரோடு, இதழ்களில் சிரிப்போடு, கையில் எதையோ பிடித்து இருந்த தன் முன்னால் மண்டியிட்டு அமர்ந்து இருந்தது இவனா?

''எதையோ கொடுத்து இருக்கீங்க. என்ன தமிழ் இது...? ஞாபகம் இருக்கா?'', என்று ரசனையோடு விசாரித்தவளின் கண்கள் இப்போது போட்டோவை விட்டு விலகி மனம் கவர்ந்த கள்வனின் முகத்தில் பதிந்தது.

''நல்லா ஞாபகம் இருக்கு. அது ஒரு காமரா. அன்று எனக்குப் பிறந்த நாள். அதுக்காக அப்பா வாங்கி தந்தாங்க...''

''மை காட்! அப்பா வாங்கி தந்த பிறந்த நாள் பரிசை எப்படி எனக்கு மனசு வந்து கொடுத்தீங்க? அதுவும் அந்த சின்ன வயசுல...? கிரேட் தமிழ்... எதுக்கு அழுதேனோ தெரியலையே! இந்த அழுமூஞ்சியை சமாதானம் பண்ண கையில் இருந்த எதையும் கொடுத்துடுவீங்க போல? பாலா கையில் என்ன? ஐஸ்க்ரீமா?'', என்று அவள் ஆச்சரியமாக கேட்க அவன் சிரித்தான்.

''உன்னுடையது பீச் மணலில் விழுந்து விட்டது என்று நினைக்கிறேன்... உனக்கு ஒரு விஷயம் தெரியுமா தேனு? நம்ம வாழ்க்கை சரித்திரத்தை எழுதினால், அதுல ஐஸ்க்ரீமுக்கு பெரிய முக்கியமான பங்கு கொடுக்கணும்...'', என்று கேலியாகச் சொல்லிச் சிரிக்க அவள் கூச்சத்துடன் சிரித்தபடி அவனின் தோளில் சாய்ந்து கொண்டாள்.

''அவ்வளவுதானே! கொடுத்துவிட்டால் போச்சு'', என்று சொல்லும் போதே பிரீசரில் பாலாஜி கொடுத்த ஐஸ்க்ரீமின் இருப்பு அவளுக்கு நினைவு வந்தது.

''பின்னால் நடக்கப் போவதை எல்லாம் முன்னாடியே யூகித்து எவ்வளவு அழகா மண்டியிட்டு பரிசு கொடுத்து, உன்னை கரெக்ட் பண்ணி இருக்கேன் பார்த்தியா தேனு? ஐஸ்க்ரீம் மட்டும் இல்லை. பீச்சுக்கும் நம் வாழ்க்கையில் பங்கு இருக்கு. முதன் முதலில் தனியா பேச அங்கே தானே போனாம்...'', என்று அவன் சிரிப்புடன் சொல்ல அவனை நெருங்கி உரசியபடி நின்றாள் தேன்மொழி.

''பரிசு கொடுத்தேன், கரெக்ட் பண்ணினேன், என்று இப்ப சொல்லுங்க. நான் பேசணும் என்று உங்களை தனியா பீச்சுக்கு அழைத்த போதே, இதை சொல்லி இருக்கலாமில்ல?''

''ஆஹா! இன்னிக்கு செம மூட் இருக்கு போல இருக்கே அம்மணிக்கு...? என்ஜாய் தமிழ்...!'' என்று தட்டி கொடுத்தவன், ''தேனு, ஏசி போடலாமா?'', என்று அவளோடு இழைந்தபடி குறும்பாக கேட்டான்.

''அம்மா தலை காயாமல் ஏசி போடாதே. ரெண்டு மணி நேரம் கழிச்சு போடு என்று சொன்னாங்க. தலை இன்னும் காயலை தமிழ்'', என்று அவள் பதில் சொல்ல அவனின் சிரிப்பு மேலும் விரிந்தது.

''நான் ஏசி போட்டே ஆகவேண்டும் என்று சொன்னால்...''

''நீங்க ஏன் அப்படி சொல்லணும்? நம் வசதிக்கு தானே பொருட்கள் இருக்கு. பொருள் இருக்கு என்பதற்காக போட வேண்டுமா என்ன?''

''நானும் நம் வசதிக்கு தான் தேனு சொல்றேன்...'', என்றவன் கைகள் அவளின் இடையை வளைத்து அணைத்து இருக்க முகம் தோள் வளைவில் வாகாக புதைந்து இருந்தது.

''வேர்க்குதா தமிழ்? அப்படி ஒன்றும் தெரியலையே? அம்மா சொன்னதற்கு காரணம் இருக்கு. நீங்க என் அப்படி சொல்றீங்க?''

''எல்லா விஷயத்தையும் வார்த்தையால சொல்ல முடியாது ஹனி...'', என்றவன் குரலில ரகசியம் பேசும் தொனி வந்து இருந்தது.

''தமிழ். நீங்க எந்த நேரம் என்ன நினைப்பீங்க என்று என்னால் புரிந்து கொள்ள முடியும் என்று பதினஞ்சு நிமிஷம் முன்னாடி தான் நினைத்தேன். அதுக்குள்ளே குழப்பறீங்களே? என்ன விஷயம் சொல்லுங்க ப்ளீஸ்...'', என்று சிணுங்கியவளை தன் புறம் திருப்பி, முகவாயை நிமிர்த்தினான்.

''இப்படி கொஞ்சிக் கொண்டு ஒரு கேள்வி கேட்டால் பதில் சொல்லாமல் இருக்க முடியுமா ஹனி? அதெல்லாம் ஒரு ட்ரிக். தற்செயலாக படித்தது தான். நம் கல்யாணத்தன்று ஹோட்டல் ரூமில் காலையில் கண் விழிக்கும்போது நீ எங்கே எப்படி இருந்தாய் என்று ஞாபகம் இருக்கா?'', என்று கேட்டவனின் விரல்கள் அவள் கன்னத்தில், காதுகளில், இதழில் என்று நர்த்தனம் ஆடியது.

''ஹேய் திருடா...! அன்னிக்கு நைட் என்ன தில்லு முல்லு பண்ணி என்னை கிட்டே இழுத்தாய்?'', என்று கொஞ்சலாக கேட்டாள்.

''நான் ஒண்ணும் உன்னை இழுக்கலை. நீயாதான் நெருங்கி வந்து கட்டி கொண்டாய்...''

''நான் என்னவோ லேசா நினைத்து விட்டேன் தமிழ்! திட்டமிட்டு காய் நகர்த்துவதில் பயங்கரமான கில்லாடி தான். ஆனால் இப்ப ஏசி இல்லாமலே நான் நெருங்கி வருவேன் என்ற போது ஏசி எதுக்கு?'', என்று சொன்னவளின் குரலும் குழைந்தது.

''அதென்னவோ கரெக்ட்தான். பொண்டாட்டி ப..க்..க..த்..து..ல வருவது தான் முக்கியம். ஏசி போடுவது

முக்கியம்? அது சரி, நான் என்ன நினைப்பேன் என்று கண்டு பிடிக்க முடியும் என்று சொன்னாயே? பதினஞ்சு நிமிஷத்துக்கு முன்னால் என்னைப் பற்றி என்ன நினைத்தாய்?'', என்று விசாரித்தவனின் குரலில் ஆர்வம் கரைபுரண்டது.

''நான் கிச்சனில் ப்ரெட் டோஸ்ட் பண்ணின போது நீங்க இங்கே என்ன தேடினீங்க?''

''ஒண்ணும் இல்லையே...''

''ப்ச்! பொய் சொல்லாதீங்க. நீங்க என்ன தேடினீங்க என்றும் தெரியும். அது இப்போ எங்கே இருக்கு என்றும் எனக்குத் தெரியும்...'', என்று சொன்னவளின் குரலில் பெருமிதம் வழிந்தது.

''நான் ஒண்ணுமே தேடாத போது, தேடியதா ஒரு கதை சொல்லி அது எங்கே இருக்கு என்று நீ சொல்றியா? சரி நீ சொன்னதே கரெக்ட் என்று வச்சுக்கலாம். சொல்லு நான் என்ன தேடினேன். அது எங்கே இருக்கு?''

''நான் சொல்லலை... நீங்களே பார்த்து தெரிஞ்சுக்கோங்க...'', என்று சொன்னவள், தன் நைட்டியின் ஜிப்பை லேசாக திறந்து காட்ட, உள்ளே 'டச் அண்ட் பீல் மை ஹார்ட்...', என்ற எழுத்துக்கள் பொறித்த அவனின் மஞ்சள் வண்ண ஸ்லீவ்லெஸ் டீ ஷர்ட் எட்டி பார்த்தது.

''மை காட்...'', என்று உல்லாசமாக கத்தியவன் அவளின் இடையை சேர்த்து தூக்கி இரண்டு முறை சுற்றி கீழே இறக்கினான்.

''மூச்சுக்கு முன்னூறு வாட்டி என்னை திருடன் திருடன் என்று சொல்லிட்டு, இப்ப நீ அந்த வேலை செய்றியா? என் ஷர்ட்டை இப்பவே கழட்டிக் கொடு...'',

என்று அவளை மேலும் நெருங்க அவனை பிடித்து தள்ளி விட்டாள்.

''உலகத்துலேயே இது மாதிரி ஒரே ஒரு ஷர்ட் தான் இருக்குமாக்கும்? இதுல உன் ஷர்ட் என்று எழுதியா இருக்கு? தர முடியாது போடா...'', என்று திமிறியவளை சேர்த்து அணைத்து கொண்டான்.

''இது என் ஷர்ட் என்று நான் இப்ப சொல்லலை ஹனி! கொஞ்ச நேரம் முன்னாடி நீ தானே இந்த ஷர்ட்டை நான் தேடினேன் என்று சொன்னாய் என் ஸ்வீட் ஹார்ட்'', என்றவன் அவளை மேலும் இறுக்கமாக அணைத்துக் கொள்ள அவள் அவன் கன்னத்தோடு கன்னம் சேர்த்து இழைந்தாள்.

''தமிழ்... ரொம்ப ஹாட்டா இருக்கு இல்ல...'', என்று கொஞ்சலாக சொல்ல அவன் சிரித்தபடி, ''ஏசி போடட்டுமா...'', என்று கேட்டான்.

''ம்ஹூம்...''

''அப்ப ஸ்விம்மிங் பூல் போகலாமா?''

''ம்ஹூம்...''

''இங்கேயே குளித்து விட்டு வருகிறாயா?''

''ம்ஹூம்...''

''அப்ப என்ன வேண்டும் என்று நீயே சொல்லிடு கண்ணு...'', என்று கொஞ்சியவன் கைகள் அவளை அணைத்து விளையாடியது.

''நீங்க என்ன நினைக்கறீங்க என்று நான் கண்டு பிடித்தேன் இல்ல. அப்புறம் உங்களுக்கு மட்டும் ஏன் தெரியலை...? நீங்க என்னை நிஜமாவே லவ் பண்ணி இருந்தால் அதெப்படி தெரியாமல் போகும்?'', என்று சிணுங்க அவன் அலறினான்.

''அம்மா தாயே! உனக்கு இப்ப என்ன வேண்டும் என்று நீ பேச்சை ஆரம்பிக்கும் போதே கண்டு பிடித்து விட்டேன். சும்மா சீண்டி விளையாண்டால், அதுக்கு என்னுடைய லவ் வரைக்கும் போய் இப்படி எல்லாம் விளக்கமா? ஆளை விடு! பாலா வாங்கிட்டு வந்த ஐஸ்க்ரீம் வேண்டும் அவ்வளவு தானே? இதோ போய் எடுத்துட்டு வரேன்...'', என்று அவளை விலக்கி விட்டு அடுக்களைக்கு செல்ல அவன் பின்னாலேயே வந்தாள்.

''ம்ம்ம்! இப்படி கோபமா ஐஸ்க்ரீம் கொடுத்தால் எனக்கு ஒன்றும் வேண்டாம்...'', என்று சொல்லியபடி பிரீசரை திறந்தவன் முதுகில் சாய்ந்தாள்.

''கோபமா... உன் மேலே... அதுவும் இப்ப... சான்சே இல்லை மேடம்... மூன்று வாரம் காத்திருந்தது போதும். இன்னிக்கு உன்னை விடுவதா இல்லை...'', என்று சொல்லியபடி ஒரு சின்ன கிண்ணத்தில் ஐஸ்க்ரீம் வைத்து நீட்ட, ''நீங்க என்னவோ மூணு வாரமா காத்து இருந்தேன் என்று சொன்னீங்களே எதுக்கு?'', என்ற கேள்வியுடன் வாங்கி கொண்டாள்.

''சரியான சாப்பாட்டு ராமிடி நீ! அதுல இருக்கும் இன்ட்ரெஸ்ட் வேறு எந்த விஷயத்துலயும் இருக்காதோ?'', என்று சிரித்தபடி அருகில் இழுத்தான்.

அவனின் இழுப்புக்கு ஈடு கொடுத்தவள், ''தமிழ், அன்னிக்கு பீச்சுல என்னை பிடிக்கலை என்று அப்பா விடம் சொல்லிடுங்க என்று நான் சொன்ன போது என்னைப் பற்றி ரொம்ப சில்லியா நினைச்சீங்களோ?'', என்று கேட்டவளைப் பார்த்துப் புன்னகை செய்தான்.

''இல்லை தேனு. அதை சில்லி என்று சொல்ல முடி

அவங்க பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கோ என்று சொன்ன போது அம்மாவை நினைத்து வேண்டாம் என்று யோசிக்காமல் உடனே சொல்ல முடிந்தது. என்னை மாதிரியே உங்க அப்பாவின் முகத்தை மறுத்துப் பேச முடியாமல், அவரின் மனசை சங்கடப்படுத்தக் கூடாது என்று நீ நினைத்த அந்த தருணம் தான், என்னை உன் புறம் சாய வைத்தது தேன்மொழி...''

''இதை நம்பச் சொல்றீங்களா?''

''நிஜமாதான் தேனு. அன்றே, உன் கன்னத்தில் இருந்த குங்கும கறையை காயம் என்று பதறினேன். உங்க வீட்டுக்கு விருந்துக்கு வந்த போது, மெரூன் வண்ண பட்டுப் புடவையில் உன்னை பார்த்து அடியோடு குடை சாய்ந்த பின்னும், உனக்கு கொடுத்த வாக்கிற்காக உங்க அப்பாவிடம் உன்னை மறுத்தேன்...''

''அப்ப நான் ரொம்ப அப்செட் ஆகிட்டேன் தமிழ். எனக்கே தெரியாமல் நான் உங்களை ரொம்ப லவ் பண்ணி இருக்கணும். அதனால் தான் முதல் முறை காமராவில் நீங்க நிறைய படங்களை வைத்து பார்த்து கொண்டு இருந்தது என்னை ரொம்ப பாதித்து இருக் கணும். பாலா விபத்து, உங்க சிரிப்பு, எல்லாம் என் கோபத்தை கிளறி... ப்ச்! உங்களை போலீஸ் ஸ்டேஷன் வரை இழுத்து வந்து... சாரி தமிழ்...''

''அதுக்கு ஏன் சாரி சொல்ற? நீ போலீஸ் ஸ்டேஷன் போய் இருக்கா விட்டால் மாமாவை நான் எப்படி பார்ப்பது? முகத்தை இப்படி வச்சுக்காதே தேனு. ரொம்ப கஷ்டமா இருக்கு. நான் உங்க வீட்டுக்கு வந்த அன்றே, நான் வேண்டாம் என்று சொன்ன பிறகு உன் முகம் வாடியதைப் பொறுக்காமல், அம்மாவிடம் நைசா பேசி, கல்யாணம் பண்ண வைத்தது...''

''பாலா, அம்மா, மேகா, அவங்க பாட்டி, எல்லாரும் உங்களுக்கு சப்போர்ட்...''

''இல்லை தேனு. நான் அவர்களிடம எல்லாம் போகவே இல்லை. எனக்கு எங்க அம்மா போதாதா? ஆனால் எத்தனை பேர் எனக்கு சப்போர்ட் பண்ணினால் என்ன தேனு? நானே உன் பக்கம். அப்புறம் ஏன் கவலை படு கிறாய்...?''

''நல்ல வேளை நான் உங்களை மிஸ் பண்ணலை தமிழ் ஐ ஆம் சோ லக்கி...''

''ரெண்டு பேரும் லக்கி. விடு. மணி பதினொன்னு. இப்படியே விடிய விடிய பேசிட்டே இருப்பதா உத்தேசம்?'', என்றவனின் இழுப்பிற்கு ஈடு கொடுத்து அருகே வந்தவள், ''ரொம்ப லேட் ஆகிடுச்சு தமிழ். எனக்கு தூக்கம் தூக்கமா வருது தெரியுமா?'', என்று கொட்டாவி விட்டவளை முறைத்தான்.

''என்ன கிண்டலா...''

''இல்லை தமிழ்... நிஜம்... சச் ஹை... ப்ராமிஸ்... என்று மூன்று பாஷையில் அழுத்தி சொன்னவள் கண் களில் குறும்பு துள்ளி விளையாட தூக்கம் மருந்துக்கு கூட இல்லை.

''ம்ம்... பொய் சொல்றதை நிஜம் என்று மூணு மொழி யில் சொல்லு. ஆனால் சொல்ல வேண்டிய முக்கியமான மேட்டர் மட்டும் தப்பி தவறி ஒரு மொழியில் கூட சொல்லிடாதே! பைக்கில் போகிற போக்கில் காத்தோடு போற மாதிரி சொல்லு...'', என்று சலித்துக் கொள்ள அவன் அவனை நெருங்கி அணைத்து கொண்டாள்.

''காத்தோடு போற மாதிரி இல்லாமல் காதுக்குள் போகிற மாதிரி இப்பவே சொல்றேன் தமிழ் ஐ லவ் யூ''.

என்று சொல்லிக் கன்னத்தில் ஒரு முத்தம் வைக்க அவன் அவளை சேர்த்து அணைத்துக் கொண்டான்.

''காதலை உணர்ந்தால் மட்டும் போதாது. அதை சம்பந்தப்பட்டவருக்கு சொல்லா விட்டால் தேவை இல்லாத பிரச்னை வரும் என்று இந்த மூன்று வாரத்தில் நல்லா புரிஞ்சுடுச்சு ஹனி. பேச்சு வார்த்தைக்கு ஒரு முடிவு கட்டலாம் என்று நினைக்கிறேன். இன்னும் ஏதாவது கேட்கணுமா?''

''ம்ம்ம்! தியாகு அங்கிளுக்கு பைபாஸ் பண்றதுக்கு முன்னாடி...'', என்று அவள் சீரியஸாக ஏதோ சொல்ல ஆரம்பிக்க, அவளை குண்டு கட்டாக தூக்கிக் கொண்டு அறைக்கு சென்றான்.

''நான் ஏதோ சும்மா ஒரு மரியாதைக்காக கேட்டால், நீ புதுசா ராமாயணம் ஆரம்பிக்க ரெடியாகிறாயா? மூச்!'', என்று அவள் இதழ்களை தன் இதழ்களால் மூடியவன், அவளின் பேச்சுக்கு முழுதாக தடை விதித்தான். பேச்சு நின்றாலும் கரங்களும் இதழ்களும் தங்களின் வேலையை செய்ய ஆரம்பித்தது.

முதன் முறை பார்த்த வினாடியில், கண்ணில் படும் புற அழகில் ஈர்க்கப்பட்டு வரும் காதலை விட, பெற்றவர், உற்றவர் என்று குடும்பத்தின் நலன் கருதி, இணைந்து நெருங்கி பழகப் பழக ஒருவரின் குண நலன் புரிந்து வரும் இந்தக் காதலுக்கு வலு அதிகம்தான்.

மொட்டாக இருந்த மங்கை, இன்று மலர்ந்து மணவாளன் நெஞ்சில் மணம் வீசத் தொடங்கி விட்டாள். இனி காயாகி கனியாகி, குடும்ப அமைப்பின் விருட்சமாகி வளர்வாள் என்பதில் ஐயமில்லை. இனி எல்லாம் சுகமே!

*

தொட தொட மலர்ந்ததென்ன..!

அழுதவல்லி கல்யாணசுந்தரம்

